# பல்லக்குப் பயணம்

## காஞ்சனா ஜெயதிலகர்

வட்டார நூலகம்
அசோக் நகர், சென்னை-83

ஜீயே பப்ளிகேஷன்ஸ்

352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005.

விலை: ரு. 160

பல்லக்குப் பயணம் ♦ ஆசிரியர்: காஞ்சனா ஜெயதிலகர் ♦ முதற்பதிப்பு: செப்டம்பர்-2005 ♦வெளியீடு: ஜீயே பப்ளிகேஷன்ஸ், 352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 600 005. தொலைபேசி: 28544294, தொலை நகல்: 91-44-28410786 ♦ அச்சுக்கோப்பு, அச்சாக்கம்: பத்மா எண்டர்பிரைசஸ், 99.ஜீ.பி ரோடு, சென்னை - 600 002.

அட்டை வடிவமைப்பு: பி.ஸ்வர்ணரம்யா.

**ஜீயே பப்ளிகேஷன்ஸ் வெளியீடு**

167699

5943366

Price: Rs. 160

Pallakku Payanam ♦ Author: Kanchna Jayathilakar ♦Language: Tamil ♦First edition: September 2005 ♦ Pages: 264 ♦Published by Geeye Publications, 352, Triplicane High Road, Chennai - 600 005. . Phone: 28544294. Fax: 91-44-28410786 ♦Typeseting, Printing: Padhma Enterprises, 99, G.P. Road, Chennai - 600 002.

31.3 NK



# பதிப்புரை

**கா**ஞ்சனா ஜெயதிலகர் படைப்புகளில் 'ஒரு பெண்ணின் சுதந்திரம் எப்படி இருக்க வேண்டும்' என்ற முற்போக்கு சிந்தனை இருக்கும். பெண்கள் என்றால் சமைப்பார்கள், வேலைக்குப் போவார்கள், கஷ்டப்படுவார்கள் அல்லது எதிர்த்து நின்று வெற்றி பெறுவதாகத்தான் பல பெண் எழுத்தாள்ர்க்ள் எழுதுவார்கள்.

சில பெண் எழுத்தாளர்கள், 'ஆண் ஆதிக்கம் பெண்களை எப்படி அடிமைப்படுத்துகிறது' என்பதை எழுதுவார்கள்.

திருமதி காஞ்சனா ஜெயதிலகரின் கதைகளில் பெண்களின் மேலாண்மை வெளிப்படும். 'பெண்களாலும் நிர்வாகம் செய்யத் தெரியும். அவளாலும் நல்ல முடிவுகளை எடுக்க முடியும்' என்று தனது எழுத்தால் வெளிப்படுத்துவார்.

இவரது நாவல்களைப்போல் சிறுகதையும் பெண்களால் கவரப்பட்டவை. அவற்றில் சில தற்போது சிறுகதை தொகுப்பாக வந்துள்ளது.

**அன்புடன்,**

**ஜி.அசோகன்.**

# முன்னுரை

நம்மில் எத்தனை பேருக்குப் பல்லக்கு ஏற வாய்த்திருக்கிறது? வெகு அபூர்வமாய் ஒரு சிலருக்கு...!

இன்றைய சமுதாயத்திலுள்ள யாருக்கும் அந்த அனுபவம் இராது என்றுதான் தோன்றுகிறது.

இரண்டு அல்லது நால்வரின் வலிய தோள்களில் சுமக்கப்படும் சற்று விநோத பயணம் அதுவெனில்... வேறு ஒருவரின் கற்பனையில் சாய்ந்து, சவாரி செய்து அறியாத பிரதேசங்களை எட்டி மகிழ்வதும் ஒருவகை பல்லக்குப் பயணம்தான் என்று எனக்குத் தோன்றியது.

ஒரு கதாசிரியரின் கற்பனை கட்டிய தூளியில் ஏறி அமர்ந்து, ஆடி அசைந்தபடி கற்பனை லோகத்திற்குள் நுழைந்து அங்கு சுற்றிவரும் சுக அனுபவம்.. வாசிப்பில் ருசி கண்ட பலரும் அடிக்கடி தேடிச் சுவைக்கும் சுகம் அது...

அலுக்கவே அலுக்காத பழக்கம்.

புத்தகங்களைத் தேடி, பிரித்து அதற்குள் மூழ்கிப் போகும் ஆனந்தம். நம் சுவைக்கேற்ப, தேவைக்கேற்ப வெவ்வேறு தோள்களில் ஏறி அமர்ந்து சுற்றிவரும் ஆர்வம்.

கதாசிரியரோடு நம் கற்பனையையும் பிணைத்து உணரும் இன்பம்.

பெரும்பாலும் 90-களில் வெவ்வேறு பத்திரிகைகளில் வெளிவந்த



என் சிறுகதைகள் இவை. சில பரிசு பெற்றுத் தந்தவை.

என் கவனிப்பை, கற்பனையைக் கொண்டு பின்னப்பட்ட சின்னக் கதைகள் - அதைப் பிறரிடம் பகிரும் உந்துதலால் எழுதப்பட்டவை. இவற்றைப் பிரசுரித்து என்னை ஊக்கிய பத்திரிகை ஆசிரியர்களுக்கு நன்றி.

வாசித்து சிலாகித்த, சிநேகம் பாராட்டின வாசகர்களுக்கு நன்றி.

எனக்குள் இப்படியான கதைகளை, அதைக் கொண்டு பிறருக்குப் பல்லக்கு அமைக்கும் ஆற்றலை அளித்த என் இறைவனுக்கு மனமார்ந்த நன்றி.

'இத்தனையையும் தொகுத்து ஒரே புத்தகமாக்கிப் புரட்டினால் நல்லாயிருக்குமே' என்று எண்ணி அதைச் செயலாக்கிய பதிப்பாசிரியர் ஜி.அசோகனுக்கும் நன்றி.

இந்தப் பல்லக்குப் பயணம் உங்களுக்கு இன்பமானதாய் அமையட்டும்.

பயணம் முடிந்து நிகழ்வுலகில் இறங்கும்போது உங்களின் மனம் குதூகலத்துடன், நற்குறிக்கோளுடன் மலர்ந்திருக்கட்டும்.

மிகுந்த அன்புடன்,
**காஞ்சனா ஜெயதிலகர்.**

# அந்தச் சின்னப் பெண்ணின் சிநேகம்

பிடரி முழுக்க வியர்வை வழிய அவன் சட்டைக் காலரைப் பின்னாகத் தள்ளிவிட்டான். பாலியஸ்டர் துணி, அந்தஸ்திற்கு துணை போனாலும், மாசி வெயிலுக்குத் தோதுப்படவில்லை. கண்கள் சோர்ந்து கிடந்தாலும் சுற்றிலும் தேடிச் சுற்றின. வத்தலக்குண்டு ஊர் பெரியதில்லையென்றாலும், கொடைக்கானல், மதுரை, பெரியகுளம் என்று போக , ஊர் பஸ் நிலையத்தில் கூட்டம் ஜகஜகத்தது.

ஏழு வருடங்களுக்கு முன் அவன் இங்கு வருகையில் இப்படியில்லை. அது மார்கழி மாதம். குளிரில் கொடைக்கானல் செல்வோர் அதிகமில்லை; மதுரையில் திருமணக் காலமுமில்லை. அத்தை, பாட்டியின் வசவுகளில் மனம் வெறுத்து பஸ் ஏறியவன், இவ்வூர் வந்து இறங்கியபோது கையில் பைசா இல்லை!

கோர்த்துப் பிரியும் நினைவுகளை சீராக்கி அசைபோட ஓரிடம் தேவையாயிருக்க - அவன் கண்ணில்பட்ட ஹோட்டலினுள் நுழைந்து ஒரு தயிர் வடைக்குச் சொன்னான்.

அப்போது 20 வயதிருக்குமா...? சரியாக மீசை கூட அடர்ந்திருக்கவில்லை.

'எலக்ட்ரிக்கு வேலை படிக்கியா மூதி? நாலுநாளா தோட்டங் காயுறது கண்ணுல படலை? வயரும் பல்புமா பொழுதக் கழிக்காங். ஆயி அப்பன் உசிரோடு ஏங் உசிரும் முழுங்கப்போதியாவில?'

காலையிலிருந்து அவன் தொண்டைக்கு ஒருவாய் 'வெந்நித் தண்ணி' காட்டாத கிழவி, சேலை நெகிழ்ந்ததுகூட உணராது, இவன் முன்னுச்சி மயிரைப் பற்றிக் குலுக்கி, கன்னத்தில் இடித்தாள்.

பல், உதட்டைக் கீற உப்பாய்க் கரித்தது. எலக்ட்ரிக் ஷாப்பில் உடன் வேலை பழக அமர்ந்திருந்த விடலைகள், நமுட்டாய்ச் சிரித்தது ரோஷத்தைக் கிளற, தான் கழற்றி கொக்கியில் மாட்டியிருந்த சட்டையைக்கூட எடுக்கத் தோன்றாது, அனைத்தையும் உதறிவிட்டுக் கிளம்பி விட்டான்.

'முழுங்குனவனே, சோறு முழுங்க வீட்டுக்குத்தான வருவ?' கிழவி 'தடதட'வென பின்னால் முடியவிழ ஓடி வந்தாள்.

தண்ணீரில்லாத் தோட்டத்தில் அவன் எங்கேயிருந்து குளிரப் பாய்ச்ச? தோள் வலிக்க முந்தாநாள் கூட சுமந்து ஊற்றினான். வீங்கிய உதடுகளை நக்கியவன், மிஞ்சிய வெறுப்பில் பஸ் ஏறி விட்டான்.

'போ... நாசமா போ...' - கிழவி ஆச்சரியத்தில் கத்திக் கொண்டே பஸ் பின்னாக மறைந்தாள். அவள் அடியும் வசவும் சலித்துப் போனது அவனுக்கு. வேட்டியின் கீழிருந்த அரை டிராயரிலிருந்து மூன்று ரூபாயில் சீட்டும் எடுத்து விட்டான்.

இதெல்லாம் ஏழு வருடங்களுக்கு முன். இங்கு வந்திறங்கிய போது மழையின் அறிகுறியாய்க் குளிர்ந்த காற்றடித்தது. காலி வயிறும், புது ஊரும் அவனைப் பயமுறுத்தின.

'கையில் நாலு காசிருந்தா தெம்பா இருக்கும்.' எண்ணியவன் ஒரு ஓரமாய் அமர்ந்தான். பலர் நடந்த பிளாட்பாரத் தரை, நொறுநொறுத்தது. வெற்றுடம்பை, சாய்க்க முடியவில்லை. மன அதிர்ச்சியும் ஆயாசமும் கண்ணைச் சுழற்றின. குறுகி சிறு தூக்கம் போட்டவன், பொழுது இருட்ட எழுந்தான். செய்வதறியாது அங்குமிங்குமாய் நடந்தான். மீந்திருந்த 20 காசில் என்ன வாங்க? பசி அகோரமாய் முழுச் சாப்பாடு கேட்டது.

கடைகளைப் பூட்ட ஆரம்பித்தனர். பசி, கால்களை வலுவிழக்கச் செய்தது.

'இப்பவே இப்படிப் பிறாண்டி அசத்துதே! நாளைக்கு..?. நாலு நாட்களில் குப்பைத் தொட்டி அருகில்தான்.' விலா



அசோக் நகர், சென்னை-83



எலும்பெல்லாம் வரியிட பிணமாகிக் கிடப்பது போன்ற கற்பனையில் அவன் உடல் மேலும் சில்லிட்டது.

'ஒரு வேல கிடைக்காதயா போயிரும்?' தைரியம் நின்றது சொற்ப நேரமே.

'படுக்கக்கூட இடமில்லாத.....?' சுற்றி வந்த கண்கள், பருத்த குப்பைத் தொட்டியின் மீது நின்றன. இருட்டு அடர்த்தியாயிருக்க நினைப்பு தயக்கமாய்த் தலை நீட்டியது.

'சே... எச்சிலையா?'

'வயத்துக்குப் போட காசில்லை. விடிஞ்ச பெறவு பொறுக்க ஏலுமா?' நெருங்கியவன், தன் நிலைமையை முழுவதுமாக உணர, அழ ஆரம்பித்தான்.

தோளை யாரோ தட்டினார்கள்.

விதிர்த்துத் திரும்பினான்.

''துன்னத் தேடினியா?'' கேட்டாள்.

பசி, அவன் கண்ணில் தெரிந்திருக்க வேண்டும். குறுகிக் குனிந்தான்.

கண்கள் மேலும் கலங்கிச் சொரிந்தன.

''வா'' - கூடையை இடுப்பிலிருத்தியவள், முன்னாக நடந்தாள்.

'இந்தச் சிறுபெண்ணைத் தொடர்ந்தா?... - எங்கே?' கேட்கத் தோன்றாமல் அவன் தொடர, பஸ் ஸ்டாண்டின் பின்வாசல் வழியே வெளியேறி ஒரு சந்தில் நுழைந்தனர்.

மழை வலுத்தது. காய்ந்த தரையில் துளிகள் விழுந்து மறைந்து பின் சற்றே சகதியானது. கழிவு நாற்றம் தூக்கலானது.

அவள் ஒரு திண்டின் மேலேறி நின்று ''இங்னதான்'' என்று குரல் கொடுத்தாள்.

இரண்டு கடைகளின் நடுவே மேடை போலிருந்த திண்டு - என்றோ அதில் வழவழப்பாய் பூசியிருந்த சிமிண்டு இன்னும் சிறிது ஒட்டிக் கொண்டிருந்தது.

இருபக்க தகரக் கூரை நீண்டிருந்ததில் மழைநீர் படாது காய்ந்திருந்த தரை அவனுக்குத் தெம்பு தந்தது. மேலேயிருந்த மழைநீரை சிலும்பி உதறி, கால்களைத் தேய்த்தவன், திண்டில் ஏறினான்.

கூடையை ஓரமாக வைத்து நெடுக நடந்தவள், ஒரு ஜன்னலருகே குனிந்து யாருக்கோ குரல் கொடுத்தாள். நீட்டப்பட்ட துணி மூட்டையுடன் வந்தவள்,

''என்னோடதுதேங். இங்கன கொடுத்து வச்சிருப்பேன்.'' அவன் பதிலுக்குச் சிரிக்க முயன்றான்.

சிரமமாய் இருந்தது.

கிழிந்த வாழை இலை ஒன்றால் திண்டைப் பெருக்கினாள். கூடையிலிருந்து வாழைப் பழங்களை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு, பேப்பரில் பொதிந்த பொட்டலத்தைப் பிரித்து நடுவாய் வைத்தாள்.

பல்லாங்குழியாய் மழைத்துளி, துள்ளித் துள்ளித் தெறித்ததைப் பார்த்தபடி நின்றிருந்தவனை,

''உக்காந்து துன்னு'' அதட்டினாள்.

நாலு இட்லியும் சாம்பாரும் தெரிய, அவன் வாயில் நீர் சுரந்தது.

''ஒனக்கு?''

''இதாங். எனக்கு ஒண்ணு. உனக்கு மூணு. பழம் இருக்குதுல்ல.''

மழைநீரில் கை கழுவி, இவனுக்கு மூன்றை ஒதுக்கி வைத்தவள், சாப்பிட ஆரம்பித்தாள்.

கூடையில் சுருண்டு கிடந்த கனகாம்பரத்தைப் பார்த்தவன்,

''பூ யாவாரமா?'' கேட்டான்.

''ம்.'' அவள் மேலே பேசாது சாப்பிட, அவனும் குனிந்தான் சாப்பிட. கைவிரல்கள் நடுங்கின. வறண்ட இட்லி சாம்பார், அமிர்தமாய் சுவைத்தது. வயிறு நிறையாவிடினும் உயிர் மீண்டது.

இருவரும் கைகளை மழைநீரிலேயே கழுவிக் கொள்ள, இலை எடுத்துச்சுத்தப்படுத்தினாள். கை குவித்து, நீர் சேர்த்து பிடரி, முகம் எனத் தேய்த்துக் கழுவிக் கொண்டாள்.

''சில்லுனு இருக்குது, பழம் சாப்பிடறியா?''

தோல் கருத்த வாழைப் பழங்களை நீட்ட, ஆளுக்கு இரண்டை விழுங்கினர். மெல்லுவதற்குள் அது வழுக்கி உள்ளே இறங்கியது. அத்தனைக் கனிந்த பழம்!





''பொட்டிக் கடையில விக்க முடியாததை அடிக்கோசரம் எனக்குக் கொடுத்திடுவாரு நாடாரு அண்ணாச்சி.''

''ம்''

''நானு ஞாயிறுதோறும் அவரு கடை மாதா படத்துக்கு ஒண்ணர முழப் பூவத் தந்துருவேனில்ல?''

பெருமையாகப் புன்னகைத்தாள்.

''உள்ளாற நவுரு. வாடையாயிருக்கு''

இப்போது தெருவிளக்கு மங்கலாய் அவர்கள் முகத்தில் பட்டது. அவளை நிமிர்ந்து பார்த்தான். முகம் கழுவியபின் புதிதாய்ப் பளிச்சிட்டாள்.

'பதினஞ்சு வயசிருக்கும்' கணித்தான்.

பூப்போட்ட பாவாடையும், ஆண்கள் போடும் சிலாக் சட்டையுமாக இருந்தாள். முடி செம்பட்டையாய் இருந்தாலும், கண்கள் நல்ல கருப்பில் மின்னின. மெலிந்த கைகளின் சிவப்புக் கண்ணாடி வளையல்கள் அவ்வப்போது சிணுங்கியது இனிமையாயிருந்தது.

மௌனம் சங்கடமாயிருக்க,

''பூ நாளக்கு வித்துப் போடுமா?'' கேட்டான்.

''ம்... கனகாவரந்தான்''

''நல்ல யாவாரமா?''

''நீ வூட்டுல சொல்லிக்காம வந்துட்டியாக்கும்?'' அவள் சாய்ந்து சாவதானமாய்க் கேட்க, அவன் முகம் இறுகியது.

''ம்''

''வசதியா... இல்ல கஷ்டந்தானா?''

''ஏதோ ரெண்டு வேள கூழு, சோறு உண்டு''

''எல்லாரும் மாதிரிதான். நானு இங்கன வந்து மூணு வாரந்தாங் ஆவுது''

லேசாய் வாய் திறந்து அவளைப் பார்த்தான்.

''இதுக்கு முன்ன?''

''இதே பூ யாவாரந்தான். ஆயி அப்பன் கிடையாது. சின்னாத்தா

ஊடுதாங். அந்த ஊருல நல்ல செல்ஸ்க. எங்கையில துட்டுப் புழக்கம் சாஸ்தி. பஸ்சு ஏசண்டு ஒருத்தன் சிநேகம்.... ம்ப்ச்.... நம்பி ஏமாந்தாச்சு போ... அவனும் அவஞ்சிரிப்பும்...''

முணங்கிய அவள் முகம், வெறுப்பில் சற்று முற்றித் தெரிந்தது.

அவன் பேச்சைத் தொடரத் தெரியாமல், அவளையும் மழையையும் மாறிமாறிப் பார்த்தவாறிருந்தான். காதின் சிறு வளையமும், இளங்கன்னங்களும் அவளைச் சிறுமியாகத்தான் காட்டின.

''அவனுக்கு வேற சிறுக்கிங்க சகவாசம். சம்பாரிச்ச துட்டெல்லாங் அவங் குடிக்கும் கூத்தியாளுக்குமாக் கரைச்சு நாசமாத்தான் போனெங்.''

மூக்கை அழுந்த தேய்த்து, விரல்களை நெரித்து விட்டுக் கொண்டாள்.

அழுகை முட்டுகிறதோ?

''சின்னாத்தா ஒப்பாரியும், அவ புருசன் ஏச்சும் ஒதையும் தினத்துக்கும் தாங்குமா சொல்லு? மனசு சும்மாவே நொந்து கிடக்குது. அதுங்க வேற. அதான் இந்த ஊருக்கு வந்தாச்சு.''

'இத்தினி சின்னப் பொண்ணு நீ - ஒனக்கு ஒரு கத... அதிலியும் காதலு கத!' வியந்தவன்,

''உனக்கு எத்தினி வயசு?'' வினவினான்.

''ஏங்? ஒனக்கு எத்தினி? நீ கூடத்தேங் சின்னப்புள்ள கணக்கா அழுத'' கேலி பேசினாள்.

''உனக்கு ஆயி, குடும்பம்?''

இல்லையென்பதாய் தலையசைத்து, தன் சோகத்தைச் சுருக்கி சொட்டாக விட்டான்.

''அப்ப ஒனக்கு எலக்டிரிக்கு வேல தெரியுமாக்கும்?''

''சுமாரா''

''முழுசா படிக்கிறமட்டும் கிழவியோட இம்சையைத் தாங்கிக்கிட்டிருக்கலாங்'' - அபிப்ராயப்பட்டாள்.

''மதுரயில ஒன்னு விட்ட மாமா இருக்காரு.''

''அப்ப இங்கன ஏன் இறக்குன?''





''துட்டில்ல''

''அதுசரி. படு. நாளக்கி நா தரேங்.''

''ம்ப்ச்... நீ கஷ்டப்பட்டு சம்பாரிச்ச துட்டு''

''அவங் குடிச்சு அழிச்சாங். உடம்பொறப்பாட்டம் இணக்கமா பேசுத நீ... நீ நல்லா வா... சந்தோஷப்படுவேங்.''

முதன் முதலாய்க் கேட்ட நல்ல வாக்கு அது - இனித்தது.

கோணியை உதறி விரித்தாள்.

''படு'' என்றவாறு சுவரோரமாய்ப் படுத்துப் போர்த்திக் கொண்டாள். அவனுக்கு திடீரெனக் கூச்சமாயிருந்தது.

''நா இருக்கேங்'' என்று குத்துகாலிட்டு அமர்ந்தான்.

''அது சரி. நனஞ்ச வேட்டியோட சிக்குக்கோழி மாதிரி கிட. நோவு கண்டா நாள மதுரை போனக்க மாதிரிதான்.'' அதட்டினாள்.

அவனுக்கு அவள் மீது விகல்ப எண்ணம் ஏதும் தோன்றவில்லை. சிறு வயதுத் தோழியாகத்தான் தோன்றினாள். சினிமா நாயகிகளைக் கண்டும், ஆபாசப் புத்தகங்களிலும் அவன் உடம்பு கொதித்துப் போவது உண்டுதானென்றாலும், அவளிடம் அவனுக்கு நன்றியும், பிரியமுமே வந்தன. முடிந்த அளவு தள்ளிப் படுத்தவனைப் போர்த்தி விடுகையில் வளையல்கள் கலகலத்தன.

''இருக்கது ஒரு போர்வ, தள்ளிப் படுத்தா எட்டுமாக்குங்?''

அவன் தாயை அறிந்ததில்லை. இப்போது தொண்டை அடைத்தது. நெஞ்சு பொங்குகிறதே அதுபோலத் தான் அருகாமையில் இருக்குமோ? அவன் அவளருகில் நகர்ந்தான்.

குளிர் எட்டாது வெதுவெதுப்பு கூடியது. மனம் அலுக்கும் வரை கவலைகளில் அலைபாய்ந்து பின் உறக்க விளம்பில் வந்து நின்றது. மெள்ள கனவுலகின் உள்ளிருக்கையில் கூரை நடுங்கும்படி இடி இடிக்க அவன் உதறி திரும்பிப் படுத்தான். பிறகே ஒரு பெண்ணின் அண்மை நினைவிற்கு வர, எழ முயற்சித்தவனை அவள் கைகள் தடுத்தன.

''கிட. மனசுல கள்ளமில்லேன்னா எதுவும் தப்பில்ல. ஊரு சனங்க ஏதுமில்லாத அனாதங்க நாம. தட்டிக் கேட்க யாரு? நாமதான் நமக்குக் காவலு.''

குரல் அழுகையில் கரகரத்தது.

இருளில் இவளும் பலதும் நினைத்துக் குழம்பிக் கிடந்திருக்கிறாள். மெலிந்த தோள்களை அவள் கைகள் ஆதரவாய்ச் சுற்றிக் கொண்டன. தொளதொளப்பான சட்டைக்குள் தோள் எலும்பாய்த் தட்டுப்பட, அவள் நெஞ்சு மேலும் இளகியது.

''கண்டதையும் யோசிக்காத புள்ள.''

''ஒனக்கு பயமில்ல?'' மூக்குறிஞ்சியபடி கேட்டான்.

''முன்ன இருந்துச்சு. இப்ப இல்ல.''

''அது சரி.''

''சின்னப் பொண்ணு நீ. இத்தனி தகிரியமா சம்பாரிக்கற, பிழைக்கிற. எனக்கு இருவது முடிஞ்சிருச்சு.''

''சரிதான். தகிரியந்தாங் வேணும்.'' அவள் குச்சு விரல்கள், அவன் தலையை ஆதுரத்துடன் கோதின.

''யாருமில்லேன்னு ஒஞ்சிடக்கூடாது... என்னா?''

இதுகாறும் விம்மியவள், அவனுக்குத் தைரியம் சொன்னாள்.

இதுவரை அனுபவித்தறிந்திராத ஆதரவில், தாய்மையில், அவனுள்ளே இறுக்கிப் பொதுமி வைத்த மணல் குன்று குளிர்ந்து சரிந்தது.

அவன் முதுகு குலுங்க ஆரம்பித்தது. பின் பெரும் கேவல்கள் வெடித்துக் கிளம்ப,

''ந்தா... வேணாந் துரை, வேணாம்பா. ஒண்ணுங் குறஞ்சும் போவலை. நீ நல்லா வருவே பாரேன்'' - ஆசுவாசப்படுத்தினாள்.

''தொழிலத் திருத்தமாக் கத்துக்கிடு என்னா? நாணயமா இரு - வேல குமிஞ்சுடும்'' அறிவுறுத்தினாள்.

முதுகை அவள் கைகள் நீவின.

எத்தனை நேரம்? தெரியவில்லை.

குழம்பிக் கிடந்த மனதுள் நிம்மதியும் தெளிவும் பரவித் தூங்கிப் போனான்.

**வி**ழித்தபோது கீழே சேறும் சகதியுமாயிருக்க, வானம் நிர்மலமாய்ப் பளிச்சிட்டது!





முகம் கழுவி இட்லி, டீ சாப்பிட்டான். வேட்டி காய்ந்திருக்க, சட்டை இல்லாததுதான் விசித்திரமாயிருந்தது. பேசியபடி நடந்து பஸ் ஸ்டாண்டின் மூலையிலிருந்த சிறு பிள்ளையார் கோயிலுக்குள் நுழைந்தனர்.

''சாமி எண்ணம் உண்டில்ல?''

உதட்டைச் சுழித்தான்.

''நம்மளப் போலவுங்களுக்கு இவரயும் விட்டா யாரு?''

பொட்டு விபூதி எடுத்து அவனுக்கு இட, தன்னிச்சையாய் அவன் கண்கள் மூடிக் கொண்டன.

''இந்தப் புள்ள நல்லாயிருக்கணும்யா'' வேண்டிக் கொண்டான்.

''இப்ப உம்முகம் மதிப்பா, களையாத் தெரியுது. வேலைக்கு வெளியே இப்படி போ.''

அவள் காலில் விழுந்து வணங்கத் தோன்றியது ஒரு கணம்.

''நா ஒரு நிலைக்கு வந்ததும் ஒன்னைய வந்து கூட்டிப் போறேங். என்னா?'' குழறினான்.

''ஒங் கலியாணத்தப்பக் கூப்பிடு. அண்ணியப் பாக்க வருதேங்'' சிரித்தாள்.

பொட்டலத்தினின்று துணி ஒன்றை உருவி நீட்டினாள்.

சிறு வெள்ளைக் கட்டம் போட்ட கருப்புச் சட்டை. புதிது போலத் தெரிந்தது.

''ஏது?''

''போடு. சொல்லுதன்.''

புதிது போடும் உற்சாகம் அந்தச் சூழ்நிலையிலும் அவனுக்குள் எழுந்தது.

''அவங் குடுத்தது. நா போடறதில்லை. ஒனக்கு நல்லாயிருக்குப் போ.''

''நா இதெல்லாம் மறக்க மாட்டேம் புள்ள''

''அது சரி... கிளம்பு'' ஆதரவாய்க் கிடைத்த ஒரு உறவு அறுபடும் வேதனை அவள் கண்களிலும் பரவியது.

''பஸ்ஸு ஸ்டார்ட் எடுத்து நேரமாச்சு....ஏறு.'' என்று அவன்

கையில் 10 ரூபாய்த் தாளைத் திணித்தாள்.

கூட்டத்தில் ஏறி, நெளிந்து குனிந்து ஜன்னல் கம்பி வழியே தேட அவனில்லை. உள்ளம் பதைத்தது.

'கிறுக்கன்... புள்ளப் பேரக் கூட கேக்க மறந்து...' பஸ் நிலையத்தை விட்டு வளைந்து வெளியேறியது.

தாட்டில் பாதி வடையை விட்டுவிட்டு வெளியேறினான். இங்கு வருவது இது மூன்றாம் முறை. முதல் சம்பளத்துடன் வந்தது இங்குதான். அதுவரை எடுபிடி வேலைகள் - அரைகுறைச் சம்பளம்.

''ஒரு சின்னப் பொண்ணு பூ வித்துட்டு இருந்ததுங்களே?''

''பேரு?''

''தெரியலை''

''எப்ப?''

''மூணு வருஷத்துக்கு முன்ன''

கேலியாய், எரிச்சலாய் வேறு ஜோலிக்குத் திரும்பினார்கள். தன் கல்யாணப் பத்திரிகையோடு வந்தவன், கிறுக்கனாய் நாள் முழுதும் இங்கேயே சுற்றி வந்தான்.

மதுரையில் அவன் தொழிலுக்கு நல்ல பேர். 'வேல சுத்தம் - பையன் நாணயந்தான்' என்று வேலைகள் தேடி வந்தன. உள்ளங்கை எரிய ஒயர் இழுத்தான். கை காய்ந்து சிவந்திருக்க வயிறு, வாழ்க்கை காயாது செழித்தது.

சப் காண்ட்ராக்ட் எடுத்து ஒண்டியாய் உழைத்தான். புண்ணான கை நிறைய பணம் நின்றது.

டைரக்ட் காண்ட்ராக்டிற்கு உயர்ந்தபோது, பெண் வீட்டார் தேடி வந்தனர்.

கல்யாணம் சிறப்பாக நடந்தது. அத்தைக் கிழவி வந்திருந்து, அவன் வாங்கித் தந்த சேலையில், ''இதெல்லாம் இருந்து பாக்காம போயிட்டா, உன்னையப் பெத்தவ'' என்று பினாத்தினாள்.

பூக்காரச்சின்னப் பெண்ணை புதுச்சேலையில், கறிச்சோறிட்டு, சந்தோஷப்படுத்த முடியாததில்தான் அவனுக்கு ஏக வருத்தம்.



ஸ்டார் நூலகம்



அவள் வாயால் 'நல்லாயிருப்பே' என்ற சொல் கேட்க முடியாத ஆதங்கம்.

புதுமனைவி பொம்மை மாதிரி அழகாய்த்தானிருந்தாள். 12 பவுன், பாத்திரம் பண்டம் இருந்தது. தினத்துக்கொரு சினிமா பார்த்து அதன்படியெல்லாம் உடுத்திக் கொண்டாள். தன் சுகம் மட்டுமே அவளுக்குப் பிரதானம். புருஷனுக்கும் கூட தர நேசம், நேரம் இருக்கவில்லை.

தினம் பூ, ஸ்வீட், சேலை, வளையல் என்று வாங்கி வந்தால்தான் சிரிப்பு, சோறு!

சிமெண்ட் சுவரில் தோள் நெரிய டிரில்லிங் செய்து, நொந்து வருபவன், அவளைக் கொஞ்சி வெளியே அழைத்துச் செல்ல வேண்டும்; அவள் குறுவிழிகள் பார்ப்பவையெல்லாம் வாங்கி நீட்ட வேண்டும்.

''அடிக்கு பன்னெட்டு ரூவாதான் மார்கெட் ரேட்டு. நீங்க பத்துக்கு ஏஞ் செய்யணும்? மாங்கா மால வாங்கிரணும் மறுவருஷம்'' என்று அதட்டினாள்.

ஆறு மாதத்தில் அவனுக்கு விழி பிதுங்கி விட்டது. நேற்று அவள் கேட்ட சோப்பை அவன் வாங்கி வரவில்லையென்று இரண்டு மணி நேரம் அழுகை, விசும்பல்.

சட்டியில் சோறில்லை.

வயிறு காய, அவனும் இரவு ஏங்கி அழுதான் -

பேர் அறியா ஒரு சிறு பெண்ணின் தன்னலமில்லாத அன்பை எண்ணி, அவள் அணைப்பு தந்த நிம்மதியை எண்ணி!

'நீ போட்ட பிச்சை புள்ள இந்த வாழ்வு. இவ ஆட்டம் போடுதா... எங்கன கிடக்க நீ?' பிதற்றினான். தலையணை நனைந்து போனது.

தங்க மோதிரம், கடிகாரம் என அந்தஸ்தாக உடுத்தி நின்ற அவன் அழுததைப் பலர் திரும்பிப் பார்த்துச் சென்றார்கள். கவலைப்படாமல் பஸ்கள் அங்கும் இங்குமாய் உறுமலுடன் உருண்டன.

(ராஜம் - ஜூலை 1994)

★★★

# அற்புத ஆயுதம்

**வ**த்சலாவிற்கு பஸ் ஸ்டாண்ட்டின் வியர்வை, நெரிசல், சுத்தம் - எல்லாம் நோவாயிருந்தன. ப்ளஸ் டூ படிக்கும் அவளுக்கு அடுத்த வாரம் மாதிரித் தேர்வுகள். இந்நேரம் ஒன்றுவிட்ட மாமா பெண்ணின் நிச்சயதார்த்தத்திற்கு வெளியூர் போவது அவசியமா என்ன?

தினம் எத்தனை படித்தாலும் பள்ளியில் திட்டுதான். நோட்டுகளின் விசிறல்தான். திங்கட்கிழமை இரண்டு கட்டுரைகளை எழுதி எடுத்துச் செல்ல வேண்டும் - எத்தனையோ சொல்லியும் அம்மா விடவில்லை.

'அப்பா வர முடியாதுன்னாச்சு. சொந்த அண்ணனைப்போல பிரியம் காட்டறவுங்க வீட்டு விசேஷத்தை அலட்சியம் பண்ணலாமா? இங்க பஸ் ஏறுனா, முப்பது நிமிசத்திலே சாயர்புரம். கண்ணுல்ல வத்சு... வாம்மா.'

கெஞ்சிக் கிளம்பச் செய்தாயிற்று.

தலையில் வியர்த்து நெற்றியில் வழிந்தது.

''என்ன வத்சு, ஏதாவது ஜூஸ் சாப்பிடலாமா?''

அம்மா கேள்விக்கு வத்சலா முறைத்தாள்.

அவளின் உடல், மனம் இரண்டும் சோர்ந்து கிடந்தன. வரும் தேர்வினை நினைத்தால் மலைப்பாயிருந்தது.

''அரை நாள் வேஸ்ட்'' - சிடுசிடுத்தாள்.

பஸ் வந்தது. நல்ல வேளையாய் இதில் அதிகக் கூட்டமில்லை. ஒருவரையொருவர் இடித்து, உரசி வியர்வை நாற்றத்தைப்





பரிமாறிப் புழுங்க வேண்டாம்.

ஜன்னலோரமாய் அமர்ந்ததில் பஸ் நகர்ந்ததும் முகத்தில் காற்று மோதி சுகமளித்தது. முன் சீட்டிலிருந்த மூன்று வயதுக் குழந்தை இவளையே முறைத்துப் பார்த்தது. பருத்துத் தொங்கும் கன்னங்களும் மாவடு கண்களுமாய் இருந்த சிறுமிக்கு ஒரு புன்னகை தந்தாள். அது கண்டு கொள்ளாது ஜன்னல் வழியே பார்வையை ஓடவிட்டது.

''ம்மா, தோ காக்கா பாரு - பத்து காக்கா.''

''முட்டாய் கடை... அந்தச் செருப்பு வேணும்.''

''சேப்பு கலர் பூ பாரு.''

பலதும் பார்த்து, கேட்டு, ஆனந்தித்துக் குழந்தை தூங்க ஆரம்பித்தது.

அதற்குத்தான் உலகின் மீது எத்தனை ஆர்வம்.

இவளுக்கு வாழ்வே அலுத்திருந்தது. படிப்பு என்ற பேரில் பலதும் உருப்போட்ட மூளை, சூடேறிப் போயிருந்தது.

கணக்கு, இலக்கணம், விஞ்ஞானம், சரித்திரம் என்று சகலமும் மூளையில் கலவையாய்க் குழம்பி வரிவரியாய் ஓடிக் கொண்டேயிருந்தன. 'நீ தேற மாட்டே' என்ற ஆசிரியைகளின் சிடுசிடுப்பு, நையாண்டி, குத்தல் எல்லாம் சதா இவளைப் புகை போலச் சுற்றிக் கொண்டு அமுக்கின. இத்தனைக்கும் அவள் மோசமான மாணவியல்ல. திரியைத்தூண்டி விடுவதாகக் கணித்து இவளைக் குத்தி நோகடித்தனர்.

படிக்க அட்டவணை போட்டவள் அதைச் செயல்படுத்தவில்லை. தேர்வு எனும் கொடிய பூதத்தின் முன் தான் நிராயுதபாணியாகத் தள்ளப்பட்டுப் போனது போன்ற கலக்கம். அண்ணன்மார்கூட முன்னைப் போல் அவளைச்சீண்டுவதில்லை. அவள் சோர்வு அத்தனை வெளிப்படையாய்த் தெரிந்தது போலும்.

**பி**ன்னந் தலையில் கம்பி பலக்கத் தட்டியதும் விழிப்பு கண்டது.

ஜன்னல்வழியே ததும்பி விற்கும் விஸ்தாரமான குளம்.

விழுதுவிட்ட மரங்களெல்லாம் குடை போல நீர் நோக்கிக் கவிழ்ந்திருந்தன. வெயில் இதமாக இருந்தது.

இருபது நிமிடம் உறங்கியதில் உலகமே 'பளிச்'சென்று தோன்றியது. மரங்களிடம் பேசியது. மரம் அசைந்து சொன்ன பதிலில் மெல்லிய அலைகளால் சிரித்தது குளம்.

''இந்தக் குளம் வற்றியே நான் பார்த்ததில்லம்மா.''

அம்மாவிடமிருந்து பதிலில்லை - அசந்த உறக்கம்.

சுற்றிலுமிருந்த பசுமை, குளுமையாக விழிகளுக்குள் புகுந்து உள்ளும் பரவ, வத்சலா மீண்டும் கண்களை மூடினாள்.

மாமா, அன்பாய் ஆவலாய் வரவேற்றார்.

''வாம்மா... தங்கச்சி, வத்சுப்பா - மாப்பிள்ளை வரலியாம்மா?''

''கலியாணத்துக்கு ரெண்டு நாளு முந்தியே வந்துருவோம்ண்ணே.''

''வத்சு எப்டீ வளந்துருச்சு. மெர்சி, தயா எல்லாம் உனக்காகத்தாம்பா காத்திருக்காங்க.''

உள்ளே போக அத்தை, சித்தி, அக்கா, பாட்டி, தங்கை என அத்தனை உறவினரும் சூழ்ந்து கொண்டனர். இவர்கள் வந்தால்தான் வைபவமே நடக்கப்போவதுபோல பாசம் மிக அவர்கள் பேசியது மனதுக்கு நெகிழ்வாயிருந்தது.

இளவட்டங்கள் தனியாக 'செட்' சேர்ந்தனர்.

''வத்சு நல்லா வளந்துட்டால்ல?''

''அதுக்கேத்த உடம்பு வேற.''

இவள் புன்னகைத்தாள் - 'பனைமரம் மாதிரி நிக்காத' என டீச்சர் கத்துவது இனி அவ்வளவு நோகாது!

கிணற்றடியில் அனைவரும் முகம் கழுவ, வத்சலா பின்னலைப் பிரித்துப் போட்டு தலைக் சுற்றினாள். ஆளாளுக்கு அரைவாளி, ஒரு வாளி என்று போட்டி போட்டு ஊற்ற குளிர குளித்தாள். யாரோ, ஒரு கை அரப்பைத் தலையில் தேய்த்து அலசினார்கள் - பச்சரிசி, வெந்தயம், எலுமிச்சை என்ற கலவையான மணம். மாமா மகள் புதுத்துண்டு தர, துடைத்து உடை மாற்றினாள்.





வாளியிலிட்ட ஈரத் துணிகளைத் தேடியபோது,

''நா உலத்திட்டேம்பா - ராத்ரி மடிச்சுத் தரேன்'' உதவிக் குரல் காதுகளில் தேன் தடவியது.

''அட்டகாச கலர் காம்பினேஷன்'' என்றள் டீச்சர் சித்தி.

''அகல பார்டர் உனக்குப் பாந்தம் வத்சு.''

''ரவிக்கை புது தினுசாயிருக்கு? எங்கே வாங்கின?''

ஆரஞ்சு நிற சேலையில் அகல கருப்புக்கரை. கருப்பில், ஆரஞ்சு வண்ண நூல் சேலையும், கண்ணாடி வட்டங்களுமாய் பளபளத்தது ரவிக்கை.

''உனக்கு நல்ல ட்ரெஸ் ஸென்ஸ்''

''அவ நிறத்துக்கு எதுவும் பொருந்திக்குது'' நொடிப்பது போல பாராட்டு வந்தது.

தலையைக் கோதி ஆற்றியவாறு, பாராட்டுகளைக் கேட்க கேட்க விநோதமாயிருந்தது. அவள் 'தடதட'வெனப் பேசாதவளாதலால் பள்ளியில் அவளுக்குக் கலகலப்பான தோழிகள் அமையவில்லை. அமரிக்கையான சில பெண்கள் சிநேகமென்றாலும், அவர்கள் இவளை இப்படி 'ஆஹா'வெனக் கொண்டாடியதில்லை.

இவர்கள் பெரும்பாலும் சிறு ஊர்களில் புழங்குவதால், அவர்கள் கண்ணுக்கு 'டவுன்' வத்சலா புதுமையாகத் தெரிந்தாள் போலும். உறவு முறையில் சிறு வயதிலிருந்தே பழக்கமென்பதால் பாசமும் உரிமையும் கலந்து பேசினர்.

'மாடு போல வளத்தி... அதில மினுக்கிட்டு வர வேண்டியது' என்று டீச்சர் வெடிக்கையில், மரவட்டையாய்ச் சுருங்கி இறுகிய மனதை இப்பேச்சுக்கள் மலர வைத்தன. நைந்த உள்ளத்தில் மெள்ள சந்தோஷம் ஊறியது!

ஏங்கிக் காய்ந்திருந்த உணர்வுகளை, பரிவும் பாராட்டும் பன்னீராய் இறங்கிக் குளிர்வித்தன.

மணப்பெண்ணிற்கு வத்சலா, புது மோஸ்தரில் கொண்டை போட்டு மலர் செருகினாள், உற்சாகமாய்.

*'மங்களம் செழிக்க கிருபை அருளும்*

மங்கள தாதனே' என்ற கல்யாண கீர்த்தனை பாடினாள்.

இரவு விருந்தின் போது மும்முரமாய்ப் பரிமாறினாள்.

''ரசமா? ஏன் இன்னுங் கொஞ்சம் கறிக் குழம்பு விடறேனே?''

''குடிக்க வெந்நீர் கேட்டு வாங்கியாரட்டா பாட்டியம்மா?''

''பாப்பாக்கு பாயாசம் கிண்ணத்திலே வாங்கியாரேன்க்கா.''

இலை எடுத்து, தண்ணீர் வார்த்தாள்.

வெற்றிலை மடித்து நீட்டி, சிரித்துப் பேசினாள்.

''வத்சு கெட்டி.''

''உம்மக என்ன சுறுசுறுப்பு - பதவிசு!''

''அதோட அழகுங்கூட''

கேட்கக் கேட்கப் புதுசாய் உணர்ந்தாள். உலகையே ஆள முடியுமென்பதாய் மனம் தெம்பு கொண்டது. வாழ்வின் சோதனைகளை எதிர்கொள்ளும் ஆயுதத்தை உறவு தர, ஆசையாய் வாங்கிக் கொண்டாள். இனி அவள் நிராயுதபாணியில்லை!

**ஊ**ர் திரும்பிய அம்மாவுக்குப் பெருமை பிடிபடவில்லை.

''ஏங்க, வரலைன்னு முரண்டினாலும் அங்கே எத்தனை ஒத்தாசையா நின்னா தெரியுமா? உறவே மலைச்சு... ம்ம்... நல்ல பேரெடுத்திட்டா நம்ப மக.''

அப்பாவிடம் மீண்டும் மீண்டும் அந்த ராத்திரியிலும் வெவ்வேறு விதமாய்ச் சொல்லி மகிழ்ந்தாள்.

பஸ்ஸில் திரும்பும்போதும் சற்றுக் கண்ணயர்ந்ததில் வத்சலாவிற்குக் களைப்பே இல்லை. மனம் வேறு நிறைந்து உடல் விறுவிறுவென்றிருந்தது. கட்டுரைகளுக்குரிய குறிப்புகளையும் தாளையும் எடுத்து வைத்து அமர்ந்தவள், எழுத்தில் மூழ்கிப்போனாள்.

''வத்சு... கொஞ்சம் டீ குடியேன்.''

அம்மாவின் குரல் இடைபுகுந்தபோது அவள் இரண்டாவது கட்டுரையையும் ஏறக்குறைய முடித்தாயிற்று.

''மணி என்னம்மா?''

''அதாகுது ரெண்டு. சூடா குடி. இன்னும் நிறைய வேலை





கிடக்குதோ?'' - அம்மா பாவமாய்க் கேட்டார்கள்.

''இதோ முடிச்சாச்சு. இனி எட்டு மணிக்கு எழுந்தாக்கூட ரெடியாகி ஓடிருவேன்.''

''நா ஊருக்குக் கூட்டி அலைக்கலைன்னா வெள்ளன முடிச்சிருப்ப.''

தலையசைத்தாள் -

''முடிச்சிருக்கவே மாட்டேம்மா. போய் வந்தது நல்லாயிருந்துச்சு.''

அம்மா சிரித்தாலும் கூட முகம் களைத்து வாடியிருந்தது.

''நீங்களும் கொஞ்சம் குடிங்களேம்மா.''

''படுக்க வேண்டியதுதான.''

''நானுந்தான் படுக்கணும். ரெண்டு வாய்...''

அம்மா குடிக்க, இவளும் ரசித்துப் பருகினாள்.

அம்மாவிற்கும் ஆயுதம் தேவைதான் என்று தோன்ற,

''உங்களை மாதிரி டீ யாரும் போட முடியாதும்மா. அது மணமே தனி'' - சொன்னாள்.

அம்மா முகம் மலர்ந்தது - ஊற்று திறந்தாற்போல.

(நண்பர் வட்டம், ஏப்ரல் - 1992)

★★★

# அக்கரைக் கைமணம்!

புவனா, தான் அரைத்தெடுத்த சட்னியைத் தொட்டு நாவில் வைத்துப் பார்க்க, உப்பும் உறைப்புமாய் சுவை நன்றாகவேயிருந்தது. எத்தனைதான் கவனமாய்ச் சமைத்தாலும் கணவன் ரமேஷ் குறை சொல்வது வழக்கமாகி விட்டது.

திருமணமான புதிதில் ஒவ்வொருத்தர் மனைவி கழனிநீரை வார்த்தாலும் 'அமிர்தம்' என்று கொண்டாடுவார்களாமே! இவர்களுக்கும் மணமாகி மூன்று மாதங்கள் ஆகியிருக்க, அவ்வப்போது ரமேஷ் அவளை மட்டந்தட்டுவது புவனாவிற்கு ஒருகுறைதான்.

குறை சொல்ல முடியாத பெண்ணுதான் அவள் - அன்பு, பரிவான புன்னகை, சுறுசுறுப்பு, சுத்தம் என்று எதிலும் குறையில்லை. வீட்டை நறுவிசாக வைத்திருப்பாள். தையல், பின்னல் என்று ஆர்வமிருந்ததால் அவளது பல படங்கள், கூடத்தை அலங்கரித்தன. திருமணத்திற்குப்பின் கணவன், 'இது கொஞ்சம் காரம் ஜாஸ்தி. உப்புப் போட மறந்தாச்சா? சப்புன்னு இருக்கு...'என குற்றஞ்சாட்டுவதற்குப் பயந்து அவள் சதா சமையலறையிலேயே கழிக்க, கைவேலைக்கு நேரம் இல்லை.

தோசைமாவு இருக்க, ரமேஷ் வந்ததும் வார்த்து சூடாகப் பரிமாறலாம் என்று நினைத்தவள், குளிக்க ஆயத்தமானாள். உடம்புக்கு ஊற்றி, உடை மாற்றி வீட்டின் பின்புறம் பூத்திருந்த பிச்சிமொட்டுகளைப் பறித்துத் தொடுத்து வைத்தவள், 'பளிச்'சென்று நின்றாள்.

அவனுக்கு டீ தயாரிக்கும்போதுகூட அவள் மனம்





படபடக்கும்.

'மனைவியை ஒரேயடியாய் மெச்சினால், தலையில் ஏறி உட்கார்ந்திடுவாள் என்ற பெருவாரியான கணவன்மாரின் அறியாமையா... இல்லை இவர் சுபாவமே அப்படித்தானா...?' என எண்ணியபடி நின்றாள்.

ரமேஷ் உற்சாகமாய் வந்து சேர்ந்தான். தேநீரைக் குறை சொல்லாது குடித்து முடித்தவன், சொன்னான்: ''இன்னிக்கு மிஸ்டர் தாஸ் வீட்டில் நமக்கு டின்னர்'' - தாஸ் அவனுக்கு மிகப் பிடித்த மேலதிகாரி.

''தோசைக்கல் போட்டிருக்கேன்.''

''அதெல்லாம் வேண்டாம். நீ ஜோரா டிரஸ் பண்ணிட்டுக் கிளம்பு''

ரோஜா நிற பனாரசும், முத்துச் சரமுமாகக் கிளம்பினாள் புவனா. வழியில் சில பழங்களும் வாங்கி தாஸின் வீடு போய் சேர்ந்தனர். வரவேற்றுப் பேசிய தாஸ் தம்பதியரை புவனாவிற்கு மிகவும் பிடித்துப் போயிற்று. பல வருடங்களாகத் தமிழ்நாட்டிலேயே இருந்ததில் கொச்சையும் கொஞ்சலுமாக, ஆனால்சரளமாகத்தமிழ்பேசியதாஸின்மனைவியுடன்வீட்டைச் சுற்றிப் பார்த்தாள் புவனா.

''இந்தப் புத்தகம் படிச்சிட்டு இரு பாப்பா. நா ஏதாச்சும் ஸ்வீட் செய்துர்ரேன்.''

''நானும் ஒத்தாசை பண்ணட்டுமாம்மா? என்ன ஸ்வீட்?''

''எம்மக மூணு மாசம்... உண்டாயிருக்கு. பூனா போய் பார்த்திட்டு நேத்துத்தான் இங்க வந்தோம். வீட்ல ஜாஸ்தி சாமான் இல்லே. சேமியா வாங்கச் சொன்னேன்... இவரு மறந்தாச்சு...''

''கொஞ்சம் ரவை இருந்தாப் பாயாசம் வைக்கட்டுமாம்மா?''

''உனக்குச் சிரமம் வேணாம்மா...''

''பத்தே நிமிஷம்தாம்மா...''

''தாங்க்ஸ் கண்ணு. நான் டேபிள் செட் பண்றேன்!''

ரவையை நெய்யிட்டு வறுத்து, பாலில் வேகவிட்டு 2 சொட்டு பாதாம் எஸன்ஸ், முந்திரிப் பருப்பு, சீனி சேர்த்து பத்தே நிமிடத்தில் இறக்கினாள்.

''நல்ல வாசனை. ஜோரா இருக்கு'' - என்ற அம்மா, அனைவரையும் சாப்பிடவும் அழைத்தாள்.

பேச்சு, சிரிப்பு என்று ரசித்துச் சாப்பிட்டு, கடைசியாய்ப் பாயசம் பரிமாறப்பட்டது. கைமணம் வேறாய் இருந்ததாலே தாஸ் ''ம்... ரொம்ப நல்லாயிருக்கு...'' என்று ரசித்து உறிஞ்சினார்.

''அம்மா... கைமணங்கறது இதுதான். பிரமாதம்...'' என்று சொன்னதோடு ரமேஷ் நிறுத்தியிருந்தால் தேவலை... தன் மனைவி ஒருமாதிரியாக அதிகாரியின் மனைவியைப் பார்த்து விழிப்பதைப் பார்த்தவன் தொடர்ந்தான்:

''புவனா இன்னும் சமையலில் சுமார் ரகந்தான். அம்மாகிட்ட கேட்டுப் படிச்சிக்க புவன்... நல்லநாள் கிழமையில் செய்யலாம்...'' என்க, தாஸின் மனைவி சிரித்து விட்டார்.

''என்ன ஜோக்?'' எப்பத்துடன் எழுந்த தாஸ் கேட்டார்.

''பாயசம் புவனு பாப்பா வெச்சது...'' பேசுகையிலேயே அம்மாவின் சரீரம் சிரிப்பில் குலுங்கியது.

அதுவரை புன்னகையோடு இருக்க முடிந்த புவனாவினால், கணவன் முகம்போன போக்கைப் பார்த்ததும் சிரிப்பு வந்து விட்டது.

''நிஜமாவா?''

அசடு வழிய ரமேஷ் கேட்க -

''இன்னுங் கொஞ்சம் போட்டுக்கோங்க'' என்று விஷமத்துடன் உபசரித்தாள் அவள்!

**ம**றுநாள் மனைவி தோசையுடன் பரிமாறிய மல்லிச் சட்னியை சாப்பிட்டு, மன்னிப்புக் கேட்கும் புன்னகையுடன் ''ரொம்ப நல்லாயிருக்கு புவனி'' என்றான் ரமேஷ்!

(உயிர்நாடி, ஜூன் 1992)

* * *



# அதே காசு

**''டே**ய், என் நகைப் பெட்டியிலிருந்த காச எடுத்தீங்களா?'' அமுதாவின் குரலில் பதட்டம் இருந்தது.

''எந்தக் காசு?'' - கேரம் விளையாட்டில் மும்முரமாயிருந்த ரவி கேட்டான்.

''என் நகைப் பெட்டியிலிருந்த ஒரு ரூவாக் காசு.''

''அது எதுக்கு எங்களுக்கு?''

''வந்து தேடிக் குடுங்கடா.''

''போங்கம்மா... என் உண்டியல்லேர்ந்து வேணா ஒரு ரூவா எடுத்துக்கோங்க.''

அம்மா சட்டென்று உள்ள போய்விட மகனுக்கு மனம் கேட்கவில்லை. பின்னாலேயே ஓடி வந்து -

''ஏம்மா'' என, அம்மாவின் கண்கள் கலங்கியிருப்பதைப் பார்த்தவன்,

''சுந்தர், இங்க வா'' எனத் தம்பியை அதட்டினான்.

கட்டிலின் மேல் அம்மாவின் சிறு நகைப் பெட்டி திறந்து கிடந்தது. அதில் வழக்கமான சின்ன முத்துச்சரம், ஒருஜோடி கல் வளையல்கள், இரண்டு மூன்று ஜோடிக் கம்மல்களின் ஊடே கருத்துத் தடித்துக் கிடக்கும் அந்தப் பழைய ஒரு ரூபாய் நாணயத்தைக் காணவில்லைதான்!

அமுதாவிற்குப் பெண் பிறக்காததாலோ என்னவோ, புதுசாய் நகை செய்து கொள்ள அத்தனை ஆசையில்லை. விசேஷ நாட்களில் உள்ளங்கழுத்தில் முத்துச்சரமும், கையில் கல்வளையல்களும் ஏறிக் கொள்ளும். ஒரு முழம் பூவையும்

தலையில் செருகிக் கொண்டால் அவள் அலங்காரம் தீர்ந்தது!

''அந்தக் காசு ஏம்மா ஸ்பெஷல்?'' - கேட்ட சின்ன மகனைப் பார்த்துப் புன்னகைத்தாள் அமுதா.

''அது எதுக்கு உங்களுக்கு?''

''பிகு பண்ணாதீங்கம்மா. நாங்க தேடணுமில்ல!''

''காசு கிடைக்கட்டும் சொல்றேன்.''

''கட்டாயம் தேடி எடுத்திடலாம் ப்ளீஸ்மா... சொல்லுங்களேன்.'' மகன்கள் கெஞ்ச அமுதா, கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கனைத்துக் கொண்டாள்.

''இது பதினேழு வருஷத்துக்கு முந்தின கதைடா''

''சொல்லுங்க''

''கடையம் பாட்டி வீட்டுக்கு நானும் தம்பி அருணும் போயிட்டுப் பஸ்ல ஊருக்குத் திரும்பிக்கிட்டிருக்கோம்.''

''அருண் மாமாவா?''

''ம்... அப்ப அரை டவுசர் போட்ட பய.''

''கண்டக்டர் டிக்கெட் போக ஒரு ரூபா காசு மீதம் தந்தாரு. ஒங்க மாமா காசைச் சுண்டிப்போட்டு, பிறவு விளையாட்டா நெத்தியிலேர்ந்து மூக்கு வழியா அத உருட்டிக் கொண்டு வந்தான், நா சும்மா இருக்க மாட்டாம அதேபோல, காசைப் பிடுங்கி என் மூக்கு மேல உருட்ட ஆரம்பிச்சேன்.''

''அப்போ உங்களுக்கு என்ன வயசு இருக்கும்?''

''அதிருக்கும் பத்தொம்பது இருவது. வாயி திறந்திருக்க, காசு 'டபக்'குனு உள்ளே தொண்டைக் குழியில போய் சிக்கிடுச்சு.''

அமுதாவுக்குச் சொல்கையிலேயே சிரிப்புப் பொங்கியது. பையன்களுக்கும்தான்!

''அருண் கூச்சல் போட்டான். எனக்கு மூச்சடைச்சு முகம் வெளுத்ததைப் பார்த்து பஸ் நிப்பாட்டியாச்சு. என்ன ஏதுன்னு ஆளாளுக்கு விசாரிச்சு முடிக்கறதுக்குள்ள எனக்கு உயிரே போயிடும்போல் பயம். கை காலெல்லாம் வியர்த்துப் போச்சு. டவுனுக்குள்ளே டாக்டர் வீட்டுக்குப் போக இருபது நிமிஷமாவது ஆகும்னு டிரைவர் சொல்ல, அருண் அழ ஆரம்பிச்சுட்டான். எனக்கு ஒடம்பு நடுங்குது. அப்போ ஒருத்தர் என்னைத் தூக்கி





நிப்பாட்டி, குனியச் சொன்னாரு- ஓங்கி பிடரியில ஒரு போடு! இரண்டாவது தட்டுல காசு 'பொட்'டுனு வெளியே விழுந்திடுச்சு. என்ன நிம்மதினா - ஊரு வர்றவரைக்கும் கண்ணுலர்ந்து நீரா வடிஞ்சிட்டேயிருந்தது - ஊரு சேர்ந்த பிறகு அவரு அருணுகூட ஏதோ பேசிட்டு வீடு வரைக்கும் வந்துட்டுப் போனாரு. ஒரு மாசம் பின்னாடி அவரு வீட்லேர்ந்து என்னைப் பொண்ணு கேட்டு வந்தாங்க. பிறகு கல்யாணமும் முடிஞ்சு போச்சு'' - முடிக்கையில் அமுதாவின் முகம் சிவந்திருந்தது.

''அட... அப்பாதான் காதல் கதை ஹீரோ'' - சுந்தர் சிரிக்க, ரவி கூச்சத்துடன்,

''டேய். அம்மான்னு விவஸ்தயில்லாம'' என்று தம்பியை அடக்கினான்.

''அந்தக் காசுதான் இதுவாம்மா?''

''ஏன் இந்தக் கதைய முன்னாடி சொல்லலை?''

பையன்களின் கேள்விகளுக்கு அமுதா கூச்சத்துடன் சிரித்தாள்.

மகன்கள் இருவரும் மும்முரமாகக் காசைத் தேடினர். கட்டிலடியில் பெருக்கி, இடுக்குகளில் துழாவி, சேலைகளை நோண்டி... ஊஹூம்... கிடைக்கவில்லை.

அமுதாவின் முகத்தில் சற்று முன் தெரிந்த வெட்கம், சிரிப்பு எல்லாம் போய் முகம் சூம்பிக் கிடந்தது.

''உங்கப்பா வேற ஊர்ல இல்லை... நல்லபடியா வந்து சேரணுமே.''

''அப்பா மெடிக்கல் ரெப்ம்மா... ஊருக்கு எப்பவும் போறதுதான்... புதுசா கவலைப்படுறீங்க?''

''ம்ப்ச்... இன்னிக்கு எங்களுக்குக் கல்யாண நாளுடா. பாயசம் வைச்சேன். அப்பா 'இன்னிக்கு வந்திருவேன்'னு சொல்லியிருந்தாங்க. சரி, நகையை எடுத்துப்போடலாம்னு பெட்டியைத் திறந்தா, காசைக் காணோம்.''

அமுதா குளித்துப் பாலாடைக்கட்டி நிறத்தில் கதர் பட்டு கட்டியிருந்தாள் அதற்கு முத்துமாலை வெகு எடுப்பாயிருக்கும்.

''இப்ப ஏன் நெக்லெஸ் போட்டுக்கலை?''

''ச்ச்... எனக்கு மனசே சரியில்லப்பா'' - அமுதா சொல்கையிலேயே கதவு தட்டப்பட்டது.

''அப்பாவாத்தான் இருக்கும்.''

கணவரின் பெட்டியைப் பிள்ளைகள் கொண்டு வந்து உள்ளே வைத்தபின்பும் அமுதாவால் ஏனோ எழவே முடியவில்லை. உடம்பே கனத்து விட்டாற்போலிருக்க உள்ளே நுழைந்த கணவனை மட்டும் கண் நிறையப் பார்த்துக் கொண்டாள்.

''பாயாசம் மணக்குதே'' சிரித்த கணவன் சேகர், பூப்பொட்டலத்தை நீட்டினான்.

''காசக் காணோங்க.''

''எந்தக் காசு?''

''நகைப்பெட்டியில வச்சிருப்பேனே, அந்த ஒரு ரூவாக்காசு.''

''அதுக்கென்ன இப்ப?''

அமுதா கண்களில் நீர் கட்டியது.

''யேய்... என்னதிது... நாந்தான் எடுத்தேன்'' - கணவன் சொல்ல,

''எதுக்கு என்னையக் கேக்காம... எதுக்கு?'' குமுறினாள்.

''எல்லாம் ஒரு விஷயத்துக்குத்தான்'' என்றவாறு பெட்டியைத் திறந்தான் சேகர். மேலாக இருந்த நகைப்பெட்டியை மனைவி கையில் வைத்தான்.

மகன்கள் ஆர்வமாய்க் கவனித்திருக்க, அமுதாவிற்கு படபடப்பாய் இருந்தது.

''நகையா?''

''பாரேன்.''

திறக்க, கருநீல வெல்வெட்டில் பெரிய தங்கக்காசு ஒன்று பளபளத்தது. அதைச் சுற்றிலும் சிகப்புக் கற்கள் ஜ்வலிக்க, அப்பதக்கம் மெல்லிய சங்கிலியில் கோர்க்கப்பட்டிருந்தது. பின்னாலிருந்து மூன்று வளையங்களைக் காட்டிய சேகர் - ''இதைக் கழுத்தில் ஒட்டினாப் போலயும் போட்டுக்கலாம். தழையவும் இறக்கிக்கலாம்'' என்றான், பெருமையாக. சின்னகாசும், சிவப்புக்கற்களுமாய்ப் பொருத்தமான தோடுகளும்





பக்கத்திலே இருந்தன.

''என் காசு எங்கே?''

''நகை பிடிச்சிருக்கா?''

''ம்... காச எதுக்கு எடுத்துப் போனீங்க?''

''அதக்காட்டி கடைக்காரர்ட்ட ஏதாவது புதுமாதிரியா உனக்குச் செய்யத்தான்.''

''அதுல என்ன புதுசா? சொல்லிட்டு எடுத்துருக்கலாம்ல?''

''முதல்ல இது பிடிச்சிருக்கான்னு சொல்லு.''

''அழகாயிருக்கு... காசு எங்கே?''

பிள்ளைகள் சிரித்தனர்.

''அம்மா விடமாட்டாங்கப்பா. காசைக் குடுத்திருங்க.''

பர்ஸைப் பிரித்து சேகர் துழாவ,

''காச மறந்து விட்டுட்டு வந்தாச்சா? அதை எதுக்கு எடுக்கணும்? கடைக்காரன் பழைய ஒரு ரூபா காசைப் பாத்திருக்க மாட்டானா என்ன?'' அமுதா பதறினாள்.

''ஏனோ அன்னிக்கு உன் நகைப்பெட்டியத் திறந்தேன்... இந்த ஐடியா தோண காசை எடுத்தேன்... இந்தா'' - காசைக் கணவன் கையிலெடுக்க, அதைக் கை நடுங்க வாங்கி உற்றுப் பார்த்தாள்.

லேசாகக் கருத்து ஓரத்தில் ஒரு சிவப்புப் பொட்டுடன் அது அவள் உள்ளங்கையில் கிடந்தது.

''எங்க கல்யாணத்தன்னைக்கு எனக்கு நகப்பாலீஷ் போடறப்ப, ஒரு துளி சிந்திடுச்சு'' என்று அந்தச் சிவப்புக் கறையைத் தடவினாள்.

''அதக் கழுவிட்டா என்னம்மா?'' சுந்தர் கேட்க, ''போடா அசடு'' என்பதாய் ஒரு சிரிப்பு சிரித்தாள், அவன் அம்மா.

புதிதாய் வந்திருந்த தங்கக் காசுச்சரம் வெளியே மின்னிக் கிடக்க, அந்தப் பழைய தடித்த நாணயத்தைப் பத்திரமாய் தன் நகைப்பெட்டிக்குள் வைத்து அலமாரியில் பூட்டும் அமுதாவை, மூன்று ஆண்களும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

(உயிர்நாடி, அக்டோபர் 1991)

***

# அதுதான் பாயின்ட்!

**கா**ர் போன வேகத்தை விட அதி வேகத்தில் விநோதா பொரிந்து... புலம்பினாள்.

''அவர் பார்வை வெறுமே பார்க்காது சுஜா. அப்படியே கொத்தியெடுக்கும். வச்ச முழியை எடுக்க மாட்டார் - உடம்பெல்லாம் ஊர்ந்து, முழுங்கறாப்போல ஊடுருவும்...''

குறுக்கே நடந்த எருமைக்காய் ஹாரனை அழுத்தி, ஒதுங்கி, கியர் மாற்றினேன் - அது முணங்கியது.

''எங்க வீட்டிலே நேர் மாறு. வச்ச கண்ணை எடுக்காதே. கண்ணு, மனசை ஜோடியாய் ஒரே கவனத்தில நிறுத்தும்பார்.''

''என்ன சுஜா சொல்ற? சைட் அடிம்பாரா உன்னை...?''

''ஐயோ... உன்னது அரண்டவன் பார்வையாயிடுச்சு. எது அசைஞ்சாலும் பேய்தான்'' - சிரித்தேன்.

''அப்ப என்ன சொன்ன?''

கழற்றிய குளிர் கண்ணாடியைப் பத்திரமாய் வைத்தேனா என்ற சந்தேகம் முளைவிட, என் கைப்பையைத் திறந்து துழாவினேன். தேடியது விரலுக்குச் சிக்காததால் குனிய, ''என்ன தேடற சுஜா? ரோட்டை விட்டுக் கண்ணை எடுக்காதயேன்'' - படபடத்தாள் விநோதா.

''இதைத்தான் அவரும் சொல்வார். காரில ஒரு கீறல் விழுந்தாத் தாங்காது அவருக்கு. கைக்குட்டை, பேனா, லிப்ஸ்ட்டிக், ஏதாவது தேடுவேன். இல்ல, பொட்டு சரியா நடு நெற்றியில இருக்கானு ரியர்வ்யூ கண்ணாடியிலே நொடி நேரம் பார்ப்பேன் - பொறுக்காது அவருக்கு.''





''சரிதானே? நீ முழுசா வீடு போய்ச் சேர வேண்டாமா?''

''அப்படிச் சொன்னாத் தேவலையே! 'இன்னைக்குக் கிழவி உங்கையால டிக்கெட் வாங்கிட்டுப் போகப் போகுது. குழந்தை பாவம்... சின்ன உயிரும்மா! கோழிக்குஞ்சு சூப்புக்கு ரெடி - கியர் பாக்ஸ் முணங்கறது எனக்குத் தாங்கலை சுஜா'ம்பாரு.,' உருகல் பிறருக்காகத்தான்.''

''அது உம்மேலே உள்ள அக்கறைடீ. எங்கதையைக் கேளு. மேடும் வளைவுமாய் ஒரு பொண்ணு நடந்தா... இவர் பார்வை துரத்தும்...''

''ஒரு ரசனைதான்.''

''அவ அம்சம் பத்தி என்கிட்டயே அபிப்ராயம், விமர்சனம் எல்லாம்.''

''அப்போ ஆபத்தேயில்லை.''

''போடீ... நான் ஒரு வாரமா அவர்கூட பேசலைத் தெரியுமா?'' இடது புறத்தில் உரசலாய் ஓவர்டேக் செய்து பறந்த ஆட்டோக்காரனை முறைத்த என்னை,

''ஏன்னு கேளேன் சுஜா'' - துளைத்தாள், தோழி.

''இல்லைன்னாலும் சொல்லப் போற நீ...''

''சொல்றார்... 'அமலா மெலிசான நளினம், குஷ்பு கவர்ச்சிக் குண்டு. அதுக்கப்புறம் யாரும் சரியில்லை விநோ - நல்லவேளை இப்போ மணிஷா கொய்ராலா வந்தா'ன்றார்.''

''ம்ம்... அசத்தலாத்தான் இருக்கறா.''

''பேரே வேடிக்கை - நீள கழுத்தும் மூஞ்சுமா... கேட்டுட்டேன் சுஜா அவரை - 'என்னை விட அவ அழகா'ன்னு''

எனக்குள் சிரிப்பு குமிழிட்டது.

''என்ன ஒரு அலட்சியமா என்னைப் பார்த்தார் தெரியுமா? அடங்கற பாவத்திலே ஒரு சிரிப்பு - பிறகு அழுத்தந்திருத்தமா - 'ஆமா அவ அழகுதானே'ங்கறார்.''

அழுகையில் உதடுகள் கோணிய விநோதா, அப்பொழுது டி.வி. நட்சத்திரத்தின் ரேஞ்சைக் கூட எட்டவில்லை!

''அசடு... அழாத! நீ பாயிண்ட்டை மிஸ் பண்ணிட்டு சுத்தி சுத்தி வர்ற.''

''பாயிண்ட்டுக்கு வரேன் - 'அவளை விடவும் ஷில்பா ஷெட்டி

லட்டு குட்டி'ன்னு உருகறார்!''

''ஓ? தீபாவளிக்கு 'மிஸ்டர் ரோமியோ' ரிலீசுன்னு நினைக்கறேன். ஷில்ப்பாவே தன் முதல் தமிழ் ப்ரீவ்யூ ஷோவிற்கு உங்க ரெண்டு பேரையும் அழைக்கிறான்னு வை.''

''ஹே! நல்லாப் போனேனே'' - நெஞ்சு ஏறி இறங்க சிறினாள்.

''போற. அங்க அந்த சின்னத் தியேட்டரிலே நெருப்புப் பத்திக்குது. ஒரே அமளி துமளி. அத்தனைப் பேரும் கதவுக்காய் ஆவலாய்த் தேடிப் பறந்து. ஒருத்தரையொருத்தர் தள்ளி மிதிச்சு...''

''கண்ராவி கற்பனை.''

''சரி... நிறுத்திக்கறேன். அப்போ குமார் உன்னைக் காப்பாத்துவாரா இல்லை... ஷில்ப்பாவையா?''

சிக்னலில் சிவப்பு கண்டு ப்ரேக்கை அவசரமாய் அழுத்தினேன்.

''சினிமாக்காரியைக் காப்பாத்த நூறு பேர் அலைபாய்வானுங்க...''

''கேள்வியைக் கவனி விநோ, உம்புருஷன் யாரைப் பிடிச்சு வெளியே கொண்டு வர முயற்சி செய்வார்? யூ-ஆர் ஷில்ப்பா?'' 'ஜோடிப் பொருத்த' ரெகோவின் கறாரில் கேட்டேன்.

''என்னைத்தான்.''

''அதுதான் பாயிண்ட். அதை சதா நினைவிலே வை. உன்னை விட அழகா...? (ஆயிரம் என வந்ததை நூறுக்கு வெட்டினேன்!) நூறு பேர் இருக்கட்டுமே... ஆனா, உலகத்திலே அவருக்கு அதி முக்கியமான பெண் நீ... நீ மட்டுந்தான்...''

''அப்படீங்கற?'' சிரிப்புப் பரவிய அவள் முகத்தின் குழந்தைத்தனம் அழகாய்த்தானிருந்தது.

''ஆம்ம்மாம்... என்னவருக்கு இந்த பென்ஸ் கார் ஒரு பொக்கிஷந்தானுன்னாலும் அதுகூட சுறுசுறுன்னு ஒரு சண்டை போட முடியுமா?''

''அதுக்கு நம்மை விட்டா ஆளேது?''

பச்சை கண் விழித்தது சிக்னல்.

க்ளட்சை முழுமையாய் அழுத்தாது, ஆக்ஸிலரேட் செய்ய, படகு பென்ஸ் முரண்டி சிலிர்த்து, பின் வேகமெடுத்து மிதந்தது!

(முத்தாரம்)



***

# ஆவது பெண்ணாலே

**தா**டையைக் கோணி, கன்னங்களை உப்பி சவரம் சுத்தமாக நடந்து கொண்டு இருந்தது. முடிந்ததும் குளிர் நீரில் முகம் கழுவித் துடைத்துக் கொண்டான் ரகு. முகவாய்த் தூக்கி முகத்தை இட வலமாய் திருப்ப, மிருதுவான பளபளப்பில் முகம்.

உண்மைதான். நண்பர்கள் கிண்டலடிப்பது போன்று மிக இளமையான தோற்றப் பொலிவு.

''ஏண்டாப்பா ரகு, 'ஆண்டொன்று போனால் வயதொன்று குறையுங்'கற மாதிரியில்லே இருக்கே - எப்படி?''

''தண்ணி, புகையெல்லாம் ஐயா நிறுத்திட்டாருல்ல... அதான்.''

இரண்டு எட்டு பின்னே நகர்ந்தவனின் முழு பிம்பம் நிலைக் கண்ணாடியில் தெரிந்தது.

பத்து வயது மகள் பத்மினியோடு தினமும் பூப்பந்து ஆடுவதில் வயிற்றுச் சதை மாயமாகியிருந்தது.

சதை வற்றியிருந்தாலும் செழிப்பு தூக்கலான கவர்ச்சி.

''என்னத்தான்... குளிக்காம உங்களையே ரசிக்கிறது! முகூர்த்தம் ஒன்பதுக்கு. உயிர் நண்பன் - எட்டுக்காவது மண்டபம் போயிடணும்னீங்க நேத்து...''

பேச்சோடு பரபரவென்று படுக்கை விரிப்பைச் சீர் செய்த மனைவியைக் கனிவுடன் பார்த்தான்.

நேற்றிரவு இதே கட்டிலில் நேர்ந்த சரச சீண்டல்கள் நினைவிற்கு வந்தன.

அழகான மனைவி - நல்லவள் - அத்தனையையும் விட அமைச்சராய் ஆலோசனை தருகிறவள்.

''என்ன பார்வை?'' இது போலீஸ் சீறல்! அவளது பொலிவும் கூடியிருந்தது.

''அழகாயிருக்கே பானுகுட்டி... தங்கத்தேர் மாதிரி'' கடித்த பல்லூடே கொஞ்சினான்.

''பொன்னும் பட்டும் சேர்ந்தா யாருதான் அழகில்லை?''

''அப்படிச் சொல்லிராதே... பலூனாட்டம் பருத்த வயிறை மறைக்கத்தான் நம்ம பெண்களைப் பட்டு சுத்திக்கிறது. அப்புறம் முக அழகே மங்கற அளவுக்கு வெள்ளைக்கல் பதிச்ச நகைச் சரங்கள்...''

''நீங்க இன்னும் குளிக்கலை'' நினைவுபடுத்தினாள்.

அவளது அத்தனை நேர சுறுசுறுப்பில் அறை சீர்பட்டு இருந்தது.

அவளுக்கு அழகுணர்ச்சி அதிகம். தன்னிலுமே நேர்த்தியான அலங்காரம்.

வெங்காயச் சருகுநிறப் பட்டு, கெட்டிக் கருப்புக்கரை கருகுமணியும் பொன்னும் கலந்து கட்டிய நீள ஆரம். பொருத்தமான தோடுகள். தழைந்த கொண்டையைச் சுற்றி அவளே நெருங்கத் தொடுத்த குண்டுமல்லிச் சரம். கிறங்கச் செய்யும் குளியல் பொடி நறுமணம். இன்னும் வடிவிழக்காத சந்தன உடல்.

அவள் உடலில் இப்போது கிடந்த நகைகளே 25 பவுன் இருக்கும். தாலிக்கொடியே ஏழு பவுன்... பதமாக கலந்திருந்த வெந்நீரை தலையில் விட்டபடி அவன் சிந்தனை தொடர்ந்தது.

மகள் பத்மினிக்கும் காது கழுத்தில் நகைகள் மின்னும்.

கடனுக்கு அடகு வைக்கவே நகைகள் என்றிருந்த வாழ்வு... எப்படி மாறிப்போனது?

தயாராகி ஸ்கூட்டரில் போகும்போதும் உள்ளுக்குள் பொங்கிப் புன்னகையாய் நுரைத்தது உற்சாகம். அது புரிந்தாற்போல பின்னே அமர்ந்திருந்த பானு, அவனை இறுகக்கட்டி நெருங்கினாள்.

'உனக்குப் பெண் பிறந்திருக்காம்' பத்து ஆண்டுக்கு முன்னே அம்மா தொலைபேசி மூலம் அறிவித்தாள் - மகிழ்வு தொனிக்காத





கடூர அறிவிப்பு.

''பானு... எப்படி இருக்காளாம்மா?''

''அவளுக்கென்ன... பெண்ணைப் பெத்துக் கொடுத்திட்டா. இனி உம்பாடுதான்டா ரகு திண்டாட்டம்.''

மகளைப் பார்க்கக்கூட பானுஊருக்குக் கடன் வாங்கிக் கொண்டு ஓடியவன் அவன். சினிமா நாயகன் பாதிப்பில் ஒன்றிரண்டு விளையாட்டுப் பொம்மைகளும் சின்ன சட்டையும் வாங்கிச் சென்றிருந்தான்.

வெள்ளரிப் பிஞ்சு போலிருந்த பச்சைக் குழந்தையைக் கவனமாய்த் தூக்கினான். உடம்பெங்கும் மகிழ்ச்சிச் சிலிர்ப்பு.

''யாரைப் போல் பானு?''

''உம்ம்... உங்களைப் போல... அழகா...''

''மெய்யாவா?''

''பின்னே? அப்பாவைப் போலப் பெண்ணிருந்தா அதிர்ஷ்டம்பாங்களே...''

'கடன் வாங்கி மகளைப் பார்க்க வரும் தகப்பன் யோகக்காரனா?'

ரோஜா நிறக் கை கால்களை முறுக்கியபடிக் கிடந்த பிஞ்சு மகளைப் பார்த்து நெகிழ்ந்த நேரம் -

கூர் முட்களும் தைத்தன.

நண்பர்களின் நையாண்டி -

'ரகு, இனி நீ நினைச்சாப் போல காசை வாரி இறைக்க முடியாது.'

'ஆமா... 'பொண்ணு இருக்கே'னு பொண்டாட்டி முறுக்குவா...'

'பணமும் பவுனுமாய்ச் சேர்த்து ஓய்ஞ்சிடுவப்பா...'

'இவன் சேர்ப்பானா? ஓட்டக் கையப்பா - செலவாளி.'

'இந்தக் காலம் ஒரு பெண்ணைப் பெத்தாலே ஆண்டிதான்...'

இவை அனைத்தையும் பானுவுடன் பகிர, அவள் ஆறுதலாய்ப் பேசினாள்.

''சொல்லட்டும் அத்தான்... அப்படின்னா இப்படி - இப்படின்னா அப்படின்னு மாறி மாறிப் பேசற உலகந்தான்''

''ஒரு காதில வாங்கி மற்றதிலே விட்டுடலாங்கறியா?''

''இல்லை... வாங்கி வேண்டியதை மனசிலே நிறுத்திக்கணும். ஒட்டைக் கைன்னாங்களா... அநாவசிய செலவைச் சுருக்குங்க. மகளுக்கு சீர் சேக்கறது சுமையில்லை. சுகந்தான்னு காண்பிங்க. இவளுக்கு வாழ்வு அமைச்சுத் தர்றதிலே ஆண்டி ஆயிடமாட்டோம்னு நிருபிங்க. அவங்க கண்முன் வாழ்ந்து காட்டுவோம்.''

''என்னால முடியுமா பானு?''

''நிச்சயம் முடியும். உதவிக்கு நானும் இருக்கேன்.''

உதவி உறுதியாயிருந்தது. மகள் பத்மினிக்காக பானு தைத்த உடைகள் அண்டை அயலில் பாராட்டைப் பெற, அவர்களும் அதுபோல தைத்துத் தரச் சொல்லி தேடி வந்தார்கள். வீட்டுச் செலவுகளுக்கு அந்த வருமானம் கை கொடுத்தது.

இன்னும் செலவைச் சுருக்கினான். மதுவும் புகையும் ஓய, சேமிப்பு வளர்ந்தது.

குழந்தையின் கொஞ்சலில், மனைவியின் சீராட்டலில் குடும்ப நேசம் வலுத்தது. பெருகிய வளத்தில் உறவு, சிநேகங்கள் காட்டி மதிப்பும் உயர்ந்தது.

இந்தப் பத்து ஆண்டுகளில் நிலைமையில் நல்ல முன்னேற்றம். ஒரு திருமணத்தைச் செவ்வனே நடத்துமளவிற்கு வேண்டிய பணம் இப்போதே வங்கியில் உண்டு.

அத்தனையும் பிறந்த பெண்ணாலே... வந்த பெண்ணாலே...!

மண்டப ஓரமாய் வாகனத்தை நிறுத்தினான். மகளின் கை பற்றிக் கொண்டு மறு கையில் பரிசுடன் நடக்க...

''வாப்பா ரகு - அடடே ராஜாத்தி... வாம்மா. முன்னால போய் உட்காருங்க - வரலியேன்னு இப்போகூட நினைச்சேன்...''

திருமண வீட்டிற்கு நல்ல உடையும், கையில் பெரிய பரிசுமாய்ப் போய் நின்றால் கிடைக்கும் மரியாதையின் தொனியே தனி!

பானுவை, முன்னால் நடக்கவிட்டு, மகிழ்ச்சியாய்த் தொடர்ந்தான் ரகு.

(ராணி, பிப்ரவரி 1998)

★★★



# ஆதரவு

'பட் பட்' என்று செருப்புத் தாளமிட நடந்தாள் தேனம்மா. குதிகால் பக்கம் அரைவட்டத்திற்கு தேய்ந்து கரைந்த ரப்பர் செருப்பாதலால் கவனமாக அடியெடுத்து வைக்க வேண்டியிருந்தது. குதிகால் வெடிப்புகளில் கல்பட, 'ஸ்...யப்பா' என்று வேதனையில் முகம் சுணங்கியது.

தலையில் பருத்த சுள்ளிக் கட்டுடன் இடுப்பில் காலி குடம். டெப்போ அருகில் நீர் நிரப்பியபின் வீடுதான்.

'சாமி புண்ணியத்தில் மழை பெய்யத்தான் செய்யுது. பண்டு ஏரியத் தோண்டி ஆழமாக்கினால்ல? மழை, மலையிலேன்னாலும், தண்ணி சமவெளிக்கினாப்பலே, அது உருண்டு ஓடிருது. வெட்டி பயக்கா. நாலு நாளைக்கு ஒருவாட்டி, பைப்பில தண்ணி விடுதாங்க. அது எதுக்குக் காணும்? பொம்பளைங்க குடஞ்சொமந்தே ஒடிஞ்சி போறோம்.'

மனதின் புலம்பலில் அவள் உதடுகளும் ஓசையின்றி அசைந்தன. தலையில் சுள்ளிக்கட்டு எம்பி எம்பிக் கேட்டுக் கொண்டது.

வளைவில் திரும்ப சரிவு சரிவாய்ப் பச்சைக் கம்பள புல்வெளி. அதில் உருண்டு, குதித்து விளையாடிக் கொண்டிருந்தது ஒரு நாய்க்குட்டி. தேனம்மா நெருங்கிய பின்னும் தலைச்சுமையால் அதை ஓரக்கண்ணால்தான் பார்க்க முடிந்தது. நாயின் அழகும் உற்சாகமும் அவள் பார்வையை மீட்க விடவில்லை.

மலைநாட்டு பிராணிகளுக்கே உள்ள ரோமமும் செழுமையுமாய் அது தேன் நிறத்தில் இருந்தது. நெற்றியிலும்

பாதங்களிலும் வெள்ளை பளீரிட்டது.

மல்லாந்து கிடந்து, அது முன்னங்கால்களால் மூக்கைத் தேய்த்துக் கொண்டது.

'மூக்கு அரிக்குதாக்குங்?'

லேசான முனகலோடு முதுகை புல் தரையில் புரட்டிக் கொடுத்தது.

'நல்ல சொகுசு போ...'

'படக்'கென்று உருண்டு எழுந்து நின்று புற்களை விளையாட்டாய் பிடுங்கி எடுத்தது. அழுத்தமாய் ஊன்றிய புல்லை உக்கிரமாய் தலையாட்டி உறுமி இழுத்தது. யாரோ சொன்னது போல 'டக்'கென்று உட்கார்ந்து காதை விறைத்தபடி தேனம்மாவைப் பார்த்தது.

''உம்பாடு தேவலை. வயிறு ரொம்பிக் கிடக்குது, விளையாடுத, ம்?'' விசாரித்தபடி நடந்தாள்.

இளங் குரலில் நாய் குரைத்தது.

'நாய் ஜெம்மம் எடுத்திருக்கலாம். காலைலே முச்சூடும் பெருக்கி, துவைச்சு, கஞ்சி வச்சி, சுள்ளி பொறுக்கி வெறும் வயத்தோட தண்ணிக்கலைஞ்சு... உனக்கு நோவில்லாத புழைப்பு.' மரங்கள் காற்றில் குனிய, வானம் மங்கியது.

'மழை வருதோ? வந்தாப்புல? குடிக்க தண்ணிக்கு ரெண்டு கல்லு சுமக்கதா வேணும். ராத்திரி ஊத்துச்சுனா, வீடு ஒழுகி பொதுமி நிக்கும். புள்ளைங்க சதா தும்முங்க. சுள்ளி காயாது. பிறவு சீமெண்ணைக்கே பாதி காசைக் குடுத்திரணும்.'

புலம்பி 'பட்பட்'டென்று நடந்தாள்.

முக்கால் மணி நேரங்கழித்து அதே வழியில் திரும்பியவளின் நடை மட்டுப்பட்டிருந்தது.

குடம் நிறைந்திருந்தது. முணுமுணுப்பு நிற்கவில்லை.

'ஏற்கெனவே வசிலாவுக்கு வாய் சாஸ்தி. இப்போ வேல பாக்குற மெப்பில வாய் விரிஞ்சிடுச்சு. குடம் நிறைஞ்சுதுன்னா இடுக்கிட்டு கிளம்பணும்னு இருக்காண்டா? அவ சம்பளமா ஐநூறு வாங்குதாளே, அதுல புருஷன் வீட்டுக்கு 'இந்தா'ன்னு பத்துக் காசு நீட்டுவா? நா எம் மாமிக்கு தீபாவளிக்கு சேல வாங்குனேனே - எம்புட்டு? நாத்தி கலியாணத்துக்கு சீரு என்ன





செய்வேன்னு குடையுறா. அந்தந்த பாடு அன்னன்னைக்கு - சாமி இருக்குதுல்ல? எந்தம்பி ராசு எவளையோ கட்டுதான், இவளுக்கென்ன? அவ புள்ளையோட புருசனை விட்டுட்டில்ல ராசுவை புடிச்சுக்கிட்டாளாம்? அவன் நாய் ஜெம்மமா அலையறதுனாலதா நா நின்னு பேச்சு கேக்குதேன். வீட்டு ஆம்புள ஆடுபுலியில தோக்காத பொறுப்பா நடந்தா நாலு காசு சேத்து கௌரதையா நிக்கலாம். நாத்திக்கு கூடையில செய்யலாம் - வீட்டைச் சீராக்கிப் பிள்ளைகளுக்குக்கூட ஒரு கம்பளிச் சட்டை எடுக்கலாம். மலை ஊருல முட்டி நெஞ்சோட சேத்து சுருண்டு படுக்குதுங்க. பாவம்'

மனதின் அலுப்புப் பட்டியலுடன் உடல் சுமைகளும் சேர பிடரி நோக, நின்று பெருமூச்சு விட்டாள்.

காலை வீசிப் போட்டதில் செருப்பு வார் பிடுங்கித் தொங்கியது. குடத்து நீர் தளும்பித் தெரித்தது.

'நாய் ஜெம்மம் என்னுது. இப்பவா போகும்? அறுந்தத எடுத்து வாயில கௌவிகிட்டா ஓடது?'

உதடுகளை இறுக்கி, கவனமாய்க் குடத்தை இறக்கி வைத்தவள், சுவரோரமாய் தலை சாய்த்து சுமையை சரித்தாள்.

'யப்பா...!'

பிடரியை நீவியபின், செருப்புகளை விறகுக் கட்டுக்குள் செருகி, மூச்சுப் பிடித்து சுள்ளிச் சுமையைத் தூக்கினாள்.

நீளக்கட்டு இருபுறமும் ஆட, காலை ஆட்டி, சமமாக்கி ஒரு நிமிடம் நின்று திருப்தியானபின் குடத்தையும் சுமந்து கொண்டாள்.

நாலு எட்டில், நாய்க்குட்டியைப் பார்த்த வளைவு வர நினைவாய் ஓரக்கண் ஓட்டினாள்.

வெறும் பச்சைதான்.

உற்சாக வெள்ளைப் பொட்டைக் காணவில்லை.

''வேய், கழுத்துல கவுத்தகாணும் - பிடி அதை'' இருசிறுவர்கள் மேட்டிலிருந்து கூவினர்.

''பாச்சா காட்டுதுல.''

வெள்ளைப் பொட்டு பளீரென வெளிப்பட்டு ஓடியது. காதுகள் மடங்கி, வாலை கால்களுக்கிடையில் ஒளித்து, விழிகள் பயத்தில் மங்கி...

''பிடிறா... இதோ ஓடுதுல்ல?'' கீழே நின்றவன் துடியாய்க் கல்லெடுத்து வீச, மறுநொடி குட்டி, ''ஊ ஊ'' என்று பின்னங்காலைத் தூக்கிக் கொண்டது. மற்ற மூன்றைக் கொண்டு திரும்பி நொந்த காலை நக்கிக் கொண்டது.

இப்போது நாலு சிறுவர்களும் வியூகமாய் வளைந்து அதை நெருங்கினர். அடுத்த கல், பிட்டத்தில் பட, கால் நடுங்க சுவரோரமாய் ஒடுங்கியது.

''வாலப் பிடிறா டேய்.''

''டேய், யாரு வீட்டு நாயி வால நீ பிடிங்கற? செருப்பெடு ராஸ்கோலு'' - தேனம்மா அதட்டினாள்.

திரும்பி அவளைச் சந்தேகமாய்ப் பார்த்து நின்றனர் நால்வரும்.

''அண்ணாச்சி பாத்துது... விளாரி தொங்க வுட்டுரும்'' பையன்கள் உதடசையாது தங்களுக்குள் குசுகுசுத்தனர்-

''அதாருடா அண்ணாச்சி?''

''யாரு கண்டா''

''பொம்பளை நவராம நிக்குது.''

''அண்ணாச்சி...!'' - இல்லாத உறவுக்கு அவள் குரலெடுத்துக் கூவ, ஏமாற்றம் காட்டாது அலட்சியமாய் நகர்ந்தனர்.

''டாமி இங்ஙன வா. ச்ச்சு...சு'' கழுத்தலுங்காது அவள் பரிவுக் குரலில் கூப்பிட குட்டி அண்டியது.

கண்களில் நன்றி ததும்ப, காலுக்கிடையில் பலவீனமாய் வாலை ஆட்டியது.

''வீட்டுக்கு ஓடு... போ...''

புரிந்து அது மறுதிசையில், திரும்பித் திரும்பிப் பார்த்தபடி ஓடியது.

மீண்டும் பசுமை வெறுமையாகத் தேனம்மாள் நடந்தாள்.

'வாயில்லாத ஜெம்மம். நாம புலம்பித் தீத்துக்கிடுதோம். திட்டி ஆத்திக்கிடுதோம். அதுக்கும் வழியில்லாத சின்ன உசிர அடிக்கித பாவிங்க.'

கூரான கல் ஒன்று வெற்றுப் பாதத்தில் அழுந்த - ''யப்பா.... ரோட்டப் போடாத பாவிகள நாயி பிடுங்க'' அரற்றியவள், நொண்டி நடந்தாள்.

(In STC College's centinary magazine)



★★★

வட்டார நூலகம்
அசோக் நகர், சென்னை-83

# ஆம்பிளைக் கிரீடம்

தனபாண்டியனுக்குப் புரியவில்லை.

எதற்கு ஹோட்டல் அறையொன்றில் இந்த 'மாதிரி' பெண்ணுடன் அமர்ந்திருக்கிறோம் என்பது புரியவில்லை.

மனைவி அவாந்தியுடன் ஒப்பிட்டால் இவள் தூசு.

அவளது பால்முகம். பார்க்கப் பார்க்க வெள்ளையாய் இனிக்கும் இவளை ஊன்றிப் பார்த்தால் ஒரு வகை குரூரம் தெரிகின்றது...

பிறகு ஏன்...?

கேள்வியால் கிண்ட விடை மேலே மிதந்து வந்தது.

குரங்கு போலேனும் வைப்பாட்டியை ஆண் ஏன் தேடினான் என்பதற்கான விடையில்லாவிடினும்,

தான் தேடி வந்ததற்கான தெளிவு -

பெண்டாட்டி கிளிதான்.

ஆனால், அதன் சிவந்து, வளைந்த கடின அலகு கண்டால் அச்சம்.

தன்னை விட அவளுக்கு அறிவு, சாதுர்யம், காசு, திறமை, குணம், பண்பு... எது இருந்தாலும் - அது கூர் அலகு. எந்நேரமும் அதி ஜாக்கிரதையாய்க் கண்காணிக்க வேண்டிய ஆபத்து.

அதற்கு அஞ்சி சிலர் சரணடைவது குரங்கிடம்!

ஆனால், இங்கு வந்த பிறகு பதட்டமாயிருந்தது. அதற்கு மருந்தாக எண்ணி பீரைச் சாய்த்து நிரப்பி, பருகிக்

கொண்டிருந்தான். -

இதுவும் புதுப் பழக்கம்தான்.

எதிரே இருவரும் கவனிக்காத ஸ்டார் டி.வி - காதல் கதை காட்டியது.

அவாந்தி பார்ப்பது பி.பி.சி.யும், செய்திகளும் மட்டும்தான்.

'அவார்ட்' சினிமாக்களைத் தேடி வாங்கி வந்து 'டெக்'கில் பார்த்து அலசி விமர்சிப்பாள் - வியப்பாள்.

சில படங்களின் பாதிப்பில் அழுது மூக்குறிஞ்சுவாள். அவள் எழுதும் கவிதைத் தொகுப்புகள் விற்றுத் தீர்க்கின்றன.

'அவாந்தின்னா இத்தாலிய மொழியில் 'முன்னேறு'ன்னு அர்த்தமாம் - நான் மட்டுமில்லாம, சமூகம் முன்னேறவும் நான் உழைக்கணும்' என்பவள், பல சமூக சேவை சங்கங்களின் உறுப்பினர்.

காலை ஐம்பது சூரிய நமஸ்காரம் செய்து வியர்ப்பவள்.

'யோகா பிடிக்கலைன்னா, சாயங்காலம் ஒரு மணி நேரம் நீங்க நடக்கவாவது வேணும் தனா' - என்று வற்புறுத்தி கூடவே நடப்பாள்.

நடையின் போது அவள் பேசும் பாதி விஷயங்கள் அவனுக்கு எட்டாதவை.

'காஃப்கா, ஸ்னூக்கர், போன்சாய், சாமர்செட் மாம், இமான்ஸிபேஷன், சைக்கோ சொமாடிக்' என்று அவள் தூக்கிப் போடும் வார்த்தைப் பந்துகளை அவன் பிடித்ததேயில்லை.

''சினிமா பத்தி ஏதாவது பேசேன் அவாந்தி''

''ம் - சொல்லணும்னு நினைச்சேன். 'ஸ்வம்' காஸெட் கிடைக்குமான்னு பாருங்கப்பா - சத்யஜித்ரேயுடைய 'பதேர் பாஞ்சாலி'க்குப் பிறகு உலகப் பட விழாவிலே பரிசு கிடைச்சிருக்கற பத்து பெஸ்ட் மூவீஸ்ல இது ஒண்ணாம்'

''கேள்வியேபட்டதில்லை. அதோ பீச்சோரமா காரை நிறுத்தியிருக்கிற வெள்ளைக்காரன் நம்மூரு பாட்டைத்தான் 'டேப்'பில கேட்கிறான். 'டூயட்' பட பாட்டுதானே?''

''கதிரி கோபால்நாத் அசத்திட்டாருல்ல?''





''அதாரு?'' என்று எம்பிய கேள்வியை அமுக்குவான்.

'நடை' முடிந்ததும் தான் அரையடி குன்றி விடுவதாகத் தோன்றும் அவனுக்கு.

தொலைபேசியைக் கையிலெடுக்கும் போதெல்லாம் அவள் எண்களுக்காய் அவனைத்தான் நாடுவாள்.

''விசா நம்பர் சொல்லுங்க ப்ளீஸ்?''

அடிக்கடி பேசி முடிந்த கையுடன்,

''கம்ப்யூட்டர் மெமரி தனா உங்களுக்கு...எத்தனை நம்பர்லை இங்கே ஸ்டோர் பண்ணிட்டீங்க?'' என்று அவன் நெற்றியில் முத்தமிடுவாள்.

அவள் பாராட்டுகளை அவன் சட்டை செய்வதில்லை.

அவை ஒரு 'மங்கோலாய்ட்' பிள்ளை தன் பதினாறாவது வயதில் தனக்குத் தானே பாண்ட் மாட்டும் முதல் முயற்சியின் போது கிடைக்கும் ஊக்க வார்த்தையாகவே அவனுக்குப்படும்.

இருவரது குடும்பப் பின்னணிகளும் வெகு வித்தியாசம் -

ஒன்றைப் பத்தாக்குகிற வியாபார வித்தை கற்றுத் தந்திருந்த அவனது குடும்பத்தில் படிப்பு அதிகமில்லை.

அவளுடையது கலை, மொழி, கலாச்சாரம், மனோதத்துவம், இலக்கியம் என்று அலசிக் காயப்போடும் சூழல்.

பெற்றோர் பார்த்து சேர்த்த ஜோடிதான். 'என்னமா இங்கிலீஷ்ல பொழிறாப்பா. மூஞ்சு முழுக்க அழகோடு ஞானம் தெரியுது. இவ மருமவளா வந்தா நம்ப பரம்பரைக்கே கிரீடந்தான்' - என்று சிலாகித்துக் கொண்டு வந்திருந்தனர்.

ஆனாலும் பத்து வருடங்களில், மனைவி மீது மதிப்பும் வியப்பும் வளர்ந்து விசுவரூபமானதில், இயல்பான உடல் ஈர்ப்பு, வேட்கை குறைந்து போனது.

புள்ளியாகி அதுவும் அழியும் நிலை.

அவளை ஆளத் தகுதியில்லையோ என்ற குமைச்சலில் ஆளுமை ஆசை அற்றது.

ஆக, காசு தந்து வேட்கை - வெறி, தன் ஆண்மை இவற்றை நிரூபிக்க வந்த இந்த இடத்திலும் தடுமாற்றம். மனம் முழுக்கத்

தப்பு செய்யும் பதட்டம் - சகித்து விழுங்கிய திரவத்தால், நெற்றிப் பொட்டும் விழிகளும் சற்றே கனம் கூடிச் செருகின.

''ந்தா...அந்த டி.வி.யை ஆஃப் பண்ணு'' - நகம் கடித்துக் கொண்டிருந்தவளை அதட்டினான்.

வெள்ளையாய்ப் பொங்கி வழிந்த இடுப்புச்சதை குலுங்க அவள் நடந்து சென்றாள்.

அதைப் பற்றி இறுக்க மனம் கிளறவில்லை -

'மூட்' கிளப்பும் முயற்சியை ஆரம்பித்தான்.

புருவத்தை உயர்த்திக் கேட்டான்.

''நீ 'ஸ்வம்' பாத்தாச்சா?''

புரியாது குழம்பும் அவளது மட (முக) பாவனையைக் காணும் ஆவலில் ஆர்வமாய்க் கவனித்தான்.

அவள் முகம் மலர்ந்தது-

''பார்க்கணும். முக்கால்வாசி வசனம் தமிழ்ல்லதானாமே? 'ஸ்வம்'ன்னா 'என்னுடைய'ன்னு அர்த்தமாம்''

''கதிரி கோபால்நாத்...?'' அவன் நாக்கு ஏனோ குழறியது.

''அவராலே இப்ப சாங்ஸுக்குத் தனி கவனம். அகாடமியிலே இந்தத் தடவை அவருக்கு ஏகக் கூட்டம்'' - உற்சாகமாய்ப் பேசியவள் நெருங்கினாள் -

''சாகித்ய அகாடமி அவார்ட் வாங்கின பொன்னீலன் நாவல் படிச்சீங்களா? ரெண்டாயிரம் பக்கமாம். எங்க நேரம், புத்தகத்தைத் தூக்கிட்டுப் படுக்கைக்கு வந்தா ஆம்பிளைங்க பயந்துக்கறாங்க - எல்லாரும் உங்களை மாதிரியில்லை...''

மேலும் உரசலாய் நெருங்கியவள், அவனது நெற்றியில் முத்தமிட்டாள்.

நெற்றிப் பொட்டுக்கள் கனத்துத் தெறித்தன -

''போங்கடீ... தண்டம்... தண்டம் - ஆயிர ரூவா தண்டம்'' - கத்தியவன், எழுந்து தள்ளாடி, குப்புற விழுந்தான்.

★★★



# இது ஒரு அபூர்வ ரகம்

**ஊ**ஞ்சலின் வேகம் குறைய, காலூன்றி உந்தினாள் பொன்னி. காற்று உற்சாகக் குழந்தையாய் அவள் வயிறு, முகம் என மோத, கண்களை மூடிப் புன்னகைத்தாள். 32 வயதில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயான பின்பும் அவளுக்கு ஊஞ்சலாடும் ஆசை விடவில்லை. உதைத்து வீசி ஆடுவதில் பூமி மேலும் கீழுமாக நழுவி ஓடக் கண்டால் அவளுக்குப் பயம். மெல்ல ஆடவிட்டுக் கனவுகளில் லயிப்பது, பூத்தொடுக்க, தைக்க... பாட... அவள் சந்தோஷங்கள் எல்லாம் எளிமையானவைதான்.

கண்களைத் திறக்கச் சுற்றிலுமிருந்த அவள் தோட்டத்தின் செவ்வந்தி, ரோஜா, செம்பருத்தி பூக்கள் கூட கைகோர்த்து ஆடும் உணர்வு வந்தது. களை நீங்கி, ஈரப்பாத்திகளுடனிருந்த தோட்டத்தை ஊஞ்சல் கயிற்றில் கன்னம் பதித்தபடி ரசித்தாள்.

சொந்த வீடுதான்.

இங்கு குடிவந்த ஒரு வருடமாக பக்கத்து குடிசைக் குழந்தைகளை தினமும் வரச் செய்து பாடம் படிக்கச் செய்கிறாள் - கணவனின் வசவை வாங்கிக் கொண்டே...!

கணவன் மகிபனுக்கு இவள் இன்பங்கள் புரிவதில்லை. அவன் தேவைகள், கனவுகள் எல்லாம் பெரியவை. கைவழிய பணம், கார், ஆடம்பர வாழ்வு இப்படி...

இரு வேறுபட்ட மனங்களைத் திருமணத்தில் இணைப்பது இறைவனின் பொழுதுபோக்காக இருக்க வேண்டும் என்று புன்னகையுடன் நினைத்தவள், ஊஞ்சலினின்று இறங்கி

வீட்டினுள் நுழைந்தாள்.

கருப்பு மசி மட்டுமே கொண்டு எழுதிய இயேசு நாதரின் பெரிய படம் வெள்ளிச் சட்டத்தினுள் நடுச்சுவரில் தொங்கியது. பிரம்பு சோபாக்களில் பல வண்ணக் குஷன்கள் - அவள் நெய்த திராட்சை, செர்ரி மலர்க் கொத்துகளுடன் பளிச்சிட்டன. பசுஞ்செடி வகைகளும், சலங்கை கோர்த்த குத்து விளக்குகளுமாய் சிறிய வரவேற்பறை அசத்தியது. படுக்கையறை சற்றே பெரியதாகையால், தையல் மிஷினை அங்குதான் போட்டிருந்தாள். சுற்றி குவிந்திருந்த துணிகளில் சிலதை அள்ளி எடுத்து மிஷினை ஓட்ட ஆரம்பித்தாள்.

நேற்று அருகிலிருந்த அநாதைக் குழந்தைகள் இல்லத்திற்கு அவள் போயிருந்தபோது, வார்டனும், இரு உதவியாளர்களுமாய் உட்கார்ந்து கைத் தையல் செய்து கொண்டிருந்தனர்.

''மிஷின் ரிப்பேருங்க பொன்னி. நாப்பது குழந்தைங்க, கிழிசலுங்க அம்பாரமா சேர்ந்து போச்சு.''

''கொக்கி, பட்டன் மட்டும் நீங்க வையுங்க வார்டன் அக்கா. மீதியை ஒரே நாள்ல நான் தைச்சு அனுப்பறேன்'' என்றவள், துணிகளை மூட்டை கட்டி எடுத்து வந்திருந்தாள். மூட்டைகளைத் தூக்கி வந்த சிறுவர்கள், அவள் தோட்டத்தில் நீர் பாய்ச்சி, களையெடுத்து விட்டுத்தான் சென்றனர்.

''நீங்க எதுக்குடா செய்யறீங்க? போய் படிங்க. வார்டன் அக்கா தேடுவாங்கல்ல?''

''தோ... அரைமணி நேரத்தில முடிச்சிருவோங்க்கா. எங்க துணி நீங்க தைக்கலை?''

''சனிக்கிழமை தோறும் யாராச்சும் ரெண்டு பேரு வந்து சுத்தம் பண்ணித் தரோம்க்கா'' என்று அவள் நீட்டிய முறுக்கை மென்றபடி கிளம்பினார்கள்.

அன்றிரவு வேலைகளை முடித்து, குழந்தைகள் உறங்கிய கையோடு அவள் தைக்க உட்கார, கணவன் சீறினான்.

''சே... என்ன டொக்கு டொக்குங்கற?''

''சாரிப்பா, நாளைக்கு கொடுக்கணுமேன்னு உட்கார்ந்தேன். காலையிலே பண்ணிக்கறேன்.''





''இந்தக் கந்தலெல்லாம் என்ன?'' புருவந் தூக்கினான்.

''ஆசிரமக் குழந்தைகளுடையது...''

''ஏன் உனக்குப் புரிய மாட்டேங்குது பொன்னி? ஷங்கர் மனைவி ஊர்மிளாவைப் பார். அவ தைக்கறது அத்தனையும் காசு. புது மாடல் வரவர அப்படி இப்படி இவ உடுப்பு, டிரஸ்கன்னு தைச்சு கடைங்களுக்கு வித்துடறா. சேலை எம்பிராய்டரி செய்து தாறதிலே நல்ல லாபமாம். கண்ணாடி, பாசின்னு வைச்சுத் தைக்கிற ரவிக்கைத் துண்டிலே அம்பது ரூவா வரை நிக்குமாம்; நீ நம்பவீட்டு கரித்துணிக்கு பூ போட்டு, கிழிசலை தைச்சிட்டு... சே வேஸ்ட்.''

''உங்க தங்கைக்கு அந்த மாதிரி மூணு ரவிக்கை செய்து கொடுத்தேங்க. அண்ணா குழந்தைக்குப் பிறந்தநாள் வருது. ரெண்டு உடுப்பு தைச்சு...''

''இதுல கையிலே காசு வராதே மக்கு'' சலித்தான்.

''வெளிவேலைன்னு இறங்கினா முழுநேர வேலையாயிடுங்க. சாயங்காலம் நம்ம குழந்தைகளைத் தவிர படிக்க வர்ற பத்துப் பதினைஞ்சு பிள்ளைங்க...''

''குடிசையிலேர்ந்து வர்ற ஓசி கேசுங்க. அதுங்க ஆளுக்கு ஐம்பது ரூவா தரட்டும். தவிர இருவது ரவிக்கைத் துணி போடு. வித்றால் ஏதோ உன் ஊசி நூல் செலவுக்காவது ஆச்சு.''

''ரவிக்கை எம்பிராய்டரி செய்யறேன் சரி. விக்கறது உங்க பொறுப்பு. சேரி குழந்தைங்க எங்கே போகும் அத்தனை காசுக்கு? இப்போதுதான் அவங்களுக்குப் படிப்பிலே ஒரு ஆர்வம் வந்திருக்குது. முடியாததுங்களுக்குத் தானே நான்...''

''அதுதான் என்னு கேட்கறேன்?''

''நமக்கு வேண்டியது இருக்குப்பா.''

''என்... கார் வாங்கினா ஏறி வர மாட்டியா? வைரம் வாங்கினா போட்டுக்க மாட்டியா?''

''அப்படி ஆசைப்பட ஆரம்பிச்சா முடிவேயில்லைங்க. இந்தப் பிள்ளைங்களும் ஓசி இல்லை. நேத்து வச்ச புளிக்குழம்பு கத்தரிக்காய், ரேவதி வீட்டில் காய்ச்சது. எத்தனைப் பிஞ்சா இருந்தது. போன மாசம் மருது பத்து தேங்காய் கொண்டு வந்து

போட்டான். நம்ப தோட்டத்தில் பூத்திருக்க செவ்வந்தி கையகலத்துலே என்ன வாசனைங்கறீங்க? ஆசிரமக் குழந்தைங்க வந்து நட்டு வச்சது அது. தினம் உங்களை பிரேயரிலே நினைச்சுக்குவோம்ங்கற போது வர்ற நிறைவு பணங்காசிலே கிடைக்காதுப்பா.''

''நான் ஆயிரத்தைப் பற்றிப் பேச நீ தேங்கா மாங்காயிலேயே இரு. காலத்துக்குதவாத அபூர்வ ரகம் நீ.''

மஹிபன் எரிச்சலுடன் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

படுத்த பொன்னிக்கு எண்ணக் குழப்பத்தில் தூக்கம் விலகிப் போனது. 'ஊருக்கு ஒதுங்கியென்றாலும், கடன்பட்டு தானென்றாலும் சொந்த வீடு - நல்ல வேலை - மணியாய்க் குழந்தைகள்... இத்தனை நிறைவிருக்க பிறரை நினைத்து நாலு நல்லது செய்ய வேண்டியது அவசியந்தானே? ஒரு வேளை தினம் இவர் நச்சரிப்புத் தாளாது சுமுக குடும்பத்திற்காக, நான் மாற வேண்டியது வருமோ' என்ற சிந்தனையில் சிக்கி அவள் வெகுநேரம் கண்விழித்துக் கிடந்தாள்.

மறுநாள் காலை வேலைகளை முடித்து பூ கோர்த்தபடி ஊஞ்சலில் அமர, மனம் தெளிவாக இருந்தது.

''யக்கா... நீங்க வயர் கூடை பின்னக் கத்துத் தந்தீங்களா, இப்போ போட்டதுல ரெண்டு மூணு வித்துக்கூடப் போச்சு. கூட ரெண்டு டிசைஸன் சொல்லித் தாங்களேன்'' என்று உற்சாகமாய் வந்து நின்ற அண்டை வீட்டுத் தாவணிகளுக்கு அரை மணி நேரம் செலவிட்ட பிறகு மனம் மேலும் அமைதிப்பட்டிருந்தது.

இறைவன், ஜோடிகளைக் காரணமில்லாது சேர்ப்பதில்லை. இந்த வழி கணவருக்குப் புரிய - பிடித்துப் போக சேர்ந்தே எத்தனையோ நல்லவற்றைச் செய்யலாம் என்ற நிம்மதி அழுத்தமாய் உள்ளே வந்து உட்கார-அவளும் தைக்க மிஷின் முன் அமர்ந்தாள்.

மொத்த வேலைகளையும் முடித்து அடுக்கி நிமிருகையில் மணி நான்காகியிருந்தது. சேமியாவைக் கிளறி முடித்து, முகம்



நகர், சென்னை-83



கழுவும்போதே பிள்ளைகளின் குரல் கேட்டது.

''அம்மா, இந்த மாசமும் நாங்கதான் கிளாஸ்ல முதல்.'' சிரிப்பும் பேச்சும் உச்சஸ்தாயியில் கேட்டன. அவர்களின் கனத்த பள்ளிப் பைகளை வாங்கியவள், குனிந்து பிஞ்சுக் கன்னங்களில் முத்தமிட்டாள்.

''ஜில்லுனு வாசமா இருக்கீங்கம்மா!''

''சரி, இரண்டு பேருமா முதல் இடம்?''

''பின்னே? மிட்டாய் கிடைச்சிருக்கு.''

களைப்பை மீறி முகம் முழுதும் விரிந்த சிரிப்புடன் மகன் கைவிரித்துக் காட்டினான்.

167699 | 5943866

''ஏது இத்தனை?''

''டீச்சர் கொடுத்தாங்க. மீதி, ஹெட் - மிஸ்ட்ரஸ் தந்தது.''

''பரவாயில்லேயே''

''எப்பவும் விடாத முதல் ரேங்க் வாங்கறோமாம். நல்ல பிள்ளைங்களா இருக்கோமாம்.''

''அட இதென்ன புதுக்கதை?'' பொன்னி, பூரிப்புடன் மறுபடி குழந்தைகளை முத்தமிட்டாள்.

ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு வந்து மூவரையும் இமை கொட்டாது பார்த்து நின்ற மஹிபன் -

''உண்மைக் கதைதான் - பிரின்ஸிபல் என்னிடமும் இவங்களைப் பற்றி ஒரே பாராட்டு. படிப்பு தவிர, நண்பர்களுக்கு உதவற நல்ல குணம், ஒருத்தர்கூடேயும் சண்டைன்றதே கிடையாது. சுத்தம், மரியாதை... இப்படி நிறைய நற்சான்றிதழ் போ. பிரைமரி பள்ளியின் ஸ்பெஷல் பரிசு இவங்க ரெண்டு பேருக்கும் கிடைக்கப் போகுதாம்...''

அவள் கண்கள் பூரித்து நனைந்தன.

''பெருமை, பாராட்டு எல்லாம் உனக்குத்தான் பொன்னி'' மெல்ல சொல்ல, மறுப்பாய்த் தலையசைத்தாள்.

''கடவுள் அருமையான குழந்தைகள் தந்திருக்குப்பா.''

''ஒரு குழந்தை மட்டும் இப்படி பரிசு வாங்கினா அதிர்ஷ்டம் அல்லது நீ சொல்றது போல கடவுள் கிருபை - இரண்டு பேரும்

என்கிற போது நல்ல வளர்ப்பும் காரணம் பொன்னி. தவிர ஷங்கர் குழந்தைகள் பற்றி ஒரே புகார்.''

''குட்டிகளா, யூனிபாஃர்ம் மாற்றிகிட்டு கைகால் கழுவிட்டு வாங்களேன்'' என்று பிள்ளைகளை அனுப்பியவள் கேட்டாள்.

''அதெதுக்கு உங்ககிட்ட சொல்லணும்?''

''அவங்க பெற்றோர் வர்றதேயில்லையாம் - வரச் சொல்லி என்கிட்டே சொன்னாங்க. சுத்தமா வர்றதில்லை - சதா சண்டை, படிப்பிலே போதாதுன்னு...''

''குழந்தைகளோட உட்கார நேரம் கிடைக்க மாட்டேங்கிறது அவங்களுக்கு.''

''நூலைப் போல சேலைங்கறதுலே உண்மையிருக்கும் போல, உன் அன்பு, இரக்கம் பார்த்து நம் குழந்தைங்க மனசிலேயும் அவை படிஞ்சு போச்சு. டியூஷனுக்கு வர்ற பிள்ளைங்களோட இதுங்களும் உட்கார்ந்து கருத்தா படிச்சிடுதுங்க. காசு பணத்தைவிட இப்படி பேர் வாங்கறது நிறைவுதான்.''

உள்ளத்தில் 'கம்'மென்று பொங்கிய சந்தோஷம் கண்களில் திரையிட, அதை மறைக்க அவள் அனைவருக்கும் காபி கலக்க சமையலறைக்குள் நுழைந்தாள்.

தட்டில் பால், காபி கோப்பைகளுடன் வந்தவள் கேட்டாள்:

''ஏங் குட்டி அப்பா எங்கே?''

''தோட்டத்துக்கு.''

கொல்லையில் கையகலச் செவ்வந்தியைப் பறித்து முகர்ந்து கொண்டிருந்தவன் மெல்ல கேட்டான்:

''வாசனைகூட அபாரமா இருக்குதுல்ல?''

''ஆமாப்பா - இது ஒரு அபூர்வ ரகம்.''

''உன்னைப்போல'' என்றவன், பூவை அவள் பின்னலில் செருகினான்.

(ராஜம், ஏப்ரல் 1994)

* * *



# இளமை மணம்

டென்னிஸ் கோர்ட்டில் மஞ்சள்நிறப் பந்து அங்குமிங்குமாகத் தாவுவதை ஜன்னல் வழியே பார்த்தபடி அமர்ந்திருந்தாள் கஸ்தூரி. இன்று அந்த கிளப் வாசக சாலைக்கு வழக்கமாக வரும் சிலர்கூட வரவில்லை. இந்த வாரம் பரீட்சைகள் முடிந்துவிட்டால் கூட்டம் ஜகஜகக்கும். நினைத்தபடி மணி பார்த்தவள், 'ம் இன்னும் பத்து நிமிஷமிருக்கு' என்றபடி எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டாள். மேஜையை ஒதுக்கினாள். வேலை என்று அதிகம் கிடையாதென்றாலும் உட்கார்ந்து கொண்டிருந்ததிலும் உடல் அலுப்புத் தட்டியிருந்தது. ஆனால், மனம் வழக்கத்தைவிட உற்சாகமாயிருந்ததை அவள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். மனதின் ஓரத்தில் பயமும் தெரிந்தது - இத்தனைக் காலம் கழித்து இது தேவைதானா என்று. எது?

கல்யாணம்.

37 வயது கஸ்தூரிக்குக் கல்யாணம்.

நினைப்பே விநோதமான உணர்ச்சிகளை அவளுள் கிளப்பியது. பயம், வெட்கம், சந்தோஷம், தயக்கம், படபடப்பு என்று இனம் பிரித்தறிய முடியாத உணர்ச்சிகளின் பின்னல், ஒரு வாரமாக அவள் மனம் அவற்றைப் பிரித்து பிரித்து பின்னி ரசித்திருந்தது.

'ம்ப்ச்... இந்த தேவசகாயம் அங்கிள் வேலை. யோசிக்கறதுக்கு முன்னயே ஆளை மடக்கிட்டார்!'

யோசிக்கத்தான் என்ன இருந்தது?

தனிமை, ஆள் விழுங்கி ராட்ஸதன் போல அடிக்கடி அவளைப் பயமுறுத்தியதுதானே? துணை தேடி எத்தனை நாட்கள் ஏக்கமும், அழுகையுமாய்க் கழிந்திருந்தன? நினைத்ததைப் பேச, படித்த துணுக்கை - 'இதைக் கேளேன்' எனப் பகிர்ந்து கொள்ள, வெளியே வாசலில் கூடவர, பரிமாறிக் கொண்டு சாப்பிட, ராத்திரி திடீரென விழிப்பு தட்டும்போது கட்டிலில் துழாவி நெருங்கி ஒட்டிக் கொள்ள... துணை வேண்டும்தான்.

ஆனால், இந்த வயதில் இது அசட்டுத்தனமோ? நாளாக நாளாகத்தான் தனிமையின் கொடுமை அதிகமாயிருக்கிறது.

'எத்தனைக் குழந்தைங்க?' என்ற கேள்வியிலும்,

கழுத்தைத் துழாவும் பார்வைகளிலும் அவள் தடுமாறிப் போகிறாள்.

ஆண்கள் - காய்ந்த மாட்டிற்கு புல் நீட்டும் நினைப்பில் தேவைக்கதிகமாகச் சிரித்துப் பேசி உராயும்போது கூசிப் போகிறாள்.

ஆனால், இளமையெல்லாம் வற்றிப்போன பருவத்தில் புது பந்தம் அவஸ்தையாகி விட்டால்...? அதுதான் பயம்.

இப்போது நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்திற்குக் கிளம்பலாம். ஆசைப்பட்டதை வாங்க யார் தயவும் தேவையில்லை. இரவு, கேஸட்டில் பழைய சினிமாப் பாட்டுக்களைக் கேட்டு, சன்னமாய் கூட சேர்ந்து பாடி, வழிய வழிய நல்லெண்ணெய் தடவி, அழுக்கு நைட்டியில் அலைந்து, ரொட்டி, கடலை, பழம், பாலில், செழித்து... அத்தனையும் போய்விடும்! தேனம்மா ஆயா ஹாஸ்டலில் வேளா வேளைக்குச் சமைத்து மேஜையில் வைப்பதை விழுங்கி வைப்பதோடு சரி. சமையல் என்று கஸ்தூரிக்கு என்ன தெரியும்? காப்பி, டீ, உருளைக்கிழங்கு கறி, பாயசம் - அவ்வளவுதான். ஒரு சாதம் கூட பதமாக வடிக்கத் தெரியாது.

இதில் குடித்தனம் எப்படி இருக்கும். கண்றாவி!

இதில் தான் சிக்கிக் கொள்ளவே கூடாது என அவளுக்குத் தோன்றியது.





''இதெல்லாம் ஒரு வித்தையா? இருபது வயது பொண்ணுங்க சமைக்கலை? இப்பத்தான் வகை வகையா சமையல் புத்தகம் எல்லாம் கிடைக்குதேம்மா கஸ்தூரி! வாங்கி ஜமாய்!'' தேவசகாயம் அங்கிள் சிரிக்கிறார். இருபது வயதில் ஆர்வம் இருக்கும். படித்து, சமைத்துத் தன் புருஷனை அசத்த வேண்டுமென்கிற ஆவலிருக்கும். மேசையில் பரிமாறப்பட்ட பதார்த்தம் சுவையாக இல்லாவிட்டாலும் கூட, ''கொஞ்சம் காரம் ஜாஸ்திமா, மத்தபடி கிரேட்'' எனப் புகழும் சின்னப் பயல்கள் புருஷனாக வாய்த்திருப்பார்கள்.

இவளுக்குப் பொறுமையில்லை. அதற்குரிய வயசில்லை. 40 வயது ராஜனுக்கு மட்டும் எங்கே பொறுமையிருக்கும்? தட்டைக் கடாசிவிட்டுப் போவார். இனி அதெல்லாம் தாங்க ஆவி கிடையாது.

அங்கிள் சொன்னார்:

''அடி... நீ ஒண்ணு. பய காஞ்சுக் கிடக்கான். அவன் அம்மா போனதிலேர்ந்து ஆறு வருஷமா ஹோட்டல்லதான் சாப்பாடு. சொந்த வீடுங்கறதால, அதப் பெருக்கிக் கொள்ள ஒரு கிழவி உண்டு. பத்து வருஷமா எதிர்வீட்டுப் பொண்ணை லவ் பண்ணினாங் - கெட்டது குடி. அவ ஐ.ஏ.எஸ்.ஸைக் கட்டிக்கிட்டுப் போன பிறகாவது பயலுக்குப் புத்தி வரவேண்டாம்? கிறுக்கனாட்டம் வருஷங்களை ஓட்டியாச்சு. அம்மாக்காரிக்கு சீக்கே இவனாலதான். அவ போன பிறகுதான் பயலுக்குப் புத்தி வந்துச்சு... தனக்குன்னு இனி யாருமில்லேன்னு. நீ சொல்ற மாதிரி அவனுக்குத் தனியா இருக்கறது பழகிப் போச்சுன்னாலும் இப்ப குமைச்சல் ஜாஸ்தியாயிடுச்சு.

அவன் அம்மாவுக்கு நா சொந்தம் பாரு - அதான் உரிமையா 'மாமா... பொண்ணு பாருங்க'ன்னுட்டான். உன்னை விட அவனுக்குப் பொருத்தம் யாரும்மா? இரண்டும் நல்ல குடும்பம். உங்கப்பா கூட வேலை பார்த்தவன்தான். அவரு எப்பேர்ப்பட்ட மனுஷன்! அஞ்சாவது பொண்ணைக் கரையேத்தாமல் போயிடுவோம்ன்ற பயம்தான் அவரைக் கொன்னுடுச்சு.''

''**எ**க்ஸ்யூஸ் மீ... பி நோ வி யார் லேட். கொஞ்சம் புக்ஸ்

எடுத்துக்கலாமா?''

கொஞ்சலாய்க் கேட்டபடி மூன்று இளம்பெண்கள் உள்ளே நுழைந்திருந்தனர்.

இருவர் ஜீன்ஸிலும் ஒருத்தி மிடியிலுமாக 'சிக்'கென்றிருந்தனர். பளபளப்பான கருத்த தலைமுடி தோளை ஒட்டி வெட்டப்பட்டிருந்தது. கண்களிலும், உதடுகளிலும் தன்னம்பிக்கையும் இளமையும் ததும்பிக் கொண்டிருந்தன.

''ம்... இஃப் யூ கேன் ஹரி'' - புன்னகைத்தாள் கஸ்தூரி. அவர்கள் தங்களுக்குள் கிசுகிசுப்பாய்ப் பேசியபடி புத்தகங்களை ஆராய்ந்தனர். நொடிக்கொரு முறை கிளுகிளுப்பாய்ச் சிரித்துக் கொண்டனர். அந்த மூவருள் டாக்டர் மகள் சுதாவை கஸ்தூரிக்குப் பரிட்சயம்.

மூவரும் கைகளை ஆட்டியபடி பேசினர். இளம் குருத்தாய் மெல்லிய கைகளும், பிஞ்சு விரல்களும் பார்க்கவே ரம்மியமாயிருந்தன. உதட்டில் அவர்கள் சாயம் ஏதும் தடவவில்லை. எனினும், அவை மிருதுவாய் உயிரோட்டத்துடன் பளபளத்தன. சிரிக்கும்போது ஆரோக்கியமான பற்கள் மின்னின. தொளதொளப்பான சட்டைகளையும் மீறி அவர்கள் உடலின் செழுமை, கண்ணைப் பறித்தது. இளமை எத்தனை பெரிய வரம்!

அவர்களோடு ஒரே அறையில் நிற்பதே கஸ்தூரிக்குக் கூச்சமாயிருந்தது. புதிய விலையுயர்ந்த வண்ண புத்தகத்தோடு, பழுப்பேறி, காதுகள் மடங்கிய அட்டை உரிந்து கிழிந்த பழம் புத்தகமாய் தான் நிற்பது போலத் தோன்ற, அவளுக்குத் திடீரென முகம் கழுவிக்கொண்டு ஒரு கப் டீ அருந்தினால் தேவலாம் போலிருந்தது. ''சுதா, நீங்க புக்ஸ் எடுத்து வைங்க. நா ஒரு ரெண்டு நிமிஷத்துல வந்துரட்டுமா?''

''ஷ்யூர் ஆண்ட்டி.''

அவளுக்கு அந்த 'ஆண்ட்டீ' அவசியமில்லை என்று தோன்றினாலும் 17 - 18 வயது வித்யாசம். இடையில் கூப்பிட்டால் என்ன என்று சமாதானப்படுத்திக் கொண்டாள்.

கிளப் ரெஸ்ட்டாரெண்டை அடைந்தவள், முகத்தை நன்கு கழுவித் துடைத்துக் கொண்டாள். கெளண்ட்டரிலிருந்த ரேவதி,

''வடை சூடாயிருக்கு. தரவா?'' - கேட்டாள்.





''ம் - ஒரு டீயும்.''

கூட்டமில்லாததால் கெளண்ட்டரிலேயே சாய்ந்து சாப்பிட்டு முடித்து, திடீரெனத் தோன்றியதில் கேட்டாள்.

''ரேவதி, சீப்பு இருக்கா?''

''ம்... உள்ளே வாங்களேன்.''

கொண்டையைப் பிரித்து, கோதி, சீவி பின்னிவிட்டாள். பாதி முதுகை எட்டும் கேசம் அவளது.

''பவுடர் வேணுமா கஸ்தூரி?''

''கொடேன்.''

''நா இதெல்லாம் வெச்சிருந்தாலும் யூஸ் பண்றதேயில்லை. ஒருவாரமா பிள்ளைக்குக் காய்ச்சல். அவரு அரை நாள்கூட லீவு போடலை. நான் சரியா தூங்கக்கூடயில்லை. இவரானா பூரி, கிழங்கு போடலையான்னு தட்டை வீசிட்டுப் போறார். நிம்மதி, உங்கமாதிரி வாழறதுலதான் கஸ்தூரி'' பவுடர் பூச்சில் முகம் பிரகாசமாயும் உள்ளே இறுக்கமாயும் உணர்ந்தாள்.

''தாங்க்ஸ்... வரட்டா?''

அவசரமாக லைப்ரரியை அடைந்தவள், பெண்கள் நீட்டிய புத்தகங்களைப் பதிவு செய்து, பின் ஜன்னல்களை மூட ஆரம்பித்தாள். காற்றின் குளுமையில் மழை வரும் போலிருந்தது. பெய்தால் நல்லது - பூமி காய்ந்து கிடக்கின்றது.

டென்னிஸ் விளையாடி முடித்தவர்கள், பிரம்பு நாற்காலிகளில் சரிந்து அமர்ந்து பழரசம் பருகிக் கொண்டிருந்தனர். முக்கால்வாசி கால்கள் தெரியும் உடையில் ஆண்களைப் பார்த்து அவளுக்கு ஏனோ இன்று கிளர்ச்சியாய் இருந்தது.

சுரள் சுருளாய் ரோமம் நிறைந்த கால்கள், ஆழ்ந்த குரலின் நாகரிகப் பேச்சும், தலையைக் குலுக்கிச் சிரிப்பதும்... ஆண்கள் கவர்ச்சியானவர்கள்தான். விளையாடி முடித்து டவலால் கழுத்தைத் துடைத்தபடி அவளிடம் லைப்ரரியில் வந்து நின்று பேசும்போது எழும் வியர்வை நெடிகூட கவர்ச்சியானதுதான்.

ஆணோடு பகிரும் வாழ்க்கை, நிச்சயம் சுவாரஸ்யமானதாய்த் தானிருக்க வேண்டும்.

'சாம்பலாகி விட்டன' என்று அவள் கருதியிருந்த

உணர்வுக்கனல், சிறு ஊதல்களில் சிவந்து பொரிவது திருப்தி தந்தது.

ஆசை மேலிட்டது - அவள் ராஜனைக் கல்யாணம் செய்ய. அவர்களுக்கு ஒரு அழகான குழந்தைகூடப் பிறக்கலாம். போன வாரம் டாக்டரிடம் இது குறித்துப் பேசிய போது, 'எல்டர்லி பிரைமின்னா சிரமம் இருக்கலாம். ஆனாலும் சிசேரியன்தான் இருக்குதே' என்று தைரியமூட்டியிருந்தார். சாவியை ஒப்படைத்து வெளியேவர, வாசலில் ஸ்கூட்டரில் ராஜன் காத்திருந்தார்.

உள்ளே ஆசை மங்கி எரிச்சல் வந்தது.

''என்ன இங்கே? யாராவது பார்த்தா.... நல்லாயிருக்காது.''

''நாம ரெண்டு வாரத்துல கல்யாணம் பண்ணிக்கறதா இருக்கோம்.'' - புன்னகைத்தான்.

''நான் இன்னும் சரியா முடிவு பண்ணலை''

''குழம்பியிருக்கீங்க.''

''ம்ப்ச்''

''உங்களுக்குப் பதட்டம் - ஏறுங்க. கொஞ்சம் தள்ளிப்போய்ப் பேசலாம்.''

அவளுக்குக் கிளப் வாசலை விட்டுப்போனால் போதுமென்றிருக்க - பின்னால் ஏறிக் கொண்டாள். இவர் யார் ஏதென்று கேள்வி வந்து, தாலி ஏறாமல்போனால் குசுகுசுவென்று பேசுவார்கள். அதற்கு வேறு தனியாகக் குமைய வேணும். இன்னும் அவள் சரீரம் ஒடிசலாயிருந்ததில் அவன்மேல் படாது உட்கார முடிந்தது. ஸ்கூட்டர் வளைந்து, விரைந்து இரண்டாம் நிமிடம் இலந்தைக்குளம் ஓரமாக நின்றது. மேடும் பள்ளமுமான செம்மண்ணில் விசாலமான வெட்டாந்தரை. சுற்றிலும் காய்ந்த பனைமரங்கள் வானத்தை அண்ணாந்து... பார்த்தவாறிருந்தன. விறைத்த இலைகளுடன் மழைக்காக இறைஞ்சி நின்றன அவை. இவளும்தான் இளமையெல்லாம் வறண்டு துணைக்காக ஏங்கிக் கிடந்தாள். துணை கிடைத்தபின்னும் பயம் இருந்தது... எதனால்? யௌவனத்தைத் தொலைத்துவிட்ட கலக்கம்தான். சில மாதங்களுக்கு முன் படித்த கவிதை ஆறுதலாய் மனதுள் எழுந்தது.





*'வருஷங்கள்*

*பலவானால் என்ன?*

*குறிஞ்சியாய்ப் பூத்தால் சரி.'*

'இந்த இலந்தைக்குளம் நான் சின்னவளா இருந்தப்போ எப்படி இருக்கும் தெரியுமா... அலை அலையாய் சமுத்திரம் மாதிரி. அம்மா இந்தப் பக்கம் வரும்போதெல்லாம் தவறாமல் சொல்லுவார்கள். இப்போது அம்மா இருந்திருந்தால் அபிப்ராயம் கேட்டிருக்கலாம். தற்போது ஆலோசனை சொல்ல ஆளில்லை. அம்மா இருந்திருந்தால் வீடும், உத்யோகமுமாய் இருக்கும் ராஜனை பண்ணிக் கொள்ளத்தான் சொல்வார்கள், சந்தேகமில்லை.'

''ஏன் பயம் உங்களுக்கு?'' - ராஜன் கேட்டான்.

''இப்படியே பழகிருச்சு.''

''எனக்குப் பயங்கரமா அலுத்திருச்சு.''

அவளுக்கு இயல்பாய் புன்னகை வந்தது.

''நிச்சயம் இதைவிட சந்தோஷமாய் இருப்போம்.''

''அட்ஜெஸ்ட்மெண்ட் கஷ்டம்ங்க.''

''நமக்கு நல்ல முதிர்ச்சியிருக்கு. சின்னப் பசங்க மாதிரி சண்டையெல்லாம் வராது.'' - சிரித்தான்.

''அந்த முதிர்ச்சிதான் பயம்.''

''ஒண்ணு சொல்லட்டுமா?'' - சங்கோஜ சிரிப்புடன் கேட்டான்.

''ம்?''

''கிளப்பை விட்டு வெளிய வந்தப்ப சின்ன பொண்ணாட்டம்தான் இருந்தீங்க. எனக்குத்தான்... நரையெல்லாம் வந்தாச்சு.''

கஸ்தூரிக்குள் நெகிழ்ச்சி பொங்கியது. ஒரு ஆணின் பாராட்டில் சிறு பெண் போல் நாணம் பெருகியதில் அவளுக்கு நிம்மதியாயிருந்தது.

''இட்ஸ் நெவர் டூ லேட் கஸ்தூரி.''

முதன்முறையாக அவன் அவள் பெயரை உச்சரித்தான். அவன்

பெயர் அவளுக்கே புதுமையாகப்பட்டது. ''இளமை, மனசைப் பொறுத்த விஷயமில்லையா?'' : அவன் கரகரத்த குரல் அவள் பயங்களைத் துடைத்தது. அவள் நல்ல உயரம்தானென்றாலும் அவள் கண்கள் தாழ்ந்தே இருந்ததால் அவன் அகல தோள்களும், முடி பரவிய கைகளுமே அவள் பார்வையில் பட்டன. அந்தக் கைகள் தன்னைச் சுற்றிக் கொண்டால்... என்னுகையில் அடிவயிற்றில் குபீரிட்ட வெப்பம், அவளுக்கு நிம்மதி தந்தது. இளமை உனக்கு மீதமுண்டு என்று அவை உணர்த்தியதே. பகலின் எரிச்சல்கள் - இரவின் தாபத்தில் அழிந்துவிடும் சாத்தியம் உனக்கும் உண்டு என்ற திருப்தி முளைத்தது.

''எப்ப ஆரம்பிச்சாலும் ஆரம்பம் இனிமைதான்றீங்க?''

ஆவலாய் தலையசைத்தாள்.

''சம்மதம்ங்கிறீங்க?''

அவன் தோள்களின் விறைப்புத் தளர்ந்து சிரித்தான். இருவரின் மூச்சும் சீராக வர ஆரம்பித்தது.

''சீக்கிரமா நாள் ஒன்று குறிச்சிடலாம். ரொம்ப எளிமையா இருக்கணும்.''

''கிளம்பலாம். மழை வரும்போல இருக்குதே.''

''வரட்டும்!'' புன்னகைத்தவள், ஆதுரத்துடன் காய்ந்த மண்ணை நோக்கினாள்.

இயல்பாய் ஸ்கூட்டரில் ஏறி அவன் தோளை மெல்லப் பற்றிக் கொண்டாள். ஸ்கூட்டர் குலுங்கி வேகம்கூட, கஸ்தூரி மிக இளமையாக உணர்ந்தாள். மழைத் துளிகளை ஆர்வமாய் உறிஞ்சிய மண், மணக்க ஆரம்பித்தது.

★★★



# ஒன்று இரண்டு

**வா**சல் படியேறிய போது உள்ளே சிரிப்பொலி கேட்டது. 'களீர்' என்றும், 'கலகல'வென்றும் கலந்து உருண்டு வந்தது பெண்களின் நகைப்பு. தன்னிச்சையாய் என் உதடுகளிலும் புன்னகை. ஆனால், சிந்தித்த உடனேயே மலர்ந்த சிரிப்பு சுருங்கிக் கொண்டது.

முதல் மலர்ச்சியில் நினைவிற்கு வந்தது சாந்தாதான் - என் மனைவி. ஆனால், மனக் கசப்பினால் உள்ளூரிலேயே இருந்த பிறந்த வீட்டிற்குப் போயிருந்த சாந்தா, இங்கு வந்தால், மாமியும் மருமகளுமாய் இப்படிச் சிரித்துக் குதூகலிப்பார்களா, என்ன?

வந்திருப்பது தங்கை ப்ரீதியாகத்தான் இருக்க வேண்டும். அவள் தன் கணவனை நச்சரித்து இங்கேயே மாற்றல் வாங்கி வந்தாயிற்று. வந்த கையோடு தனக்கும் ஒரு வேலை தேடிக் கொண்டாள்.

'பிடிச்சிருக்குன்னா தொடர்ந்து வேலை பாரும்மா ப்ரீதி. உன் கைக்குன்னு தனியே பணம் வந்தா அந்தத் தெம்பு தனிதான். ஒத்தாசைக்குத்தான் நாங்கள் இருக்கோமே...' என்று தாய், மகளை ஊக்குவித்திருந்தாள்.

''வாடா, ப்ரீதி முதல் மாசச் சம்பளத்தோட நேர இங்க வந்துட்டா. எனக்கு 'பெர்ல்-பெட்' டப்பா ரகவாரியா வாங்கியிருக்காப் பாரேன். எனக்குப் பிடிச்ச பச்சை நிறம்'' அம்மா பூரித்தாள்.

''சொல்லும்மா. அண்ணாவுக்கும் உன் பேவரிட் கலர் என்னன்னு தெரியட்டும்.''

பெருஞ்சிரிப்பு கிளம்பியது. நான் அசடுபோல நின்றேன்.

நான் அசடு போல நின்றேன்.

இதேபோல சாந்தா மாதத்திற்கு ஒரிருமுறை அவள் பெற்றோரைக் காண ஆவலாய்க் கிளம்பினால்... -

'என்னவாம்?' என்று நந்தியாய் எழுவாள் மாமியார். அந்நேரம் அவள் முழுக்க என் மனைவியின் மாமியார். இன்றோ வாஞ்சையாய் மகளது தலை நீவி, ''உனக்குன்னு ஏதேனும் வாங்கிட்டியாடா?'' என்று விசாரித்தாள்.

''அயர்ன் - பாக்ஸ்,சிந்தடிக் சாரியைக்கூட ஒரு தேய் தேய்ச்சுக் கட்டினா நேர்த்தியாயிருக்கும்மா. தவிர,காட்டன் ரவிக்கையை இஸ்திரி பண்ணாமப் போடச் சகிக்கலை...''

சனிக்கிழமைகளில் சாந்தா வீட்டார் துணி முழுக்க அள்ளி வைத்து இஸ்திரி இட்டாலும் அம்மாவின் நாக்கு சொடக்கும். 'ஆபிசில என்ன அழகிப் போட்டியா நடக்குது?'

''போன மாசம் செய்து தந்த பருப்புப் பொடி, தொக்கு காலியானதும் சொல்லுடா பிரீதி. வேற தர்றேன். வேலைக்கும் ஓடி சமையலிலேயும் அல்லாடாதே.''

அம்மா பேச்சோடு நில்லாமல் மகளுக்காய் இரவுச் சாப்பாட்டை சமைத்து முடித்திருந்தாள். தக்காளிக் குழம்பு, பீன்ஸ் பொரியலை டிபன் கேரியரில் அழுந்த நிரப்பிய மணத்தில் என் நாவு சுரந்து... மனம் வரண்டது.

இதே அம்மா ஆபீசிலும் பஸ்சிலுமாய் அலுத்து வீடு வந்து விழும் சாந்தாவிற்கு ஒரு வாய் தண்ணீர் எடுத்து நீட்டியதில்லை. தனக்கு மட்டுமாய் இரண்டாவது டோஸ் காபி கலந்து குடித்துவிட்டு, வம்பு செட்டோடு ஆலயம் கிளம்பிப் போவாள் - சாலவும் நன்று. ஆனால், இன்று ஏனோ, வேலையிலிருந்து வந்த அலுப்போடு அரிசி களைய உட்கார்ந்த இளம் மனைவியின் நினைப்பு மனதுக்குள் அறுந்தது.

''அக்கா... எனக்கு ஷூ? போன வாரம் பார்த்து வச்சிட்டு வந்தோமே?'' - கடைசித் தம்பி இழுத்தான்.

''அது நாநூறு ரூபாடா. அடுத்த மாசம் வாங்கிரலாம். நூறு இரு நூறுன்னா வாங்கிட்டே வந்திருப்பேன்.''

''வாங்கித் தருவா'' - பெருமையாய் இன்றி அலுக்கும் அம்மா. சாந்தா தன் தங்கைக்கு ஒரு ஜாமெண்ட்ரிபாக்ஸ் வாங்கித் தந்ததும்





- 'வேலைக்குப் போறது இப்படி வாரி விடறதுக்குத்தான்' என்று இரைந்தவள்!

''அம்மா. உன்பவளக் கம்மலைத் தர்றியா? வர்ற வியாழன் எங்க காஷியர் தங்கைக்குக் கல்யாணம் - தீபாவளியப்ப எடுத்த ஆரஞ்சுப் பட்டைக் கட்டணும்...''

''கொண்டு போ. அப்படியே கனகாம்பரம் சூடிக்கோ. எடுப்பாயிருக்கும்.'' - இதே அம்மா - மாமியாராய் நிற்கையில் வேறு - 'வர்ற வாரம் எங்கூட வேலை பார்க்கற சியாமளியோட கல்யாணம்மா. போயிட்டு வரவா?' - மருமகள் தயங்க...

''ஆபிஸ்காரங்களை அங்கியே நிறுத்திக்கணும். உறவு விசேஷங்களுக்கே போக யோசிக்கிற காலம்'' என்று தூணைப் பார்த்தபடி பேசியவள்.

ஆனால், ''பொண்ணுங்க வேலைக்குப் போய்த்தானா வீடு நிறையணும்?'' என்றபடியே மருமகள் போனஸுக்கான பட்டியலும் போடுவாள். அறையின் கதவு மறைவில் ஓங்கிக் குமாறிய போதும் சிரிப்பு தொடர்ந்து வந்து பிடித்தது. என் ஏமாளித்தனத்தைக் கண்டு எள்ளுகிறார்களோ... ஏமாற்றம், கசப்பு உணர்ந்து பின் ஞானமும் கண்டேன்.

'அம்மா ஒரு கண்ணில் வெண்ணெய்யையும் மற்றதில் சுண்ணாம்பும் வைத்திருக்கலாம். ஆனால் நான்...? நான் ஏன் என் உயிரானவளிடம், என்னுள் உயிராய் இழைந்தவளிடம் அன்பின் அனுசரணை காட்டவில்லை?' உள்ளத்துக் கசப்போடு, கண்ணீரும் சேர்ந்து ஊறி வழிந்தது.

''வந்து நீ காபியே கேட்கலியேடா?'' - உடை மாற்றிக் கிளம்பிய என்னை, அம்மா ஆச்சரியமாய்க் கேட்டாள்.

''நீயா தருவேன்னு பாத்தேம்மா'' படியிறங்கினேன்.

''கேக்கணும். கேட்டு வாங்கிட்டாக் குறைஞ்சிடுவையா?''

சாந்தாவைக் கையோடு கூட்டிவரணும். இங்கே அவளுக்கு வேண்டிய பொருளோ, புரிதலோ என்னிடமிருந்து ராஜோபசாரமாய் கிடைக்கும். அதைப் பார்க்கும் அம்மாவும் மாறுவாள்.

கேட்டே வாங்கிக் கொள்கிறேனே - குறையில்லை!

(ராணி, அக்டோபர் 1999)

★★★

# ஓடும் பறவைகள்

**18** வயது சுமதி தன்னைக் கண்ணாடியில் உற்றுப் பார்த்தாள்.

'ம்? வெகு சுமார்... குளித்து நறுவிசாய் உடுத்தியிருக்க சுமார். கல்லூரியிலிருந்து களைத்துத் திரும்பிய பின்னோ, தூங்கி எழுந்த கையோடோ பார்க்க, ஏறக்குறைய மோசம் என்னுமளவில்தான் அவள் தோற்றம் இருந்தது. இப்போது ஏன் இந்த ஆராய்ச்சி?'

அடுத்த வீட்டு வத்சலாவிற்கு திருமணம் நிச்சயமாகியிருந்தது. 25 வயது வத்சலாவும் இவளைத் போலத்தான் - பெரும்பாலும் யாரும் மறுமுறை திரும்பிப் பார்ப்பதில்லையே! அவளுக்குச் சிறப்பான சம்பந்தம் எனப் பேசிக் கொண்டார்கள்.

வத்சலாவின் குரல்... குயில்தான்.

சாரீரம் சுத்தமாயிருப்பினும் வயலினும் கற்றவள், அதனோடு இழைந்து பாடுகையில், கேட்கப் பரவசமாயிருக்கும். சிறு கச்சேரிகள் போக நாலு பாட்டு ட்யூஷன்கூட அவளுக்கு உண்டு.

அது சரி. அத்தனைப் பெண்களுமா ரதி?

ஏதோ ஒரு மகுடம் அவளை ராணியாக்கிக் காட்டும். நல்ல மாப்பிள்ளை தேடி வருவது ஒருபுறம் இருக்க, பெண் தலை நிமிர்ந்து நிற்க, தெம்பாய் சிரிக்க, உற்சாகமாய் வாழ ஒரு கிரீடம் அவசியம்.

குணம், கலை, காசு, வேலை, அழகு, படிப்பு... தனக்கு எது?

சுமதி யோசித்தாள்.

உட்கார்ந்து படிக்கும் பாய் தேய்ந்து நைந்தும் படிப்பு சுமார் ரகத்தில்தான் சேர்த்தி!





கலை, காத தூரம்!

கிழிசலைக் கொடூரமாய் புழு போலத் தோன்றும் விதமாய்த் தைப்பதோடு தையல் சரி.

குணம் கூட பிடிவாதம், தாழ்வுணர்ச்சி என்று... பெருமைப் படும்படியில்லை. பிரத்யேக ஆர்வம் எதிலுமில்லை. ஆர்வமில்லாத துறையில் சாதனை எப்படி...? அம்மா ரசம் தாளித்த மணம் வீடு முழுக்கப் பரவியதில், வயிறு குழைய, கத்தினாள்.

''அம்மா சாப்பாடு ஆச்சா?''

''இன்னும் பத்தே நிமிஷம்''

பனிரெண்டாவது நிமிடம், அன்னாசி ரசம், துவையல், வெண்டைக்காய் பொரியல் என ருசித்து சாப்பிடுகையில் நுனி நூல் சிக்கியது!

சமையல் ஒரு கலையில்லையா என்ன?

குருவாக வீட்டிலேயே தாய் இருக்கச் சுலபமாகக் கற்கக் கூடியது; அன்றாடம் பயன்படும், பாராட்டப்படும் கலை. புதுசு புதுசாய்க் கிளறிக் கரைத்து... பத்திரிகைகளுக்குக் குறிப்புகள் அனுப்பலாம்.

'சுமதியின் சுவைமிகு சமையல்' எனப் புத்தகம் கூட வெளியிடலாம். அடடே, சாதனை கூட சாத்தியம்!

அவளுள் உற்சாகம் கிளம்பியது.

அன்று தன்னுடன் நின்று பாத்திரங்களைக் கழுவிக் கவிழ்த்த மகளை ஆச்சரியமாய்ப் பார்த்தாள் அம்மா.

''என்னடீ புதுசா?''

''தட்சணைம்மா. குரு தட்சணை''

காய்களை வெட்டுவதிலிருந்து பயிற்சி ஆரம்பமாயிற்று. அடுத்து, தாளிக்க, பொரிக்க என்று வளர்ந்து சாம்பார் வைக்க அவளைத் தயாராக்கியது. இப்போது சுமதிக்குப் பார்த்த மாத்திரத்தில் காய்கறி முற்றலா, சொத்தையா என்பது பிடிபட்டது.

''சாம்பார் புது மணமா ஜோராயிருக்குது'' பாராட்டலில், ''அம்மா... அடுத்ததா இனிப்பு செய்யலாம்'' என்று குதித்தாள்.

''ரவா லட்டு செய்.''

''சே. எனக்கு மைசூர்பாகுதாம்மா பிடிக்கும்.''

''பதம் சரியா வரணும்.''

''அதெல்லாம் வரும்''

காசைக் கொட்டி, நெய்யையும் கொட்டிக் கிளறியும் பாகு பதம் வரத்தானில்லை.

உதிர்ந்து பொடியாகவே கிடந்ததை அள்ளி ஒரு டப்பாவில் போட்டு மூடினாள்.

''இது பேரென்ன சுமதி?'' என்று வீட்டார் சிரித்தபடி அள்ளி வாயிலிட்டுக் கொண்டனர்.

சமையல் அப்படியொன்றும் சுலபமில்லை என்பது புரிந்தது. மாமா ஊரிலிருந்து கொண்டு வந்த தேங்காயில் மிட்டாய் செய்தாள். இம்முறை துண்டு போட வந்தாலும், தேங்காய் தனியாய், நொறுநொறுவென சீனி தனியாய், நாக்கில் தட்டுப்பட்டன. மறுமுறை அவற்றைச் சற்றுத் தட்டி, சிறிது பாலும் சேர்க்க,

''ம்... பிரமாதம் சுமி'' என்று சான்றிதழ் வந்தது.

அம்பாசமுத்திரத்து சின்ன பாட்டியிடம் 'அந்த கால' மணம், ருசி மாறாத தேன்குழலும், அதிரசமும் செய்யக் கற்றுக் கொண்டாள். குல்நாரிடம் சிநேகமாகி, நான் ரொட்டி, ரசகுல்லா, பட்டர் பனீர், என்று கலையை விஸ்தரித்தாள்.

'இத்தனைச் சிரமப்பட்டுத் தயாரிப்பவற்றை அசிரத்தையாகப் பரிமாறுவதா' எனத் தோன்ற மேஜையில் அலங்காரமாய் வைத்தாள்.

''நீ கொண்டு வரச்சேயே நாக்கில் எச்சில் ஊறுதக்கா'' என்றான் தம்பி.

சாப்பாட்டு அறையைத் தொடர்ந்து வீடு முழுக்க அவள் பராமரிப்பின் கீழ் வந்தது.

அந்தத் தெருப் பெரியவர்களும்,

'இன்னைக்கு மைசூர்பாகு போடணும் சுமதி. ஒரு எட்டு வந்து பார்க்கறியா?' என வேண்டினர்.





'நெய் வேண்டாம். வெண்ணெய் வாங்கிடுங்க. உருக்கிச் சூடா கலந்தா சரியாயிருக்கும்' என்றாள்.

தினம் காலை சமையலறையில் இருந்ததால் பால் பாத்திரத்து ஆடையை எலுமிச்சச் சாறுடன் கலந்து, உடல், முகம் எனத் தடவி ஊறவிட்டாள். தலைக்குத் தயிர் தடவினாள். சனி ஞாயிறில் காரட் சாறு, வெள்ளரி என முகத்தில் அப்பினாள்.

சருமம் பளீரெனப் பொலிய, அவள் தலைமுடி கைக்குள் அடங்காது மின்னியது. விடுவிடுவென வேலை செய்ததில் இடுப்பு சிறுத்து ஒடுங்கியது.

எல்லாவற்றையும் விட அவள் சிரிப்பில், தோள் நிமிர்வில் தெறித்த தன்னம்பிக்கையும், நிறைவும் அவளைப் பேரழகியாக்கிக் காட்டின.

அன்று டாக்டர் சித்தி வந்திருந்தார்கள். ''சுமதி அவ சித்தியைக் கொண்டு பிறந்திருக்கா'' எனக் குடும்பத்தார் சொல்கையில் முன்பு எரிச்சலாயிருக்கும்.

சித்தி அழகில்லை. ஆனால் படிப்பு கொடுத்த களை, கம்பீரம் உண்டு.

சாப்பாடு முடிந்து அனைவரும் ஹாலில் வந்து அமர்ந்தனர். சாப்பாட்டு மேஜையை ஒதுங்க வைத்த சுமதி, ஆளுக்கொரு இனிப்பு பீடா சுருட்டி நீட்டினாள். சித்தி, தன் நோயாளி ஒருத்தியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''தற்கொலைக்கு அந்தப் பெண் சொல்ற 'காரணம் என்னான்றீங்க?''

''ஊர் மிராசு பொண்ணுன்ற. பண்ணையாளைக் காதலிச்சுட்டாளா?''

''ரொம்ப சினிமா பார்க்கறீங்க அத்தான். அவ பார்க்க அழகாயில்லையாம்.''

''அடக் கடவுளே!''

''படிக்க அனுப்பலை. வீட்டு வேலையும் செய்யறதில்லை. சாப்பிட்டு, தூங்கி தடிச்சிட்டா. முகம் அத்தனை லட்சணமில்லை...''

''ஆனா, இது ஒரு காரணமா? பறவை எல்லாம் பறக்குதா

என்ன?'' அம்மா சொன்னார்கள்.

''நம்ப அத்தை சொல்ற அதையேதான் நானும் அவளுக்குச் சொன்னேன். பென்குவின் பறக்காது போனாலும் அபாரமா நீந்தும். கோழி ஏதோ எம்பி சிறகடிச்சுக்கும்.

வான்கோழிக்கு அதுவும் முடியாது. மூளையும் மட்டு. ஆனா அது பறவைகளிலேயே பெரிசு. மானாட்டம் ஓடும். ஒண்ணில்லாட்டா இன்னொண்ணு என்று சொன்னேன்''

''புத்தி வந்துதா?''

''வந்தா நல்லது. அவங்க வீட்டாருக்கும் வரணும்.''

முடிச்சிட்டிருந்த முடியை விரித்துக் கோதியபடி சுமதி பேசினாள்.

''ம்? முதல்ல அந்தப் பொண்ணுக்காத் தோணணும் சித்தி. மற்றதெல்லாம் பிறகு.''

வெற்றிலை மென்றதில் அவள் உதடுகள் சிவந்து, முகம் தனி சோபையாயிருந்தது.

''அதும்சரிதான். முன்னேநீஎன்னைப்போலன்னு வாங்க. இப்ப நீ அழகு கூடிப் போயிட்ட பெண்ணே''

-சிரித்தார்கள் சித்தி.

''பறவையெல்லாமா பறக்குது? சரி நாம ஓடுவோம்னு ஓடினேன். அப்படியே கொஞ்சம் சிறகடிக்க, பறக்கவும் வந்திடுச்சு,'' சந்தோஷமாய் சுமதி சிரித்தாள். அவள் அழகு சிரிப்பில் மேலும் கூடித் தெரிய, மொத்த குடும்பமும் அவளைப் பெருமையாய்ப் பார்த்தது!

(மங்கையர் மலர்)

★★★



# கண்ணாடி

**ப**ஸ் வளைந்து திரும்ப, வைகை அணையின் வண்ண ஒளிச் சிமிட்டல்கள் தெரிந்தன. கடந்த முக்கால் மணி நேரமாகப் பெரியகுளத்திலிருந்து, ஊறுகாய் ஜாடியில் குலுங்கும் நெல்லிகளைப் போல பஸ்ஸில் அடிபட்ட சோர்வு நீங்கி மாணவிகளை உற்சாகம் பற்றிக் கொண்டது.

வாயிலில் டோக்கன் வாங்கி, பஸ் உள்ளே நுழைந்து அசந்து நிற்கும் முன்பே 'தொப தொப' என உதிர்ந்தார்கள்.

மாலைக்காற்று குளிர்வாய் தடவி விட்டது.

முதுகு வளைத்து, கை, கால்களை உதறி நடந்தனர்.

அகன்று சுருண்டோடிய நீரில் கால் நீட்டி, முகம் கழுவி, தலையைச் சீர்படுத்திக் கொண்டனர்.

சூடான வடை, சுண்டல் என வாங்கிக் கொறிக்க ஆரம்பித்தவர்களை மேடம் அவசரப்படுத்தினார்கள்.

''இப்பவே சுத்த ஆரம்பிச்சாதான் முழுசும் பார்க்கலாம் - லைட்ஸ் எட்டரைக்கு அணைஞ்சிடும்.''

அந்நேரம் அந்தப் பேருந்து சூறாவளியைப் போல நுழைந்தது. வண்ணக் கொத்துக்களாய் நின்றிருந்த மாணவிகளைப் பார்த்து சமுத்திரமாய் ஆர்ப்பரித்தது!

*'இன்னும் என்னை என்ன செய்யப் போகிறாய்...*

*அன்பே... அன்பே... ஏ'* என்று ஸ்பீக்கர் அலறி உருகியது.

மாணவிகளில் அகிலா கடைசியாய், பிற மாணவிகளின் சுண்டல், முறுக்கு கணக்குகளைத் தீர்த்துத் திரும்பிக்

கொண்டிருந்தாள். உயரமும் வாளிப்புமான அவளைக் கண்ட புதுபஸ் மாணவனுக்கு சந்தோஷம் பிய்த்துக் கொள்ள - ஒரு கையால் கம்பியில் தொங்கி, மறுகை நீட்டி கையிலிருந்த பையால் அவள் முதுகைத் தட்டினான்.

பஸ்ஸின் வேகமோ, அடி பலமோ, அல்லது எதிர்பாராத அதிர்ச்சி என்பதாலோ அகிலா ''ஓ''வெனக் கத்தினாள். அவள் மூக்குக் கண்ணாடி எகிறிப் பறக்க, 'மளுக்'கென முன்னே சரிந்தாள்.

''என்ன... என்னாச்சு?'' - தோழிகள் ஓடி வந்து தூக்க, பஸ்ஸின் ஆரவாரம் டக்கென்று அடங்கியது.

அதனின்று யாரும் இறங்கவில்லை.

''பாவிப் பய அடிச்சுச் சரிச்சுட்டானுவம்மா'' - கடலைக் கிழவர் விளக்கினார்.

செய்தி தவ்வித் தாண்டிய இரண்டாம் நிமிடம் அங்கு ஒரு போலீஸ்காரர் ஆஜராகி விட்டார்.

அகிலா அதற்குள் எழுந்து விட்டாள்.

உள்ளங்கைகள் கல் அழுந்திக் கன்றிக் கிடக்க, சிராய்த்த முழங்காலைத் தடவிக் கொண்டவளின் உடல் நடுங்கியது.

''என்னம்மா, நிக்க முடியுதா? உதறி விடு'' - போலீஸ் விசாரித்தார்.

''ம்... ஒண்ணுமில்லை... கண்... கண்ணாடியத்தான் காணலை...''

சில மாணவிகள் குனிந்து தேட ஆரம்பிக்க, பிறர் -

''சார் - இப்பத்தான் நுழைஞ்சாங்க சார், அதுக்குள்ள இந்த வேலை. விடாதீங்க நீங்க'' என்று கைகாட்ட, சாட்சிக்கு சுண்டல் கிழவர் தயாராய் நின்றார்.

அதற்குள் புதுவீட்டினுள் நுழையும் நாய்க்குட்டி போல இளைஞர்கள் தயக்கமாய் அரவமில்லாது இறங்கி நின்றனர்.

''யாருடா அது?''

''சிகப்பும் வெள்ளையுமா சட்டை போட்ட பய சார்''

முறுக்குப் பெண் முனகலில் கண்டுபிடிப்பது சுலபமாயிற்று.





'நாந்தான்' ஒத்துக் கொண்டான்.

கொத்தாய் சட்டையைப் பற்றி போலீஸ் கை ஓங்க - அகிலா தடுத்தாள்-

''எப்பவும் இப்படியே லேசா போயிருமாம்மா?'' என்றவரிடம்,

''வேணாம் சார், ப்ளீஸ் எனக்கொண்ணுமில்லையே... விட்டிருங்க. சுற்றுலான்னு வந்திருக்காங்க...'' என்றாள்.

நாக்கைத் தெற்றியபடி இளைஞனை நெருங்கினார்.

''என்னலே கையை நீட்டுற வேலை? ஸ்டேஷனுக்குப் போவலாமா?''

இப்போது மேடமும், மறு பஸ்ஸின் ஆசிரியரும் தலையிட்டனர்.

''வந்த இடத்திலே பிரச்னையா ஆயிட வேண்டாம் சார். எச்சரிக்கைப் பண்ணி விட்டிருங்க''.

இத்தனைக்கும் நாற்பது பேருக்குக் குறையாதிருந்த மாணவர்கள், எதிர்ப்பேயில்லாது அடங்கி நின்றது ஆச்சர்யம்தான்.

மூக்குக் கண்ணாடியைத் தொலைத்து விட்டு, கலங்கலாய் விழித்தபடி அகிலா நின்றது, பேசியது, அவர்களைக் கட்டிப் போட்டிருந்தது போலும்.

''கண்ணாடி கிடைச்சுதாம்மா?''

''காணலை சார். அவளுக்கு ரொம்ப கிட்டப் பார்வை''

''எவ்வளவு இருக்கும்மா?''

''பவர்... மைனஸ் ஐஞ்சு''

''அதில்லைம்மா- என்ன விலையிருக்கும்னு கேக்கறேன்''

''ம்... நானூறு இருக்கும்...''

''எடுங்கலே...''

''இப்ப என்கிட்ட அத்தனைப் பணம்...''

''கூட்டுக் களவாணிங்கதானே, பிறகென்ன, வாங்கிக் கொடு...'' சரசரவென நோட்டுகள் கைமாறி எண்ணப்பட்டன.

''வேணாங்க சார்...''

''கேஸ் வேணாம் சரி. இது அபராதம் போல இருக்கட்டும்மா... சரியா இருக்கான்னு பாத்துருங்க'' - கற்றையை நீட்டினார்.

எண்ணிப் பார்த்த சிநேகிதி,

''கூட பத்து ரூபா இருக்கு சார்'' என்றாள்.

''இருக்கட்டும். கண்ணாடி கடைக்கு ஆட்டோவுல போகணுமில்லை?'' லேசாகப் புன்னகைத்து விட்டு அவர் நகர, கூட்டமும் கலைந்தது.

அகிலாவை ஐந்து நிமிடம் அமரச் செய்து, காபி வாங்கித் தந்த பின் கிளம்பினர்.

தண்ணீரும், கலர் பல்புமாய் மின்ன-

அகிலாவின் அரை குருட்டுக் கண்களுக்கு சுற்றிலும் மங்கலாய் வெளிச்சப் பொட்டுக்களும் நீரின் பளபளப்பும் தெரிந்தன.

படியேறி நடக்க ஆரம்பித்தனர்.

''கண்ணன் ராதை சிலை அம்சமாயிருக்கு''

''பக்கத்திலே போய்ப் பார்ப்போம்- அகிலாவுக்கும் தெரியணுமில்லை?''

''நான் தடவித்தான் பார்க்கணும்'' - அகிலா புன்னகைத்தாள்.

''பார்க்கறவங்க தப்பா எடுத்துக்கப் போறாங்க'' - கிளம்பிய சிரிப்பு அலையில் சூழ்நிலை சகஜமாக ஆரம்பித்தது.

''ஐயோ இதைப் பாரேன்'' ஒருத்தி கூச்சலிட, சற்றே மறந்திருந்த பதட்டம் மீண்டும் பற்றிக் கொண்டது.

''என்ன... என்னடீ?'' பதறினார்கள்.

''கண்ணாடி- அகிலாவோட கண்ணாடி''

முக்கால் ஆள் உயரத்திற்கு சீராக வெட்டப்பட்டிருந்த வேலிப் புதரின் மேலாக சுற்றிலுமிருந்த சிவப்பு விளக்கின் ஒளியை பிரதிபலித்தபடி கிடந்தது கண்ணாடி.

''என்னதுதான். தேங்க் காட்...''

''ஒரு கீறல் இல்லை''

அகிலா விரல்கள் நடுங்க அதைப் போட்டுக் கொண்டாள்.

''ஒரு மணி நேரம் போடாது போனால் பயங்கரத் தலைவலி





வந்திடும். என்ன பண்றதுன்னு பயந்தே போனேன்.''

''உங்குணத்துக்கு எதுவும் வராது அகில்''

சரசரவென்று மறுபடி பேச்சும் சிரிப்பும் பற்றிக் கொண்டன.

ஆசிரியைகளுக்கும் செய்தி போனது.

திடீரெனத் திரும்பிய அகிலா விடுவிடுவென நடந்தாள்.

''டீ... இந்தப் பக்கம் குழம்பிட்டியா?''

''தெரியும்... தெரியும்'' சிரித்தாள் அகிலா.

''பின்னே?''

''பணத்தைத் திரும்ப கொடுத்திடலாம்.''

''இந்த கலாட்டாவுக்கு அபராதமா இருந்துட்டுப் போகுது.''

''சேச்சே... கண்ணாடி தான் கிடைச்சுருச்சே...''

''மேடம்கிட்டே சொல்லிடு.''

''விட மாட்டாங்க. நான் மட்டுமா போயிட்டு வரேன்'' நழுவி விரைந்தாள்.

இரண்டு பேர் மட்டும் விடாது அவளைத் தொடர்ந்தனர்.

பஸ் அருகே மாணவர்களைக் காணவில்லை.

''தோ... அங்கே'' பாதையின் மறுபுறம் நீரினுள் அணைந்தபடி நின்றிருந்தனர். பேச்சு, சிரிப்பு எதுவுமில்லை.

''நம்ம பின்னால வந்தா வம்புன்னு நின்னுட்டாங்க போல...''

''இங்கேயே நில்லுங்க - மூணே நிமிஷம்.''

அந்த சிவப்பு - வெள்ளைச் சட்டைக்காரனை மீண்டும் எளிதில் கண்டுபிடிக்க முடிந்தது.

இவள் நெருங்க, அவர்களின் கண்களில் மிரட்சி - இவளையும் தாண்டிப் பார்வை போலீஸ்காரருக்காய் துழாவியது.

''கண்ணாடி கிடைச்சிருச்சு'' அவளுக்கு விரைந்து நடந்ததிலும், அத்தனைப் பேரின் முன் தனியாய் நின்றதிலும் லேசாக மூச்சிரைத்தது.

''உங்க பணத்தைக் கொடுத்திட்டுப் போக வந்தேன்''

நீரை விட்டு, கரையில் நின்ற அவளை நெருங்கினார்.

''எ... எங்கே கிடந்தது?''

''ஏதோ மேஜை மேலே வச்சாற்போல ஒரு புதர் மேலே''

நோட்டுக்களை நீட்டினாள்.

ஒருவரையொருவர் பார்த்தபின்,

''நாங்க, நான் பண்ணினது தப்புதாங்க. அதனால இருக்கட்டும்''

...நோ... எனக்கென்ன செலவு? உங்க பணம்''

பேச்சுடன் புன்னகையும் வந்தது.

அவள் பரிவு, பேச்சில் அவர்கள் மனம் குறுகுறுத்தது. 'ஏன் இவளைத் தொட, சீண்ட, தரந்தாழ்ந்து போனோம்'

''ஸாரிங்க... ரொம்ப ஸாரி...''

''பணம்...?''

''தாங்க்ஸ்'' பதில் முறுவலுடன் விரல் படாது பணத்தை வாங்கிக் கொண்டான்.

அவளின் இயல்பான சிநேக பாவம் கண்ணாடியாய் அவர்களிலும் நட்பைப் பிரதிபலிக்கச் செய்தது.

''நாங்க திருச்சி... நீங்க...?''

''மதுரை. எட்டரைக்கு லைட்ஸ் அணைஞ்சிடும். அதுக்குள்ளே சுற்றிப் பாருங்க. வரேன்''.

''சரி'' புன்னகையில் அவர்கள் உதடுகளோடு, மனங்களும் விரிந்தன.

(ராஜம் - நவம்பர் 1994)

★★★



# கலங்கல்

குருசாமிக்குத் தான் செய்த தவறுகள் ஓரளவு புரிந்து விட்டாலும் முழுதுமாகப் புரிபடவில்லை!

மூத்த பிள்ளையாகப் பிறந்தது தப்பா?

எட்டு வயதிற்கு இளைய தம்பியும் தங்கைகளுமிருக்க பொறுமையும் பொறுப்புமுள்ள பையனாக அமைந்து போனதா?

இவை அவரை மீறியவைகளல்லவா?

தன்னைக் கொண்டு பிறந்த பையனென்பதால், தாய் அவரைக் கொஞ்சம் அதிகப்படியாகவே செல்லம் கொடுத்து மென்மையானவனாக்கி சேலைக்குள் முடிந்து கொண்டது?

அதுதான் 'மூத்தது மோளை' என்று பழமொழியே இருக்கிறது.

அதற்கு அவரென்ன செய்ய?

திருமணமாகி, தனக்கென்று குழந்தைகள் பிறந்த பின்னும் அவர் தாயாரின் சொல்லுக்கு சற்று அதிகமாகவே சாய்ந்து கொடுத்தது உண்மை தான்.

அது தன் கடமையென்று நினைத்தார்-

ஆனால், மனைவி கற்பகம் அப்படி நினைக்கவில்லை! 'பாசம், மரியாதை எல்லாம் எதுவரைன்னு தெரிஞ்சிருக்கணுமில்ல. அவுக சொல்லி வந்தவளை அடிக்கறவரையிலுமா? நா எத்தனை ராப்பொழுது விம்மியிருக்கேன். ஏன்னு ஒரு வார்த்தை கேக்க மாட்டீங்களே'

அவருக்கு இதுவும் புரியவில்லை.

அவள் முதல் முறை கண்கலங்க அவர் பதறிப் போனார்.

''என் கற்பகம் என்னாச்சு'' என்று தொட்டவரை, தோளைச் சிலிர்த்து விலக்கியவள் முறைத்தாள்.

''என்று தெரியாதுல்ல? வளர்ப்பு அப்படி, அவுக தப்பெல்லாம் தெரியாத மாதிரி ஒரு வளர்ப்பு'' என்று சீறி உதறியவள், அவரிடம் இரண்டு வாரம் பேசவில்லை. கணவனிடம் சோகத்தைப் பகிர்ந்து அவனை வளைத்துப் போடத் தெரியவில்லை. இப்படி சில முறைகள் அடிபட்ட பின் அவள் அழும் போது அவர் பதுங்கிக் கொண்டார்.

அவர் அன்னையிடமும் குறையுண்டு. முதல் மருமகளிடம் அதிக ஆதிக்கம் காட்டினாள். தன் பிரிய மகன் எங்கு அதிகப் பிரியம் கொட்டி விடுவானோ என்ற அச்சத்தில் கற்பகத்திடம் சற்றுக் கடுமை காட்டியதுண்டு. 'இவள் ஒன்றும் உசத்தியில்லை' என்று சொல்லும் முகமாய் அவளைக் குறைகண்டதுண்டு.

'சுறுசுறுப்பேயில்லையே'

'இதென்னடி வாயில வச்சா விளங்காம ஒரு குழம்பு'

'விசேஷத்தப்பவாவது சிரிச்சு பேச மாட்டாளா?' என்றதுண்டு.

மகன்களும் சேர்ந்து கொள்ள அம்மாவின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்த காலம் அது.

கடை, கோவில், கல்யாணம், வீட்டுப் பொறுப்பு என்று எதிலும் அம்மா முன்னிருக்க, கற்பகம் குன்றித் திரிந்த காலம் அது.

தான் தனிமை தேடும் என்று மாமியார் நிதானப்படவில்லை. தான் வாழும் காலங்களும் வரும் என்று மருமகளும் தைரியப்படவில்லை.

மகன்கள் திருமணமாகிப் போக, வந்த இரண்டாம் மருமகள் மீது அம்மா பட்சமாக இருந்தது வாஸ்தவம். தன் சின்ன மகனையும் விட இளையவள் என்பதால் 'சின்னப் பெண்' என்று பரிவோடு நடத்த, கற்பகம் எரிந்தாள்.

'நா என்ன முந்தி முருங்கையாவா வந்தேன்? அப்ப எனக்கும் இதே வயசு தான். எத்தனை நொள்ளையான பேச்சு. இப்ப வந்த பொண்ணு சின்னக் கண்ணாக்கும்?' ஆக கற்பகத்திற்கு கொழுந்தன் மனைவியும் ஆகாமல் போனது. கணவன் வீட்டார்





சதா தன்னைக் கேலிபேசிச் சிரிப்பதாகவும், உதாசீனப்படுத்துவதாகவும் தோன்ற அனைவருக்கும் அந்நியமானாள்.

தனிக்குடித்தனம் பெரும் பாவமாக அவள் தாய் வீட்டில் கருதப்பட்டதால் அந்த எண்ணம் அவ்வளவாக அவளுக்குள் எழவில்லை. இருபத்தைந்து வருடங்களுக்கு முந்திய காலம் தவிர மாமனாரின் வீடு விலாசமும் சௌகர்யமாக இருக்க அது அவளுக்குப் பிடிக்கும். பெரிய தோட்டத்தில் தென்னை, மா, கொய்யா, எலுமிச்சை, கீரை, காய்கறி என்று சகலமும் உண்டு. தண்ணீர் தட்டுப்பாடே கிடையாது. மாடியில் இரண்டு பெரிய அறைகள் அவர்களுக்கென்று கட்டப்பட அவ்வீடு அவளுக்குச் சொந்தமாகிப் போனது.

ஆனால், அது அவளிடம் பரிவாகப் பேசவில்லை.

கேலி பேசிச் சிரிக்கவில்லை.

பாராட்டி வியக்கவில்லை.

குழந்தைகளிடம் அவள் சுதந்திரமாகப் பேசுவாள். ஆனால் அது முக்கால்வாசி தான். இளவயதில் பட்ட துயரக் கதைகளாகத்தான் இருக்கும்.

கிழவி வேகப்பட்டவ இல்லை. இந்த தாத்தா இல்லாது அயர்ந்து கிடக்குது. அந்த காலத்துல என்னா கொட்டம்?

பிள்ளைகளுக்கு, தங்கள் குழந்தைப் பருவம் முதல் இனம் பேசி பழகி வந்த மூதாட்டியின் மீது பிரியம் இருக்கும் என்பதை உணரத் தவறி விட்டாள் கற்பகம்.

இதில் பெரிய பரிதாபம் என்னவென்றால், பாட்டிக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளாக அத்தனை நினைவு துல்லியம் இல்லை.

எல்லோரையும் பொத்தாம் பொதுவாகப் பார்த்து, 'இன்னைக்கு என்ன விசேஷம்?' என்று சிரிப்பாள். தன் கட்டிலில் வந்து உட்கார்பவர்களின் முதுகை வாஞ்சையோடு நீவி பேசிக் கொண்டிருப்பாள். அவளது பழங்கதைகள் சுவாரஸ்யமாக ஆரம்பித்து, பிறகு நினைவுக் கோட்டில் தடுமாறி எங்கோ இழுத்து நிற்கும்.

இந்தப் பாட்டியை, அம்மா சதா குறைகூறுவது அத்தனை

சுவாரஸ்யப்படவில்லை.

''அது அப்போ... இப்ப உங்க பாட்டி என்ன செய்றாங்க?'' என மகன் கேட்க கற்பகம் நொறுங்கிப் போவாள்...

''நீயும் அங்க சேர்ந்திட்டயா? சேர்ந்து ஆடு. தாலி கட்டுனவர் அதைத்தான் செஞ்சாரு. பாசமா இருக்க வேண்டிய நீயும் கிழத்துக்கு ஏண்டுகிட்டு பேசற...?''

''ஆறுன கஞ்சி பழங்கஞ்சினாப்பல விட்டெறியிறம்மா. அதைத்தான் அண்ணா சொல்றான். உன்னை விட்டுக் கொடுப்போமா?''

''சின்ன வயசுல பட்டதெல்லாம் மறக்கலேடி. கிழவி எனக்கு எடுத்துக் கொடுப்பாப்பாரு சேலை. சாணி கலர், பாக்கு, அழுக்கு இப்படிக் கலருங்க. அதுதான் என் நிறத்துக்கு பாந்தம்னு நக்கல் வேறு. இவ பிள்ளையென்ன தகதகன்னு சூரியக் கலரா? நா போதாது?''

''ஒருவேளை அப்படி 'டல்' கலர்தான் பாட்டிக்கு பிடிக்கும் போலிருக்கு...''

''போடீ... இளைய மருமகளுக்கு மாம்பழம், வத்தல், ஊதா, கிளிப்பச்சைன்னு விதவிதமா வரும்.''

''சித்தி ஆனாலும் நல்ல நிறமில்லையாம்மா?''

பிள்ளைகளிடமும் தன் சுய பச்சாதாபம் எடுபடாது போக கற்பகம் எடுத்ததற்கெல்லாம் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தாள்.

'உன் பிள்ளையை நீ அடக்கியாண்டதுக்கு மேலாய் நான் நசுக்கி வைத்திருக்கிறேன் பார்' என்ற தாய் குருசாமியை ஏறி மிதித்தாள்.

இதனால் யாருக்கும் சந்தோஷமில்லை என்பது அவளுக்கு உறைக்கவில்லை.

எதும் புரியாத மாமியார் பாவமாய் -

''நீ சாப்பிட்டியா கப்பு?'' என்பாள்.

பழையதை மறக்க, மன்னிக்க முடியாத வெறியில் பாம்பை அடிப்பதாய் எண்ணி சுற்றிலும் விலாசி தானே காயப்பட்டுப் போனாள் கற்பகம். நாட்கணக்கில் தலை வாராமல், குளிக்காமல் தனக்குள் முனங்கியபடி மல்லாந்து கிடப்பாள். ''அம்மா சாப்பிடும்மா'' என்று மகள் அழுதபடி ஊட்டி விட்டாள்.





''நாறுதடி சீ... உங்க பாட்டி சமைச்சாளாக்கும்?'' என்று இறுக வாய் மூடி கவிழ்ந்து கொண்டாள்.

மனநோய் மருத்துவரிடம் அடிக்கடி கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது.

''பெரிய பிராப்ளம் ஒன்னுமில்லை. கொஞ்சம் இதமா இருங்க. ஆண்ட்டி டெப் கொடுத்திருக்கேன். மருந்து மாத்திரையைவிட அனுசரணை முக்கியம்'' புன்னகைத்தார் மருத்துவர்.

குருசாமி தாயார் தான், பழம் தவறுகளை மனதில் துழாவித் தேடி, தடவி ஏறக்குறைய புரிந்து கொண்டவர், அவற்றை ஒதுக்கி புதுவாழ்வு ஆரம்பிக்க தயார்தான்.

ஆனால், பழங்குட்டையைக் குழப்பி, அதன் கலங்கலைத் தன் மீதே வாரியிறைத்துக் கொண்ட கற்பகத்திற்குத் தான் கோலோச்சும் நேரம் வந்து விட்டதை அறிய முடியவில்லை.

கணவரின் இதம், அன்பு, ஆர்வம் எதும் புரியாத அளவிற்கு அவள் கலங்கலாகிப் போனாள்.

★★★

# கல்யாணமாங் கல்யாணம்

''ரசம்னா அம்மா கையாலதான் வைக்கணும்'' தொடர்ந்து குமார் குரலைத் தணித்து ''யம்மா நீங்க பாத்திருக்கும் பொண்ணுக்கு நல்லா சமைக்கத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''ஏன் டா, உனக்கு எப்படியாவது அவளப் பத்திப் பேச்செடுக்கணுமே அப்படித்தானே?'' என்று அம்மா நகைத்தார்கள்.

''நீங்கதான் நாப்பது நாள் லெந்து காலம் முடியற மட்டும் பொண்ணைப் பார்க்கக் கூடாதுன்னிட்டீங்க. விபரமாவது சொல்லலாம்ல?'' மகன் சலித்துக் கொண்டான்.

''எத்தனை தடவைடா சொல்றது? பொண்ணு நல்ல அழகு. சிலோன்ல இருந்ததாலே இங்கிலீஷெல்லாம் சரளம். அது நடையுடை, மரியாதையான போக்கு - எல்லாம் பாக்க நிறைவா இருந்ததாலே அவ சித்தி கிட்ட விசாரிக்கப் போக, ஏறக்குறைய கல்யாணம் கிட்ட வந்த மாதிரி ஆயாச்சு. இன்னும் ஈஸ்டரு பண்டிகைக்கு மூணே வாரந்தாங்க. அன்னைக்கு நீ பொண்ணை கோயில்ல பாத்துடு. பிடிச்சா முடிச்சுரலாம்'' அம்மா கடகடவென்று இருபதாம் தடவையாகச் சொல்லி முடித்தார்கள்.

''எல்லாத்துலயும் கணக்கு பாக்குற அப்பா எப்படி அழகு, குணம் போதும்னு விட்டாங்க? நகை, பணம், கட்டிலு... ... ...'' விரல்களைச் சுண்டி கண்களை விஷமமாய்ச் சிமிட்டினான் மகன்.

''அதான் நீ முன்னமே சொல்லிட்டியேடா. அதெல்லாம் கூடாதுன்னுட்டு அப்பாவுக்கு வருத்தந்தான். இனி சின்னவனுக்கு பாக்குற பொண்ணும் கைய வீசிக்கிட்டுத்தான்





வரும்னு. பொண்ணைப் பாக்காதயே பய இந்த ஆட்டம் ஆடுதாங். பாத்தாச்சுன்னா, என்ன பண்ணுவானோன்னாங்க.''

''ஹூம் - பொண்ணைப்பாத்து ஆடுதான்னு ப்ளேட்டை மாத்திடுவீங்கன்னு தான் நா முன்னமே இது பத்திக் கறாரா சொல்லிட்டேன். வரதட்சணை தப்பும்மா'' என்றான், குமார் கை கழுவியபடி.

''அடபோடா, பெரிய மனுஷன் பேசுதான்'' அம்மா முணுமுணுத்தபடி மேஜையை ஒதுங்க வைத்தார்கள்.

''பழம் இருக்காம்மா?''

''இல்லடா, பொடி நடையா பஸ்ஸ்டாப் வரை போயி ஒரு டஜன் வாங்கிட்டு வந்திர்ரியா?''

அவனுக்கும் காலார நடந்தால் நன்றாயிருக்கும் போலத் தோன்ற சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான். வெளியே காற்று இதமான குளிரில் வீசியது. அங்குமிங்குமாக விரையும் பேருந்துகளைப் பார்த்தபடி நடந்தவன், ஐந்து நிமிட சொகுசான நடையில் கடையை அடைந்தான். கடையில் கூட்டமில்லை. 'அண்ணாச்சி பத்து நிமிஷமாவது இருத்திப்புடுவாரு' என நினைத்தபடி -

''என்ன அண்ணாச்சி பச்ச பழம் நல்லதா ஒரு டஜன் வைங்க'' என்றான்.

''அடடே, தம்பி வாங்க'' உற்சாகமாகச் சிரித்தவர், ''பச்ச பழம் பழுக்கலியே - ரஸ்தாளி கனிஞ்சிருக்கு தரவா?'' கேட்டார்.

''ம்''

''அப்படியே ஆறு ப்ளம் கேக் வைக்கட்டுமா?''

''என்ன, புதுசா கேக் வியாபாரமெல்லாம்?''

''தெரிஞ்சவுக போட்டுக் குடுக்கறது. ஒரு ஒத்தாசைக்கு வித்துக் குடுக்குறதுதான். பாவம் சிலோன்ல இருந்து வந்தவுக தம்பி. அவுக மூத்த பொண்ணுக்கு கல்யாணம் தகஞ்சிருக்கு. நல்லா வாழ்ந்தவுங்க. நகை நட்டு இருந்ததைக் கொண்டு சமாளிச்சுக்குவாங்கன்னு வச்சுக்கங்க. கல்யாணச் செலவு போக, ரொக்கமா பத்தாயிரம் கேட்டிருக்காங்க புள்ள வீட்டுல.''

''அதவிடமாட்டாங்களேநம்மூர்ல?''கசப்பாய்சிரித்தான்குமார்.

''கொஞ்சம் நகைய விக்கலாம்னா இன்னுமொரு பொண்ணு இருக்கு அவுகளுக்கு. அதாங் தங்கச்சி இப்படி கேக்கெல்லாம் போட்டு கொண்டு வாரது.'' அவர் கை காட்டிய திசையில் யதார்த்தமாய் திரும்ப, இருளில் ஒரு இளம்பெண் நிற்பது தெரிந்தது. மெல்லிய உடல்வாகு. அரைத் தாவணியில் அழகாக இருந்தது. அவள் எங்கோ பார்ப்பது போன்ற பாவனையில் நின்றாள். சின்ன மோவாயில் தெரிந்த உறுதியும், அலட்சியமும் குமாருக்குப் பிடித்திருந்தது.

''ம், ஒரு டஜன் கேக் வைங்க'' - பையில் காசிருந்தது.

''இன்னிக்கு டாக்டர் வீட்டுப் பாப்பாவுக்கு பெர்த்-டே. சாக்லேட் கேக் ஆர்டர் வாங்கிக் கொடுத்தேன். அதாங் காசு வாங்கிப் போக நிக்குது பாப்பா''.

''இந்த நேரத்துல தனியா வந்திருக்காங்க?'' அவளையும் பார்க்காமல் அண்ணாச்சியிடமும் என்றில்லாமல், பொதுவாகச் சொன்னான் குமார். அவள் உடல் லேசாக விறைத்துக் கொண்டாற் போல தெரிந்தது. 'அசட்டுக் கேள்வி' என்பது அதன் அர்த்தமோ?

''இந்தா... பஸ்ல ஏறுனா, பத்து நிமிஷம்... வீடு அருகாமைதான். நீங்களும் கேக் விஷயமா தெரிஞ்சவுங்களண்ட சொல்லி வைங்க தம்பி. துணியில் எம்பிராய்டரி வேல எல்லாம் கூட செய்வாங்க. அம்மாகிட்டயும் சொல்லி வைங்க. உபகாரமாயிருக்கும்.'' என்றார், அண்ணாச்சி. அவரும் சிலோனிலிருந்து வந்தவர்தான்.

''சரி வரட்டுமா'' சில்லறையுடன் பார்சலை வாங்கியவன் கிளம்பினான்.

வீடு திரும்பும்போது, அவன் காற்றையோ, விரையும் பேருந்துகளையோ ரசிக்கவில்லை. இருட்டிலிருந்து அந்தச் சிறுபெண் அவனையே நோக்கி முறைப்பது போலவும், அவள் விழிகள் அவன் முதுகை ஊடுருவி துளைப்பதும் போலவும் தோன்ற அவன் எட்டி நடந்தான்.

மனதுள் ஏதோ பிராண்டியது.

வீட்டினுள் நுழைந்ததுமே நேரே அம்மாவிடம் போய் கேட்டான். ''ஏம்மா, நீங்க பணம் ஏதும் அவுங்க வீட்ல கேக்கலை தானே?''





''போடா - ஒன்னோட இதே தொல்லை. இன்னும் பொண்ணைப் பாக்கல. ஒண்ணும் நிச்சயம் பண்ணல... கிடந்து குதிக்கிறான்.''

''இல்லைன்னா இல்லைன்னு சொல்லுங்களேன்'' குமார் அடிக்குரலில் உறுமினான்.

''என்னம்மா, அண்ணா உங்ககிட்ட எப்பப் பார்த்தாலும் குசுகுசுன்னு பேசுறாங்க?'' தங்கை சுவாரஸ்யத்துடன் மூக்கை நீட்ட - பேச்சு திசை மாறியது.

அரைமணி கழித்து அவன் அம்மா படுக்கை விரிக்கையில் மறுபடி கிசுகிசுத்தான்.

''பொண்ணு பேரு என்னம்மா?''

''அப்பா சொல்ல வேண்டானுட்டாங்கன்னு சொன்னேனே.''

''எனக்குத் தெரியணும்.''

''என்ன விசாரணையா? அதுக்கெல்லாம் அவசியமில்லை. நல்ல பொண்ணு தான்.''

''விசாரணை உங்களைப்பத்திதான். எங்கே ரொக்கம் கேட்டிருவீங்களோன்னு பயமாயிருக்கு.''

அம்மாவின் நிஜ முறைப்பில் அடங்கி விட்டான். நாட்கள் போகப்போக குமாருக்கு பயங்கள், கவலைகள் குறைந்து உற்சாகம் பெருகிக் கொண்டிருந்தது. அண்ணாச்சி கடைக்குப் போக நேரும் போதெல்லாம் ப்ளம் கேக் வாங்கிக் கொண்டான். ருசி பிரமாதமாயிருக்க, ஆபீஸ் பிரிவுபசார விழாவிற்கு நூறு கேக் ஆர்டர் பண்ணி வாங்கிக் கொடுத்தான். ஆனால் அப்பெண்ணை அவன் பிறகு பார்க்கவே நேரவில்லை. ஆனாலும் அவ்விள முகம் அவன் மனதில் பதிந்து போனது.

என்றைக்குமில்லாமல் ஈஸ்டர் பண்டிகைக்கு தனக்கு நல்லதாக இரண்டு செட் துணி எடுத்துக் கொண்டவன், தம்பி, தங்கைக்கும் துணி வாங்கித் தர,

''அப்பா வாங்குறத விட மாடர்னா, நல்லாயிருக்குண்ணா'' என உற்சாகமாய்ப் பெற்றுக் கொண்டார்கள்.

ஈஸ்டர் ஞாயிறன்று அதிகாலையில் கோவிலுள் நுழைகையில் படபடப்பாய் உணர்ந்தான் குமார். மல்லிகைச் சரங்களும் லில்லி ரோஜாக்களுமாக கோயில் பார்க்க ரம்மியமாக இருந்தது.

இதமான மணம் எங்கும் பரவியிருந்தது. தனக்காகவே, தான் தன் வருங்கால துணைவியை முதன் முதலாகப் பார்க்கப் போவது குறித்தே அத்தனை அலங்காரமும் செய்யப்பட்டது போல தோன்றியது. புதுத்துணி அணிந்த உற்சாகமும் சேர, மின்விசிறியின் அடியில் வாகான இடமாய்ப் பார்த்து அமர்ந்தான். லோஷனும் பவுடருமாய் பூசியது வியர்வையில் கலையக் கூடாதே! கோயிலில் இரண்டாம் மணி அடிக்கையில் தங்கை ரூபி மெல்ல அருகில் வந்து,

''இப்ப உள்ளே நுழையறாங்களே, அவங்களைப் பாத்துக்குவிங்களாம். அந்த மஞ்சச் சேலை கட்டுன அக்கான்னு அம்மா சொல்லச் சொன்னாங்க'' என்றபடி அம்மாவிடம் நழுவினாள்.

அவன் நிதானமாக இருப்பது போலக் காட்டிக் கொண்டாலும் மனம் எகிறியது. மூச்சு விடுவது சிரமமாய்த் தெரிந்தது. முடிந்த வரை அருகிலிருந்த அப்பாவும், தம்பியும் அறியாவண்ணம் ஓரக்கண்ணால், நுழைந்தவர்களை நோட்டமிட்டான் குமார். 'பளிர்' மஞ்சள் சேலை வாகாய் கண்ணில் சிக்கியதும் கைக்குட்டையால் முகத்தைத் துடைப்பது போன்ற பாவனையில் சற்றுத் துணிவாய் அவள் முகத்தைப் பார்த்தான். பக்கவாட்டில் தெரிந்த முகம் அழகாகவே இருந்தது. ஒரு கனிவான புன்னகை உதடுகளில் இருக்க, அந்த அமைதியான முகம் அவனைப் பரவசப்படுத்தியது. திருப்தியுடன் அருகிலிருந்த தம்பியைப் பார்த்து புன்னகைத்தான். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் அப்பாவைப் பார்த்து புன்னகைக்கும் வகையில் அவர்கள் வளர்க்கப்படாததால் தலையைக் குனிந்து கொண்டான்.

பாடலின்போது அனைவரும் எழுந்து நிற்க, குமாரின் பார்வை மறுபடி பெண்கள் பக்கம் தாவி, துணுக்குற்றது. மஞ்சள் நிற சேலையின் அருகே நீலநிற தாவணியில் கிசுகிசுத்து சிரித்தபடி நின்றது... அந்த கேக் விற்கும் பெண்! ஒருமுறைதான் பார்த்திருந்தானானாலும், அந்த அழகிய முகமும், கண்களும் எளிதில் மறக்கக் கூடியவை அல்லவே! தலையில் யாரோ அடிப்பது போலிருந்தது! இப்போது அவன் படபடப்பு வேறுவிதமாக மாற, வியர்க்க ஆரம்பித்தான். 'அப்போ, இவங்ககிட்ட பத்தாயிரம் கேட்டது நாமதானா?' அவன்





அவஸ்தைப் பட்டான். பிறகு அவன் அக்கம் பக்கம் திரும்பவில்லை.

**வீ**ட்டினுள் நுழைந்ததுமே அம்மா கேட்டார்கள், ''ஏன்டா சீக்கிரமே வீட்டுக்கு வந்திட்ட? கோயில்ல ஆராதனை முடிஞ்சதும் நாங்க பெண் வீட்டாரோட பேசிக்கிட்டிருந்தோம். அவங்க வீட்டிலயும் உன்னைப் பாக்க ஆசைப்பட்டாங்க.''

இத்தனை நாட்களாய் தரையில் கால் பாவாமல் திரிந்த மகன் இறுகிப் போய் நின்றது உறுத்தியது.

''ஏன்டா மூஞ்சி சுண்டியிருக்கு? பொண்ணைப் பிடிக்கலையா?''

தங்கைக்கு அன்றுதான் விஷயமே தெரிய வந்திருந்ததில் அவளுக்குத் தலைகால் புரியவில்லை. ''ரொம்ப ஸ்வீட் அந்தக்கா... அதெப்படி அண்ணாவுக்கு பிடிக்காமலிருக்கும்?'' என்று கூவினாள்.

''பிடிக்கலை.'' குமார் அழுத்தமாகச் சொன்னான்.

''அண்ணா, ஒனக்கு இதுக்குமேல எங்கயும் கிடைக்காது.'' - தம்பி நையாண்டியாய்ச் சொன்னான். அவனுக்கும் பெண்ணைப் பிடித்திருந்தது போலும்!

''நா சொன்னது பொண்ணையில்ல. நாம பத்தாயிரம் அவங்ககிட்ட கேட்டது பிடிக்கலைன்னேன்.''

அதுவரை அனைத்தும் கேட்டவாறு உள்ளிருந்த அப்பா வெளியே வந்தார். அவர் வியாபாரி. பேச்சு அளவாகத்தான் இருக்கும். எந்தப் பிரச்னையிலும் முக்கிய கட்டங்களில் மட்டுமே பிரத்தியட்சமாவார்!

''இப்ப என்னல சொல்ற?'' அழுக்கமாய்க் கேட்டார்.

''நா இவ்வளவு சொன்ன பிறகும் நீங்க காசு கேட்டிருக்கறது தப்புப்பா''

''ஒனக்கு யாருல சொன்னா?''

''தெரிய வராமயா போயிரும்?''

''அவுக வீட்ல அதுக்குள்ளாற வத்தி வைக்கிற வேலையெல்லாம் ஆரம்பிச்சாச்சா?''

குற்றம் செய்தவர் பிறரை குற்றவாளியாக்க முயன்றார்.

''நா கேக் வாங்கி வருவேனே, அது அந்தப் பொண்ணோட தங்கச்சிதான். அண்ணாச்சி கடையில வித்திட்டிருந்தது. அவருதான் விவரமெல்லாம் சொன்னாரு.''

''யாரு அந்த சிலோன் பயலா?''

''ம்... அவருக்கு இதொண்ணுந் தெரியாது. இன்னிக்கு கோயில்ல அந்தப் பொண்ணைப் பார்க்கவும் விஷயம் புரிஞ்சுது. ஏம்மா அந்த நீலத் தாவணி தங்கைதானே?''

அப்பா ஒரு நிமிஷம் மௌனமானார். எல்லோருக்கும் மூச்சு விடுவதற்குக்கூட யோசனையாயிருந்தது.

''சரி - வாங்குனேன். செலவெல்லாமிருக்குல்ல. நமக்கு, அத்தைமாருக்கு புடவையெல்லாம் எடுக்கணுமில்ல?''

''சரி- அவுங்க வீட்டாருக்கு துணிமணியெல்லாம்? நம்ப செலவா?'' அதே தொனியில் கேட்டான் குமார்.

''இந்த நக்கலெல்லாம் வேணாம்ல'' அப்பாவின் காதுகள் சிவந்தன.

''பின்ன? கல்யாணச் செலவு, விருந்தெல்லாம் பொண்ணு வீட்டச் சேந்ததுன்னீங்க. நமக்கு ட்ரெஸ் கூட நாம எடுத்துக்கக் கூடாதாப்பா? 15 பவுன் நகை போடறதாப் பேச்சு. நாம ஒரு மூணு பவுன்லே தாலி செஞ்சு போடக்கூடாது? நமக்கும் நிறைவா இருக்கும். அவுங்களுக்கும் திருப்தியாப் போவுமில்ல?''

''பய புரட்சி பேசுதாங்''

''நியாயம் தாம் பேசுறேன். புரட்சியா தெரியுதாக்கும்? நானும் என் உறவுக்காரங்களும் பொண்ணு வீட்டுக் காசுல ட்ரெஸ் தச்சு போட்டுக்கிட்டு, அவுங்க செஞ்ச தாலிய வாங்கிக் கட்றது... ப்ளீஸ்... அசிங்கமாயிருக்குப்பா.''

''நாளைக்கு ஒந் தங்கச்சிய எவண்டா வந்து தாலியும், புடவையும் குடுத்து கட்டிக்கப் போறான்? நகை, கட்டிலு, பீரோ, ரொக்கம் எல்லாஞ் சேந்து செலவு எழுபதுக்கும் மேல எகிறும். ஏன்? ஒரு பெரிய நோட்டை எட்டிரும். ஏதோ பயலுவ கல்யாணத்தையாகிலும் செலவில்லாம செய்யலாம்னு பாத்தா...'' அப்பாவுக்கு கோபத்தில் - வழக்கத்துக்கு மாறாக





நீளமாக பேசியதில் மூச்சிரைத்தது.

தன் செயல்களின் நியாயங்களை எடுத்துரைக்க வேண்டிய சூழ்நிலை இதுவரை அவருக்கு நேரவில்லை. இன்று 'பொடிப் பய' கேள்வி கேட்கத் தான் பதிலளிக்க நேர்ந்தது அவருக்கு எரிச்சலாயிருந்தது.

''உக்காருங்கப்பா.''

''தண்ணி கொண்டாம்மா'' - மகளிடம் கேட்டார்.

தண்ணீர் அருந்தி அமர்ந்தவரிடம் மகன் தொடர்ந்தான். ''தங்கச்சி கல்யாணத்துக்கு இன்னும் ஏழு எட்டு வருசம் இருக்குப்பா.''

''நிலமை மாறுதுல்ல.''

''இப்ப அதத்தான் மாத்தலாம்ணு சொல்றேன். நாம இன்னிக்கு அனுசரணையா நடந்தா நாளைக்கு...''

''ஒன்னை மாதிரி ஒரு இளிச்சவாயன் ஒந்தங்கச்சிக்கும் கிடைப்பான்ற? ஒலகத்தப்பத்தி ஒனக்குத் தெரிஞ்சது அவ்வளவு தான்ல''

''அப்பா, நம்ப வீட்டை ஒட்டின சந்துல, நான் ராத்திரி இரண்டாம் ஆட்டம் முடிஞ்சு நுழைஞ்சா இருட்டு ஆளை அமுக்கும். அடுத்த அடி எடுத்து வைக்கத் தோணாது. நடக்க, நடக்க காலு வைக்கற இடம் வாகாத் தெரியும்பா. ஏதோ போதுமான வெளிச்சம் கிடைச்சிடும். இன்னிக்கு என்னை மாதிரி ரண்டு பேருன்னா, இன்னும் எட்டு வருஷம் போனா பத்து பேருப்பா. இப்படி இவங்களை நோகடிச்சி, நாம வாங்கி செலவழிக்கத்தான் கல்யாணம்னா எனக்கு அது வேணாம்பா. அவுங்க வீட்டாரை இத்தனை வேதனைப்படுத்திட்டு அவளோட வாழற தைரியம் எனக்குக் கிடையாது.''

தந்தைக்கும் அது எங்கோ குத்தியது. அவரது முப்பது வருட தாம்பத்தியத்தில் முக்கால்வாசி சண்டைகள், அவர் மனைவி அவர் எதிர்பார்த்ததைக் கொண்டு வராததாலும் அதனால் அவர் அவள் வீட்டாரைக் கசக்கிப் பிழிந்து சீர் பிடுங்கியதாலும்தான்.

மனைவி, மூன்று பிள்ளைகள் பெற்று, குடும்பத்தில் காலூன்றிய பின் ஆசைதீர அவர் வீட்டாரை மென்று துப்பினாள்.

''இரட்ட வடச் செயினு வேணும்னு என்னா நிலையா நின்னாங்க ஒங்கக்கா? எங்க அம்மா கண்ணீரு விட - சிரிச்சாக. வயிறு எரிஞ்சது மறக்குமா? அதாங் அவுக பெத்தது ரண்டும் ஒண்ணுக்காவாம போயிருச்சு.''

''எங் கலியாணப் புடவையப் பாத்துட்டு ஒங்கம்மா 'இம்புட்டோண்டு சரிகை'ன்னு உதட்ட பிதுக்குனது இன்னிக்கும் நினைப்பிருக்கு. இத்தனை வருசத்துல எனக்கு ஒரு நாலு புடவ வாங்கிக் குடுத்திருப்பாங்களா? பாயும் நோயுமா விழுந்து உருண்டு போய் சேந்தாச்சு... போ'' கொக்கரித்தாள்.

''ஒங்கப்பா, 'எம்மூத்த மருமக அம்பது பவுன் நகையோட வந்தவ'ன்னு இளயவ என்னை மட்டந்தட்டுவாரே.அக்கா, அவர 'மாமா'ன்னு கூப்பிட்டு நாஒருதடவ கேட்டதில்ல. கண்ணு போயி துழாவி திரிஞ்சப்ப, நானில்லாட்டி கிழவரு நாயிபட்ட பாடுதான் பட்டிருப்பாரு''

சமயம் பார்த்து வார்த்தைக் கத்திகளைச் செருகி, தான் 30 வருடங்களுக்கு முன் பட்ட காயங்களை ஆற்றிக் கொள்வாள். ஒருவேளை நான்கு பையன்களுக்கும் பிடுங்கி பிடுங்கித் தான் பெற்றோரும் நிம்மதியில்லாது போய் சேர்ந்தார்களோ? அவருக்கு பயமாய் இருந்தது. அவர் பேரக்குழந்தைகள் அமோகமாய் வரணும். மருமகள்கள் வாய் நிறைய 'மாமா' என்று தன்னை அழைக்க வேணும். அன்பும், சிரிப்புமாய் குடும்பம் ஒன்றாய்... சந்தோஷமாய்...

தம்பி மெல்ல பேசினான்.

''அண்ணஞ் சொல்றது சரிதாம்பா. அவுங்க கேக் வித்து, துணி தச்சு சேத்த பணத்தை நாம செலவழிச்சிட்டு, பிறகு அவுங்க முகத்தில முழிக்கிறது கஷ்டம். அண்ணி இதே வீட்டுல இருக்க, தினம் அவுங்கள பார்க்க கூசிடும்ப்பா.''

தனக்கில்லாத கூச்சம் பையன்களுக்கு இருப்பது அவருக்குப் பெருமையாய் இருந்தது. திருமண சமயத்தில் விதைத்த சீர் எனும் விதை காலமெல்லாம் விஷவிருட்சமாய் பரவிப் படர்ந்து, உறவுகள் உறுத்தலாகிப் போகலாம். விதை முக்கியம் என்பது அவருக்குப் புரிந்தது.

முகம், இளக...





''அண்ணியாங்... பயலுவ ஒரேடியாக் குதிக்காங்கடி. நீ என்ன சொல்ற?'' புன்னகையோடு மனைவியைப் பார்த்தார்.

ஆச்சரியமாய் நிமிர்ந்த அம்மாவின் முகத்தை மெல்ல மகிழ்ச்சி நிறைத்தது.

''ஏங், ஒங்க வாயால சொல்லக் கூடாதாக்குங்? இப்படி பந்தா வேணும்போது என் ஞாபகம் வந்திடும்.''

குமாரின் பக்கமாய்த் திரும்பியவள்,

''சரிப்பா, காசு எதும் எதிர்பார்க்காம இதே பொண்ண - பேருக்ருபா - முடிச்சுடலாம்.''

கணவனை, 'சரியா' என்பது போல பார்த்தார்கள் அம்மா.

''நா காசு கொஞ்சம் சேத்து வச்சிருக்கேம்பா... மூணு பவுன்லே தாலிக் கொடி...'' தயக்கமாய் இழுத்தான் குமார்.

''அண்ணிக்கு ஸ்கூல்ல பார்ட்-டைம் வேல கெடைச்சிருக்காம். அவுக அம்மா சொன்னாங்க. வீட்டுத் துணி தைப்பாங்க. தெரிஞ்சவுங்க வீடுகளுக்கு கேக், பலகாரம் போட்டுக் குடுக்கலாம். மாசத்துக்கு ஆயிரத்துக்கு மேல வரும்பா'' - தம்பி துடியாய் நின்றான். அண்ணனும், தம்பியும் ஒருவரையொருவர் சிநேகமாய் கண்களால் தொட்டுப் புன்னகைத்தார்கள்.

''பணங்காசு ஓரளவுக்குப் பாத்தாச்சு. நாசூக்கு, நாகரீகம் தெரிஞ்ச பொண்ணு வேணும்னு யோசிச்சதே நீங்கதானே'' என்று அம்மாவும் சேர்ந்து கொண்டார்கள்.

''செய்யுப்பா, நீயும் ஆரம்பத்துல இருந்து அதைத்தாங் சொல்லிட்டு திரிஞ்ச. நிறைவாச் செய்யி. சந்தோஷமா வாழ்ந்தாச் சரி.''

அவர் குரலில் நெகிழ்வும் முகத்தில் பெருமையும் தெரிந்தன.

★★★

# கடைசி குளிர்

அவள் வாழ்வின் திருப்பங்களில் குளிர், குறி சொல்லியிருக்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு தோழியாக நெருங்கி, வருடிச் சேதி கொண்டு தந்திருக்கிறது!

எப்போதும் இனிய சேதிகளே...

''ஐ.சி.யூ. வரீங்களாம்மா? அப்பாவைப் பார்த்துட்டு வரலாம்?'' - மகனின் குரலில் வழக்கத்தைவிட அதிகப் பரிவு.

''உள்ளே விடமாட்டாங்களேப்பா...''

''இல்லை. இப்போ பர்மிஷன் தந்திருக்காங்க...'' வழக்கமான வளைவின்றி அவள் உதடுகள் கோடாக இறுகியிருந்தன.

கணவரைப் பார்த்து நான்கு நாட்களாகி விட்டன. ஒரு முறை பார்த்தால்... அவர் பாதங்களையேனும் நீவினால்... ஆவலுடன் எழுந்தாள்.

அவருக்குப் பத்து மணி நேரமெடுத்து இதய வால்வுகளைப் பழுது பார்த்திருந்தார்கள். சிகிச்சை முடிந்த கையோடு, 'இட்ஸ் பீன் சக்ஸஸ்ஃபுல்' என்றனர் டாக்டர்கள்.

அந்த மாதத்தில் அன்றிரவு நிம்மதியாக உறங்கினாள். மறுநாளே 'இன்ட்டர்னல் ப்ளீடிங் - நிறைய ரத்தம் தேவை' என்று ரத்த வங்கிகளுக்கு அலைமோதினார்கள்.

'இனி பயமில்லை...'

'கிட்னி சரியாக வேலை செய்யலைம்மா.'

'எங்களால முடிஞ்சளவு முயற்சி பண்றோம்.'

'இப்போ நம்பிக்கையிருக்கு...'





'எல்லாருக்கும் மேலே கடவுள் இருக்கறார்மா.'

'ஹார்ட்டும் ஃபெயிலாகுது.'

மருத்துவர்கள் மாறிமாறிப் பேசினாலும், அவள் மனம் ஆடாமல் கிடந்தது. 'அவருக்கு ஒன்னுமில்லை' என்று குடும்பத்தை நின்று தேற்றினாள். குறி வரக் காத்திருந்தாள். உடலும் மனதும் தீவிரமாகக் கவனித்திருந்தன.

''போலாமாம்மா?''

''இதோ...'' - எழுந்து மகனுடன் நடந்தாள். படிகளும் நீண்ட தாழ்வாரங்களும் முன்னே விரிந்தன. கஞ்சி தோய்த்த வெங்கடகிரி புடவையின் கத்திக் கொசுவ மடிப்புகள் விசிறுவதைப் பார்த்தபடி நடந்தாள்.

அடிக்கடி செய்வதுபோல மனம் பின்னடைந்து பதிந்துபோன தடங்களைப் பார்த்து நின்றது.

அவள் தாத்தா அந்தக் கால B.A. அவர் உடை, பேச்சு, வீடு கூட வெள்ளைக்காரப் பாணியில் இருக்கும். வீட்டிலிருந்து தோட்டத்துக்குப் போக தேன் நிறத்தில் ஃப்ரெஞ்ச் விண்டோஸ் உண்டு.

ஜன்னலுக்கும் கதவுக்கும் பிறந்த கலப்புக் குழந்தை அது. மூன்று படிகளேறி அவற்றைத் திறந்து வெளியே நடக்கலாம். இரவு, கதவைத் தாழிட்ட பிறகு காற்று தேவையானால், முதுகுத் தண்டு போன்ற அதன் மையத்தை இழுக்க, கதவின் மேற்பாதி ஷட்டர் அடுக்கடுக்காக விரியும்.

குழந்தையாக இருந்தவளுக்கு, அதைத் திறந்து மூடி, மாலைக் காற்றோடு கண்ணாமூச்சி ஆடுவதில் அலாதி இன்பம். அப்போது தான் காற்றின் சிநேகம்... ஆரம்பம்!

தாத்தா வீட்டு 'கோர்ட் - யார்டும்' விசேஷம்தான். வீட்டின் மையத்தில், மேலே இரும்புக் கம்பிகள் அடைத்த திறப்பு அது. மழை நீர் வீட்டினுள் இழையாமல் தேங்கி வடியுமளவில் ஓரடி ஆழ சதுரப் பள்ளம், அதன் கீழே உண்டு. வாய்க்கால் துவாரத்தை 'கிக்'கென அடைத்து விட்டால், நல்ல மழைக்குப் பள்ளம் நிரம்பிவிடும். வானம் ஓய்ந்த பிறகு கம்பிகளிலிருந்து சொட்டும் நீரோடு பிள்ளைகளும் தத்தி, அளைந்து ஆடலாம்.

நிலா பொழியும் பிற இரவுகளில் அங்குதான் இரவுச் சாப்பாடு. பாய் விரித்துப் படுத்தால், கம்பிகளுக்குப் பின்னே சிறைப்பட்ட நட்சத்திரங்களை விழி செருகும்வரை பார்க்கலாம்.

தாத்தா இறந்த பத்தாம் நாள் மொத்தக் குடும்பமும் அந்த வீட்டில் கூடியிருந்தது. மறுநாள் ஊருக்குக் கிளம்ப மூட்டை கட்டிமுடித்து, இரவு படுத்த வேளை... மழை ஆரம்பித்தது. வழக்கத்தை மீறிய குளிர் ஒன்று பரவியதாக உணர்ந்தாள். நட்சத்திரங்களே உடைந்து சிதறியதைப் போல 'சடசட'வென்று பனிக்கட்டிகள் வீட்டினுள் விழுந்தன.

'ஹையா...! ஐஸ் மழை!'

'சில்லீருங்குது' - பிஞ்சு உள்ளங்கையில் அவள் ஏந்தி அழகு பார்க்கையில் குளுமை ஊடுருவி ஏதோ பேசியது - உறைந்து போனாள் ஒரு கணம்.

'போட்டிரு செண்பா, நடுங்கற பாரு...'

பின்னால் வந்து நின்ற அத்தை மகன், அவளை அணைத்துச் சொன்னான் - அவளைவிட எட்டு வயது மூத்தவன் - பெயர் ராஜா.

ஐந்து வயதிலும் அந்த ஜில்லிப்புக்கும், வெதுவெதுப்புக்கும் இடையே இன்பத்தோடு தவித்தது நினைப்பிருக்கிறது.

அடுத்த அனுபவம் பன்னிரண்டாம் வயதில். மழை பெய்து ஓய்ந்த மாலை நேரக் குளுமையில் ஒரு கனமிருந்தது. கண்ணுக்குத் தெரியாத பூஞ்சாரல்... நனைந்ததால் கறுத்த தார்ச் சாலையும், இருமருங்கும் பசுமையாக அசைந்த மரம், செடிகளும் கண்ணைக் குளிர்வித்தன.

முதுகில் வெயிலின் இதம் முன்னே... யப்பா... இன்னும் கண்விரிய அதைப் பார்த்து மலைத்தது மறக்கவில்லை - வானவில்!

வானத்தின் கோடிகளுக்கு நடுவே பளீரிட்ட வண்ணப் பாலம். கடவுளின் கையசைப்பு போன்ற வசீகரம் - சாரலில் சிலிர்த்தாள். அடிவயிறுவரை குழைந்து கனிந்தது - அன்று அவள் பெரியவளானாள்.

ஆறு வருடங்கள் கழித்து ஒரு மார்கழி காலைப் பொழுது. அப்போதுதான் கோலமிட்டிருந்தாள். கொடிப் பிச்சியைப்





பறித்துக் கொண்டிருந்தவளை பனி வந்து தொட்டுப் பேசியது.

புரிந்தும் புரியாமல் அவள் நிற்க, அத்தான் நுழைந்தார்.

ஈர முற்றத்தில் முத்து முத்தாகப் படர்ந்திருந்த கோலத்தை ரசித்துவிட்டுக் கவனமாகத் தாண்டி நுழைந்தார்.

''வாங்க ராஜாத்தான்...'' அழைத்தபோது பனி, கன்னம் தட்டியது. பின்னாலேயே அத்தையும் மாமாவும் நுழைந்தார்கள். வந்த தையில் அத்தானோடு அவளுக்குத் திருமணம். ஆனால், தேனிலவு என்று தம்பதியாக வெளியூர் போக நேர்ந்தது ஐந்தாறு மாதங்கள் கழித்துதான்.

குற்றாலம் குளுகுளுவென மயக்கியது. சாரலோடு, நுங்கு பதனீரும், செண்பக மணமும் தந்த இன்பத்தில் நனைந்தனர். பனிச்சாரல் அவளுக்கு அன்றிரவு தனியாகச் சேதி சொன்னபோது புரிந்தது.

மென்மையாகத் தன் பட்டு வயிற்றை நீவிவிட்டாள். இதோ இப்போது உடன் நடக்கும் குமரன் பத்தாம் மாதம் பிறந்து விட்டான். பிறந்தது மூன்றும் பையன்கள்தான். பெண்ணில்லாத குறை உண்டு. வரப்போகும் மருமகளின் வரவை எதிர்பார்த்தவள், குறிக்காகவும் கவனித்திருந்தாள்.

''அருமையான பொண்ணும்மா. அவ அப்பா கொடைக்கானல்ல தாசில்தாரு. அவங்க மதுரைக்கு வந்துடறாங்களாம். நீங்க வீணா மலையேறிச் சிரமப்பட வேணாம். பாதி வழிபோய், பொண்ணை சித்தி வீட்டிலேயே பார்த்துட்லாம்.''

இவள் மறுத்து விட்டாள்.

''மலையேறியே மருமகளைப் பார்த்துடறது...'' என்று சிரித்தாள்.

செண்பகனூர் வரை ஏறியதும், மலையோரம் காத்து நின்ற பனிமூட்டம் ஓடி வந்து பாதையில் கவிந்தது.

''கண்ணாடியை ஏத்தி விடுங்கம்மா - எலும்பு வரை குளிருது...''

இவள் அசையவில்லை!

'குடுக்'கென பஞ்சாக உள்ளே தாவிய அது அவளை அணைத்து முகர்ந்தது - யூகலிப்டஸ் மணம். அதுவரை மலைப்பாதையில்

வளைத்து ஏறியதால் ஏற்பட்ட தலை நோவு நொடியில் விட்டது.

கண்ணோரம் நீர் கோக்கப் புன்னகைத்தாள்-

''நல்ல பொண்ணுதான்...''

முன்னேயிருந்த பையனுக்குக் கேட்டு விட்டது போலும் - ''என்னம்மா ஜோசியமா?''

''ம்... சிநேகிதி சொன்னா...''

வீட்டுக்கு வந்த சுலோச்சனா இவள் மனதிலும் விளக்கேற்றினாள். மகனைப் போல இவள் சேலையைப் பற்றி பின்னே சுற்றினாள். இயல்பாகப் பேசி, விளையாடி, கடைகளை அலசி, பலகாரம் சுட்டு, பரிமாறி... என்று ஒரு இடம் விடாமல் ஒளியேற்றினாள்.

மூத்த பேத்தி பிறந்ததும் கொடைக்கானலில் அன்று மழையூற்றிய இரவில் மின்சார வெட்டு. மெழுகுவர்த்தியின் ஒளியில் பரிதவிப்புடன் காத்திருந்தனர். மற்றவர்கள் சால்வைக்குள் ஒடுங்க, இவள் குளிரை அனுபவித்தாள். கண்ணாடி ஜன்னல், காற்றில் 'பட்'டென விரிந்தது. ஐஸ் காற்று அவளை முட்டியபோது பேத்தியின் முதல் அழுகுரல் கேட்டது - சிலிர்த்தாள்!

அடுத்து வந்த மருமகளும் அம்சம்தான் - குடும்பம் பூரணமானது. கணவர் மடியில் சாய்ந்தபடி, ''ஒரு குறையில்லீங்க எனக்கு!'' என்று விம்மியிருக்கிறாள்.

இப்போதும் குளிர்கரம் ஒன்று உச்சந்தலையில் கவிந்த உணர்வு. ஆசியா? அல்லது விடைபெறுதலா?

ஐ.சி.யூ என்றெழுதிய கதவின் முன் நின்ற போது மனதில் சலனமில்லை.

செருப்பைக் கழற்றிவிட்டு, சிப்பந்தி தந்த 'ஸ்டெரைல் கோட்'டைச் சுற்றிக் கொண்டாள். கண்ணாடிக் கதவைத் திறந்து உள்ளே அடி வைத்தாள்.

சில்லெனக் குளிர் அவளைப் பற்றியது. ஒரு நொடி தடுமாறினாள். இந்த செயற்கை ஏ.ஸி. குளிர் வருடவில்லை... பேசவில்லை. ஏதோ ஒரு விநோதம்... விரோதம் இதிலிருந்தது.





திரும்பிப் பார்த்தாள். கண்ணாடி தடுப்புக்கு வெளியே தலை கவிழ்ந்த மகன். முன்னே... அவர் நீட்டிக் கிடந்தார். நெஞ்சில் கட்டு; மூக்கிலும் வாயிலும் குழாய்கள்; பூதாகர இயந்திரங்கள்.

''ஆபரேஷன் முடிஞ்ச மூணாம் நாள் இதயம் பலவீனப்பட்டிருச்சும்மா. வெண்டிலேட்டர்தான் இப்போ அப்பாவுக்காகச் செயல்படுது - மறுபடி அப்பா இதயம் செயல்படலைன்னா...'' வரும் வழியில் மகன் கூறியது இப்போது புரிந்தது.

உடல் தளர்ந்து நடுங்கியது. ஐந்து வயதில் 'நடுங்கறியே' என்று அணைத்துக் கொண்ட தன் துணையைப் பிரியும் நடுக்கம்...

முத்துக் கோலத்தைக் கவனமாகத் தாண்டி வந்த பாதங்களைப் பார்த்தாள் - ''நீங்க பிழைக்கணும் - இல்லை... என்னையும் கூட்டிக்கணும், என்ன ராஜாத்தான்?'' முனகினாள்.

மானிட்டர் மட்டும் கோடு கோடாக அசைந்தது.

அவர் பாதம் தொட்டாள். 'ஜில்லீர்...' - புரிந்து போனது.

குளிர் விரல் வழியே உச்சந்தலைக்குப் பாய்ந்தது - தெறித்தது.

துணியாக மடிந்து சரிந்தாள்.

வெற்று உறுமலுடன் ஏ.ஸி. குளிர் பரப்பியது. ஆனால் இனி அவர்கள் அனல் - குளிர் உணருவதில்லை!

(அவள் விகடன், டிசம்பர் 1999)

★★★

# பிணக்கு எதுவரை?

**பா**னு வேலைகளை முடித்து 'அப்பாடா' என்று படுக்கையில் விழுந்தும், நிம்மதியாயில்லை. 'இனியென்ன' என்ற ஆயாசம் தான் மிஞ்சியது. ஒரு வாரமாக அவளுக்கும் அவள் கணவனுக்கும் சண்டை!

ஒரு வாரத்தில் எரிச்சலும், கோபமும் முறுக்கவிழ்த்துக் கொள்ள இப்போ வெறுமைதான் எஞ்சியது. இன்று ஞாயிறாயிருந்தும், கணவன் வெளியே போயாயிற்று.

பிற ஞாயிறுகளில் கோழி குருமாவை வெட்டி விட்டு, தூங்கி எழுந்து, கேரம், கலாட்டா என்று இனிமையாகப் பொழுது கழியும்.

போன வாரம், செட்டியார் வீட்டு வாசலிலேயே கொண்டு வந்து, வண்ண வண்ணச் சேலைகளைப் பிரித்துப் போட்டார். அண்டை வீட்டுப் பெண்கள் ஆளுக்கொன்றை எடுக்க, இவளும் இரண்டைத் தூக்கிக் கொண்டாள். கணவனிடம் அவற்றைக் காட்ட, ''என்ன பானு, இதுக்கென்ன அவசரம்? உங்கிட்ட சேலை இல்லையா என்ன? ஜூன் மாசம் பிள்ளைங்களுக்கு யூனிபார்ம், பை, ஷூ. புஸ்தகம்ன்னு ஆயிரம் செலவு பண்ணி நா முழி பிதுங்கியிருக்கற நேரத்தில்...'' சிடுசிடுத்தார்.

அதிலுள்ளது உண்மையும்கூட. பானு வேறு விதத்தில் பாய்ந்தாள்.

''உங்க தங்கச்சிமாருக்கு அசராம எடுத்துக் கொடுப்பீங்க. எனக்குன்னா கசக்கும்.''





''வருஷத்துக்கு ஆளுக்கொரு சேலை. அதும் எங்கப்பா இறந்த பிறகு நான் அதுங்களுக்கு வாங்கித் தரேன். அதுல உனக்கென்ன?''

''அது 400 ரூபா சேலை. இது இரண்டும் சேர்ந்தே 300 தானே.''

''அவங்களுக்குக் கொடுக்கற நாநூறுக்கு, அவங்க உனக்குத் திரும்பச் செய்யறதில்லையா? சரிகைக் கரை போட்ட சுங்குடி, ஆளுக்கு இரண்டுன்னு, உனக்கு 4 சேலை கிடைச்சிடுதில்ல?''

''அழுது வடியற கலரும், கனமுமா, மாமி மாதிரி 4 சேலை.''

''நீ அதைக் கட்டறப்போதான் சேலை ரொம்ப அழகுன்னு யாராவது உன்னைப் பாராட்டறதுண்டு. காசைக் கொட்டினாப் போதாது. ரசனையும் வேணும்.''

''ஆஹா... இவங்க குடும்பத்துக்குத்தான் ரசனையும் கெட்டிக்காரத்தனமும். அல்பமா இரண்டு கைத்தறிப் புடவைக்கு இத்தனைப் பீத்தல்''

கொஞ்சம் கொஞ்சமாக வார்த்தைகள் வளர்ந்து தடிக்க கடைசியில் கத்தல், அழுகை என்று முடியும்.

சண்டையின் தீவிரத்தைப் பொறுத்து அவர்களது சமரசம் தள்ளிப் போடப்படும்.

நேற்றிரவு பிள்ளைகள் இருவரும் பேய்ச் சண்டையிட்டனர். முடியை இழுத்து, உதைத்து அவர்கள் புரள,

''சே... நல்ல குடும்பத்து பிள்ளைங்க மாதிரியா இருக்கிறீங்க? குணங்கெட்டதுங்க'' என்று பானு அவர்கள் முதுகில் சாத்தினாள்.

''ஆமா, நீங்களும் அப்பாவும் போடலையாக்கும்'' என்று தலையைச் சிலுப்பிக் கொண்டான் இளையவன்.

அவ்வார்த்தைகள் முகத்தில்அறைய, பானு அன்று வெகுநேரம் சிந்தித்தாள்.

அவள் செய்தது வீண் செலவு தான். பொருந்தாத நேரமும் தான். பிரிக்காது சேலைகளை செட்டியாரிடம் திருப்பியிருக்கலாம். 'பளீ'ரென்ற நிறமும், டிஸைனுமாக நாத்தனார் இருவரும் அவளுக்கு 4 சேலைகளை பரிசளிப்பதும் வாஸ்தவம். இதில் எரிச்சல், பதட்டம், மட்டந்தட்டுதல் எதற்கு?

அனுசரணையில்லாது சண்டையிடுவதும், அவை உப்புச்

சப்பில்லாது வாரக் கணக்கில் நீள்வதும் அவளுக்கு வெட்கமாயிருந்தது.

மேலும் படுத்திருக்க முடியாது எழுந்தவள் வாசலோரம் பூத்துக் கிடந்த கனகாம்பரத்தைப் பறித்து தொடுக்கலானாள். அந்நேரம் சிரித்து, கை கோர்த்து வந்த தன் பிள்ளைகளைப் பார்த்தவளின் புருவங்கள் உயர்ந்தன.

''என்னடா, இன்னைக்கு பிரண்ட்ஸாக்கும்?''

''பின்னே? இன்னிக்கு காலைல சர்ச்சில என்ன பிரசங்கம்?''

''என்ன?'' பானு விழித்தாள்.

''நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக் கடவது'' - மூத்தவன் ஒப்பித்தான்.

''ஓ?''

''அம்மா பிரசங்கத்தைக் கவனிக்கவேயில்லை'' சின்னவன் குற்றஞ்சாட்டினான்.

ஆம். அவள் கவனிக்கத்தானில்லை - புதுச் சேலையைக் கட்டிப் போயிருந்தவளின் மனம், தங்களது சண்டையையே எண்ணி மருகியது. பிற பெண்களின் புடவைகளை நோட்டமிட்டது. மறுவாரம் எப்படி சண்டையை வளர்க்கலாம் என்று திட்டமிட்டது.

''சண்டை போடலாம்மா. ஆனா அதை சீக்கிரம் மறந்திடணும்.''

பிள்ளை பெரிய மனுஷத் தோரணையுடன் பேச, பானு சிரித்தாள்.

''சரிப்பா''

முன்பு பத்திரிகையில் அவள் பார்த்து விலா நோக சிரித்த ஒரு சிரிப்புப் படம் நினைவிற்கு வந்தது. ஒரு பயில்வான் கடும் சிரமத்துடன் முகம் அஷ்டகோணலாகத் தூக்கி பயிற்சிக்கும் இரும்பு தண்டாலை, வீடு கூட்டும் வேலைக்காரி, மிக அனாயாசமாய் ஒரு கையால் தூக்கி மறு கையால் பெருக்கித் தள்ளுவது போன்ற கேலிச் சித்திரம்.





இதுபோல பெரியவர்களுக்கு எளிதில் கைவராத பல தத்துவங்களை சிறுவர்கள் வெகு சுலபமாகக் கையாண்டு விடுகிறார்கள் என்று தோன்றியது.

உள்ளே விரைந்தவள் பையும், காசுமாக வெளியே வந்தாள்.

''அரைக் கிலோ கிழங்கும், ஒரு கட்டு புதினாவும் வாங்கி வந்திருப்பா'' என்றாள் மகனிடம்.

''இன்னிக்கு பூரிக் கிழங்கு, புதினாச் சட்னி, அப்பாக்கு பிடிச்ச டிபனாம்மா?'' மகன் உற்சாகமாய் கூவினான்!

குளித்து மயில் கழுத்து நிறத்தில் ஆரஞ்சுக் கரையிட்ட சுங்குடியைக் கட்டிக் கொண்டவள், கனகாம்பரத்தையும் சூடிக் கொண்டாள்.

'இனி பிணக்குகள் வந்தாலும் அவை சூரியன் அஸ்தமிக்கிற வரைக்கும் தான்' என மனதுள் நிச்சயித்துக் கொண்டவள், வாசலில் நின்று கணவனை எதிர்பார்க்கலானாள்.

(உயிர்நாடி)

★ ★ ★

# நீ பாதி நான் பாதி

"ரெண்டு ரூபாய்க்குப் பூ கொடும்மா..."

ஸ்கூட்டரில் இருந்தபடியே காலூன்றி காசு நீட்டியவனை ஒரு நொடியில் கணித்து விட்டாள், பூக்காரி.

விரல்களில் புதுமோதிரம், பளபளப்பான காலணிகள், பரபரக்கும் முகம் - அவன் புதுமாப்பிள்ளை என்பதை அடையாளங்காட்ட,

"ரெண்டு ரூவாக்கு இத்தினிதாம்ப்பா வரும்... அஞ்சு ரூவாக்கு வைக்குதேன்... தலைநிறைய வைக்கட்டும்ப்பா..." என்றபடி சரத்தை நறுக்கிக் காட்டினாள்.

நாளை வாடிப்போகும் பூவிற்கு ஐந்து ரூபாய் செலவழிப்பது அதிகப்படியோ? சமீபமாய் சம்சாரத்தைத் தொடங்கியிருந்தவன், பிரமிப்பாய் மணக்கும் இலைப் பொட்டலத்தை வாங்கிக் கொண்டான்.

'தன் சம்பளத்தில் சம்சாரம் சுமையாகிவிடுமோ' என்ற சஞ்சலம், மனைவி சாந்தியின் சிக்கனத்தில்... குறைந்திருந்தது!

வாடிக்கையாய்ப் பூக்காரியிடம் பேசி, பின்னலில் ஒரு இணுக்கு மலர் சரத்தை செருகிக் கொள்பவளுக்கு இன்று பந்தாய் சூட்டி அழகு பார்க்கப் பிரியப்பட்டான். ஆனால், சாந்தி நிதானமானவள். 'எதையும் யோசிச்சுதான் பேசணும், செய்யணும்' என்ற அவள் பல்லவிக்கு எறுமாறாயும் துள்ளும் ரகம் இவன்.

அவன் படிப்பு நாசரேத்தின் கிறிஸ்தவப் பள்ளியில். சிற்றூருக்கு ஏற்ற பெற்றோரின் கெடுபிடி வேறு...





சக மாணவிகள் 'காதல்' கதாநாயகர்கள் பற்றிப் பேச, விலகி, ஞாயிறும், வெள்ளியும் ஆலய ஆராதனைகளுக்குப் போய், முழுக்க மூடிய சேலைக் கட்டில் அதிராமல் நடந்து, பவிசாய்ப் பேசி, ஊர்க்கிழவிகளின் மனதையும் குளிர்வித்தவள், சாந்தி.

இவன் நான்கு பெண்களுக்குப் பிறகு 'கிருபையாய்' பிறந்தவன். பெண்களின் மடியிலும், வாசம்மிகு அணைப்பிலும் வளர்ந்தவனை, இன்னும் அக்காமார் பார்க்கும் போதெல்லாம் 'டேய் பொடியா' என்று கட்டி முத்தமிடத்தான் செய்கின்றனர்.

சிறுவனாயிருக்கையில் அண்டை வீட்டுப் பெண்கள், 'கிருபா, ரெண்டு ரூவாக்குப் பாக்கும், காக்கிலோ வெல்லமும் வாங்கிட்டு வாடா' என, தளுக்காய் குலுக்கி நடந்து போய் அவர்களைச் சிரிக்க வைப்பான்.

பெண்களின் சீண்டலும், நீண்டலும் அவனுக்குப் பழகிப்போன விகல்பமில்லாதவை. ஆனால், மனைவியின் தோள் அணைக்க, சிரிக்கையில் அவள் தொடையைத் தட்ட, சாந்தி மரவட்டையாய் சுருண்டு- "ச்சே... யாராவது பாத்தா? இதென்ன நிதானமில்லா...?" கண்களாலேயே கண்டிப்பாள்!

"கொஞ்சந் தள்ளித்தான் உக்காருங்களேன்... மூச்சு படறாப்பல ஒட்டிட்டு..." இடித்து ஒதுக்குவாள்!

தன் இயல்பிற்கும், புது மனைவியின் மேல் பெருகிய மோக வெள்ளத்திற்கும் இவை அணைகட்ட, மூச்சு முட்டத் தத்தளித்தான், கிருபாகரன்!

கடைகளில் வண்ண நட்சத்திரங்கள் கண் சிமிட்ட, பருத்த பலூன்கள் அசைந்தன. கிறிஸ்துமஸ் காலம்.

அன்று வெளிநாட்டினரின் புதுமையான இசை, நடன நிகழ்ச்சி நகரில் நடக்கவிருக்க, இரு நுழைவுச் சீட்டுகளை முன்பே வாங்கி விட்டிருந்தான்.

அன்று காலை சாந்தி, அவனுக்கு அதை நினைவுபடுத்த, அவளை நெருங்கி, "இன்னைக்கு சாயங்காலம் நீ என்ன கட்டிக்கறே, தெரியுமா?" கழுத்துக்குள் முகமுக என்று பேசினான்.

''ஐயோ...'' நெளிந்து உதறினாள்.

''பெரியக்கா கொடுத்த ஆரஞ்சு கலர் கிரேப்?''

''அதுக்கு இன்னும் ரவிக்கை தைக்கலைங்க.''

''ரொம்ப நல்லது. அப்படியே வா.''

அவள் கைகளைச் சுண்டி சுழற்றிவிட்டான்.

''விடுங்க நீங்க... சதா தொட்டுத் தடவிப் பேசற இந்தப் பழக்கந்தான் வெளியேயும் வருது...''

எட்டிப்போய் நின்றவள், சுழன்றதில் ஈரக்கூந்தல் தோள்களின் முன்னே வழிந்தது.

நான்கு அக்காக்களும் தேடிச் சலித்து, பொறுக்கி எடுத்த பெண் சாந்தி- அழகிற்குக் கேட்பானேன்!

கருப்புப்பட்டாய் சிலுசிலுக்கும் அந்நீளக் கூந்தல் தனி கவர்ச்சி- அதில் இப்பூச்சரத்தைச் சொருகி, அணைத்தால்...!

நினைப்பு, அவன் அடிவயிற்றில் பொறியேற்ற, ஸ்கூட்டரின் வேகம் கூடியது.

புதுச்சேலையில் கதவு திறந்தவளை, ''என் மான் குட்டி'' என ஆவேசமாய் இறுக்கினான்.

''என்ன இது வாசல்லியே...?'' முழங்கையால் இடித்துத் தள்ளினாள்! நாற்காலியில் சரிந்தவன், பூப்பொட்டலத்தை நீட்ட,

''எதுக்குங்க இத்தனைப் பூ?'' கவலையானாள்.

''பிகு பண்ணாத மானே! வைச்சு அசத்து.''

''வர்ற வாரம் முதல் கிறிஸ்துமஸுக்குக் கிராமத்துக்குப் போகப் போறோம். உங்க கலாட்டாவ நினைச்சா எனக்குப் பதறுது.''

காபி தந்தவள், தன் அலங்காரத்தை நிறைவு படுத்தினாள்.

சரிகைப் புட்டா தெளித்த கறுப்பு இரவிக்கையும், உடலைக் கவ்வி வழுக்கிய நெருப்பு நிறச் சேலையும், பூவுமாய் அசத்தியவளைப் பெருமையாய்க் கூட்டிக் கொண்டு கிளம்பினான்.

மதுரை நெரிசலில் நீந்தி, 'குளுகுளு' அரங்கினுள் கரை சேர, வியர்வைபட்ட சட்டை சிலுசிலுத்தது.



...டடார நூலகம்
அசோக் நகர், ...



இடம் தேடி அமர்ந்ததும், சுற்றிவந்த அவன் பார்வை, முன்வரிசையில் அமர்ந்திருந்த பெண்ணின் சந்தன நிறக் கழுத்தில் குத்தி நின்றது.

தூக்கலான கொண்டையும், சிறு கருநீல இரவிக்கையும் அவள் மேனியின் வெளுப்பை, வளத்தை தூக்கிக் காட்டின.

விளக்குகள் அணைத்த பின்னும் கரிய யானையின் தந்தம் போல இளம் இருட்டில் அக்கழுத்தும் முதுகும் பளபளத்தன. அவள் அடிக்கடி பேச்சும், சிறு சிரிப்புமாய் தன் கணவனின் தோளில் சாய்ந்தாள். எக்கி, அவன் கன்னத்தில் உதடு உரச கிசுகிசுத்தாள்.

மனம் பரபரக்க, மனைவியை நிமிண்டி ஜாடை காட்டினான், கிருபாகரன்.

ஏற்கெனவே அழகியின் குலாவல் நாடகத்தைக் கவனித்தவள் கடுப்படித்தாள்.

''வெட்கமில்ல...? அதுவும் கிறிஸ்துமஸ் நாடகம் பார்க்க வந்த இடத்தில் இது தேவையில்லாத கூத்து.''

சில நிமிடத்தில் இசை, நடிப்பு, ஆடல் என்று மேடை அவர்களின் கவனத்தை மொத்தமாய்ச் சுருட்டிக் கொண்டது.

நிகழ்ச்சி முடிந்து வெளியேறுகையில், முன்னிருக்கைத் தம்பதிகள் முன்னால் நடந்தனர். இப்போதும் கணவனை ஒட்டி அவள் காதோடு பேசியபடியே நடந்தாள் அப்பெண்.

'பார்த்துக்கோ' கிருபாகரனது விழிகள் மனைவியிடம் பேசின.

அந்த ஜோடி எதற்கோ பின்னே திரும்ப, அப்பெண்ணிற்கு முதுக்கு குறையாத முக அழகைக் கவனித்தவர்கள்... வேறொன்றைக் கவனித்து மலைத்தனர்!

கணவனது செவியில் சிறு அட்டைப் பூச்சி போல பதிந்திருந்தது, ஒரு காது கேட்க உதவும் கருவி!

வீடு வரும்வரை இவர்கள் இருவரும் பேசவில்லை.

சாப்பிட்டு முடிக்கும்வரை அவன் விஷமம் செய்யவுமில்லை. சாந்தி சமையலறையை ஒழிக்கையில் கனைத்தான்.

''என்னங்க? தண்ணி வேணுமா?'' புரியாதது போல

நிமிர்ந்தாள்.

''அந்தப் பொண்ணு நல்ல அழகில்ல?''

''உம்ம்... உங்கப் பார்வையிலேயே தெரிஞ்சது...'' பெருக்கித் தள்ளினாள்.

''ஏய்... சாந்தி, சொல்ல வர்றது என்னன்னா, அத்தனை அழகானவ ஏன் அந்த அரைச் செவிடனைக் கல்யாணம் கட்டிக்கணும்...?''

''காதுக்கும் கல்யாணத்துக்கும் சம்பந்தமென்ன?''

''இல்ல... அதான் அவள் அவன் காதுக்குள்ள விழுந்து விழுந்து பேசியிருக்கா... கணவன்தானோ என்னவோ?''

''கழுத்தில் தாலியிருந்தது.''

''ஓ... நான் உன்னை... இல்ல நம்மை. அவங்களோட ஒப்பிட்டது... தப்புதான், சாந்தி. சாதாரண ஜோடியாயிருந்தா சாதாரணமாய்ப் பழகியிருப்பாங்க...''

ஈரக் கைகளைத் துடைத்தபடி கணவனை நெருங்கியவள், அவனது தலைமுடியைக் கோதிக் கலைத்தாள்.

சிறு வியப்புடன் நிமிர்ந்தான்.

''என் பார்வையின் கோணம் வேறங்க...'' பேசியபடி அவனை நாற்காலியில் அமர்த்தி, கைப்பிடியில் அமர்ந்து அவன் முதுகோடு சாய்ந்தாள். அவளது பின்னல் அவனது தோளில் விழுந்து - புரண்டது.

இந்த இன்ப உரசலோடு, கூந்தலின் மல்லிகை வாசம் சேர்ந்து மயக்க-கரகரத்த குரலில் கேட்டான்:

''என்னது?''

''அவள் அத்தனை அழகாயிருந்தும் துளி கர்வமில்லாமல் அனுசரணையா இருந்தாளே? பிறரைப் பற்றி அலட்டலை. தன் கணவனின் மகிழ்ச்சி மட்டுந்தான் அவள் குறி! தனக்கு சதா பிறத்தியார் அபிப்ராயம் பற்றின கலக்கம் - உங்களைவிட பிறத்தியார் முக்கியமில்லைங்கறது புரிஞ்சுது.''

இவன் வாய் பிளந்து கேட்டபடி கிடந்தான்!

''உங்க இயல்பைக் கட்டுப்படுத்தத் தான் நாம தனியா





இருக்கறப்பவும் கூட ஒதுங்கினேன்... இப்ப அது தப்புன்னு படுது... நம்ப அபிப்ராயங்களைவிட அன்பு முக்கியம்னு புரியுது...''

தோள் வழியே அவள் கைகளை மாலையாய் இழுத்துப் போட்டான். அவள் விரல்கள் 'சில்'லென்ற குளுமையுடன் அவன் கன்னங்களை வருடின- குத்தும் மீசையை நீவின.

''அப்ப என் பாடம்? நான் இனி வெளிவாசல்ல ஆர்ப்பாட்டமில்லாம கொஞ்சம் கட்டுப்பாடாவே இருந்துடறேன்... என்ன? ஆனால், முதல்ல நீ எவ்வளவு திருந்தியிருக்கேன்னு பார்ப்போமாம்...''

கொஞ்சிய கணவனது முகத்தை இரு கைகளில் ஏந்தியவள், ''தோ இவ்வளவு'' என்றபடி அவன் உதடுகளில் அழுந்த முத்தமிட்டாள்.

கெஞ்சிக் கூத்தாடாமல், விளக்கு அணைக்காமல் மனைவி தந்த முதல் முத்தத்தில் கிறங்கிப் போனான், கிருபாகரன்!

(ராணி, டிசம்பர் 1999)

★★★

# சகோதரிகள் ஒருமித்து...

**வ**கிடெடுத்து இருபுறமும் சீவி, நெளிநெளியாய் வழியும் கூந்தலை விரல்களால் கோதியபடி அமர்ந்திருந்தேன் நான். காலையில் தலைக்கு ஊற்றியபின், அவசரமாகக் கட்டி, கொண்டையிட்டிருந்ததால் இன்னும் முழுமையாக உலராதிருந்த கூந்தலில், சியக்காய் பொடியின் வாசனை ரம்மியமாய் வந்தது.

''சந்தியா இன்னும் தலை கட்டிக்கலையா நீ?'' கத்தினாள் அக்கா.

''நேரந்தான் இருக்கே?''

''புடவையும் மாத்தலே - சீக்கிரம்.''

அக்கா பத்து வருடங்களாக டீச்சராக இருந்ததில், அவள் குரல் எப்போதும் உச்சஸ்தாயியிலேயே நிலைத்து விட்டது!

''நா வந்து பவுடர், மை போட்டு வுடட்டுமா?'' மீண்டும் அக்காவின் கத்தல்,

''கேசரி ஆயிடுச்சாக்கா? வாசனை ஜோர். ரெண்டு வறுத்த முந்திரி தாயேன்.''

அக்கா இப்போது கோபம் மிக, அடுக்களையினின்றும் வெளிப்பட்டாள்.

''விளையாடுறியா? உக்காரு'' என்றவள், பவுடர் டப்பியை எடுக்க -

நான் கிரீச்சிட்டேன்.

''வேணாங்க்கா, உன் ஸ்கூல் விழாக்கள்ல நான் பார்த்திருக்கேனே உன் மேக்-அப் திறமையை! குட்டிங்க எல்லாம்





பூதம் மாதிரி திட்டு திட்டா பவுடர் அப்பி, கன்னே தெரியாதளவு மையடிச்சு...''

''போதும் அசடு, உனக்கு சிம்பிளா பண்ணி விடறேண்டி''

''நா எனக்கு சிம்பிளா பண்ணிக்கறேன். நீ முதல்ல போய்க் குளி... வேர்த்துக் கொட்டுது''

''பொண்ணு பாக்க வரப் போறது உன்னை.''

''அதுக்காக நீ இப்படி வர்றவங்களைப் பயமுறுத்தணுமா?''

அக்காவின் இடுப்பைக் கட்டிக் கொண்டேன்.

''இதுக்கெல்லாம் நேரமில்லை'' - அக்காவின் விழிகள் உருண்டன. அகல்யாக்கா மிரட்டலாகக் கண்களை உருட்ட, அவள் முகம் இன்னும் குழந்தைத் தனமாகத் தெரியும். அது அறியாது, அவள், தான் வெகு சாமர்த்தியமாக விழிகளாலேயே பிறரை உருட்டி மிரட்டி காரியம் சாதிக்கிறோம் என்று நினைத்திருந்தாள்! அந்தக் கள்ளமில்லாத முகத்தைப் பார்த்து இரங்கியே அவளிடம் பலர் பல சமயங்களில் விட்டுக் கொடுத்திருந்தனரே தவிர வேறில்லை!

''ஆபீஸில் இன்னிக்கு அரை நேரம் லீவு கேட்டேனா. எல்லாரும் என்ன ஏதுன்னு குடைஞ்செடுத்துட்டாங்க.''

''எனக்குத் தெரியாதா, பத்து வருஷமா நா அந்த ஸ்கூல்லதானே இருக்கேன். நீ ஒண்ணும் சொல்லலியே?''

அக்கா எனக்குத் தலை பின்ன ஆரம்பித்தாள்.

''அக்கா நீ ஏன் கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?''

''அசடு, முப்பது வயசிலேயா?''

''ஏன்? நீ இன்னும் சின்னப் பெண்ணாட்டம்தான் இருக்கே. நானாவது கருப்பு...''

''ச்சீ... நல்ல மாதிறம் நீ. நாந்தான் ஒரு அசட்டுச் சிவப்பு. கருப்புமில்லாம நல்ல சிவப்புன்னுஞ் சொல்லத் தரமில்லாம... உடம்பு வேற ஊதியாச்சு.''

அக்கா கொஞ்சம் குண்டுதான். கன்னங்கள் உப்பி, சின்ன உதடுகளுடன் செல்லம் போல இருப்பாள்.

''அக்கா... சத்தியமா உன்னை விட்டுப் போக எனக்கு

மனசில்லே.''

''அசடு, காலம்பூரா இப்படியே ரண்டு பேரா...''

''வேற பெருசா உறவு யாரிருக்கா? எனக்கு நீ போதும்.''

''அது சரியில்லை.''

''அப்புறம் உனக்கு யாரு?''

''ரிடையர் ஆன பிறகு யோசிக்கலாம். அதுவரைதான் டீச்சர் உத்தியோகமிருக்கில்ல.''

அம்மா, இரண்டு வருடங்களுக்கு முன் வாதம் வந்து படுக்கையில் விழுந்த போதே அக்கா கிழவி போல வேதாந்தம் பேசுவாள். அம்மா போன பிறகு, தங்கைக்காகவே வாழ்வதாக நினைப்பு.

''இன்னிக்கு வரவருக்கு 32 வயசாச்சு. உன்னை முடிச்சுட்டா என்ன?'' கேட்டேன்.

''இனி கல்யாணமெல்லாம் எனக்குச் சரிப்படாது. உனக்கு 25 முடிஞ்சாச்சு. ஏதோ இருக்கற நகை, பணத்துல உனக்கு முடிச்சிரணும்.'' கறாராய் சொன்னாள்.

அக்காவிற்கு பயம்.

தன்னைக் கட்டிக் கொள்கிறவன், கொழுந்தியாளுக்கு செய்ய வேண்டிய பொறுப்பை, தட்டி உதறிவிடுவான் என்று பயம்!

''எனக்குப் பிடிக்கலை''

என் கண்கள் கலங்க, அக்கா பதைத்தாள்-

''ப்ளீஸ் சந்தி... எனக்காக, இப்ப போய் மூஞ்சிய தூக்கி வச்சுக்காத. நா எவ்வளவு ஆசையா எல்லாம் செய்து வச்சுக் காத்திருக்கேன்.''

''போண்டா, கேசரி முடிக்க நானாச்சு.''

''அசடு, அதச் சொல்லலை. 12 பவுன் நகை, பணம், பாத்திரம் அதைச் சொன்னேன்... ப்ளீஸ் சந்தி.''

மறுபடி அடுக்களையுள் புகுந்து கொண்டாள் அவள்.

நான் கிறிஸ்மஸுக்கு எடுத்த இளம் பாசிப்பச்சை பட்டை எடுத்துக் கட்டிக் கொண்டேன். போன வாரம் கிறிஸ்மஸ் அன்று நள்ளிரவு தியானத்திற்கு அதைக் கட்டியிருந்தேன். சிறு அரக்கு





பார்டரில் விரலளவே சரிகையிருந்தாலும் அது எனக்கு எடுப்பாகத்தானிருந்தது.

வாழையிலையைப் பிரித்து மொட்டு மல்லிகைச் சரத்தில் 2 முழம் நறுக்கி தலையில் சூடிக் கொண்டு, மீதியைச் சுருட்டி அக்காவுக்கென வைத்தேன்.

''நீ அழகு தான் சந்தி'' - குளித்து விட்டு வந்த அக்கா, சேலையை அரைகுறையாய்ச் சுற்றிக் கொண்டு என்னையே பிரமிப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ம்ப்ச்... அப்பா போய் ரொம்ப காலமான மாதிரி தோணுதில்ல? அம்மாவாவது இருந்து பார்த்திருக்கலாம்''. பேசியபடி சேலையைக் கொசுவினாள்.

''எதை? நீயிருக்க எனக்குக் கல்யாணம் பேசுறதையா?''

காது கேட்காதவள் போல பவுடர் பூசி முகத்தைச் சேலையால் துடைத்துக் கொண்டாள்.

''இன்னிக்கும் நூல் சேலையா? கிறிஸ்மஸ் சேலையைக் கட்டுக்கா... ப்ளீஸ்.''

''நானும் நீயும் ஒண்ணுபோல கட்டிட்டு நின்னா அசட்டுத்தனமா இருக்கும்.''

''ஒரு நாளைக்குத்தான் நா சொல்றது கேளேன்.''

''ம்ப்ச்... அப்புறம் ரவிக்கையை வேற மாத்தணும்.''

வாசலில் கார் வந்து நிற்கும் ஓசையில் படபடப்புகூட, ''நீ எதும் வாயைத் திறக்காத. எல்லாம் நா பாத்துகிறேன்.''

ஹாலின் ஜீஸஸ் படத்தைப் பார்த்து கை குவித்தபடி, வாசலுக்குக் குடுகுடுவென விரையும் அக்காவைப் பரிவுடன் பார்த்தேன் நான்.

பெற்றோர் இருந்திருந்தால் இந்தப் பதட்டமேதுமின்றி, என்னோடு ஜன்னல் வழியே மாப்பிள்ளையை நோட்டமிட்டுச் சிரித்துக் கொண்டிருந்திருப்பாள்.

'இதான் என் மூத்தப் பொண்ணு. நல்ல இடத்துல வாக்கப்பட்டிருக்கு. 2 பிள்ளைங்க' என அப்பா அறிமுகப்படுத்த, அமுக்கமான சிரிப்போடு, அந்தஸ்தோடு நின்றிருக்க வேண்டியவள், இதோ... இந்த பாஸ்கருக்கும் நெருங்கிய உறவு

அதிகமில்லை. அக்கா எங்களோடு வந்து இருக்க சம்மதிப்பாரா?'

தரகர் அப்படித்தான் சொன்னார்.

'தாவா கஷ்டப்பட்டு உசந்த பிள்ளை. அவுக அப்பா அம்மா கலப்பு கலியாணமானவங்க - அப்பா வகையில் வெட்டிவுட்டுட்டாங்க. ஒரு சித்தி, சித்தப்பா கொஞ்சம் நெருக்கம். பெத்தவுங்க ஒரே ஆக்ஸிடெண்ட்ல போன பிறவு தம்பிதான் 2 தங்கச்சிகளை ஆளாக்கிக் கட்டிக் கொடுத்தது. சொந்த வீடு, கொஞ்ச நிலம் உண்டு. அதுலயே ஷாப் கடை - அதுல நல்ல யாவாரம் - ஊர்ல நல்ல பேரு. நா நீன்னு பொண்ணு குடுக்க வாராவ. தம்பி தனக்கு கஸ்டம் தெரிஞ்ச குணமானவளா இருக்கணுங்க விட்டு இங்க அழைச்சுட்டு வந்தேன்.' தரகர் கூறிய விவரங்களை அக்காவும் விசாரித்து ஊர்ஜிதப்படுத்திக் கொண்டே இன்று பிரபாகரை இங்கு வரவழைத்திருந்தாள்.

சந்தியா, ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். போன வாரம் கிறிஸ்மஸுக்காக தொங்க விட்டிருந்த ஸ்டார், அதற்குள் வெளிறி ஆடிக் கொண்டிருந்தது.

தரகர் உற்சாகமாய்,

''அகல்யா பொண்ணு தங்கம். அம்மா முடங்கவுமே எஸ்.எல்.சி டிரெயினிங் முடிச்சு வேலை தேடிக்கிச்சு. தங்கச்சின்னா உயிரு.'' நான் சற்று தலையைச் சாய்த்துப் பார்க்க அக்கா தெரிந்தாள் - தரகரை அரைக்கண்ணால் முறைத்தபடி! அதில் அவர் கிடுகிடுத்து வாய் பொத்திப் போக,

''சந்தியா வாம்மா'' - அக்காவின் 'கணீர்' குரல், தரகரின் குரலை வெட்டி எழுந்தது!

பலகாரத் தட்டுடன் நான் முன்னறையுள் நுழைந்தேன். பழைய மின்விசிறியின் சத்தமும், மற்றபடி கனத்திருந்த நிசப்தமும் எனக்கு சங்கடமாயிருந்தன. முக்காலியில் தட்டை வைத்து, அவரை நோக்கி கைகூப்பினேன்.

''உட்காரு சந்தியா. பலகாரம் எடுத்துக்கோங்க. உங்க ஊரில ஸ்கூல் இரண்டு இருக்குல?'' அக்கா அவரை விசாரித்தாள்.

நான் மெல்ல நிமிர்ந்து அவரைப் பார்த்தேன்.

ஆள் அத்தனை மோசமில்லை.





லேசாக ஒரு அசட்டுக் களை முகத்தில் பரவியிருந்ததோ?

தட்டையான மூக்கு, இருபுறமும் சற்றே விடைத்து விரிந்திருந்தது வேடிக்கையாயிருந்தது.

''ஸ்கூலுங்க இருக்கு. நம்ப கடை கணக்கு வழக்கு பார்த்துக்கிட்டாலே எனக்கு உதவிதான். உங்க ஸ்கூல் பக்கத்திலேதானா?'' அவர் கண்கள் சலனமில்லாது அக்கா மேலேயே நின்றன.

பலதும் பேசியபின் திடீரென அவர் -

''நா சந்தியாவோட 2 நிமிஷம் பேசணுமே'' என, எனக்கு வியர்த்தது.

''அதுக்கென்ன... இப்படி வாங்க'' - இயல்பாய் உள்ளே அழைத்தாள் அக்கா.

'ஏதாகிலும் அசட்டுத்தனமாய்ப் பேசுவாரோ? இவர் அக்காவின் கொழுந்தனாகி விட்டால், அவள் இவரையும் 'அசடு' என்று தான் கூப்பிடுவாள்' - மனதுக்குள் கூட சிரிக்க முடியாத பதட்டத்தில் நான் விரல்களை நெரித்தபடி அறைக்குள் நுழைந்தேன்.

''சந்தியா, நா இப்ப சொல்லப் போறதைக் கேட்டுச் சங்கடப்படக் கூடாது, என்ன?'' அவர் குரல் அசட்டுத்தனமாக இல்லை - தெளிவாக இருந்தது.

நான் தலையசைத்தேன்.

''நீ சின்னப் பொண்ணு தான். இன்னும் நல்ல இடமாப் பாத்து நா கல்யாணம் பண்ணி வைக்கிறேன். நா உங்க அக்காவைக் கல்யாணம் செய்துக்க விரும்றேன். என்ன சொல்ற?''

என் உடம்பெங்கும் வெந்நீர் பாய்வது போல ஒரு விநோத உணர்வு.

மெல்ல நிமிர்ந்தேன். கரிசனையுடன் என்னைப் பார்த்தவாறிருந்த முகம்... மென்மையும் அழகுமாகத் தெரிந்தது.

''வயசு, சிறு வயசுல நிலைச்சு நின்னது... இதுல எங்களுக்குள்ள பொருத்தம் ஜாஸ்திம்மா. ஏற்கெனவே நா, ரண்டு தங்கச்சிமாருக்கு கல்யாணம் செய்துவச்சவன். உனக்கும் நல்லபடியா...''

நான் அழுது விட்டேன்.

''என்ன?''

''தாங்க்ஸ் ரொம்ப தா...ங்க்ஸ் அத்தான். எனக்கு ரொம்ப சந்தோஷம்'' - அழுகையினூடே சிரித்தேன்.

''தரகர் அண்ணாச்சிக் கிட்டயே இதைச் சொல்லியிருப்பேன். நீ தப்பா நினைச்சுக்கக் கூடாது சந்தியா''

இன்னுமாய் சந்தோஷ அழுகை பொங்கியது.

மூக்கும், காதும் சிவக்க.

''யூ ஆர் கிரேட்'' என்றேன்!

உணர்ச்சி வசப்படும் போது ஆங்கிலத்தில் பேசுவது என் வழக்கம்.

அவரில் எனக்கு தந்தை, சகோதரன், அத்தான் எல்லாருமாய் சேர்ந்து கிடைத்த திருப்தி வந்தது.

அவரைக் கட்டிக் கொள்ளலாம் போலத் தோன்ற, முகமெல்லாம் வெளிச்சமாய் வந்தேன்.

அக்காவைக் கட்டிப்பிடித்து அவள் குண்டு கன்னங்களில் முத்தமிட, அவள் அடிக்குரலில் சிடுசிடுத்தாள்.

''அசடு... என்ன பண்ற?''

ஆனால் அவள் கைகள் என்னை ஆதுரத்துடன் சுற்றிக் கொண்டன.

''அக்கா'' - குரல் குழறியது.

''நா சொல்றேன் சந்தியா'' - பேச ஆரம்பித்த அத்தானின் கம்பீரமும் ஆண்மையுமான - களையான முகத்தை பார்த்தவாறிருந்தேன்.

வெற்றிலைக் குதப்பலை முடித்து நுழைந்த தரகர், தாழ்வார ஸ்விட்சைத் தட்ட, ஸ்டாரின் உள்ளிருந்த பல்ப் எரிந்தது.

ஸ்டாரின் வெளிறலை மீறி மின்னியது!

(நண்பர் வட்டம், டிசம்பர் 1992)

★★★



# பூர்த்தியான தேடல்

**கொ**தித்து வந்த குருமாவை நான்காவது முறையாக ருசி பார்த்தாள் பிரியா...

ம். - அளவான மசாலாவும், கிழங்கும் பட்டாணியுமாக குருமா ருசியாகத் தானிருந்தது. அதைக் கேஸரோலில் ஊற்றி மூடியவள், பால் ஊற்றிப் பிசைந்து வைத்திருந்த சப்பாத்தி மாவைக் கிள்ளியெடுத்து உருட்டித் தேய்க்கலானாள்.

மணி நான்கை நெருங்க, கணவனின் நினைப்பில் பிரியாவின் முகத்தில் ஒரு முறுவல் படர்ந்தது.

குளித்து, உடுத்தி... பளிச்சென நிற்கப் பரபரத்தாள்.

அவளுக்குத் திருமணமாகி 3 மாதங்களே பூர்த்தியாகியிருந்தன. 2 கொழுந்தன்மார், மாமனார், மாமியார் என்று அனைவரும் ஒன்றாக இருந்தாலும் தம்பதிகளுக்கு வேண்டிய தனிமையும் கிடைத்தது. தினம் சிநேகிதர் வீடு, சினிமா அல்லது காலார நடந்து வருவதையோ பழக்கமாக்கிக் கொண்டிருந்தனர்.

பள்ளியிலிருந்து மாமியார் வந்த பின், சாதம் மட்டும் வடித்து, மீந்ததை அவர் சூடாக்கி விட, அவளுக்கு வேலை இதோடு முடிந்தது.

மாமியாரின் நினைப்பு வரவே பிரியாவின் புருவங்கள் முடிச்சிட்டன!

நீங்கள் நினைப்பது போல கொடுமை, பொறாமை, அகங்கார, ஆங்கார, பாசமில்லா மாமியாரெல்லாமல்ல ராஜம்மா! - அங்கு தான் குழப்பமே!

பல வருடங்களாக, நகரின் பெரிய பள்ளியொன்றில் ஆசிரியையாகப் பணியாற்றி வரும் ராஜம்மாளைப் பார்க்கும் எவருக்கும் சற்று பயங்கலந்த மரியாதை எழும்.

கஞ்சியில் விறைத்து நிற்கும் இளவண்ண வாயில் புடவையில் ஒரு போதும் கலையாத கேசம்.

மெல்லிய தங்க பிரேம் கண்ணாடி,

மெலிந்த தேகம், மிக சொற்ப நகைகள், கூரிய பார்வையுமாயிருக்கும் மாமியாரைப் பார்க்கையில் பிரியாவும் ஒடுங்கிப் போவாள்.

பாசம் எழும் வகையில் அவர்கள் உறவு இதுவரை அமையவில்லை. கரிசனையும் புன்முறுவலுமிருந்தாலும் அத்தையின் ஊடுருவும் பார்வை பிரியாவிற்குப் புதிராக இருந்தது. அவர் கணீரெனப் பேச, பிரியா ஆசிரியை முன் நிற்கும் ஆறு வயது குழந்தையைப் போலாவாள்!

'ஆமாங்க அத்தை'

'சரிங்க அத்தை' என்று மென்று விழுங்குவாள். இத்தனைக்கும் பிரியா பாசத்திற்கு ஏங்கியவள். இள வயதிலேயே தாயை இழந்து அந்த அன்பிற்காக மறுகியவள்.

'நீ போற வீட்ல மூணும் பையனுங்க. அதனால் சம்பந்தியம்மா உன்னைத் தன் மகளாத்தான் பாவிப்பாங்க. நான் எனக்குத் தெரிஞ்சவரை உன்னை வளர்த்தாலும் தாய் போல வருமா?

இனி உனக்கந்த குறையிருக்காதம்மா' என்று அப்பா, மேலும் அவளிடம் பாசக் கனவுகளை உருவாக்கி விட்டிருந்தார்.

இந்த 3 மாதங்களில், மாமியார் அவளுக்குப் பல சேலை, ரவிக்கை, புது தினுசு வளையல்கள் என்று வாங்கிப் பரிசளித்தாலும் பிரியா ஏங்கிய அந்நியோன்யம், ஒட்டுறவு, உரிமையான நெருக்கம் இல்லை.

அழைப்பு மணி 'ஹிர்...' என அவள் நினைவுகளை அலறிக் கலைத்தது. சப்பாத்திகளை மூடி வைத்துக் கதவைத் திறக்க ஓடினாள்.

'அத்...தை சீக்கிரமா வந்திட்டீங்களே?'' குழந்தை போல கலைந்திருந்த தன் முடியை ஒதுக்கி முகத்தைத் துடைத்தாள்





பிரியா.

''ம்ம். யார்ன்னு பார்க்காம கதவைத் திறக்காதே பிரியா. காலம் சரியில்லை''

''சரிங்கத்தை''

''நாளைக்குச் சுதந்திர தினம் - காலையிலேயே வரணும்னு எங்களை மூணரை மணிக்கே விட்டாச்சு.''

''தோ. காபி போடறேன்'' என்ற பிரியா, இருவருக்குமாக காபி கலக்கி, அருந்திய பின் குளிக்கப் போனாள். கருநீல வாயில் சேலையில் முடியைச் சிக்கெடுத்தவாறு வந்தவள், மாமி தன்னைக் கண்ணெடுக்காது பார்க்கச் சற்றே கூசினாள், ''வந்து உட்காரும்மா, நான் தலை பின்னி விடறேன்.'' தான் சற்று முன் யோசித்தவை அத்தைக்குத் தெரிந்திருக்குமோ என்ற அசட்டு அச்சத்தையும் மீறிப் பிரியாவிற்குச் சந்தோஷமாய் இருந்தது.

''என்ன இத்தனை சிக்கு?' - என்றவாறு ராஜம்மாளின் விரல்கள் மருமகளின் கூந்தலைக் கோதிச் சிக்கெடுத்தன.

''எனக்கு 2 பெண் குழந்தைங்க பிறந்தாங்கன்றது உனக்குத் தெரியுமா பிரியா?''

அத்தையின் 'திடீர்' கேள்வியில் குழம்பியவள்,

''இவர் ஒண்ணும் சொல்லலேத்தை'' என்றாள்.

''எனக்கு முதலில் பிறந்தது இரட்டைக்குழந்தைங்க - இரண்டும் பொண்ணுங்க. பிறந்த ஆறாம் மாசமே தவறிட்டாங்க.''

''ஓ...''

''பிறகு 3 பையனுங்க பிறந்தும் கூட எனக்கென்னவோ அந்த அதிர்ச்சி முழுசா நீங்கலையம்மா.''

இழப்பின் துக்கம், பிரியா அறியாததில்லையே!

''என்ன இருந்தாலும் ஒரு பொண்ணு மாதிரி வரதில்லை பிரியா.''

''இப்ப நான் வந்தாச்சே'' பிரியா உண்மையும், மென்மையுமாய்ச் சொன்னாள்.

''எங்கே என் மகளுங்க எனக்குத் தங்காதது போல, நீயும் போயிடுவியோன்னு எனக்கொரு பயம். நா அவங்களை ரொம்ப

நேசிச்சேன் - அவங்க இழப்புக்குப் பிறகு எனக்கு யார் மீதும் அதிக பாசம் வைக்க பயம்.''

''எனக்கு அப்படியில்லைத்தை. எனக்குப் பாசம் காட்ட ஒரு தாய் ரொம்ப தேவையாயிருந்தது.''

''என்னைப் பார்த்துப் பயந்தாற்போல தெரிஞ்சுது?''

''ம்... கொஞ்சம் நீங்க என்னை உறுத்துப் பார்ப்பீங்களா...'' பிரியா சிரித்தாள்.

''இத்தனை வருஷமா முரட்டுக் குரலும், இடிச் சிரிப்புமா தடிப்பயலுங்க 3 பேரே சுத்தி வந்த பிறகு உன்னைப் பார்க்கறதே ரொம்ப இன்பமாயிருந்தது. உன் சின்ன கொலுசுப் பாதம், வளையல் சத்தம், சிரிப்பு, நறுவிசான வேலை... பார்க்கப் பார்க்க எனக்குத் தொண்டை அடைச்சிக்கும்.

ஏதோ ஒரு சின்ன தேவதை எங்க நடுவில நடமாடுவது போல... நாங்க நெருங்கித் தொட்டா நீ புகையா மறைஞ்சிடுவியோன்னு கூட ஒரு அசட்டுப் பயம் எனக்கு!''

இத்தனை நாட்கள் மனதுள் குமைந்த எண்ணங்கள், உருப்பெற்று வெளியான கூச்சத்தில் மௌனமானாள் ராஜம்மாள்.

''புரியுது அத்தை'' - மெள்ள திரும்பித் தன் புதிய அன்னையின் மடியில் முகம் புதைக்க, அந்தப் புதிய அந்நியோன்யத்தில் நேசம் பொங்கியது.

இருவரின் தேடல்களையுமே அத்தனை அழகாகக் கோர்த்துப் பூர்த்தி செய்த இறைவனை இருவரின் மனங்களும் வியந்து, நன்றி கூறின.

(உயிர்நாடி, நவம்பர் 1992)

★ ★ ★



# விதியை வெல்வோம் தோழி!

ரஞ்சனா வீட்டின் புழக்கடை வழியே நுழைந்து, குளித்து, வேறு உடைமாற்றி, படுக்கையில் சரிந்தாள்.

''சூடா ரசம் சாதம் இருக்கு. அப்பளம் கூட பொரிச்சுட்டேன், சாப்பிடேன் ரஞ்சனா'' - என்று மாமியார் கூறியது கேட்காதது போலக் கிடந்தாள்.

மூத்த அம்மையாருக்கு மருமகளின் மன வேதனை புரிந்தது.

''இத்தனை இள வயசுல விதவையாகணும்றது நீலாவோட விதி. நாம மாற்ற முடியுமா? இத்தனை நாளு இவளையும், குழந்தையையும் தாங்கினவன் விபத்துல இல்லாம போயாச்சு. ரோட்டுல எத்தனை கிழம் கட்டைங்க ஊர்ந்து போவுது. லாரி இவள் மேலே ஏன் மோதணும்...? விதி.''

அத்தைப் பேச்சுக்கு, ரஞ்சனாவிடம் எந்தச் சலனமும் இல்லை. அவளுக்கு நீலாவை மிகவும் பிடிக்கும்.

'ஐந்தடி உயரத்தில் செப்புச் சிலை மாதிரி இருக்கிற அவ உடம்பை மறந்திடுங்க. வெள்ளையும், சிவப்பும் பதமாக் கலந்த அந்த நிறத்தை விடுங்க. முழங்காலை இடிக்கற பின்னல், அழகு அத்தனையையும் மீறி என்ன கல்மிஷமில்லாத ஒளி அந்த நீலா முகத்துல... இல்லைத்தை? கபடேயில்லாத கண்ணும் சிரிப்புமா, 26 வயசுல இப்படி ஒரு பொண்ணு இருக்கறது அபூர்வம் அத்தை' என்று பலமுறை சொல்லி ரசித்திருக்கிறாள் ரஞ்சனா.

அந்த அழகிய நீலா இப்போது விதவையாகி, வேதனையைக் கூட முழுதுமாக உணர முடியாதபடி, விக்கி விறைத்து தன் 3 வயது பெண்ணைக் கட்டியபடி முடங்கிக் கிடந்ததைப் பார்த்து ஊரே

உருக, ரஞ்சனாவைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

நேற்று காலை விபத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு ஓடிய ரஞ்சனா, இப்போது தான் வீடு திரும்பியிருந்தாள். ''ஏம்மா ரஞ்சனா, நீ இரண்டு வாய் சாப்பிட்டுட்டு நீலாவுக்கும் கொஞ்சம் சாப்பாடு எடுத்துப் போறியா? குழந்தை என்ன சாப்பிட்டுச்சோ?'' - இம்முறை மாமியாரின் பேச்சுக்குப் பலன் இருந்தது. எழுந்து சாப்பிட்ட ரஞ்சனா, பத்தே நிமிடத்தில் கேரியருடன் வெளியே விரைந்தாள்.

அன்றிரவு கணவனிடம் பேச்சை ஆரம்பித்தாள் ரஞ்சனா.

''நாம நீலாவுக்கு ஏதாவது செய்யணுங்க''

''எப்ப என்ன உதவினாலும் வந்து கேட்கட்டும்.''

''ம்ப்ச்... இதையேதான் எல்லாரும் சொல்றாங்க. அந்தச் சின்னப் பொண்ணு 'உதவி உதவி'ன்னு ஒவ்வொரு வாசலா வந்து நின்னு புலம்பணுமா?''

''ஏன் ஆத்திரப்படற?''

''பின்ன? சுழலில் சிக்கிய தெப்பம் போல, அவ ஒண்ணும் புரியாம குழம்பற நேரமிது. என்ன உதவி தனக்குத் தேவைன்னு கூட அவளுக்குத் தெரியலை...''

மாமியார் அங்கலாய்ப்பாய்க் குறுக்கிட்டார்கள்.

''இத்தனை இள வயசுல இது கொடுமை - பாவம் நீலாப் பொண்ணு.''

''எல்லாரும் இதையே தான் சொல்றாங்கத்தை. இன்னிக்குச் சாப்பாட்டை அவள் சொந்தக்காரங்க ஏதோ பாத்திருந்தாலும், நீலா சாப்பிட்டுருக்கல. நான்போய் இரண்டு வாய் சாப்பிட வைத்தேன். இரண்டு நாளில இவங்கெல்லாம் போன பிற்பாடு...?''

''உறவுக்காரங்க ஏதாவது செய்வாங்க.''

''நீலாவுக்கு அப்பா அம்மா இப்போ இல்லை. இரண்டு அக்காமாரும் வட நாட்டுல...''

''ம். யோசிப்போம்'' என்ற கணவர், படுக்கையறைக்குள் நுழைந்து விட, ரஞ்சனா கொட்டக் கொட்ட விழித்திருந்தாள்.





நீலாவின் அழகிய களங்கமில்லா முகம், அவள் மனதில் ஆடியது. அந்த முகத்தைக் கப்பியிருந்த துக்கத்தை, 'இனியென்ன' என்ற அச்சத்தை மாற்ற வேண்டும் என்று ரஞ்சனாவின் மனம் அசுர விழிப்புடன் அலைந்தது.

''டீச்சர் வேலை ரொம்ப பாந்தமாயிருக்கும். ஆனா, நீலா B.A. முடிக்கலையே''

''கணவர் தனியார் நிறுவனத்தில் மெக்கானிக் வேலை பார்த்தவர். ஆக அங்கும் இவளுக்கு வாய்ப்பில்லை''

''வீட்டிலிருந்தே பலகாரம், பட்சணம் என்று ஆரம்பிக்கச் சொல்லலாமா?''

நீலாவின் கணவன் அவளைப் பூ போலத் தாங்கியது நினைவிலாடியது. வாயல் புடவைகளை அலுங்காது கட்டி எப்போதும் 'பளிச்'சென்று இருப்பாள் நீலா. பொருத்தமான ரவிக்கை, உள்ளங்கழுத்தில் ஒரு மணி என்று அவளத்தனை நறுவிசாக உடுத்தும் கலை வெகு சிலருக்கே கைகூடும். இனி அப்படிப் பார்த்து, உடுத்தி, புன்னகையுடன் இருப்பாளா நீலா?

இருக்க வேண்டும்!

அவளை நம்பியும் ஒரு சிறு ஜீவன் உண்டே.

அந்நேரத்தில் தான் அந்நினைப்பு பொறியாய்க் கிளம்பியது. ரஞ்சனாவின் அண்ணன் கல்கத்தாவில் ரெயில்வே அதிகாரி. அண்ணி அடிக்கடிச் சொல்வாள்.

'இங்கே கிடைக்கற காட்டன் புடவைங்க அத்தனை அழகு ரஞ்சி. உடுத்தியிருக்கறதே தெரியாத அளவு மெல்லிசு. நான் ஹோல்சேலில், மொத்தமா வாங்கி அனுப்பறேன். நீ அங்கே விற்றுப் பாரேன்.'

ரஞ்சனாவிற்குச் சதா தோட்டம்தான். நட, களையெடுக்க, பூ பறிக்க, தொடுக்க, பிஞ்சு கத்திரிகளை அண்டை வீடுகளுக்கு விநியோகிக்க - என்று நேரம் போய் விடும். ஆக, 'ஐயே... எனக்கு அதிலெல்லாம் ஆர்வமில்லை அண்ணி' என்று மறுத்து விட்டாள்.

'டோனகாலி, டாக்கா, சரிகை புடவைங்கன்னு, பருத்தியிலேயே எத்தனை தினுசுங்கற' - சிலாகித்துச் சொல்வதோடல்லாது அண்ணி, வகைக்கொன்றாய்

ரஞ்சனாவிற்கு வாங்கியும் வருவாள்.

'புடவை பிரமாதமாயிருக்கு'

'எங்கே வாங்கினீங்க?'

'கல்கத்தாவா? அதானே புது தினுசாயிருக்குன்னு பார்த்தேன். எனக்கு இரண்டு வருவிச்சுத் தர முடியுமா?'

இப்படியெல்லாம் பாராட்டு கிடைத்தாலும், அவற்றை வாங்கி விற்று அண்ணி சொல்வது போல மாதம் 1500, 2000 பார்க்கும் எண்ணம் அவளுக்குக் கிளம்பவேயில்லை.

இப்போது கிளம்பியது!

புடவைகளை ரெயில் மூலம் அண்ணாவை அனுப்பச் சொல்ல வேண்டியது. இங்கு மருத்துவக் கல்லூரியைத் தவிர்த்து நான்கு பெண்கள் கல்லூரிகள் - பல பள்ளிகள் - அலுவலகங்கள், இங்கெல்லாம் சேலைகள் அடங்கிய இரண்டு பைகளோடு போக வேண்டியது. நீலாவிற்குத் துணையாகச் சில வாரங்கள் தானும் கூடப் போகலாம்.

பிறகு தொழில் பிடிபட்டவுடன் நீலாவின் வீட்டு முன் பகுதியையே சிறு கடையாக மாற்றி விடலாம். ஒரு அலமாரி வாங்க வேண்டும். அவளுக்கு வரும் இன்ஷியூரன்ஸ் பணத்தில் 5000-த்தை இதில் முதலீடு செய்து மீதியை எப்.டி.-ல் போடணும்.

முதலில் இப்புதுமையான வேலைகளைப் பற்றி ஒரு கவர்ச்சியான போர்டு செய்யணும்.

மனதில் அலையலையாய் எண்ணங்கள் கிளம்ப, ரஞ்சனாவிற்குள் தெம்பு வந்தது. முடங்கிக் கிடக்கும் தோழியைத் தூக்கி நிறுத்த முடியும் என்ற தைரியம் வந்தது.

விதியே என்று பிறரைச் சார்ந்து கிடக்காமல், நீலாவை நிமிர்ந்து வாழச் செய்ய முடியும் என்ற தெளிவு பிறந்தது.

'ஐயோ பாவம். கடவுள் இப்படிச் சோதிக்க வேண்டாம்' என்பதைத் தவிர உருப்படியாகச் சொல்ல, செய்ய காரியங்கள் கிடைத்து விட்ட திருப்தியில் எழுந்து படுக்கப் போனாள் ரஞ்சனா!

(உயிர்நாடி)

★★★



# சுவாரஸ்யங்கள்

கமலியின் முன்னால் சேலைகள் வந்து விழுந்த வண்ணம் இருந்தன. கலர் கலராய் - பூக்களும், கட்டங்களும், கொடிகளுமாய்... அவளுக்குத் தலைவலித்தது.

காலையில் அவசர அவசரமாய்ச் சமைத்து, துவைத்து, ஒருவழியாகக் கிளம்பி, பஸ்சில் முண்டியடித்து ஏறி...

ஸ்டூல் ஒன்றை இழுத்துப் போட்டு உட்கார்ந்தாள். சேலை வாங்க வரும் போது முன்பெல்லாம் எத்தனை ஆர்வம், ஆர்ப்பாட்டம்... இப்போதோ அது ஒரு கடமையாய்ப் போனது.

அவளுக்கு இத்தனை அழுத்தமான நிறமெல்லாம் பிடிக்காது.

அவள் கணவன் குமாருக்கோ எளிய நிறங்கள் சுத்தமாகப் பிடிக்காது - 'இதென்ன பாட்டி போல - அழுது வடியுது' - முகம் சுளிப்பான். இவளது இள வண்ண ஆர்கண்டிகளும் ஷிபான்களும் பீரோவில் தூங்கின.

''வேற ஏதும் பார்க்கறீங்களாம்மா?'' கடைச் சிப்பந்தி அலுப்பாய்க் கேட்டார்.

மேலும், கீழும் பார்த்தவள், ''வேற ஏதாச்சும்'' என்று இழுத்தாள்.

''விசித்திரா பிரிண்ட் புதுசு வந்திருக்கு எடுக்கவா?''

''ம்.'' அவர் அசுவாரஸ்யமாய் நகர யாரோ கமலியின் தோளை அழுத்தமாய்ப் பற்றினார்கள்.

பயந்து திரும்பினாள்.

''ஏய்... சுத்தரிக்கா'' கெகிகெத்துச் சிரித்தவள் - பூர்ணிமா!

எழுந்த கமலி, தோழியின் கைகளை ஆவலுடன் பற்றினாள்.

''அட... பூரணி, எத்தனை வருஷமாச்சு பார்த்து!''

கண்களை மூடி யோசித்த பூரணி, ''ம். 12 வருஷம். என்ன கத்திரிக்கா வாடிப் போயிட்ட?'' என்று கேட்டாள்.

''நீதான் சொல்றியே - 12 வருஷமாச்சன்னு. பின்ன வாடாதா?''

புன்னகையினூடே கமலி, பூரணியை ஆச்சரியத்துடன் பார்த்தாள். பூரணி இப்போது மிகவும் அழகாகியிருந்தாள். பளபளப்பும், கம்பீரமுமாய் - நேர்த்தியாய் உடுத்தி... தான் ஏன் இத்தனை அலுத்துச் சலித்து விட்டோமென்று துளி கோபம் வந்தது. மனித ஆயுளில் 33 வருடங்கள் இளமையோடு சேர்த்தி தானே!

''எத்தனைக் குழந்தைங்க கமலி உனக்கு?''

''ரெண்டு பொண்ணுங்க.''

''10 வயசு 8 வயசா?''

''பத்தும், ஆறும்'' - சிரித்தாள்.

''இதென்ன இப்படி 'பளீர்' கலரெல்லாம் குமிச்சு வச்சிருக்கு? லைட் கலர் தானே கட்டுவே? கத்தரிப்பூ கலர்னா உயிராச்சே?''

''அவருக்குப் பிடிக்காது.''

''அவருக்குப் பிடிச்ச மாதிரி ரெண்டு. உனக்கு இஷ்டமானதா ரெண்டு. அது சரி, சேலை எதுக்கு இப்ப?''

''நாளைக்கு எனக்குப் பிறந்த நாள்.''

''வாழ்த்துக்கள் - அப்ப லைட் கலர் தான்.''

இவர்கள் பேசி முடிப்பதற்காகப் பொறுமையாய்க் காத்திருந்த விற்பனையாளரிடம் பூரணி சொன்னாள்:

''இது வேணாங்க. லைட் கலர்ஸ், பொடி பூவா எடுங்க.''

கமலிக்குத் திடீரென உற்சாகமாய் இருந்தது. ''கத்திரிப்பூ கலர் இருக்கா?'' - சிறு பெண்ணாய்க் கேட்டாள்.

ஐந்தே நிமிடங்களில் அவள் கேட்ட நிறுசில் புடவை அமைந்து போனது. பொருத்தமாக ரவிக்கைத் துணி பொறுக்கி எடுத்து வெளியே வந்தனர்.

''கிளம்புவோம் வா. மார்க்கெட் பக்கந்தானே சொன்னே? நான்





போற வழி தான்.''

''இல்லை, மார்க்கெட் தாண்டி. சாந்தி நகர்.''

''கூட 2 நிமிஷம்.''

ராயல் தியேட்டர் பக்கமாய் நடந்தவர்.

''நீ ஒண்ணும் வாங்கலையா?''

''சேலை ஒண்ணு ஆர்டர் பண்ண வந்தேன்.''

''ஓஹோ.''

''வெண்பட்டுலே கறுப்பு பார்டர்.''

''வெள்ளையும், கறுப்புமா? அவரு ஒண்ணுஞ் சொல்ல மாட்டாரா?''

''நல்லாத்தானிருக்கும். ஆசைப்பட்டுத்தானே எடுக்கறோம். அவர் தங்கை சிங்கப்பூரிலேர்ந்து எனக்கு ஒரு முத்து செட் வாங்கி வந்தா. அதுக்குப் பொருத்தமா சேலை.''

யோசித்துப் பார்க்க வெண்பட்டு, முத்து, மிதமான ஒப்பனையில் பூரணி பிரமாதமாயிருப்பாள் எனக் கமலிக்குப் பட்டது.

''என் வீட்டிலே கத்தரிக்காய் சமைக்கும் போதெல்லாம் நான் உன்னை நினைச்சுக்குவேன் கமலி. தினம் ஒரு தினுசு சாதத்தோட எண்ணெய்க் கறி பண்ணி எடுத்துட்டு வருவே. வதக்கியதில் கருப்பா பளபளன்னு மின்னும் உன் கத்தரிக்காய்.''

''எங்க வீட்ல அதைச் சமைக்கறதேயில்லை.''

''அப்படியே சாப்பிட்டிருவியா?'' டி.வி. விளம்பர பாணியில் கேட்டாள் பூரணி.

''சேச்சே... அட இதென்ன மொபெட். இதிலியா நான் ஏற?''

''நீ ஓட்ட வேண்டாம். பின்னால உட்காரு.''

''எனக்குப் பழக்கமேயில்லையே...''

''உங்க வீட்ல பின்ன என்ன பென்ஸா?''

''ஒரு பழைய பியட்.''

''நீயும் ஒரு மொபெட் வாங்கிக்க. சிக்கனம். நான் ஓட்டக் கத்துத்தரேன்.''

''கொஞ்சம் மெள்ளவே போ பூரணி.''

''மெட்ராஸ் டிராஃபிக்குல பொண்ணுங்க புகுந்து வளைஞ்சு ஓட்டறதை நீ பார்க்கணும். திருநெல்வேலியில ஓட்றது நத்திங். இங்க இடதுபக்கம் ஓவர்டேக் பண்ண மாட்டாங்க. பொண்ணுங்களுக்குத் தனிமரியாதை.''

''ம்'' கொட்டிய கமலி, சவாரியை அனுபவிக்க ஆரம்பித்திருந்தாள். தாமிரபரணியை, பஸ் - சைக்கிள் பயணிகளை, போஸ்டர்களை - குழந்தை போல முறைத்துப் பார்த்தாள். காற்று முகத்தில் மோத, தலைசாய்த்துப் புன்னகைத்தாள்.

பஸ் ஸ்டாப் அருகே நிறுத்திய பூரணி, ஆளுக்கொரு ஐஸ்க்ரீம் வாங்கி வர, மரத்தினடியில் பேசியபடி சாப்பிட்டனர்.

குடும்பம், வேலை என்று பேசி மறுபடி கத்தரிக்காய்க்கு வந்தனர்.

''அதென்ன கத்தரிக்கா சமைக்கறதில்லைங்கற? அது இல்லாம சோறு இறங்காதே உனக்கு?''

''அதெல்லாம் ஒரு காலம்.''

''சே பாட்டி மாதிரி பேசாதே. பிடிச்சதை செய்து சாப்பிடக் கூடவா காலம்?''

''அவருக்கு அது அலர்ஜி.''

''அதுக்கென்ன?''

''எனக்குன்னு சமைக்கறதுக்கு... சோம்பல்.''

''நோ நோ. கல்யாணமானா நமக்குப் பிடிச்சதை விட்டறணுமா? சின்னச் சின்ன விஷயங்கள்ல தான் சுவாரஸ்யமே. இந்த ரவிக்கையைப் புது தினுசில தைச்சு, நாளை சுத்திரிப் பூ சேலை கட்றச்சே ஒரு உஜார். சுடச்சுட எண்ணெய்க் கறி செய்து, பாட்டுக் கேட்டுட்டே சாப்டறது ஒரு குஷி. தனக்குன்னு தனியா செய்துக்கறதுல பொம்பளைங்களுக்கு ஒரு பயம்... தன்னலமோன்னு ஒரு குற்றவுணர்வு.''

''மித்த யாரும் சாப்பிடாத போது...''

''பிரிட்ஜில வச்சு இரண்டு நாள் சாப்பிடு. கொஞ்சம் தன்னலம்





அவசியம் கமலி. அது வாழ்க்கையை இனிதாக்கும். செஞ்சு பார். இனி ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் உன் வயசு இறங்கிட்டு வரும் பாரேன்.''

''அது சரி.''

''நீ இளமையா, உற்சாகமா இருக்க - அவருக்கும் குஷி பிய்ச்சிக்கும்.''

மார்க்கெட்டில் இறங்கிய பூரணி, மறுநிமிடம் ஒரு காகிதப் பையுடன் வந்தாள்.

''நல்ல பிஞ்சுக் கத்தரிக்காய். நாளைக்குச் செய்து என்னை நினைச்சுட்டே சாப்பிடு.''

கிளம்பிய மொபெட் வேகமாகச் செல்லச் செல்ல, ஏனோ கமலிக்குப் பயமாகவே இல்லை. தலைமுடி காற்றில் சிலும்ப, சின்னப் பெண் போல உணர்ந்தாள் அவள்.

(மங்கையர் மலர், மே 1992)

★ ★ ★

# ரசனைக் கூத்து

**வ**னஜா தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். அத்தனை நேரமும் அவளோடிருந்த சிநேகிதிகளை அண்ணி டிபன் சாப்பிட அழைத்துக் கொண்டு போயாயிற்று. பத்து நிமிடம் போல அப்படியே கண்ணை மூடி அமர்ந்திருந்தவள், சற்று நிம்மதியாய்த் தன்னைப் பார்த்துக் கொள்ள நேரம் கிடைத்திருந்தது.

கண்ணாடியில் பளபளத்த பிம்பத்தைக் கூர்ந்து பார்த்தாள். படிப்பு முடித்து இரண்டு வருடங்கள் வீட்டிலிருந்ததில் எடை கூடியிருந்தது. 'தாடையில் சதை சேர்ந்து வயதும் இருபத்து மூன்றைவிடக் கூடுதலாகத் தெரிகிறதோ?' யோசனையுடன் கன்னங்களை அழுந்தத் தடவிக் கொண்டாள்.

போதாததற்கு 'மாப்பிள்ளை வீட்டார் கொடுத்திருந்த சேலையைத் தான் கட்ட வேண்டும்' என்று அம்மா சொல்லியிருந்தார்கள். கரும்பச்சையில் அரக்கு கரை. என்ன நிறப் பொருத்தம்? ஒரு முழ அகல ஜரிகைக்கரை அவள் உயரத்துக்குப் பாந்தமாயிருக்காதென்று அவர்களுக்குத் தெரிய வேண்டாம்? அவர்கள் அந்தஸ்தைக் காட்ட ஜம்பமாய் எடுத்து வந்தாயிற்று - புடவை உடலெங்கும் கொசகொசவென்று ஜரிகைப் பூக்கள் வேறு!

வனஜாவின் கழுத்து மெல்லிசாய் நீளமாய் இருக்காது. அதனால் அவள் கழுத்தை ஒட்டினாற்போல நகை அணியாது, ஆரம் போல தழைவாகப் போட்டுக் கொள்வாள். அவள் கழுத்தை நெரிப்பது போல் ஒரு அட்டிகையை நிச்சயத்தன்று மாமியார் போட - அதை





இன்று அண்ணி எடுத்து மாட்டி விட்டிருந்தாள்.

''எனக்கு இதெல்லாம் ஸூட் ஆகாதேண்ணி''

''ஷ்... அவங்களுக்கு சந்தோஷமாயிருக்குமில்லே?''

''என் கல்யாணத்தன்னிக்கு என் இஷ்டம் போல பண்ணிக்கிறேனே''

''இத்தனை நாள் அப்படிப் பண்ணியாச்சே! இனி அவுங்க விருப்பப்படி தான்''

அண்ணி கிண்டல் பண்ணுகிறாளோ?

வனஜாவுக்கு எரிச்சலும் அழுகையும் பொங்கின. அவள் தன் சொந்தம், வீடு, ஊர் அத்தனையையும் விட்டு மாப்பிள்ளை வீடு போகணும் - சரி - ரசனையையும் கூடவா விட்டு விட வேணும்?

தன் அண்ணனின் திருமணத்தின் போது தானும், தன் தாயுமாக செய்த ஆர்ப்பாட்டங்கள் வனஜாவின் நினைவுக்கு வந்தன.

'அண்ணி, நா பார்க்கறப்போல்லாம் டார்க் கலர் தான் போட்டிருக்கிங்க? எங்க வீட்ல எல்லாருக்கும் லைட் கலர்தான் பிடிக்கும். நிச்சய, கல்யாண சேலையெல்லாம் அப்படியே எடுத்துரலாம் என்ன?'

'ஐயோ... எங்கம்மாவே இன்னும் கொண்டை போடறதில்ல. நீங்க தலையை தழையப் பின்னி பூ சுத்திருங்க அண்ணி.'

'லிப்ஸ்டிக்கெல்லாம் வேண்டாம்மா. பெரியவங்களுக்குப் பிடிக்காது.'

'ஒட்டியாணம் எதுக்குன்னா கேக்குற? வைர ஸெட்டும், ஒட்டியாணமுமில்லாம எங்க வீட்டுக்கு மருமக வந்ததில்லையே. பன்னிரண்டு பவுனாவது போட்டு ஒண்ணு செஞ்சிடுங்க. லாக்கர்ல கிடக்கட்டும்.'

'ஸ்பிரிங் இல்லாத கட்டிலு வேண்டாம். தம்பிக்கு ஒத்துக்காது... மாத்திடுங்க.'

'கலியாணத்துல புலவ், சாப்ஸ் கறி...? கேள்விப்பட்டதில்லை... கோழி பிரியாணி, குருமா, கட்லெட் சரியாயிருக்கும்.'

பூ அலங்காரம், மியூஸிக், வீடியோ, சமையல் என்று

அனைத்திலும் மூக்கை நீட்டி, தங்கள் கட்டளைகளெல்லாம் நிறைவேற்றப்பட்டாயிற்று என்றும் அலுக்காமல் போய்ப் பார்த்து நிச்சயம் பண்ணிக் கொண்டது உறுத்தலாய் நினைவில் வந்து நின்றது.

அண்ணியின் கல்யாணச் சேலை, நகை, செருப்பு வரை வனஜாதான் தேர்ந்தெடுத்தாள். 'ஹீல்ஸ் வேண்டாம். அண்ணி ஒல்லி... ரொம்ப ஒடிசலா தெரிஞ்சிடும்.'

தக்காளி நிற டிஷ்யூ பிரியம் என்று அண்ணி சுசிலா கோடி காட்டியும் வனஜா மசியவில்லை. 'டிஷ்யூ எந்த காலம்...! இந்த தாமரைப் பூ ப்ரொகேட் புதுசா இல்ல?'

'ரவிக்கை கை இத்தனை குட்டையா உங்களுக்குப் பொருந்தலை. நீளமா தச்சுக்கோங்க' - வனஜாவின் ஆணைகள்.

'சேலை முந்தானை இத்தனை நீளம் எதுக்கும்மா? கொசுவத்திலே மடிப்பே வராதே' இது அம்மா. வனஜா சொல்லுக்கு அன்று ஏக மதிப்பு. அவள் சொற்படி பெண் வீட்டார் ஆடினார்கள்.

'வனஜா பாப்பாக்கு எல்லாம் திருப்திதானா?' வாய் நிறைய கேட்டார்கள். அண்ணி தலை கவிழ்ந்திருந்ததில் அவளுக்கு சந்தோஷமா, இல்லையா என்பது தெரியவில்லை - வனஜாவின் மரமண்டையில் ஏதும் அன்று உரைக்கவில்லை.

இன்று கழுத்தைக் கவ்வும் அட்டிகையும் பொருந்தாத கட்டி ஜரிகைச் சேலையுமாக நிற்கையில் உறைக்கின்றது.

கதவு திறக்க அண்ணி கையில் டிரேயுடன் நுழைந்தாள். ''வஜீ மாப்பிள்ளை வந்தாச்சு. சூடா வடையும் ஜில்லுன்னு ஜூஸும் கொணாந்திருக்கேன். சாப்பிட்டுட்டுக் கிளம்பு'' என்றாள். கருஞ்சிவப்புப் பட்டில் அண்ணி அமர்க்களமாயிருந்தாள். கெம்பு செட்டுடன் தழைய கொண்டையிட்டு சிவப்பு ரோஜாக்களைச் செருகியிருந்தாள்.

''அண்ணி, நீங்க ஸ்லிம்மா அழகாயிருக்கீங்க. உங்க சேலை, நகையெல்லாம் உங்களுக்கு ரொம்பப் பொருத்தம்.''

சுசிலா நிமிர்ந்து முகம் மலர சிரித்தாள்.

''நீயும் ஜோரா இருக்கே வஜீ. இன்னொரு வடை





வைக்கட்டா?''

''அண்ணி... ஐ யம் சாரி'' வனஜாவின் உதடுகள் துடித்தன.

''என்ன வஜீ... திடீரென...'' அண்ணி உண்மையான பாசமும் பதட்டமுமாகக் கேட்டாள்.

''உங்க கல்யாணத்தப்ப எல்லாம் எங்க இஷ்டத்துக்கு நடந்துச்சு. அது உங்க மனசுக்கு எத்தனை வருத்தமா, குறையாயிருந்திருக்கும் என்பது எனக்கு இப்பப் புரியுது. மாப்பிள்ளை அக்கா அதிகாரம் தூள் பறக்குது. இந்த அட்டிகை, சேலை, பேச்சு எனக்கு எதுவும் பிடிக்கலை. இப்படிக் கோமாளி மாதிரி நா வெளியே போக முடியாது...''

''ப்ச்... கோமாளியா? பிரமாதமா இருக்கே வஜீ. இதெல்லாம் ஒரு நாள் கூத்து. அவுங்க அடிச்சிட்டுப் போகட்டும். அப்புறம் உன் இஷ்டம் தான்.''

மூன்று வயதே கூடுதலான சுசிலா, மகா அனுபவத்தோடு பேசினாள்.

''எங்க என் இஷ்டம்? அங்கல்ல நா போய் இருக்கணும்?''

''என் கல்யாணத்தப்ப நீயும் தான் உஷார்ல எத்தனையோ சொன்ன. இப்ப நான் அழுத்தமான கலர்லதான் சேலை எடுத்துக்கறேன். கட்டில்ல ஸ்பிரிங்கை எடுத்து சட்டைப் பாலியாச்சு. கொண்டை போடறேன். நா சமைக்கறத நீங்களும் 'ஆஹா'ன்னு சாப்படறீங்க'' சுசிலா அடுக்கினாள்.

நீண்ட மாங்காய் மாலையைத் தான் அண்ணி ஒட்டியாணமாக கல்யாணத்தின் போது போட்டிருந்தாள். பிறகொரு நாள் கருப்பு பட்டு கட்டி அதைக் கழுத்து நிறையப் போட்டுக் கொண்ட போது அம்மாவே,

''நல்ல ஐடியா சுசிலா எங்க ஒட்டியாணமெல்லாம் பாங்க்ல தூங்க, நீ இதை அடிக்கடி உபயோகிச்சிக்கலாம்'' என சிலாகித்தார்கள்.

மாடிப்படியில் பேச்சும் சிரிப்புமாகக் கேட்டது.

வனஜாவின் அம்மா, பதினெட்டு வயதுப் பெண் போல அவசரமாக குடுகுடுவென ஓடி வந்து, ''மாப்பிள்ளையோட அக்கா வராங்க... எல்லாம் ரெடி தானா?'' - பதட்டமாக கேட்க,

''அவங்க இப்ப எதுக்கு இங்க வரணும்'' சிடுசிடுத்தாள் வனஜா.

''நீ முதல்ல ஜூஸைக் குடி'' - அண்ணி வரவேற்க வெளியே பாய்ந்தாள்.

மாப்பிள்ளையின் தகப்பனார் சில வருடங்களுக்கு முன்பு தவறியிருந்ததால் மாமியாரை அதிகம் காண, கேட்க முடியவில்லை. எல்லாம் நாத்தனார் மயம்!

''வாங்கக்கா. வனஜாவைப் பார்த்தீங்கல்ல. நீங்க தந்த புடவை நகைதான் போட்டிருக்கா.''

அறையுள் நுழைந்த நாத்தனார் சிரித்தபடி வனஜாவை மேலும் கீழுமாகப் பார்த்து,

''அழுத்தமான கலர்தான் உனக்கு எடுப்பாயிருக்கும்மா. அன்னிக்கு கட்டியிருந்த தளிர் பச்சை பனாரஸ் உனக்குப் பொருத்தமேயில்லை'' தோளில் கை போட்டு முதுகைத் தடவியவள் -

''சட்டை கை என்ன தொளதொளப்பாயிருக்கு? டைட்டா தச்சிக்கோ, இன்னும் குண்டா காட்டுது'' என்றாள்.

''திருச்சியில என்ன பூ கட்டுறாங்க - பச்சை நூல்ல? மதுரை மல்லிகைக் கட்டு மாலைதான்'' என்றபடி பையிலிருந்த மதுரை மல்லியை எடுத்துக் கொண்டையைச் சுற்றி வழிய வழிய வைக்க - வனஜா அதிஜாக்கிரதையாகப் போட்டுக் கொண்ட கொண்டை பூக்கட்டில் அவிழ்ந்து போனது.

வனஜா, தன் அண்ணியை நிமிர்ந்து பார்த்தாள். ''ஒரு நாள் கூத்து'' சுசீலா அபிநயிக்க - வனஜா சீறி எழுந்த புன்னகையை மறைக்க தலை கவிழ்ந்து கொண்டாள்.

★★★



# சுத்தம்

டேவிட்டிற்குத் தாங்க முடியவில்லை. இருபது வருடங்களாக வேலை பார்த்து வரும் முதலாளிதான். ஆனாலும் அவர் ஏசுதலில் அவன் மனம் கூசிக் குறுகியது. சிறுவனாகக் கார் கழுவித் துடைத்து, கிரீஸ் வைத்து ஆயில் பார்க்க, குட்டு வாங்கி சரியான சைஸ் ஸ்பானர் நீட்ட... அவன் வேலை பழகியதே இங்கு தான். இருந்தாலும்...

'பண்டிகைக் கொண்டாடுதானாங் போக்கத்த கழுத. ஊருல தெருவெல்லாம் பட்டறையில. எவன் வாராங் இங்க? வேலயக் கூறாப் பாரு மூதி. கடனு கேக்குதாங் ராஸ்...க்கலு. ஏங் புதுசு கட்டாட்டி துரைக்கு கிறிஸ்மஸு கழிஞ்சு புது வருசம் வராதோ? நானு என்னத்தப் புதுசு கட்டப் போறேன்? எவங்கிட்ட காசிருக்கு? போடா... போயி திருடு. அதையாச்சும் ஒழுங்காச் செய்யி போ....''

பேசி முடித்துக் காறித் துப்பினார் முதலாளி. யதார்த்தமாய்த் துப்பினாரா இல்லை 'துப்புக் கெட்டவனே' என்ற வெறுப்பில் விளைந்த செய்கையா என்று குழம்பி, தன் முகத்திலே அவர் உமிழ்ந்தது போலவே எண்ணிக் குறுகினான் டேவிட்.

திருமணமான கையோடு அவன் தனியாகப் பட்டறை ஒன்றை ஆரம்பித்தான். அவன் மனைவியின் மொத்த மூணு பவுன் நகையை விழுங்கியதோடு அது அவன் இடுப்பில் எட்டி உதைத்து விட்டது. மறுபடி முதலாளியே கதி என்று திரும்பியவன், அவருக்கும் வரும்படி அதிகமில்லை என்று புரிந்து கொண்டான்.

''அங்கன இங்கன காலு பாவாம கருத்தா இங்கன கிடந்திருந்தா

வாடிக்கைக்காரங்க இருந்திருப்பாங்க. நிறைய பேரு கலஞ்சு போயாச்சு.''

அவனுக்கு அன்றைய வேலையைத் தொடர மனமில்லை. வெறியாய்ப் பணத்தாசை உள்ளே புகுந்து உலுக்கியது. 'திருடத்தானே சொன்னீரு? சுளுவான வழி. யார்கிட்டேயும் போயி குழைய வேணாமுல்ல' மனத்துள் முனகியபடி ஒரு மைல் தூரம் நடந்தான். பஸ் ஸ்டாண்டில் நுழைந்தவனின் கண்கள், சுற்றிலும் ஒரு புது சுவாரஸ்யத்துடன் நோட்டமிட்டன.

'திருடிறலாம் போலிருக்கே!'

மனமும் கையும் பரபரத்தன.

'எப்படி, ஏது... அப்புறம் என்ன?' என்று அறிவு கேட்கக் கூடாதபடி மனம் மழுங்கிக் கிடந்தது.

சளசளக்கும் கூட்டத்தில் அவன் தைரியம் கூடியது. மனம் 'தப்பு, தப்பு' எனக் கூவி கடைசியாய்ப் படபடவெனத் துடித்தது.

புத்தி பல சால்ஜாப்புகளை அள்ளி வீசி ஆசுவாசப்படுத்தியது.

'என்னாத் தப்பு? சப்ஜாடா டிரஸ் பண்ணியிருக்காங்க. பூவு இல்லாத கொண்டை ஒண்ணில்லை. இதுங்கிட்ட எடுத்தா என்ன? அங்க குழந்தைகளுக்குத் துவைச்சு மாத்திக் கட்டத் துணியில்ல. தலையில் வைக்கப் பொட்டு எண்ணெய்க்கு வக்கில்ல. முடி செம்பட்டை பாஞ்சு, கண்ணு பொங்கி அலையுதுங்க. நாலு கிழமை கூட வக்கணையா கறி சோறுதிங்கறது அபூர்வம். ஸ்கூலுக்கு அனுப்பி படிக்க வைக்கறதிலேயே மூச்சு முட்டிறுது. கட்டிக்கிட்டவளுக்கு ஆசையா ஒரு வளவி, ஸ்வீட்டு...? ம்ஹூம். கலியாணங்கழிஞ்ச புதுசுல அவ ஆசையாக் கேட்டது, ரவிக்கைக்குள்ளார போடுற வெள்ளை பாடிதான். அதுகூட வாங்கித் தர முடியாமத் தட்டிப் போச்சு. இன்னிய வரை அவ சிட்டித் துணியில ரவிக்கத் தச்சுக் கீழே இறுக்கி முடிஞ்சுக்கிறா. அம்புட்டுதாங்.

'யப்பா வீட்டுல கலர் பேப்பரு ஒட்டிரணும்பா. உச்சியில ஸ்டாரு கட்டிரணும்பா'ன்னு செம்பாக்குட்டி விரல் ஆட்டி ஆட்டிக் கேக்குது. பண்டிகையன்னிக்குக் கோயிலுக்குக் கூட போயிர முடியுமான்னு தெரியலை. துவச்சு சுத்தமா போவணுமில்ல? ச்சை... கொடுமை...'





உள்ளே வெறி கூடியது.

மனிதக் காடு ஒன்றைத்தன்னுள் அடைத்துக்கொண்டு கிளம்பிய டவுன் பஸ் ஒன்றில் தொத்திக் கொண்டான். குடைந்து உள்ளே முன்னேறினான். கிரீஸில் ஊறிய அவனது உடைகளைக் கண்டு பிறர் வளைந்து ஒதுங்கினர். ''திரும்ப பெனாசிர் வந்தாச்சு பாத்தீரா? பொம்பளைங்க ஊரையும் ஆட்சி பண்ணுதுங்க - உலக முழுசும் இதே கூத்துதான்.' உட்கார்ந்து காலாட்டியபடி பேசினார், ஒருவர். கால் தாளத்திற்கேற்ப ஜிப்பாவில் கனத்த அவரது பர்ஸூம் குலுங்கியது. கழுத்தில் சங்கிலி மின்னியது. ஆனால், அதை 'அடிக்கு'மளவிற்கு அவனுக்குத் தேர்ச்சி கிடையாது! அது 'கில்ட்டு அல்டாப்'பாகக் கூட இருக்கலாம். அவன் முண்டியவர்களுக்கு வழிவிட்டு அவரருகே ஒண்டினான். வாகாக நின்றபின், இடது கையால் பர்ஸை நிமிண்டி விட்டான். புதுப்பட பேனர்களை அவர் எம்பி எட்டிப் பார்க்கையில், நிமிண்டிய பர்ஸூம் எம்பி அவனது வலது கைக்குள் வந்தது. நெளிந்து சட்டைக்குள் பதுக்கினான்.

முதல் திருட்டில் வியர்த்து, உடல் சில்லிட்டு விட்டது. ஒரு மணி நேரம் வெல்டிங் வைத்திருந்தால் கூட இவ்வளவு ஊற்றாது. டிக்கெட் எடுத்து மறு ஸ்டாப்பில் இறங்குகையில் அவன் மனமும் உடலும் பாரமாய்க் கனத்தன.

சந்து ஒன்றினுள் புகுந்து மறுபக்க பெரிய வீதியை அடைந்தபின் மெள்ள பர்ஸை உருவினான். பிரிக்கையில் விரல்கள் நடுங்கின.

டீ மட்டுமே குடித்து அவன் வேலை செய்த போதும்கூட ஸ்பானர் பிடித்த அவன் விரல்கள் நடுங்கியதில்லை.

உள்ளே மூன்று பெரிய நோட்டுக்களோடு சில்லரை நோட்டுக்களும் முறுமுறுத்தன.

அவன் மூச்சு வேகமாய் வெளியேறியது.

மூடி பாண்ட் பாக்கெட்டினுள் செருகியவன், அருகிலிருந்த ஓட்டலுக்குள் நுழைந்தான்.

நெஞ்சு உலர்ந்து கிடந்தது. தண்ணீர் மட்டும் கேட்கப் பயந்து, ''நாலு இட்லி, ஒரு காப்பி. முதல்ல தண்ணி வேணுங்க'' என்றான்.

காரச் சட்னியும், இட்லியும் சாப்பிட்டான். உறைப்பும், சூடான

காப்பியுமாய் மாறி மாறிச் சாப்பிட, நாவு எரிவு கண்டு ஊறியது.

கண்ணாடிக்குள் சதுரமும் உருண்டையுமாய் இனிப்புகள் வரிசையிட்டிருந்தன.

''பில்லா?''

''பார்சலும் வேணும்.''

''என்ன?'' வினாவுடன் அலட்சியமாய் சர்வரின் புருவங்களும் உயர்ந்தன.

''உருண்டையா, சக்கரத் தண்ணில மிதக்குதே?''

''ரசகுல்லா.''

''ம்... அதுல பத்து.''

''ஒன்னு மூணு ரூவா.''

''இருக்கட்டும். பத்து ரூவாக்குக் காரம்... பக்கோடா வையி.'' பணம் இருந்தால் தெம்புதான்!

பார்சலுடன் வெளியேறிய டேவிட்டிற்கு இன்னும் தன் 'அதிர்ஷ்டத்தை' நம்ப முடியவில்லை.

''ஐயா.''

அந்த மெல்லிய குரல் அவனைப் பலமுறை அழைத்த பின்னரே குனிந்து பார்த்தான்.

ஒரு சிறுமி - சரம் சரமாய் கண்ணாடித் தாளில் பாச்சை உருண்டைகள், கிளிப்புகள், சின்னத்தோளில் ஒரு நீண்ட துணிப் பையுடன் நின்றிருந்தாள்.

''சோப்பு, சீப்பு, பின்னு, பொட்டு... எதுனாச்சும் வாங்கிக்குங்கய்யா'' கண்களும் கெஞ்சின.

''வேணாம்மா.''

''எதுனாச்சுமய்யா. என் தம்பிக்குப் பாலு வாங்க ஆயா காத்திட்டுருக்குய்யா. 2 ரூவாக்கு வாங்கிக்கோங்களேன்.'' கூட நடந்து கொண்டே இளைஞ்சினாள்.

நிறமிழந்த சட்டை அவளது மெலிந்த தோள்களிலிருந்து நழுவ, அதை மேலே தூக்கிவிட்டுக் கொண்டபடி அவள் சுட்டிக் காட்டிய திக்கில் அவன் ஜாதிப் பெண் ஒருத்தி கையில் குழந்தையோடு உட்கார்ந்திருந்தாள்.





ஏழை ஜாதி!

''அதா ஒங்கம்மா?''

''ஆமா.''

''என்ன பண்ணுது?''

''இது விக்கிறதுதாங்!''

''நீதான விக்குற?''

''தம்பிய பாத்துக்கணுமில்ல?''

'பாலுக்கும் வக்கில்லாதவளுக்கு எதற்கு இன்னுமொரு குழந்தை?' அம்மாவை முறைத்தவன், சிறுமியிடம் கேட்டான்.

''ம்... என்ன தர்றே?''

''எதுனா கேளுங்கய்யா'' உற்சாகமானாள்.

வார்த்தைக்கு வார்த்தை அவனை அவள் 'ஐயா' போட்டு அழைத்தது அவனுக்கு வேடிக்கையாயிருந்தது.

தீயிட்டாலும் எரிக்க முடியாத பிசுக்கில் நிற்கும் தரித்திரன் அவனை, 'ஐயா' என்றழைக்கும் தந்திரக்காரக் குட்டி!

''தொவைக்கிற சோப்பு இருக்குதா?''

''இருக்குய்யா. ரெண்டர ரூவாத்தான். நல்லா வெளுக்கும்.''

''ரெண்டு குடு.''

பர்ஸை ஜாக்கிரதையாய்க் கொஞ்சமாய்ப் பிரித்து ஐந்து ரூபாய்த்தாளை உருவி நீட்டினான்.

அவள் பையுள்ளிருந்து சோப்பைப் பரபரப்பாய் எடுக்கையில் பாச்சை உருண்டைச் சரம் கீழே சரிந்தது. அலமலந்தவளுக்கு ஆதரவாக அவனும் பொறுக்கி உதவினான்.

'அம்மாக்காரி இருக்கிற இடத்தை விட்டு நவுருதாளா பாரு' - மனசுக்குள் கறுவினான்.

ஸ்வீட், காரம், சோப்புப் பொட்டலங்களோடு நடக்க, மனம் பலவாறு கணக்குப் போட்டது.

'போனதும் துணி துவைச்சுக் காய வைக்கணும். காஞ்சிருமா? எங் காயாமா? வெயிலு 'சுளீரு'ங்குது. எண்ணெய் பூசி, வெந்நியில குளிச்சு, சாப்பிட்டுப் புள்ளைங்களோடு வெளிய கிளம்பிறணும்.

எங்ஙன போவ?'

'அட எங்கனாச்சும் - ஜேபியில காசிருக்குல்ல, பிறவென்ன, கடைக்குப் போய்ப் புதுச எடுக்கனும்.'

''ஐயா.''

''ஐயா, கூப்பிடக் கூப்பிட விரசலா நடக்குறீங்களே?''

''என்ன பாப்பா?''

''இதை வுட்டுட்டுப் போறீங்களே?''

திகைத்தான். அந்தப் பருத்த கறுப்பு பர்ஸ் அவளது பிஞ்சு விரல்களில் விகாரமாய்த் தெரிந்தது.

''நீங்க குனியறச்சே கீழே வுழுந்துருச்சாம். அம்மா பாத்துட்டு சொன்னாங்க.''

சிறுமிக்கு ஓடி வந்ததில் மூச்சிரைத்தது.

''நீங்க பஸ்ஸு¬ல ஏறிடுவீங்களோன்னு பயந்து ஓடியாந்தேங்.''

''ஆங்'' - அவனுக்குப் பேச்செழவில்லை.

''பிடிங்கய்யா. தம்பிக்குப் பாலு வாங்கனும். நீங்க தந்த அஞ்சு ரூவாயைக் கூட அம்மாக்கிட்ட இன்னுந்தரல.''

''தாங்க்ஸு¬ பாப்பா.''

''எம்மாம் பணம் - சாக்ரதையா இருங்க.''

சிறு வயதிலேயே சம்பாதிப்பதில் காசு அருமை புரிந்தவள், பெரிய மனுஷ தோரணையில் அறிவுறுத்தினாள்!

''சரி'' புன்னகைத்தான்.

''ஒனக்குக் காசு தரேன் - மிட்டாய் வாங்கிக்கோ'' பர்சைத் திறந்தான்.

''ஐயோ, வேணாம். அம்மா திட்டும்'' என்றவள், தோளிலிருந்து நழுவும் சட்டையைத் தூக்கி விட்டுக் கொண்டு பறந்தாள்.

அவனுக்குத் தாங்கவில்லை.

அவன் தாயின் நினைவு வந்தது.

சிறு வயதில் அவன் தவறுகளை, ''டேய், களவாணிப் பயலே... திருட்டு ராஸ்கோலு... செய்வியாலே... செய்வியா?'' என்று





விளக்குமாறோடு கூவியபடி அவனைப் பாய்ந்து அடித்துத் திருத்தியதெல்லாம் இன்னும் மறக்கவில்லை.

கர்த்தரின் பத்துக் கட்டளைகளில் ஒன்றான 'களவு செய்யாதிருப்பாயாக' என்பதை ஞாயிறு வேத வகுப்புகளில் இரைந்து இரைந்து சொன்னது மனத்துள் உறுத்தியது.

அந்த ஏழைத் தாய் பிள்ளைகளுக்குக் கல்வி, சுகவாழ்வு தரக் கூடாவிட்டாலும், ஒழுக்கத்தை, நேர்மையைத் தந்திருக்கிறாள் என்ற நினைப்பில் அவன் கண்களும் மனமும் நிறைந்தன.

'வயிறு காய்ந்து, வற்றலாயிருந்த இரு பெண்களுக்கிருந்த நேர்மை தடி ஆண்பிள்ளை தனக்கு ஏன் இல்லாது போனது?'

டேவிட் இப்போது நிஜமாகவே குறுகினான். ஆனால் மனம் மெல்ல நிமிர்ந்தது.

'சே... என்ன காரியஞ் செஞ்சு போட்டேன்? பர்ஸு¬ல ஜிப்பாக்காரரு விலாசம் கிடக்குது. பெருமாளுபுரந்தானே? அஞ்சாம் நம்பருல ஏறுனா பத்தே நிமிசம். வீட்டுக்குள்ளார பர்ஸ வீசிரலாம். எத்தனைக் காசு? பாவம் பதச்சுப் போயிருப்பாரு மனுஷன். என்ன ஐம்பது ரூவா எடுத்துச் செலவழிச்சிருப்பேனா? மறு மாசம் ரூவாயோட ஒரு மன்னிப்புக் கடுதாசி எழுதிப் போட்டுருவோம் - புத்தி கெட்டுல்லப் போச்சு? திருட்டுக் காசுல மினுக்கிக்கிட்டு பண்டிகை கொண்டாடிர முடியுமா? கோயிலுக்குள்ளார போயி முழங்காலு போட்டு ஜெபிச்சிர மனசு வருமா? வேணாம்பா வேணாம்.'

ஆவேசத்துடன் கால்களை வீசிப் போட்டு நடந்தான்.

வெயிலுக்கு மேலும் வியர்த்து வழிந்தது.

துணிகள் மேலும் கசங்கி நாறின.

ஆனாலும் உள்ளே மிகச் சுத்தமாக உணர்ந்தான் டேவிட்!

★★★

# சிற்றருவிச் சாரல்

"வரோம் கஜா'' என்ற முதலாளி காரிலேறிக் கொள்ள, கனத்த மர கேட்டுகளைத் திறக்க ஓடினான் அவன். ஒவ்வொரு முறை சீஸன் முடிந்து முதலாளி குடும்பம் ஊர் கிளம்புகையில் வருத்தமாயிருக்கும். அந்த மலை பங்களா தன் சிரிப்பு, ஆரவாரம், வகைவகையாய் இறைந்து கிடக்கும் துணிமணிகள், பாத்திரங்கள் அத்தனையையும் கழற்றி மூளிபட்ட உணர்வு. ஆனால், இம்முறை மனம் வேறு உணர்வில் கட்டுண்டிருந்தது.

வளைவில் அவர் முகம் திருப்பி இவனைப் பார்க்க - மூக்குக் கண்ணாடி பளபளத்தது. இவரது அப்பாவைத்தான் அவன் முதல் முதலில் 'முதலாளி' என்று விளித்தது. அப்போது இவர் 'சின்னவர்.' 'சின்னம்மா' புதுப் பெண்ணாய்ப் புகுந்த போது இந்த 'ஹில் டாப்' பங்களா எப்படிக் கலகலத்து, ஜொலித்தது!

கோடை விடுமுறையின் போது வீடு நிரம்பினாலும் 'பிக்னிக்' என்ற மந்திரச் சொல்லில் ஒரு மாற்றம் வரும் - அனைவரது கண், கால்களில் ஒரு துள்ளல் புகும். இலக்கேயில்லாமல் ஒருவரையொருவர் முட்டி மோதிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி சளசளப்பார்கள். சின்னம்மாவோடு வந்தது தான் இந்த 'பிக்னிக்' வார்த்தை. அதற்கு முன் 'கட்டுச் சோறு' தான்.

வார்த்தை வேறாயிருந்தாலும் உற்சாகத்தில் மாற்றமில்லை. இவனுக்கும்தான். ஜமுக்காளம், பெரிய கேனில் குடிநீர், ஸ்டவ், பாத்திரங்கள் - ஆப்பிள் ஜூஸுக்கென்று கண்ணாடிக் குவளைகள் என்று பார்த்துப் பார்த்து எடுத்து வைப்பான்.



'கண்ணாடி க்ளாஸெல்லாம் வேணாம்டா. உடஞ்சிடும்.' அப்பா திட்ட, ஒவ்வொன்றிலும் நாப்கின் சுற்றி அடுக்கிக் கொள்வான். பந்து, சீட்டுக்கட்டு, மீன்வலை ஒன்று மறக்க மாட்டான்.

ஊரை விட்டுப் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் பைன் மரங்களின் நடுவே இடம் ஒழித்து அனைவரும் அமர்ந்தவுடன் 'கோல்ட் காயின்' ஜூஸை ஜில்லென்று கலந்து பரிமாறி விடுவான்.

'கஜா சூட்டிகை' என்று பாராட்டு வரும் குளிர்ச்சியாய். வெள்ளைக்காரர்கள் விருந்தாடி வந்தால் கூடுதல் பரபரப்பு. அவனது ஒவ்வொரு சேவைக்கும் நீல விழி சுருங்க அவர்கள் 'தாங்க்ஸ்' 'தாங்க் யூ கஜ்ஜா' என்று புன்னகைப்பதில் மகுடங்கள், தலையில் ஏறும்.

கஜேந்திரன் என்ற பெயர் கூடச் சின்னவரின் பாட்டி வைத்தது தான். இவர்கள் வழியில் இவ்வகைப் பெயருக்கெல்லாம் வழியில்லை.

கொடைக்கானலில் பெரியவர் இந்த பங்களாவை விலை பேசிய கையோடு இவர்களின் குடும்பம் 'கேர்-டேக்கர்' பதவியில் அமர்த்தப்பட்டது. இவன் பிள்ளைகள் இதில் மூன்றாம் தலைமுறை.

இவர்கள் மனத்தில் நன்றி விசுவாசமென்றால், ஆண்டான் பக்கத்தில் அன்பு, தாராளம் என்று குறையேயில்லாத நல்லுறவு. மலை ஊர்களில் மாதம் இரண்டாயிரம் வந்தாலும் பற்றாது. வசதியாக இரண்டு அறை, விளக்கு, தண்ணீர் என்று 'அவுட் ஹவுஸ்' தந்திருப்பதாலும் பின்புறம் முள்ளங்கி, கோஸ், கிழங்கு என்று பயிராக்கிப் பயன்படுத்திக் கொள்வதாலும் சுலபமான வாழ்க்கை, மாதச் சம்பளம் போக, சீசன்தோறும் இவன் குடும்பம் மொத்தத்திற்கும் புது உடைகள் வரும்.

''என்ன கஜா, உன் வீட்டில வருஷத்துக்கு ஒரு உருப்படி கூடியிருது?'' சிரித்தபடி நீட்டுவார் சின்னம்மா. இனி அம்மா என்று கூப்பிட வேண்டியது தான். தலையில் இழை இழையாய் நரை ஓடவில்லை?

''எம்மா காசைக் கொட்டிப் புதுசு புதுசா? உங்க பழச ரெண்ட

இவளுக்குக் கொடுங்க போதும்.''

''அட, நா இங்கே பட்டு பட்டாக் கட்டறதப் பார்த்துட்டுக் கேட்கிறியா கஜா? இந்த ஊருக்குத்தான் இப்படி 'ஜில்'லுன்னு கட்டிக்க முடியுது! ஊரிலே பருத்திச் சேலை தான்'' என்றபடி மங்காத பட்டை எடுத்து அவன் மனைவிக்குத் தரும் புண்ணியவதி!

இப்போது பெரியம்மா இல்லை. ஆனாலும் பேரப்பிள்ளைகள், உறவு, சிநேகிதமார் என்று சீசனில் வீடு ரொம்பி விடுகிறது. பிக்னிக்' சமயங்களில் 'வேன்' அமர்த்த நேருகின்றது. முன்பு போலவே பார்த்து, கவனமாய் அடுக்கித் தரும் இவன், கூடத் தொற்றிக் கொள்வதில்லை.

''வரலியா கஜா?''

''இல்லீங்கய்யா - இங்க வேல கிடக்குது...'' பதவிசாய் மறுத்து விடுவான்.

மனைவி வந்த பிறகுதான் தனியாகப் போவது ஏதோ கிறலாய் - விசுவாசக் குறைச்சலாய்ப் பட்டது. அவளும் அம்மாளுடன் நின்று புளியஞ்சாதம், வறுவல், சாண்ட்விச் என்று தயாரித்தாலும் யாரும் அவளை அழைப்பதில்லை - இவரும் போவதில்லை.

மாலையானதும் வெறிச்சிடும் முற்றத்தில் விளையாடும் மூத்தவன் ராஜு தொணதொணப்பான்.

''ஏம்ப்பா, இன்னும் அவங்கெல்லாம் பிக்னிக்கு முடிஞ்சு வரலை?''

''மணி அஞ்சுதானல்ல ஆச்சு?''

''அம்மாவுக்கு நாலு மணிக்கு டீ வேணுமே?''

''ஸ்டவ் எடுத்துப் போயிருக்காங்கல்ல? அங்கியே போட்டுச் சாப்பிடுவாங்க.''

''பாலு?''

''டின்னு பாலுதான்.''

''அது டீக்குச் சரிப்படுமா என்ன?'' மனைவி கேட்பாள்.

''பிக்னிக்குன்னு போயி புல்லத் தின்னாக்கூட ருசிதாம் போ. புலவச்சியாறுன்னு ஒரு இடத்துக்கு ஜீப்பில் போனோம் பாரு...''

''எப்ப?''





''அது இருக்கும்டா பதினஞ்சு வருசம். என்னா அழகுங்கற! அப்பத்தான் பனியில செஞ்சு நிறுத்தின மாதிரி ஒரு இடம் வெள்ளிக் கம்பியாச் சாரல் தூவிட்டே இருக்கு. ஓடை நிறைய மீனு. வெள்ளைக்காரன் கொணாந்து வுட்ட ட்ரவுட்டு மீனு. ஸ்பெஷல் தூண்டில் போட்டுப் புடிச்சு அங்கியே வறுத்துச் சாப்பிட்டோம் பாரு - நினைச்சாலும் நாக்கு எச்சியில புரளுது. ஏழு மணிவாக்குல வீடு திரும்பறோம். நடுரோட்டுல ஜீப் லைட்டில் குட்டி யானை சைஸ்... நின்னாம் பாரு ஒரு பைஸன்!''

''காட்டெருமத்தானப்பா? நாமளும் ஒரு நாஜயா கூட இப்படிப் போவலாம்ல?''

''நாம மட்டுமாப் போனா ஒத்தாசை, இஞ்சு பேராப் போனா உபத்திரவம்லடா!'' உதடு மறுத்தாலும் ஆசை ஊறியது.

போன வருடம் ஒரு நேரம் முதலாளி கேட்கத்தான் செய்தார். ''ஏங் கஜா, உங் குடும்பத்தையும் கூட்டிட்டு வாயேன். மோயர் பாயிண்ட் வரைக்குந்தான் போறோம்.''

வாயெல்லாம் பல்லான அவன் கூறும் முன் அம்மா புகுந்து, ''யோசிச்சு தான் பேசுங்களேன். வேணிக்கு எட்டு மாசம். இப்படி ரோட்டிலே குலுங்கிக் குதிச்சுப் போனா பிள்ளையப் பெத்துத் தூக்கிட்டு வர வேண்டியது தான். வர்ர வருஷம் போவோம்'' என்றாள்.

முதலாளி சிரித்தபடி, - 'அது சரி' என்று விட்டு விட்டார். ஏமாற்றமாயிருந்தாலும் அம்மா சொன்னது உண்மை. அந்தப் பக்கச் சாலைகளை டவுன்ஷிப் கண்டு கொள்ளுவதேயில்லை.

இந்த வருடம் எஜமானின் மூத்த பெண் கவிதாம்மாவிற்குக் கலியாணம் பேசியிருந்ததில், சம்பந்தி வீட்டார் வரப்போக எனத் திருவிழாக் கூட்டம். அதில் கூட்ட, சமைக்க, கடைக்கு ஓட, கழுவிக் கவிழ்க்க என்று அவளுக்கும் அவனுக்குமாய்க் கிடந்த வேலைகளில் அவர்களைப் 'பிக்னிக் போலாம் வா' என்று அழைப்பார் உண்டா என்ன?

ஆனாலும் மனவிளிம்பில் ஆசை கெட்டித்து ஏக்கமாய் உறைந்து கொண்டது. அடிக்கடி 'விண்'ணென்று தெறித்துத் தன்னைக் காட்டிக் கொண்டே கிடந்தது.

ஜூன் முதல் தேதியிலேயே நெடிய பைன், யூகலிப்டஸ்

அனைத்தும் காற்றுக்குக் குனிந்து, சுழன்று ஆட ஆரம்பித்து விடும். ''பாத்தியா, எங்களை ஊரை நோக்கிப் போ, போன்னு இதுங்க கையாட்டறத?''

பேசியபடி பெட்டிகளை அடுக்கிக் கொண்டாள் அம்மா.

இப்போது கிளம்பியாயிற்று. கார் வளைவில் மறைந்தபின் கேட் கதவுகளை இழுத்து மூடியவன், அப்படியே ப்ளம் மரத்தடியில் சாய்ந்து கொண்டான்.

அதோ இதோவென்று அவனுக்கும் முப்பத்தைந்து வயது போயே விட்டது. நாலு குழந்தைகளின் அப்பன். பிறர் கை மிட்டாயைப் பார்த்து ஏங்குவதை விட்டு, ஒன்று வாங்கி வாயிலிட்டால் என்ன? சரி தான். இவனும் குடும்பமாகப் பிக்னிக் போக வேண்டியது! நினைப்பிலேயே சிலிர்த்தது.

வெள்ளி அரைஞாண் போக, அம்மா இந்த நாலாவது குழந்தை விரல்களில் நூறு ரூபாயைச் செருகியிருந்தார்கள். வறுத்த முந்திரியுடன், ஸ்காட்சைப் பதமாகக் கலந்து தந்ததற்காக ஐயா தந்த பத்து, இருபது, சம்பந்தி அம்மா கட்டு வெற்றிலையோடு நீட்டிய ஐம்பது, இப்படி இருநூறுக்கு மேலேயே கையில் துண்டாக நிற்கிறது.

'பிக்னிக்' போய்வர இது போதாது?' எங்கே? ஒவ்வொரு இடத்தையும் படமாய் நெஞ்சில் நிறுத்தி வைத்துப் பார்த்தான்.

நெப்ட்யூன்ஸ் பூல் (Neptune's Pool). அந்த இடம் தனி அழகு.

தட்டைப் பாறைகளின் மீது யாரோ வட்டம் வரைந்து வெட்டி எடுத்தாற் போன்ற சிறு வட்டக் குளங்கள் உள்ளேயடங்கிச் சாரலை மட்டும் காட்டும் சிற்றருவி - அதன் சிரிப்பாணி. மறுபக்கச் சரிவு முழுக்க பைன் மரங்கள் தான். காலுக்கடியில் ஓரடிக்குக் கம்பளமாய் ஊசியிலைச் சருகுகள். ஏதேதோ பறவைகளின் கூச்சலும் காற்றின் ஊதலும் தவிர, யாருமற்ற தனிமை. சாதம், வறுவல் என்று கட்டி எடுத்துக் கொண்டால் போய் வரும் செலவு மட்டுந்தான். ஜூஸ், டீ எல்லாம் தேவைப்படாது - ஊற்றுத் தண்ணீர் அத்தனைக்குத் தித்திப்பு.

கவுங்சி போகும் ராணிமங்கம்மாளில் ஏறினாலும் அந்த ஒற்றையடிப் பாதை பிரியும் இடத்தில் டிரைவர் நிறுத்துவது





சந்தேகம். அந்தப் பக்கம் போகும் வேன் ஒன்றில் தொத்திக் கொண்டால் தொந்தரவில்லை.

ஆனால், திரும்பும் போது...?

டவுனிலிருந்து பத்து மைல் என்பது பிள்ளை குட்டிகளுடன் நடக்கக் கூடிய தொலைவு இல்லை.

சாயங்காலம் திரும்பரச்ச 'எங்களையும் அள்ளிப்போட்டுக்கங்க அண்ணாச்சி' என்று கெஞ்சினால், வேன் டிரைவர் மாட்டேன் என்றா குலுக்கிக் கொள்வார்? வரும் காசில் அவரும் வீட்டில் பிள்ளைகளுக்கு ரெண்டு கிலோ சீனி பேரீ வாங்கிப் போகலாமில்லே?

எழுந்து உதறி நடந்தவன் கால்களில் ஒரு துள்ளல். வீட்டினுள் குழம்பின் மணம்.

''ஏது புள்ள?''

''அம்மா மீந்ததைத் தந்திட்டுப் போயிட்டாங்க. தோசை மாவு கூட இருந்துச்சு. உனக்கு நாலு வார்த்து எடுத்து வச்சேன். உக்காரு.''

வயிறு நிரம்பிப் படுத்த பின்னும் கூட உறக்கம் வரவில்லை. பக்கத்தில் வந்து படுத்தவளின் இடுப்பைத் தடவினான். கம்பளியை மேலேற்றிக் கொண்டவள், வாத்து விரட்டுவது போல நாக்கைச் சுழற்றிச் சொட்டானிட்டாள்.

இவனுக்கு, 'அட சீ... அந்த விஷயமொண்ணுமில்லே' என்று புரண்டு படுத்து அலட்சியம் காட்டத் தோன்றியது. ஆனால், இந்த விஷயத்துக்கும் வேணி ஒத்தாசை அவசியந்தானே! தவிர மனசு குஷியில் உப்பிக் கிடந்தது.

குரல் குழைய, ''வேணி, நாமளும் பிக்னிக் போறோம்'' என்றான்.

''பொட்டியிலே அம்மா தந்துட்டுப் போன கோடித் துணி, இனாங் காசு, தோசக்குழம்பு... இதான் நமக்குப் பிக்னிக்கு.''

''ஜடம், மூடம்'' என்றெல்லாம் அவளைக் கொஞ்சி இறுக்கியவன், மறுநாளே ஏற்பாடுகளில் இறங்கினான்.

நான்காம் நாள் - சாத மூட்டை, கைக்குழந்தைக்குப் பால்

பாட்டில், பிஸ்கட், முறுக்கு என்று வேனில் ஏறிக் கொண்ட போது வேணியின் முகம் கூட மலர்ந்து கிடந்தது. முந்தின மதியம் வெந்நீர் வைத்துத் தலைக்கு ஊற்றியிருந்தாள். அதில் தலை முடியெல்லாம் புசுபுசு என்று பம்மிக் காதுக்கருகில் சுருண்டு விழுந்தது. மூக்கின் ஏழு கல் அன்ன மூக்குத்தியில் புது ஜொலிப்பு.

பிள்ளைகள் சளபுளவென்று பேசிச் சிரித்துக் கொண்டேயிருந்தனர்.

முன் இருக்கைகளில் முக்கிய - அதாவது நூறுகளில் ரேட் பேசிய - 'பார்ட்டி' ஏறிக் கொள்ள, இவர்கள் கடைசி சீட்டில் ஒடுங்கினர். பல்லி போல*ஜன்னலோரம் அப்பிய பிள்ளைகள் எக்கிக் கையாட்டியபடி வந்தனர். ஆனால் வேன் வேகமெடுத்து வளைந்து முன்னேற, வேணி கவிழ்ந்து கொண்டாள்.

''சீனி மிட்டாய் வாங்கினேன். வாயில அதக்கிக்கிறயா? குமட்டாது!'' என்றவனிடம்,

''புள்ளையப் பிடிங்க'' என்று திணித்தவள், ஜன்னல் வழியே தலை நீட்டி வாந்தி எடுத்தாள். வெளியே காற்று விசிறலில் முன்உச்சிமுடி பிடுங்கிக் கொண்டு பறந்தது. சோர்ந்து தெரிந்தவளைத் தோளில் சாய்த்துக் கொண்டான். தலையை நீவினான்.

வனத்தின் ஏகாந்தத்தில் இவளைக் கட்டி நூறு முத்தமிட வேணும்... அடிவயிற்றில் வெப்பமேற அவளை இன்னும் நெருக்கி உட்கார்ந்தான்.

''மெதுவாப் போகச் சொல்லுங்களேன்...''

''இந்த டூரிஸ்ட்க்ரூப்பு மன்னவனூர் ஆட்டுப்பண்ணை எல்லாம் பாக்கப் போறவுங்க. பாவம்னு நம்மளையும் முப்பதே ரூவாய்க்கு அண்ணாச்சி ஏத்திக்கிட்டாரு. இதுல அப்படி இப்படிப் போங்குறது எப்படி?'' அவன் முணகி முடிப்பதற்குள் மூத்தவனும் ஓங்காரமாய்க் கக்கி விட்டான். குழந்தை, கால்களை உதறிக் கொண்டு வீறிட்டது. முன்னிருந்தவர்களின் முகச் சுளிப்பை உணர முடிந்தது.

அடுத்த ஐம்பதாவது நிமிடம் அலுங்கிக் கசங்கி இறங்கிய போது வேணி தடுமாறினாள்.





''சித்த உக்காந்து போவலாங்க. கண்ணை இருட்டிக்கிட்டு வருது...'' வானமுமே மங்கித்தான் தெரிந்தது.

''சீக்கிரமாப் பார்த்தாதாம் புள்ள. மழை வராப்பல இருக்குது...'' அவன் அச்சத்தைத் தைரியமாகச் சொல்லிவிட அவள் நிமிர்ந்து முறைத்தாள். நடக்க ஆரம்பித்தனர். பாதி தூரம் மூச்சிரைக்க ஏறியவள், சட்டென்று திரும்பி அங்கும் இங்குமாய்த் தேடிக் கூவினாள்.

''ஐயோ''

''என்ன? என்னா இப்ப?''

''சோத்து மூட்டை? யாரு கையிலயும் காணுமே? வேனோட போயிருச்சுப் போலயே?''

இப்போது பிள்ளைகளின் முகங்கள் மங்கின.

''மூத்தவன்கிட்ட பையிருக்கே?''

''அது பாலு பாட்டிலும் பிஸ்கோட்டுந்தான்.''

மௌனமாய் மேடேறினர். மூச்சிரைப்புச் சீற்றம் தொனிப்பாய்க் கேட்டது. உச்சிமேட்டின் ஓடையைக் கடக்கும் போது மூத்தவன் கால் கல்லின் வழுவழுப்பில் வழுக்கி விட -

''ஐயோ...''

''பாத்துடா.''

''த பிள்ள - சும்மாக் கத்தாத. சும்மாவே பகீருன்னுதானிருக்கு.''

''பாலு பாட்டிலும் போச்சு போல...'' முறுக்கிக் கிடந்த ப்ளாஸ்டிக் பையைக் கவனமாய்ப் பிரித்துப் பார்க்க... உடைந்த சிதறல்களுடன் மின்னிய பாலில் ரப்பர் நிப்பிள் மிதந்தது!

''பிஸ்கோட்டுமில்ல ஊறி... கண்ணாடி ஏறி நமுத்துருக்கும்.''

மௌனம் மேலும் இறுகியது. இவனுக்கே பசிப்பது போலத் தோன்ற அச்சமாய்க் குழந்தைகளை நோக்கினான். ஆள், கூடை ஏதுமில்லாத வனச்சூழல் அச்சுறுத்தியது.

''திரும்பிருவோமா வேணி?''

''எதையோ பார்க்கவுன்னு வந்தோமே. பாத்திட்டுத்

திரும்புவோம்.''

'தங் தங்' என்ற நடையில் தன் எரிச்சலைக் காட்டினாள். காலின் கீழே மெத்தையிட்டுத் தந்திருந்த பைன் இலைச் சருகுகளை அவள் உணர்ந்ததாகவே தெரியவில்லை.

''தோ, இடது பக்கம் பாரு!'' சிறுவட்ட வட்ட நீர் தேக்கங்களை அவர்கள் பார்த்து நின்ற போது, முதல் சொட்டு மழை தெரித்தது.

''ஐயோ!'' இம்முறை அலறியது கஜா.

''கிளம்பு புள்ள, கைப்பிள்ளையும் அதுவுமா இங்க மாட்டிக்கிட்டா வம்பு. அண்ணாச்சி வேனு திரும்ப நாலு மணியாவுமே.''

மறுபடி 'தங்தங்'கென்று நடந்து, ஓடையைச் சறுக்கிக் கடந்து, மூச்சிரைக்க ஏறி இறங்கிச் சாலையைத் தொட்ட போது ஆறு பேருமே நனைந்து நடுங்கினர்.

காற்று சுழன்று சிரித்தது.

''பசிக்குதுப்பா.''

''குளுருதுப்பா.''

குழந்தையுடன் பல்லையும் இறுக்கியபடி நின்றிருந்தாள் வேணி. தவிக்கும் குஞ்சு குளுவானைப் பார்த்து இரங்கிய கண்டெக்டர் விசிலூத, வந்த பஸ்ஸில் ஏறிக் கொண்டனர். பஸ் வளைவுகளில் சரிந்து விரைகையில் ஓங்களிப்புச் சத்தந்தானே தவிர வாந்தியில்லை!

'வயிறு காலியாக் கிடக்கதும் நல்லதுதான்' எனத் தனக்குள் சமாதானம் பேசினான் கஜா.

''அண்ணாச்சி...! எச்சேன்ஜீ பக்கம் ஒரு நிமிசம் நிப்பாட்டினீங்கன்னா இறங்கி ஓடிருதோம். பச்சக் குழந்தை இருக்கு. பஸ் ஸ்டாண்டுல வண்டி, ஆட்டோ ஏதுங்கிடையாதே நம்மூருல?'' - இளைஞ்சினான்.

தடுமாறி இறங்கி, மழையில கைகோத்தபடி ஓடி, வீடு திறந்து, துவட்டி, மாற்றுடுத்தி, கேப்பையைக் கஞ்சி வைத்து வெல்லங்கூட்டிக் குடித்துப் படுக்கும் போது 'அப்பாடா' என்றிருந்தது.





''நமக்குத் தக்கனதா யோசிக்கணும் - பிக்கு... நிக்கு...'' முதுகு காட்டிப் படுத்திருந்தவள் முணங்கினாள்.

உண்மைதான் என்று பட்டாலும் கட்டி இறுகியிருந்த ஏக்கம் கரைந்து போனதில் உள்ளே ஒரு சிறகு ககம். சுகமாய்க் கண்ணைக் கிறக்கியது. தளர்ந்த உதடுகள் தூக்கத்தில் விரிந்தன.

'பிக்கு..நிக்கு' குழறினாள் சிரிப்புனூடே.

(கலைமகள், தீபாவளி மலர்)

★★★

# பூப்பெண்

பூக்காட்டின் நடுவே படுத்திருக்கிறேன். தலை தூக்கிப் பார்த்தால் எங்கும் மலர்கள். மெல்லிய காம்பில் கொத்து கொத்தாய் சீரான அடர்த்தியில் தொடுவானம் வரை, தென்றலின் தாளத்திற்கு உல்லாசமாய் அசைந்தபடி...

ஒருபுறம் வெள்ளை டெய்சிகள், மறுபுறம் துலக்க சாமந்தி பாயாய் விரிந்திருந்தது. வெள்ளைக்காரச் சிறுமிகள் கைகோர்த்து 'ரிங்கா ரிங்கா ரோஸஸ்' என்று சுற்றி வருவது போன்ற சுழற்சியில் டெய்சிகள். சாமந்தி கூட்டம் நம்மூர் குழந்தைகள்.

'ஒரு குடம் தண்ணி ஊத்தி ஒரு பூ பூத்ததாம்' என்று மூச்சு முட்டும் பாட்டுடன் கிராமத்துப் பொடிசுகள் ஜோடியாய்க் குனிந்து வளைந்து போடுகின்ற துள்ளாட்டம்.

அவளது பாதங்கள் நமநமத்தன. இப்போதே ஆட வேணும். அம்மா ஆச்சரியப்படுவாள்.

'என்னடீ உட்காரதும், எழுந்துக்கறதும் கூட நாட்டியம் போல செய்யுற?'

'ஜதி சொல்றியாமா? தித் தித்தைச் சொல்லு. நான் திஸ்ர நடையிலே வர்றேன்' - பொய் கோபந்தான்.

'அப்படியில்ல - ஒரு ஒயில் தெரியுதுன்னேன்.'

பலர் சொன்னதுண்டு. பிஞ்சிலேயே ஆட்டம் பழகி விட்டதால் அசைவில், பேச்சில் இனிமை படிந்து விட்டது. மணிக்கணக்கில் அடுப்பில் மணிக்கட்டைப் பின்புறமாய் மடித்து வைத்து ஆடியதில், அல்லிக் கொடியாய் வளையும் கைகள். விதவிதமான





முத்திரைப் பிடித்துத் தளிரான தாமரை விரல்கள். கற்பனைகளில் மூழ்கிய கண்களில் கவிதையின் சாயல். இதழோரப் பரவசம்.

தடாலடியாய்ப் பேச, கை, காலை வீசிப் போட முடிவதில்லை. கலை அவளை ஒரு பூவாக்கி விட்டிருந்தது.

மனிதர்களில் பல வகை. மரம், முள், புல், கல், நீர், மண் என்று. இவள் பூ சுபாவம். அதிமென்மையாகி விட்டால் பல விஷயங்கள் இன்னலாகி விடுகின்றன. தீண்டல் சுடும். மிக நெருங்கி நின்று புகை ஊதினால் கூட அவஸ்தை.

அடிக்கடி கனவுலகில் மலர்களின் நடுவே மஞ்சம் விரித்துக் கொள்வாள். அவைகளும் செல்லமாய் சுற்றி வரும். ஆடும். இவைகளுக்கு யார் நாட்டியம் கற்பித்தது?

பரதமில்லை இது. ரஷ்ய பாலேயிலிருக்கும் காற்று சுமக்கும் சிறகின் வாசகம்.

இவளின் நினைவு காற்று நிற்க பூக்கள் உறையும். மேடைத்திரை விலகும். முன் உள்ள நாட்டியக்காரியின் சின்ன அலட்சியத்துடன் நிற்கும் அவை.

அம்மா மலர் ஜாதியில்லை. மண். நீர் பட்டால் குழைந்து கொள்வாள். வறட்சி வந்தாலும் தாங்கத் தயார்.

யதார்த்தமான மனுஷி.

அம்மா வடகமும் வற்றலும் போட்டுவிட,

''நீ... இந்த மாயம் செய்வதிலென்ன நியாயம்?'' இவள் அபிநயத்துடன் மொட்டை மாடியில் காவல் இருப்பாள். பெரும்பாலான சம்பாஷணைகளும் அப்போது தான்.

''நம்ப விட்டிலேயே கத்த சிகப்பில் பிறந்தது நீதான் தம்மு. ராஜி சிகப்புன்னு அரக்கிலே இந்தப் பண்டிகைக்குப் பட்டு எடுத்தாங்க. ஆனா, பொருந்தலை. மாநிறந்தான் அவ.''

''உம் பொண்ணைவிட எல்லாரும் எல்லாத்திலேயும் மட்டந்தான்.''

சிரிக்கும் போது மகளைக் கண்ணெடுக்காமல் பார்ப்பாள்.

''பாட்டு கேட்டுட்டா எப்படி துள்ளுவே; காலடிப்பே. கண்ணை உருட்டுவே. சரின்னு மயங்கி டான்ஸுக்குச் சேர்த்து விட்டோம். 'கப்'புனு பிடிச்சுகிட்டே. குருவும் ஊரும்

சிலாகிச்சதிலே மெட்ராஸ் வரை அனுப்பிச்சோம். நீ ஸ்டேஜ் ஏறி ப்ரோக்ராம் தர்றபோதெல்லாம் இங்க உன் தாத்தா பாட்டியோட எத்தனை சண்டை, சமாதானப் பேச்சு... ம்ம்...?''

''காலம் மாறியாச்சும்மா.''

''காலங்கறது என்ன - மனுஷ மனந்தானே? இந்த ஊர் பக்கம் அது லேசுல மாறாது. நாமதான் அனுசரிச்சு நின்னுக்கணும்.''

''ஆடின கால் இனி ஓயாதும்மா. சும்மா பொழுது போக ஆடலியே. நீ சொல்லியும் கத்துக்கலை. டி.வி.யில தலை தெரிஞ்சா போதும்ற லட்சியமா? வெயிட் குறையணுமேன்னு சலிச்சுச் சலிச்சுக் குனிஞ்சு நிமிருற அல்டாப்பு கேஸில்ல. ஆசையாய் படிச்சேன். இப்போ உயிராயிடுச்சு.''

''புரியுதுடி. புரிஞ்சு ஊர் ஊராய் கூட்டிப் போகலை? எத்தனை போட்டி, ப்ரைஸ் ம்? நகை செட் வாங்க நாகர்கோவில் வடசேரிக்கே போனோம். டிரஸுக்கு பல கடை ஏறி ஆயிரமாயிரமாய் செலவு பண்ணலை? திறமை இருந்துச்சு. ஊர் பாராட்ட, பிரமிக்கும்படியா ஆடின. இனி அதே சாமர்த்தியத்தோட வாழ்க்கை அமைச்சுக்கற கட்டம். வர்ற வரனெல்லாம் தட்டி விடாத தம்மு. இந்த முறை சரின்னுடு.''

''வர்ரவனுக்கு நீ ஆடறதெல்லாம் பிடிக்கலை. சலங்கையைக் கடாசிடுன்னு சொல்றதுக்கு ஏம்மா நீ அத்தனை பண்ணினே? சும்மா இருந்திருக்கலாம்ல?''

அம்மா பாவமாய் காக்கைகளைப் பார்த்திருப்பாள். ''வான்கோழிக்கு வகை ருசியாய் தீனிவச்சு வளர்த்து, அது ஆடி நிக்கையிலே வெட்டி பண்டிகை பிரியாணி சமைக்கிற கதை.''

''கல்யாணம்... பிரியாணி போடற மாதிரியின்றா?''

''கரெக்ட். சூடா சாப்பிடும் போது உணக்கைதான். முட்டையும், பச்சடியுமா தொட்டு சாப்பிட்டா ரெண்டு ப்ளேட் நிமிஷத்துல இறங்கும். பிறகு தான் அவஸ்தை. உப்புசம். நெஞ்செரிச்சலோட, வெங்காய வாடையும் எப்பமுமாய் நெஞ்சு தீவி தவிக்கணும்.''

''ஒண்டியா நின்னாலும் நெஞ்செரிச்சல் தான். அவ அவ புருஷனை ஓட்டிகிட்டு பிள்ளையோட போகப் பார்க்கையிலேயும் எப்பம் வரும் - வெறுங்காத்தா.''





''கல்யாணம் வேணாங்கலம்மா. எனக்கு ஒத்துப் போறவராய் இணைஞ்ச ருசியுள்ளவராய் பாரு. என் வயித்துக்கேத்த சோறாய்ப் போடு.''

''இது பெஸ்ட் வரன்டீ. மில் ஓனர். மோண்டிகோவாமே அந்த புது தினுசு கார் வாங்கியிருக்காராம். அது மட்டுமே 10 லட்சம்! நம்ப ஜாதியிலே நீ அபூர்வ அழகு. ஆடி ஆடி உடம்பிலே மெருகு போட்டிருச்சு. பேர் பிரபலம். அதினாலதான வலிய கேட்டு வராங்க?''

''நான் ஆடறதை விட முடியாதும்மா.''

''குடும்பப் பெண்களுக்கு டான்ஸ் அவசியமில்லைங்கறது அவங்க வாதம்.''

''அப்ப ஆடாத, உரல் மாதிரி உருள்ற ஒருத்தியைக் கட்டிக்கட்டும்.''

''பெருமை பேசக்கூடாதடீ.''

''என் கலையை யாரும் சிறுமைப்படுத்த வேண்டாம்மா.''

''உன்னை மேடை மேடையா ஆட வைக்கிறேன்னு வந்தவனையும் போடானுட்ட.''

வேதனைப் பார்வைதான் பதிலாகும். அவள் நிராகரிப்புக்கான காரணம் அம்மாவிற்கு நன்றாகவே தெரியும். பிறகென்ன இந்த பேச்சு?

''சரி, விடுடீ. யோசி'' குற்ற உணர்வுடன் அம்மா நகர்ந்து விடுவாள்.

அப்பாவின் செருப்பு தேயவேயில்லை. வரன்கள் தானாய்த் தேடி வந்தன. முதல் வரன், பையனின் அம்மா 'தமிழ் மன்ற'த்தில் இவள் நாட்டிய நாடகத்தைப் பார்த்ததால் வந்தது.

''நா சிறுவயசிலே வாய்ப்பாட்டு, வீணை எல்லாம் சொல்லிக்கிட்டதுண்டு. அங்கே அதெல்லாம் மருந்துக்கும் கிடையாது'' என்று அந்த அம்மா தலையசைத்த போது மூக்கிலும் முகத்தின் இருபுறமும் கிடந்த வைரங்கள் ஜொலித்தன. ''தமயந்தி எம்மருமகளா வந்தா சந்தோஷம். வீட்டுக்கே நல்ல களை.''

இவள் மாப்பிள்ளை பற்றி ஒரு கேள்வியுமில்லாமல், ''அப்போ நீங்களே என் ப்ரோக்ராமிலே பதம் பாடுவீங்களாம்மா?''

கேட்டாள்.

கவ்விய தேளை உதறுவது போல பதறினார்கள்.

''அவ உள்ளூர் ஸ்கூல் விழாக்கள்ல ஜட்ஜ், தலைமைன்னு பொழுது போக்கறா. அதுதான் லிமிட். மருமக ஆட இவ பாடறதா?'' துடித்தார்கள்.

தங்கள் கௌரவத்தைப் பாதிக்கும் விஷயமாக எண்ணி பேசியவர்களிடம், ''பரதம் அபூர்வ கலை. அதில் திறமை, ஈடுபாடு, ஞானம், அதற்கேற்ற தோற்றம் அமைவது பெரும் பேறு. அதை ரசிக்கணும், வளர்க்க வேணும். துச்சமாய்க் கருதறது தப்பு.'' குறுகிய நோக்கு என்ற ரீதியில் இவள் பேசி வழியனுப்பிய போதுதான் அப்பா முதன் முதலாக அவளைக் கடிந்து பேசியது.

''குதிரை ஓட ஓடத்தான் வியாபாரிக்கு லாபம். பணத்தைப் பார்ப்பானா? இவ ஆட்டத்தையா?''

''சரி. பார்க்க வேணாம். வீட்டோட நா ஒரு டான்ஸ் ஸ்கூல் கூட நடத்தக் கூடாதுன்றது தர்மமில்லையே.''

''வேண்டியமட்டும் தங்கமிருக்கு. தர்மமும் வேணும்னா?''

''சிவகாசியிலே தீப்பெட்டி ஃபாக்டரி வச்சு சேர்த்த தங்கம் கழுத்துக்குக் கீழே கட்டையக் கொடுத்து பிஞ்சுகளை தலை நிமிர விடாம மருந்து பூச, குச்சியடுக்க வைக்கிறவங்ககிட்ட எங்கேயிருக்கும் தர்மம்?''

''இவ இப்படியெல்லாம் குடைஞ்செடுப்பான்னு கண்டுதான் ஓடிட்டானுங்க.''

அலுத்துக் கொண்டார்கள்.

அடுத்தவரன் பார்வைக்கு ராஜாதான். மாதம் 15,000 சம்பளத்தில் தேயிலை எஸ்டேட் ஒன்றில் மானேஜர். கம்பெனி செலவில் ஒரு ஏக்கரில் மாளிகை தான், கார்தான், வேலைக்கார படைதான்.

''தேயிலைக் குத்துச் செடி நடுவே நீ ஓடி ஆடலாம்க்கா'' - தம்பி சீண்டினான்.

''சபையிலே ஆடலேன்னா போறதும்மா. நாலு குழந்தைங்களைக் கூட்டிவச்சு ஆடவும் அபிநயமும் சொல்லிக் கொடுக்கவும் முடியாத அத்துவானம். மூச்சை அடைக்கும்...

வட்டார நூலகம்
அசோக் நகர், சென்னை-83



அவளிடம் தனியாகப் பேச வந்தான். வெள்ளையில் ஊசிக் கருப்புக் கோடுகளிட்ட சட்டை, கருநீல பாண்ட். உயரமும், அடர்ந்த புருவங்களும், விரிந்த தோளும், மார்பும் கண்களை நிறைத்தன. கன்னங்களில் அவளறியாமலேயே செம்மை.

''திறமையான டான்ஸர் நீங்கன்னு தெரியும் தமயந்தி. எஸ்டேட்டில் கிளப் மீட் வருஷத்துக்கு ரெண்டு, மூணு தடவை உண்டு. அதிலே உங்க ப்ரோக்ராம் வைக்கலாம்.''

கரகரத்த குரல் கெஞ்சியது.

''எஸ்டேட் ஆளுன்னா குடிப்பழக்கம் இருக்குமோன்னு அப்பா பயந்தாங்க. நீங்க 'க்ளப் மீட்'டிலே சாப்பிடற ஒரு பெக் விஸ்கியோட சரின்னு உங்க சித்தப்பா சொன்னாராம்.''

புரியாமல் அவளைப் பார்த்திருந்தான்.

அவளுடையது வட்ட முகம். பூக்கள் பெரும் வாரியாக வட்டம் தானே? நீள, முக்கோண வடிவமெல்லாம் அபூர்வம். செதுக்கிய சித்திர முகத்தை கண்ணெடுக்காமல் பார்த்தான்.

''அந்த பெக் விஸ்கியில்லை. எனக்கு பரதம், தண்ணீர் போல. தினமும் வேணும். அதுவும் தாகமடங்கற அளவு.''

கலையின் கவர்ச்சி, ஆகர்ஷிப்பு அதிகமாயிருந்தது.

மூன்றாவது துபாய் மாப்பிள்ளை.

கம்ப்யூட்டர் என்ஜினியராம் - கருப்புன்னாலும் ஆறடி உயரம்.

''பாத்ரூம் கூட அந்த ஊரில ஏ.ஸி.தானாமே?''

''சொக்கத் தங்கம்னா அது அங்க தான். அப்படியொரு பசும் மஞ்சள்.''

அவன் பேச்சு கேட்கும் வரை ஆளானுக்கு உற்சாகமான பேச்சு.

''வெளியே போகையிலே பர்தா போடணும். தனியா வெளியே சுத்த முடியாது. காரும் ஓட்டக் கூடாது. உங்க பொண்ணுக்குத்தான் ட்ரைவிங் தெரியாதே. ஸோ, நோப்ராப்ளம். டான்ஸ்? கூடாரம் மாதிரி பெரிய பர்தா. அதற்குள்ளேயே முடிஞ்ச அளவு ஆடிக்கலாம்.'' பகபகவென்று சிரித்தான்.

நான்காவது வந்தவன் தான்-

''... பண்ணிடணும். அவ ஏறாத

மேடையே இருக்கக் கூடாது. இந்த வருஷம் கொடைக்கானல் 'சம்மர் ஃபெஸ்டிவ'லுக்குச் சொல்லி வச்சிடவா?'' என்று துடியாய் நின்றான்.

அந்தத் துடிப்பில் சந்தோஷத்திற்குப் பதிலாய் இவளுக்கு வந்ததென்னவோ சந்தேகந்தான்!

விசாரித்ததில் பல விஷயங்கள் வந்தன. 'அப்பா இல்லைங்க,' என்றது ஓரளவு தான் உண்மை. அவன், தகப்பன் பெயர் அறியாதவன்.

அவன் 'காலேஜ்ல லெக்சரராய் இருக்கான். சீக்கிரமே ப்ரொபஸர்' என்றதும் ''இது டெம்பரரி வேலை. மூன்றே மாதங்களுக்கு'' என்று திருத்தப்பட்டது.

இவள் ப்ரோக்ராமுகளுக்காக அலைந்து, பிடித்து கூடவே பெட்டி சுமந்து, மேக்-அப் பூசுகையில்-

'ஸ்பாஞ்சை மோவாயிலே அழுத்துங்க' என்று மேற்பார்வையிட்டு, நத்து, பில்லாக்கு போன்ற பொடி சாமான்களையும் கவனமாய் எடுத்து வைத்து, ஸ்டேஜ் சரிபார்த்து, சன்மானம் வசூலித்து... இதற்கெல்லாம் துணை இருந்தால் சௌகர்யந்தான். ஆனால், அது புருஷனாகவா இருக்க வேண்டும்? கலையை வியாபாரமாக்கத் திட்டமிட்டவனையும் விலக்கினாள்.

ஐந்தாவது இது. அதாவது கணக்கில் எடுக்கக் கூடியவற்றில் ஐந்தாவது. அனைவருக்கும் மூக்கு முட்ட ஆசை. கோவை அருகே முக்கால் கிராமம் ஒன்று. அவனது தோட்டத்திலே, சிட்டியிலே, மலை மேலே என்று விதத்திற்கு ஒரு வீடு.

ஆனால், துணையாக வருபவள், தனக்கென்று ஒரு ஆர்வத்தை, வாழ்வை அமைத்துக் கொள்வதில் இவனுக்கும் சம்மதமில்லை.

'மூணு வீட்டையும் மெய்டெய்ன் பண்ணணுங்க. பார்ட்டீஸ் நிறைய கொடுக்க நேரும். நாமளும் போய் கலந்துக்கணுங்க. டான்ஸ், ட்ராமா எல்லாம் எனக்குப் பிடிக்கறதில்ல. புரியறதுமில்லைங்க. அம்மாக்கு ஆஸ்த்துமா. அஞ்சு அக்காமார் எனக்கு. நிறைய பொறுப்பிருக்கு.''

பொறுப்புகளுக்கு அஞ்சுபவளில்லை அவள். கலை மீது





வெறுப்பு அல்லது அலட்சியம் காண்பிப்பவனுடன் வாழ்க்கை...? அது மூன்று பங்களா, மான்டிகோ காரோடாயிருந்தால்தான் என்ன - கசக்காதோ?

''பூ வாடிப் போயிடும்மா'' - மறுத்து விட்டாள்.

''அதென்ன அதிசயம்? பூ வதங்கறதுக்கு முன்னே மாலையாக்கிடணும். உதிர்ந்து போச்சுன்னா முடிஞ்சது போ.''

அரைக் கனவுலகில்... சுற்றிலும் சமுத்திர அலையாய் எம்பியபடி பூக்கள். தங்கள் ஆட்டத்தைத் தாங்களே ரசிக்கும் தலைசாய்ப்பு. இதில் இன்பமில்லாமலா?

மாலையாக உருவானால் கடவுள் பாதம் சேர வேண்டும். அல்லாமல் அரசியலுக்கு, ஆர்ப்பாட்டம், பிணத்திற்கு என்று விழுவது அவலம். ஒரு பொழுதுக்குள் பிய்ந்து குதறிப்போகும்.

இப்படிச் செடியிலேயே ஆடிக் கிடந்து, இயல்பாய் உதிர்ந்து, மண்ணிற்கு உரமாகலாம்.

நிம்மதியாய் விழி செருகி முழு உறக்கத்திற்குள் சரிந்தாள். சுற்றிலும் மலர்கள் அவளைக் குனிந்து பார்த்துப் புன்னகைத்தன.

★★★

# மனசுக்குள் சூரியன்

மொட்டை மாடிச்சுவரின் மீது சாய்ந்து நின்றாள் விலாசினி. உலகம் அன்று புது அழகாய்த் தெரிந்தது. சதா கரைந்து எரிச்சலூட்டும் அந்த அண்டங்காக்கையைக் கூட பிடித்துக் கொஞ்சலாம் என்ற மனநிலை. காற்றில் படபடத்த தன் மேலாக்கை இழுத்துச் செருகித் திரும்பியவளுக்கு அடுத்த வீட்டின் பின்புறம் தெரிந்தது. கனகா வழக்கம் போல தோட்ட வேலையில் மும்முரமாயிருந்தாள்.

கனகா குடியேறிய இந்த ஒன்பது மாதங்களில் அக்கொல்லைப்புறம் பசுமைப் புரட்சியே கண்டிருந்தது. வாசற்புறம் நின்றால் கனகாவின் கணவன் கேவலமாய்க் கத்துவான்.

'ஒடறதுக்குத் தயாரா நிக்கறியாக்கும்?''

'பேருக்கு மேலே இது - உனக்கெதுக்குச் சேலை?'

'எத்தனை பய, எத்தனை தடவை உன்னைப் பாத்துட்டு நடக்கறான்னு கணக்கெடுத்துட்டு நிக்கறியா?'

தெரு முழுவதிற்கும் கேட்கும்.

'இந்தக்கா இப்படியொரு ஆளைக் கல்யாணம் செய்துக்குவானேன்?' காது ஜிமிக்கிகளை நிமிண்டியபடி விலாசினி யோசித்தாள்.

கனகா பெயருக்கேற்ற பொன்நிறம். உயரமும் ஒடிசலுமாயிருந்தும் எலும்பே தெரியாத வெண்ணெய் தேகம். செதுக்கிய திருத்தலத்தில் முகம் - ஆனால், அது சிரிப்பில் பூரித்து





யாரும் பார்த்ததில்லை.

விரித்துக் கோதினால், பின்புறம் முழுதும் மறைந்து, முழங்காலுக்குக் கீழே புடவைக்கட்டும், மஞ்சள் தடவிய குதிக்கால்களும் மட்டுமே தெரியுமளவு கூந்தல். 'அழகோட, வசதியான வீட்டுப் பெண்ணாவும் தெரியறாங்க. அப்புறம் ஏம்மா, இப்படி ஒரு முரட்டு ஆளைக் கட்டி அவஸ்தைப்படணும்?' - அம்மாவிடம் கேட்டிருக்கிறாள்.

'உன் வேலையைப் பாருடி வாயாடி' தாய் அடக்கினாலும் 'பாவந்தான் அந்தப் பொண்ணு' - என்ற தொனி தெரியும்.

கனகாவின் கணவன், தட்டைப் பாதங்களை அகட்டி அகட்டி வைத்து நடந்து வர, இவள் முகம் சுருங்கும். உள்ளடங்கி உறுத்தும் விழிகளை, மூர்க்க உடம்பை அச்சத்துடன் பார்ப்பாள்.

இத்தம்பதியினரைப் பற்றி இந்த 18 வயதுப் பெண் அடிக்கடி யோசிப்பதிலும் காரணம் இருந்தது. அழகும் சமர்த்துமாயிருந்தும் தனக்கும் பொருந்தாத ஒரு துணை அமைந்து விடுமோ என்ற அச்சம்தான் அது.

இனி அந்தக் கவலையில்லை.

சகதிக் கைகளால் முடியை ஒதுக்கி விட்டபடி களையெடுத்துக் கொண்டிருந்தவளைப் பச்சாதாபத்துடன் பார்த்தவள், இடுப்பில் செருகி வைத்திருந்த கடிதத்தை உருவி பெருமிதத்துடன் பார்த்தாள்.

ஜெராக்ஸ் கடை ராஜ், அவளுக்கு எழுதிய காதல் கடிதம் அது.

வேற்று ஜாதி தான்.

ஆனால், சொந்தக்கடை. ஆள் அழகன். ஓரளவு படிப்பு. சதா புன்னகைக்கும் அவன், அவளையும் சந்தோஷமாய் வைத்துக் கொள்ளுவான்.

கலியாணமான பின், அவள் இப்படி மயங்கும் அந்தியில் வியர்த்து, கொல்லையில் பிடுங்கி, நீர் வார்க்க வேண்டாம். சீர் நகை இருபது பவுனோடு, நெற்றியில் டிஸைன் பொட்டு, சந்தன பவுடர், புதுப் பூவுமாய் வாசலில் காத்து நிற்பாள். வந்த கையோடு, புருஷன் அவளை இறுகக் கட்டிக் கொஞ்சுவான்...

'பூ, பொட்டெல்லாம் சரி. இத்தனை நகை எதுக்கு?

உறுத்துநில்லை?' பேசும் போது கழுத்து வளைவில் அவன் உதடுகள் உரசி...

கற்பனை மயக்கத்தில் உடலெங்கும் ஊறிய இன்பத்தில், விரல்கள் தளர... கடிதம் நழுவிப் பறந்தது.

'எப்படி பதில் எழுதுவது? என்னவென்று ஆரம்பிக்க? ஆசை முத்தங்களுடன் என்று முடிக்கலாமா?' என்ற வெட்கக் குழப்பங்களெல்லாம் கண நேரத்தில் முடிவு கண்டன. குழைந்து கிடந்த உடல், பயத்தில் விறைத்தது. கடிதம், பக்கத்துத் தோட்டத்தில்தான் விழுந்திருந்தது. அக்கா இன்னும் அதைப் பார்க்கவில்லை.

அதை மீட்க பதறி, நடந்தாள்.

வீட்டின் முன்னறையில் எதிர்பார்த்து நின்ற கனகாவின் முகத்தில் முறுவலில்லை.

கையில் கடிதம் இருந்தது!

''இதுக்குப் பதிலெழுதப் போறியா?'' மொட்டையாய்க் கேள்வி வந்தது.

''வந்துக்கா, இதுதான் முதல்... அம்மாகிட்ட சொல்லிற வேண்டாம்.''

''பின்னே? உங்கப்பாட்ட சொல்லவா?''

''ஐயோ'' - மளுக்கென விழி மடை திறந்தது.

''நான் எப்படி இவருக்கு வாழ்க்கைப்பட்டேன் தெரியுமா?'' மனசு குறுகுறுத்தாலும் குனிந்தே நின்றாள்.

''இப்படி வந்த கடுதாசிக்குப் பதில் எழுதினதாலதான்.''

நிமிர்ந்த விழிகளில் குழப்பம்.

''இப்படி உட்காரு'' - இளையவளைப் பிடித்திழுத்து அமர்த்தி அருகே அமர்ந்தாள்.

''வாழ்க்கையைப் பாழடிச்சுக்காதே! என் கஷ்டம், முரட்டு புருஷனாலே மட்டுமல்ல, எம்புத்தியாலயுந்தான்.''

கடிதத்தை நீட்டினாள் - அது காற்றில் புன்னகை போல அசைந்தது.

''இதை எழுதினவனுக்கு இது பொழுபோக்கான்னு முதல்ல





பாரு. விருப்பம் இரண்டு பேருக்குமே ஆழமாய் இருந்தால்... இவரை ரொம்ப நாளாய்த் தெரியுமா?'' வேண்டுமென்றே கேள்வி போட்டாள்.

''இல்லை... பார்த்ததோட சரி.''

கசப்பாய்ச் சிரித்தாள்.

விலாசினி குறுகினாள்.

''எப்படியோ, ஒரு ரெண்டு வருஷம் பொறுத்து உங்க வீட்டிலே வந்து கேட்கச் சொல்லு.''

''அப்படி... அப்படித்தான் எழுதறதாய் இருந்தேன்-க்கா.''

''நேரிலே போய், நின்னு சொல்லு. தோஷமில்லை. எழுத வேண்டாம். நல்லவன் - கல்யாண நினைப்புடையவன்னு படுதா?''

''ஆமா... ஆமாங்க்கா.''

''அப்படி இல்லைன்னா, உங்க வீட்டிலே உனக்குக் கல்யாணம் பேசறப்போ, மாப்பிள்ளைக்கு மொட்டைக் கடுதாசி அனுப்புவான். நீ 'கண்ணே, மணியே'ன்னு உருகினது ரிஷப்ஷனிலே பரிசாய் வரும். ஆரம்பத்திலேயே வெடிகுண்டு.''

''உங்க விஷயத்திலே?''

''அது வேற. எங்க வீட்டிலே என் காதலுக்கு சம்மதிக்கலை. காத்திருப்போம்னேன் - அதுக்குள்ளே வேற வரன் வரக்கூடாதுன்றதுக்காக ஊரிலே எம்பேரை நாறடிச்சான். அத்தனை குயுக்தி, மூர்க்கம் கொண்டதா காதல்? பட்டபிறகு தெளிஞ்சிட்டேன். கடைசியிலே இவர், பொண்ணு வசதியோட பார்க்கவும் வந்தார்.''

''நல்ல மனசு போல...'' விலாசினி முணங்கினாள்.

''இவர் முதல் சம்சாரம் ஸ்டவ் வெடிச்சு செத்துப் போயிட்டாங்க.''

இருவரிடையே மௌனம் கனத்தது.

''கல்யாணத்தன்னைக்கு நா அவனுக்கு எழுதின கடுதாசி ரெண்டு இவருக்கு ரெஜிஸ்டர் தபால்ல வந்தது. 'அன்பு முத்தமா? எங்கடீ கொடுத்தான்'னு எம்முடியை உலுக்கி சுவரோட முகத்தை

வச்சி உரசி உரசித் தேச்சார்.'' சொன்னவள் முகம் சலனமில்லாதிருக்க, கேட்டவளின் உயிர் நடுங்கியது.

ஆக, மலையருவியாய் வழியும் அக்காவின் கூந்தலில் முதல் முதல் புருஷன் கைபட்டது இப்படித்தான்!

''பெண் படிக்கலாம் - வேலைக்குப் போய், சம்பாதிச்சுத் தாங்கலாம். ஆட்சி கூட செய்யலாம். ஆனால் கற்பு நிலை ஆணுக்கும் அவளுக்கும் வெவ்வேற. ஆண் வகுத்த அகராதிதானே - அதிலே அவனுக்கிருக்கும் சலுகை... அவளுக்கு...'' - நிறுத்தி ஊடுருவலாய்ப் பார்த்தாள்.

''நான் அந்த மாதிரி சலுகை... சுதந்திரத்தை வேண்டலைக்கா. கண்ணியமாய் வாழ்வமைச்சுக்க ஆசைப்படறேன்''

''சந்தோஷம். அப்போ மனசைத் தெளிவா வை. பார்த்தவன் சிரிப்பிலே, எழுத்திலே எல்லாம் தடுமாறாதே! நீ அவனால உண்டாயிட்டாலும் அவனுக்கு லட்ச ரூபா ரொக்கம், 50 பவுனோட பொண்ணு வருவா. நீ அவ்வளவு தான். வாழ்க்கை முழுசும் மனசை உரசும் ரணத்தோட... புரியுதா?''

''தாங்க்ஸ்க்கா'' - சொற்கதிரின் ஊடுருவலில் உள்ளே குழப்பங்கள் பொசுங்கி, விழிகள் சுடர் விட்டன.

வீடு திரும்பியவளை அம்மா அதட்டினாள். ''அதென்னடி, அப்படி விழுந்தடிச்சு ஓடின? கனகா கூப்பிட்டாளா என்ன?''

''நான்... நானாத்தாம்மா போனேன்''

''அவ வீட்டுக்காரர் வர்ற நேரமாப் போகாத. கள்ளுன்னு பேசிடுவான். பாவம் அந்தப் பொண்ணு - அவ என்னைக்கோ சந்தோஷப் பட்டாச் சரி.''

*சூரியனில் பயிர் விளைவதில்லை - ஆனால்*

*சூரியனால் பயிர் விளைகின்றது*

- என்றோ வாசித்த கவிதை வரிகள் விலாசினிக்குள் ஏனோ வந்து நின்றன.

(ராஜம், செப்டம்பர் 1995)

★★★



# பொன் விதை

இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் சந்திரிகாவின் மனதுக்குள் அந்த விதை விழுந்தது.

'கோல்டன் வெட்டிங் ஆனிவர்சி,' என்ற தங்க எழுத்துக்கள் மின்ன, மாவிலைத் தோரணங்களோடு சிவப்பு ரோஜா கொத்துக்களும், வண்ண பலூன்களுமாயிருந்த விசாலமான ஹாலின் மத்தியில் அந்த முதிர்ந்த தம்பதிகள் நின்றது மறக்கவில்லை. எழுபது வயதிலும் குன்றாத அழகுடன் தங்க நிற பட்டில், முத்து நகைகளுடன் திருமதி தேவசகாயம், கணவரின் பாராட்டில் முகம் சிவந்து கவிழ்ந்தது இன்னும் நினைவை விட்டு அகலவில்லை.

வாழ்விலும் - தாழ்விலும், சுகத்திலும் - துக்கத்திலும் ஒருவரையொருவர் பிரிவதில்லை என்று வாக்கு தந்து இணைந்த வாழ்க்கையில் நிச்சயம் அவர்களுக்கு வெற்றிதான்.

புருஷனும் மனைவியும் கை பிணைத்து சுற்ற, எதிரேயுள்ள முகம் மாறுவதில்லை. ஆனாலும், பின்னணியில் சுழன்று மாறி மறையும் கால காட்சிகள்... வேகம் கூடுகையில் நழுவும் பின்னணி மசமசப்பாகி எதிர் முகமும், இறுக்கும் பிடியில் மட்டுமே நிலையாகும்.

அவ்வுணர்வு விளிம்புகளை அவள் தன் மூன்றாண்டு மண வாழ்வில் அனுபவித்திருந்ததால் வியப்பு கூடியது.

ஆரம்ப கால தாம்பத்தியத்தில் சில நேரம் தனித்து சமாளிக்க முடியாமல் பெற்றோரிடம் ஓடியவள் தான்.

''அப்பா... அவர் குடிக்கிறார்ப்பா.''

''ஐயோ'' அம்மா ஓசையில்லாது அலற, அப்பா தன்மையாய்த் தாங்கினார்.

''தினமுமா சந்திரி? தனியா உட்கார்ந்தா, சிநேகிதங்களோட பேச்சும் சிரிப்புமாவா? எத்தனை பெக்? குடிச்ச பிறகு... ஆர்ப்பாட்டம், உன்னை... படுத்தறதுன்னு..?''

''இல்லப்பா, அப்படியெல்லாம் ஏதுமில்ல. பார்ட்டிக்கு போனாமட்டும். பிறகு சாதுவா வந்து தூங்கிடுவார். ஆனா, திருத்த சொன்னா பிடிவாதமா முடியாதுங்கறாரே?''

''சந்திரி, கொஞ்சம் விட்டுப் பிடி.''

''வெளியூருக்குப் போனா கூட எங்கிட்ட சொல்றதில்ல.''

''பெட்ரோல் கம்பெனி மானேஜர்ன்னா, சுற்று வட்டார கிராமங்களில் உள்ள எல்லா பெட்ரோல் பங்க் பிரச்சினைக்கும் இவர் ஓடணும் தான்.''

''நம்ப வீடு, உறவுன்னா பேச யோசிக்கறாரே... அவங்க உறவுக்காரங்கன்னா ஒரே ஆட்டம் பாட்டம் தான்.''

''சில பேர் அப்படித்தான், பழக வருஷமாகும்.''

''எதுக்கெடுத்தாலும் 'என்னை ஏன் எதிர்பார்க்கறே...? ஹேவ் யுவர் ஓன் லைப்'ங்கறார்ப்பா.''

''ஏதாவது வேலைக்கு போறியா? குழந்தையை நாங்க பார்த்துக்கறோம்!''

''அதுவும் கூடாதாம். நானும் வேலைக்கு போயிட்டா வீடு, வீடா இருக்காதாம். தவிர, குழந்தை ரம்யாவை நான் தான் வளர்க்கணுமாம். 'கிளப், பெயிண்டிங், நிட்டிங் எத்தனை இல்லை'ன்றார். எனக்கு அதிலே எல்லாம் ஈடுபாடே இல்லையேப்பா! ஸ்கூல்ல டீச்சிங் பிடிக்கும். அதுக்கு வழி விட மாட்டேங்கறார்.''

''பேசாம இன்னுமொரு குழந்தை பெத்துக்கோ,'' என்று தீர்வு சொன்னாள் அம்மா!

ஆருடம் போல இரண்டாவது குழந்தை பிறந்த பிறகு அலைகள் சற்று அடங்கித்தான் விட்டன. புகுந்த வீட்டாரிடம் அவனுக்கு நேசம் வளர்ந்து வலுப்பெற்றது. ஒன்றிரண்டு சிநேகிதிகள் நெருக்கமாகி, பரஸ்பரம் பிரச்சனைகள் குறித்துப் பேசி சிரிக்க





கூட முடிந்தது. அத்தோழிகள் கை கொடுக்க, ஆபீஸ் விருந்துகளில் ஐம்பது பேருக்கானாலும் சமைத்துப் பரிமாறுவது சவாலான சந்தோஷமாயிற்று. ஸ்பாஸ்டிக் பள்ளியில் பகுதி நேர வேலை கிடைக்க, ஓய்வும் அர்த்தமுள்ளதாகியது.

இருபது வருட தாம்பத்தியத்திற்குப் பின் திடீரென உணர்ந்தாள்... இப்போது சண்டைகள் கிளம்புவதில்லை. இழைகளை சிக்கல் நீக்கி சுற்றியதில் கூடு தயாரானது. அது அடைந்து கிடக்க வேண்டியதாயுமில்லை. வாசல் வைத்த கூடு, பறந்து விட்டு வந்து முடங்கி தூங்கலாம் என்ற சொகுசாய் மாறிப் போனது.

எல்லாவற்றுக்கும் அவளது அபிப்ராயம் கேட்டார், அவள் கணவர். அவளது யோசனைகளைக் கேட்டு சிலாகித்தார். 'ஏன் சுந்தரி, ரமணிக்கு டிரான்ஸ்பர் பார்ட்டியை பாண்டியனில் வைப்போமா, வீட்டிலேயா?'

'ஒவ்வொரு வீட்டைப் பார்க்கும் போது, நம் பின்னைங்க மணிங்க இல்லையா?'

'விடுமுறைக்கு எங்கே போகலாம் சொல்லு? நீயே முடிவு செய்தா, பிறகு ஏன் இங்கே கூட்டி வந்தீங்கன்னு மூஞ்சியைத் தூக்கி வச்சுக்க முடியாது நீ!' சிரிப்பார்.

'நேத்து காக்டெயிலுக்கு வறுத்து வச்சியே கார வடகம், ஜோரு போ.'

அவர்களது இருபத்தி நான்காம் திருமண நாளன்று மெல்ல கேட்டாள்:

''ஏம்பா, நம்ப வெள்ளி விழாவுக்கு இன்னும் ஒரு வருஷந்தான். இல்லியா?''

''ம்ம். நாள் போறது தெரியவேயில்லை. சதா பயந்து, மூக்கு சிந்தின அதே பெண்டாட்டியா நீன்னு கூட யோசிக்கறேன்.''

''கடவுள் கிருபையிருந்தா, கோல்டன் ஆனிவர்சரி கூட கொண்டாடலாம் - தேவசகாயம் தம்பதிகள் மாதிரி!''

''ஓ... அவங்களை நினைவு வச்சிருக்கியா?''

''உங்க குடும்ப நண்பர் தானே அவர்! அந்த கோலாகலத்தை மறக்க முடியல.''

''நமக்கு கல்யாணமான புதுசு இல்லியா?''

''மூத்தவ பிறந்தாச்சு. அப்பவே எனக்கொரு ஆசை. நாமும் இப்படி ஒருநாள் கொண்டாடணும்னு.''

''நோ... நமக்குள்ளே எளிமையா ஏதாவது இருக்கலாமே தவிர ஆடம்பர அமர்க்களம் வேண்டாம்.''

''ஏனாம்?''

'பொசுக்'கென்று அமுங்கின ஆசைகள், வெள்ளி விழா ஆண்டு நெருங்க மீண்டும் கொப்பளித்தன.

அதை உதாசீனப்படுத்த மனமில்லாமல் கணவர், அநாதை விடுதி, முதியோர் இல்லம், பார்வையற்றோர் பள்ளி என்று எங்கும் விருந்தும் இனிப்புமாய் பரிமாற ஏற்பாடு செய்தார். அவளுக்கு பொன்வளையலும், பட்டுப் புடவையும் பரிசளித்தார்.

எதிர்பார்த்திருந்த நாள் அன்று, பெற்றோரை கட்டி முத்தமிட்டு, இரு வெள்ளி தட்டுகளை நீட்டினாள் - உப்பிய வயிற்றுடன் பேறு காலத்திற்காக தாய் வீட்டிற்கு வந்திருந்த அவர்களது ஒரே மகள் ரம்யா.

''ரொம்ப அழகாயிருக்கு ரம்யா. இதுவரை இப்படி தட்டு வாங்கிக்கணும்னு நான் யோசிக்கவேயில்லை. ஆனா இனி தினம் இதிலேதான் சாப்பிடுவோம்,' என்றாள் சந்திரிகா.

சிநேகிதர்களும் வந்து பேசி, பாராட்டி பரிசளித்துவிட்டு போனார்கள். விருந்து தயாரிக்க, உணவிடும் இடங்களுக்கு போய் வர என்று நாள் பறந்தது. முதியோர் இல்லங்களில், நடுங்கும் விரல்கள் 'நல்லாயிரும்மா' என்று தொட்டு ஆசீர்வதித்த போது புல்லரித்தது. சிறு மொட்டுகள் 'ஹாப்பி ஆனிவர்சரி' என்று பாட மனது பொங்கியது.

''கன்கிராட்ஸ்ம்மா, ப்பா, நாளைக்கு பரீட்சை. நா ராத்திரியே கிளம்பணும்,'' என்று மகன் வந்து நின்றான்.

உறவுகள் மறக்காது வாழ்த்தி கடிதங்கள் எழுதியிருந்தனர்.

மதியம் சற்றே, படுத்துறங்கினாள்.

**சா**யங்காலமாய் குளித்து புதுபுடவையை கட்டுகையில், அவர் சொன்னது போல கூச்சமாய் தானிருந்தது.

''ஹோ ஹோ... ம்மா யூ லுக் லவ்லி,'' பாராட்டினாள் மகள்.





''ஷ்... கோயிலுக்கு போய் வரலாமேன்னு உடுத்தினேன். வெள்ளி ரூபாயா 25 சேர்த்து வச்சிருக்கேன். உண்டியல்ல சேர்த்துட்டு வரலாம்.

''அப்படியே என்னை பஸ் ஏத்தி விட்டுருங்கம்மா,'' மகன் ஏர்பேக்குடன் கிளம்பினான்.

கோயிலுக்கு போய், பலகாரங்களுடன் மகனுக்கு விடை கொடுத்து அனுப்பிய பின், ''சந்திரி, அப்படியே ஒரு டிரைவ் போயிட்டு வரலாமா?'' என்று கேட்டார், அவள் கணவர்.

''என்னை வீட்டில் இறக்கி விட்டுருங்கப்பா. அவர் இன்னைக்கு போன் பண்ணாலும் பண்ணுவார்,'' என்றாள் மகள்.

பத்தாவது நிமிடம் காரில் இருவர் மட்டுமிருக்க, அவர் கை, அவள் தோளைச் சுற்றிக் கொண்டது.

''இந்தப் புடவையிலே பத்து வயசு குறைஞ்சிருச்சு உனக்கு.''

''இவ்வளவு ஜரிகை வைத்ததை எடுத்திருக்க வேண்டாம்.''

''நல்லாத்தானே இருக்கு.''

மிதமான வேகத்தில் மிதந்தது. எதிரே மின்னி நெருங்கும் கார் விளக்குகள் கூட இன்று அவளுக்குப் புதுமையாய்த் தோன்றின.

''எங்கே போறோம்?''

''சும்மா ஒரு பதினைஞ்சு கிலோ மீட்டர். உம் பொண்ணு எத்தனை நாசூக்கா விலகிட்டா பார்த்தியா?'' அவள் இடுப்பில் அவரது விரல்கள் பரவின.

''ஸ்ஷ்... நான் அப்படி நினைக்கல,'' அவள் முகம் சூடானது.

''சந்திரி, நிஜம் சொல்லு. உனக்கு ஏமாற்றமா?''

''எது?''

''நீ ஆசைப்பட்டது போல கொண்டாட்டம் ஏதுமில்லாம...?''

''வாழ்க்கை ஏமாற்றமேயில்ல. அதுவே நிறைவில்லையா?''

''அந்த பொன் விழா போல... தடபுடலா..?''

''நமக்குக் கல்யாணமான முதல் வருஷம் உல்லாசமா உருண்டிருச்சு. மறுவருஷம் ரம்யா பிறந்தா. மூணாவது வருஷம் நீங்க பிரமோஷன், வேலை, மாற்றல்னு அலைபாய்ஞ்சீங்க. எனக்குத் தனிமை. நீங்க என்னை விட்டு விலகினாற் போல ஒரு தவிப்பு. 'இனி வாழ்க்கை அவ்வளவு தான்'னு ஒரு அலுப்பு எல்லாம் மொய்த்த நேரத்தில... தேவசகாயத்தின் திருமண

பொன்விழா நிறைய நம்பிக்கையை தந்ததுங்க.''

புரிகிறது என்பது போல, அவள் தோளைத் தட்டினார்.

''அந்த நிறைவை நானும் அனுபவிக்கணும்ங்கற எதிர்பார்ப்பு, உந்துதலை அது எனக்குள்ள விதைச்சது போல ஓர் உணர்வு.''

கார் ஊர்ந்து நின்றது.

''ரெயில்வே கிராசிங்கா? திரும்பிடலாமே?''

''என்ன அவசரம்?'' அவர் கண் சிமிட்டினார்.

அவர் காரை விட்டிறங்கி நிற்க, அவள் ஜன்னல் வழியே பள்ளத்தில் தெரிந்த குடிசைகளை, புளிய மரத்தை, பல் குத்திக் கொண்டிருந்த கிழவனை என்று ஒவ்வொன்றையும் அதிசயமாகப் பார்த்தாள். காரை விட்டு இறங்கியவள், காற்றின் குளுமையில் கண்மூடி தலையை உயர்த்தினாள். கண் திறந்த போது கருவானம் எங்கும் வாரியிறைத்த வைரங்களாய் நட்சத்திரங்களும், வெள்ளித் தட்டாய் நிலாவும்... ரொம்பவே ரசித்தாள்.

அருகில் வந்து நின்ற கணவரிடம்,

''உலகம் முழுசும் ஏதோ இன்னைக்கு விசேஷ அழகாய்த் தெரிகிறது! இதைவிட சந்தோஷம் வேறென்ன வேண்டும்?''

''இப்போ உனக்கு ஒரு பரிசு.''

மிக அருகிலிருந்த அந்த பழகிய முகத்தை புதிது போல ஆர்வமாய்ப் பார்த்தவள் கிசுகிசுத்தாள், ''என்ன?''

''இதுதான்'' என்று அவர் நீட்டிய பரிசில் புன்னகை வந்தது.

அரையடி நீள வெள்ளரிப் பிஞ்சை நீளவாக்கில் நேர்த்தியாய் அரிந்து, அல்லிப்பூப்போல விரிந்த இதழ்களுக்குள் காரப்பொடியும், உப்பும் தூவி...

''உனக்குப் பிடிக்குமே!''

''தாங்க்ஸ்ப்பா'' குரல் கம்மியது. ''மனசு நிறைய கொண்டாடிட்டோம்.''

பார்வைகள் சில கணங்கள் கோர்த்து நின்றன.

''ரயில் வந்திருச்சு போல?''

காரினுள் அமர்ந்து, சிறு பிள்ளைகளைப் போல ஓடும் ரயிலை வேடிக்கை பார்த்தனர். இருவருக்கும் மனம் நிறைந்திருந்தது.

(தினமலர் - வாரமலர், டிசம்பர் 1995)

★★★



# கூனல்

மதிய உணவினைச் சாப்பாட்டு கேரியரில் இட்டு துடைத்து முடித்த ராஜியின் கண்கள், ஜன்னல் வழியே அக்கிழவியைப் பார்த்து விட்டன.

பலமுறை பார்த்தாகி விட்டாலும் ஒவ்வொரு முறையும் மனம் உதைத்துப் புரள்கிறது.

உடலே இரண்டாக மடிந்து விட்டாற்போன்ற கூனலில் அக்கிழவி சிரமப்பட்டு நடந்தாள்.

ஏதோ தேடக் குனிந்தவள், நிமிர மறந்து விட்டாற்போல... கைகளை மார்போடு கட்டிக் கொண்டிருந்தாள். தொய்வாக விட்டிருந்தால், நான்கு கால் ஜந்து போலத் தோன்றும்...

ம்ப்ச்...

'பாவம்... வயசான காலத்திலே இந்தச் சிரமம்.'

ராஜியின் மனம் மூதாட்டிக்காக அனுதாபப்பட்ட அதே நேரத்தில் சுய பச்சாதாபத்திலும் சற்றே நனைந்து கொண்டது. மனம் குன்றிப் போன தானும் பாவந்தான். முன்னே போல வெளியே போக வர... ஒன்றுமில்லை. வீட்டினுள்ளேயும் அவள் வாய் விட்டுச் சிரித்து இரண்டு வருடங்களாயிற்றே! இவள் முகத் தெம்பிலும் சிரிப்பிலும் சூடு கண்டு மலர வேண்டிய குடும்பமும் இன்று கூம்பித்தான் கிடக்கின்றது.

இரண்டு வருடங்களாகக் கணவனின் டாக்ஸி தொழிலில் ஏகப்பட்ட கரைச்சல்... நஷ்டம். டயரும், பெட்ரோலும் ஏகத்திற்கு விலை கூடிக்கொண்டே போக, தொழிலில் ஏகப்பட்ட

போட்டி வேறு முளைத்தது. டீசல் வேன்களின் 'ரேட்' சகாயமாய் அமைய - விழா, திருமணம், டூர் எனச் சிறிய உள்ளூரின் தேவைகளிலும் டாக்ஸி தொழில் நசுங்கியது. கடனையும் அடைக்க முடியாது. படிப்பு, உணவு, வாடகை, உடை என நீண்ட பட்டியலில் பணத் திணறல் அதிகமாகி குடும்பம் முழுதும் சந்தோஷக் காற்று தேடித்தவித்தது.

கணவன், வீட்டிற்குக் கொண்டு வந்த சுமைகளை ராஜி சுமந்தாள். மனதுள் மருக மருக, சுமைகள் கனம் கூடி அவள் மனம் வளைந்து போனது.

சிநேகிதம், திருமணம், உறவு என்று எந்த அழைப்பையும் ஒதுக்கினாள்.

''பத்ரி வேன்ல குற்றாலம் போயிட்டு வரலாமா ராஜி? ஆறு, ஏழு குடும்பம் சேர்ந்து ஜாலியா...''

''பத்ரி, வேன் போட்டதிலேர்ந்துதான் நமக்குச் சிரம காலம் ஆரம்பம். அது புரியாது அவங்கூட போகணும்கிறீங்களே?''

''நீங்களும் ஒரு வேனு வாங்குங்க அண்ணேன்னுதான் அவனும்...''

''எல்லாம் வாய் ஜாலக்கு. எவனையும் நம்பாதீங்க.''

வீட்டில் கொண்டாட்டங்கள் நின்றன.

''அம்மா என் பிறந்த நாளுக்கு என் ஃபிரெண்ட்ஸைக் கூப்பிடறேனே.''

''அதொண்ணும் வேணாம்.''

''எதுக்கும்மா?'' பிள்ளை கெஞ்சுவான்.

''வீண் செலவு.''

''நீங்க செஞ்சு வச்சிருக்கிற தேங்குழலும், ரவா லட்டும் போதும்மா.''

''வர்றதுங்க சுற்றிலும் நோட்டம் விடுங்க. குடிக்க அது இதுன்னுங்க. சிரிச்சுப் பேசணும் - என்னால ஆகாது.''

''நாங்க சாப்பிட்டுட்டு வெளியே போய் விளையாடிக்கறோம்.''





''வாயை மூடு'' பல்லைக் கடிப்பாள்.

சமையல் உள்ளில் பித்தளையும் எவர்சில்வரும் குறைந்து அலுமினியம் நிறைப்பதை எந்தப் பிள்ளை கவனிக்கப் போகிறது?

அவளது ஒன்றிரண்டு நகைகளும் அடகுக் கடையில் இருப்பதைப் பற்றி அவர்களுக்கென்ன? இவள் புன்னகையுடன் இருப்பதைப் பரிமாறியிருந்தால் பிள்ளையும் சிநேகிதர்களும் சந்தோஷப்பட்டிருப்பார்கள்.

ராஜி, தனக்குள் குன்றி வீட்டின் இயல்பையும் நறுக்கி விட்டாள்.

டீசல் வேன் வாங்கிய பின் நான்கு மாதங்களாகத் தொழில் பரவாயில்லை. கடன், வட்டி, செலவு போக கையில் பணம் மிஞ்சுகிறது.

ஆனால், அவளால் நிமிர முடியவில்லை. வெளியே பெண்கள் அவளது கவரிங் சுமந்த கழுத்தை, கண்ணாடி வளையல்களை உற்றுப் பார்ப்பது போல சங்கடப்படுவாள்.

தங்களுக்கு மட்டுமே நஷ்டம்; அதனால் மறைவாக இருப்பது நல்லது என்பது போல ஒதுங்கிக் கிடந்தாள்.

இன்று குழந்தைகள் சாப்பாட்டை, பள்ளிக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இன்று காலை அவளுக்குத் தலைவலி. அனைவரும் பழைய சாதத்தை மோரில் கரைத்துக் குடித்து ஓடியாயிற்று.

மாத்திரைப் போட்டு, நேரம் பார்த்து முரண்டிய ஸ்டவ்வை சரிபார்த்து அவள் சமைத்தும் முடித்தாள்.

அடிக்கடி இப்படி உடல், தலை என வலியும் பாரமும் அவளைப் படுத்தி எடுக்கின்றன.

மனத்தின் துக்கம், உடல் முழுதும் ஓடி கனத்து விடுகின்றது.

உடல் கழுவி, சுத்தமாக உடுத்தி, சீவி வெளியே வர ராஜியின் உள்ளே சற்று வெளிச்சம் பட்டாற் போலிருந்தது. 20 நிமிட நடையில் பள்ளியினுள் நுழைந்தாள். அனைவரும் தன்னையே பார்ப்பது போன்ற தவிப்பில் குனிந்து நின்றவள், நிமிருகையில் யாரும் அவளை முறைக்கவில்லை என்பது புரிந்தது. மாநிழலில் தெரிந்தவர்கள், ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டும்

மணியடித்த மறுநிமிடம் வெளியே பாய்ந்து வந்த குழந்தைகளைக் கை கழுவச் செய்தும் கொண்டிருந்தனர்.

''இன்னைக்குத்தான் இங்கே வர்றீங்க இல்லையா?''

பளீரென்ற சிநேக முறுவலுடன் அருகே நின்ற பெண்ணைக் கண்ட ராஜி தடுமாறினாள்.

கேட்டவளின் கழுத்தில் கனமாகக் கிடந்த செயினும் சிவப்புக்கல் கம்மலும் அவளை மிரட்டின.

''ம்.''

''பிள்ளைங்க இங்கே புதுசா சேர்ந்திருக்காங்களா?''

''ம்... இல்லை.''

அதிசயமாய்த் தாயைப் பள்ளியில் கண்ட பிள்ளைகள் இருவரும் ஓடி வந்து அவள் கையைப் பற்றினர்.

''நல்லவேளை வந்தீங்கம்மா. ஒரே பசி.''

''அப்பா ஐந்து ரூவா தந்து பழம், பிஸ்கட் வாங்கிச் சாப்பிடச் சொன்னாங்க. ஆனா, பசிக்குச் சோறுதான்'' பிள்ளை சிரித்தான்.

''அடே... ரஞ்சிதாவோட அம்மாவா நீங்க?''

''ம்''

கேட்டவளின் குழந்தைகளும் வர ஏதேதோ பேசி சிரித்தபடி அவர்கள் சாப்பிட்டனர். கையை ஆட்டியபடி மகன் பேச, தாய் சிதறும் சாதத்தை பொறுமையாகச் சுண்டித் துடைத்தாள்.

''யாரது ரஞ்சி?''

ஆவல் தாங்காது ராஜி கேட்டாள்.

''சுநீதான்னு அடிக்கடி சொல்வேனேம்மா - அவதான். அது அவங்கம்மா. எங்களுக்கும் கூட அடிக்கடி ஸ்வீட் தருவாங்க.''

படிப்பு, பாட்டு, விளையாட்டு என அனைத்திலும் முதல் பரிசு தட்டிச்செல்லும் சுநீதா இவள்தானா? அந்தச் சின்ன முகத்திலேயே 'என்னால் செய்ய முடியாதா என்ன' என்ற துள்ளலும் பிரகாசமும் தெரிவதைக் காண ரம்மியமாயிருந்தது.

விக்கிய தம்பி வாயில் நீர் ஊற்றி, தாய்க்கு அப்பளம் ஊட்டியபடி





சாப்பிட்ட சுநீதா, அவ்வப்போது ராஜியைப் பார்த்து புன்னகைத்தாள். தன் மீது புதிய கண்கள் மொய்ப்பதை அவள் உணர்ந்திருக்க வேண்டும்.

சிறுமியின் இயல்பான பார்வையில் ராஜியும் வெட்கமாய்ப் புன்னகைத்தாள். சுற்றிலுமிருந்த சளசளப்பில், சிரிப்பில், காற்றில் அவளுள் ஏதோ புரண்டது.

கை கழுவி, பாத்திரங்கள் அடுக்கப்பட, பேச்சு தொடர்ந்தது.

''ரஞ்சிதா உங்களைப் போல ரொம்ப அமைதி.''

''ம்... உங்க மகளைப் பற்றி அடிக்கடி ரஞ்சி சொல்லுவா.''

''சுநீ வாயாடியாச்சுதே. வீடு ரொம்பத் தொலைவா?''

'' 20 நிமிஷமாச்சு.''

''அதுதான் கொடுத்து விட்டுடறீங்களா? நானும் வாயல் புடவைதான் கட்டணும்னு நினைக்கறது. வெயிலுக்கு இதம். ஆனா இஸ்திரி போடும் போது அலுப்பாயிடுது. நீங்க கட்டியிருக்கிற சுங்குடி எங்கே எடுத்தது?''

பேச்சு சரசரவென கடை, சொந்த ஊர், படிப்பு, மழை, வெயில் என வளர்ந்தது.

பேசியபடி நடக்க சுவாரஸ்யமாயிருந்தது.

உள்மனக் குகைக்குள் காற்று புகுவது போன்ற உணர்வில் ராஜிக்குச் சற்றே உற்சாகம் வந்தது.

புன்னகைப்பதில் கன்னங்கள் இளகி, நாவு தளர்ந்தது.

''ரஞ்சிதா அப்பா வேலையில் கொஞ்சம் சிக்கல். வருமானம் சரியில்லாம கஷ்டப்பட்டுட்டோம். இப்போ பரவாயில்லை.

ஆனாலும் 'சட்'டுன்னு யாரையும் பார்த்துப் பேச, சிரிக்க தயக்கமாயிருக்கு.''

அடுத்தவள் மெள்ள புன்னகைத்தாள்.

அவள் கண்களின் கீழே வளையமிட்டிருந்த கருமை கூட அழகாயிருந்தது.

''சுநீதா அப்பா அவ நாலு வயசாயிருக்கையிலேயே தவறிட்டார்.''

''ஆஹ்...'' ராஜிக்கு மறுபடி மூச்சையடைத்தது.

''அப்போ சின்னவன் ஒன்பது மாசக் குழந்தை.''

''நீங்க...?''

''வீட்டு முன்னாடியே கடை போட்டு நடத்தறேன். நடராஜ் ஸ்நாக்ஸ்.''

''ஓ...?''

''அது அவர் பேரு.''

''ம்.''

''சொச்ச காலத்துக்கு நாமளும் வாழணும். குழந்தைகளும் நம்மை நம்பித்தானே! நம்ப முகம் வாடினா, அதுங்க கருகிடுங்க.''

''உண்மைதான்.''

உள்ளே கூனல் நெளிந்து நிமிர ஆரம்பித்தது. நிமிர்வின் நோவில் ராஜியின் கண்களில் நீர் துளிர்த்தது.

(மங்கையர் மலர், பிப்.1994)

★ ★ ★



# நல்லவேளை...!

அகல்யாவை அவள் புகுந்த வீடு 'ஓஹோ' எனக் கொண்டாடியது. அவள் செய்யும் ஒவ்வொரு வேலையையும் பாராட்டி சிலாகித்தார்கள். அகல்யா பூரித்துப் போனாள்.

அவளது தாய் வீட்டிலும் முக்கால்வாசி வேலைகளை மூத்த பெண்ணான அவள்தான் செய்வாள். வீட்டைச் சுத்தமாகப் பேணி, எளிய பதார்த்தமானாலும் ருசியாகச் சமைத்து, விருந்து வரும் போது பரபரவென்று சுழல-

''என் வலது கை அகல்யா பொண்ணுதான். நான் நினைக்கறதைச் செய்தே முடிச்சிடுவா. மீதி நாலும் படிப்பு, விளையாட்டுன்னு அதுங்க போக்கிலே போவுதுங்க. வீட்டு மேல்வேலைக்குக் கூட ஆள் வச்சுக்கலை நான்'' - என்று அம்மா வருவோர் போவோரிடமெல்லாம் சொல்லுவாள்.

அம்மாவின் சொற்களில், பிறரின் வியப்பில் அகல்யா கர்வம் தலைதூக்க வீட்டில் ஒரு ராணி போல வலம் வந்தாள். ஆளும் பார்வையாயிருக்க, அவளின் சுறுசுறுப்பே அவளுக்கு விரைவில் ஒரு நல்ல புருஷனைத் தேடிக் கொணர்ந்தது.

மாமியார் வசதியான 'மிராசு' குடும்பத்தில் பிறந்து, தற்போது ஆபீசர் பதவியிலிருப்பவர்.

பெண் பார்க்க வந்தவர், அகல்யாவின் கரங்களைப் பாசத்துடன் வருடியபடி பேசினார்.

''ஒரு ரசம் வைக்க, இன்னும் நான் சமையல் புத்தகத்தைத் தான் புரட்டறேன். சமையல்கார நாயுடு படுத்துட்டா, ஹோட்டல் சாப்பாடுதான். வேலைக்காரர்கள் தயவிலேயே எங்க காலம்

ஓடிடுச்சு. ஆனா பசங்க மூணு பேரும் சதா என்னைக் கேலியும் கிண்டலும்தான். எங்க நிலத்திலேர்ந்து வேண்டிய பருப்பு, புளி, தேங்காய் வரும். மூத்தவன் தனிக் குடித்தனத்துக்கு இவர் ஃபிளாட் கூட வாங்கிட்டார். பிறகென்ன? பொண்ணு வேலை பார்க்க வேண்டிய அவசியமில்லை. நறுவிசா குடும்பம் நடத்தினா போதும்ங்கறது எங்க எல்லார் அபிப்ராயமும். அதுதான் அகல்யாவைப் பற்றி கேள்விப்பட்டு...''

திருமணம் நல்லபடி நடந்தது. புக்ககத்தாருடன் ஒரு மாதம் கழித்த பின் தம்பதிகள் தனி வீட்டிற்கு வந்தனர். அனைத்து வேலைகளையும் மீறி, தோழிகள், படிப்பு என இல்லாது போக, அகல்யாவிற்கு நேரம் எதேஷ்டமாய் மிஞ்சிக் கிடந்தது. கணவனின் அணைப்பு அன்பு இவற்றையும் மீறி தாய் வீட்டின் நினைப்பு, ஏக்கமாகத் திரண்டு கொண்டிருந்தது.

வெள்ளிக்கிழமை காலை தனக்கு மட்டுமாய் கரண்டி எண்ணெயைக் காய்ச்சுகையில் தங்கைகள் குளிக்கச் செய்யும் ஆர்ப்பாட்டம் நினைவிலாடியது.

'அக்கா... மதியம் பயங்கரமாய் பசிக்கும். காரசாரமா ஏதானும் செய்' என்று அதட்டுவார்கள்.

இவளும் அம்மாவுமாய் சமையலில் திணற, ரேடியோவோடு சேர்ந்து பாடியபடி முடியாற்றுவார்கள் - தங்கைகள் விஜியும் விமலாவும்!

அம்மாவுக்குச் சிரமந்தான். சின்னதுங்க இத்தனை நாளில் ஒரு வேலையையும் கூராக் கத்துக்கலையே. தம்பி, கடைக்குட்டித் தங்கை இதுங்ககிட்ட என்ன எதிர்பார்க்க?

திருச்சியில் பஸ் ஏறினால் மூன்றாம் மணி நேரம் அவள் பிறந்த ஊர் சேர்ந்து விடலாம். ஒரு ஜோடி இறக்கைகள் இருந்தால் அவள் 'ஜிவ்'வென்று பறந்து போய் அம்மாவிற்கு வேண்டிய ஒத்தாசைகள் செய்து விட்டு, டிபன் தயாரிக்க தன் வளைக்குத் திரும்பி விடலாம்!

கற்பனைகள் ஏக்கத்தை நோவாக்க, மறுமாதம் கணவரோடு ஒரு வாரம் தங்குகிறாற்போல தாய் வீடு கிளம்பி விட்டாள் அகல்யா.

அம்மா, தங்கைகளைக் கட்டிக் கொண்டு ஐந்து நிமிடங்கள்





சிரிப்பும் பேச்சும் ஆனபின், அவள் கண்கள் வீட்டைச் சுற்றி வந்தன. பல மாறுதல்கள் தெரிந்தன! அவற்றில் வீடு மேலும் மெருகேறித்தான் தெரிந்தது. விஜி தாவரவியல் என்பதாலோ என்னவோ வீடு முழுக்க விதவிதமாகச் செடி கொடிகள் 'பச்'சென்று நின்றிருந்தன.

''ஏது இது புது தினுசு தொட்டிங்க?'' ஆர்வமாய் கேட்டாள்.

''நானே டிஸைன் போட்டுக் கொடுத்து செய்ய வைத்ததுக்கா. பெயிண்ட் செய்தது நல்லாயிருக்கா? உனக்கும் கூட நாலு தொட்டி செய்து வைத்திருக்கேன்.''

''ஹால் ஃபோட்டோவெல்லாம் எங்கேடீ?''

''நம்பெல்லாம் ஜட்டி ஸ்டேஜிலேர்ந்து, சடங்கு வரையிருந்த படங்கதானே? சிலதைப் பிரிச்சு ஆல்பத்திலே ஒட்டியாச்சு. மீதி மாடி ரூமிலே மாட்டியிருக்கா.''

அகல்யாவின் திருமணத்தின் போது எடுக்கப்பட்ட அவர்கள் குடும்பப் புகைப்படம் மட்டும் பெரிதாக்கப்பட்டு, வெள்ளிச் சட்டத்திற்குள் பளபளத்தது.

ஒன்றிரண்டு இயற்கை ஓவியங்கள், புதிய சிறு குஷன்கள், அவற்றில் அமர்க்களமாய் பூவேலை என்று வீடு பொலிவாய் மாறியிருந்தது.

''நம்ப வீடு மாதிரியேயில்லை.''

''உன் பெட்டியெல்லாம் மேல் ரூமிலே வைச்சாச்சக்கா.''

மாடி அறையும் நேர்த்தியாக ஒதுங்க வைக்கப்பட்டிருந்தது. தான் சுத்தமாக வீட்டை வைத்திருந்தது உண்மையென்றாலும் இத்தனை ரசனையுடன் ஜோராய்...? நினைத்தபடி குளித்து உடை மாற்றியவள் கீழே வர, விருந்து சுடச்சுட பரிமாறப்பட்டது.

''ஏங்க நீங்க குளிக்கலை?''

''சீட்டு விளையாட உட்கார்ந்திட்டேன். இத்தனை பேரோடு சேர்ந்து 'கழுதை' விளையாட ஒரு ரவுண்ட் கூட வரலை போ - சரமாரியா வெட்டுத்தான்'' ரஞ்சன் சிரித்தான்.

'கழுதைங்க அத்தானோட சீட்டு விளையாடுச்சுன்னா, சமையல் யார்... எப்படி?' மனதுள் ஆரம்பித்த முனகல், கணவனது உற்சாகத்தில் மறைந்தது.

''அட! சிக்கன் மக்ரோனியா? எனக்குப் பிடிச்ச சைனீஸ் டிஷ். நீ இத்தனை நாள் இது சமைக்கவேயில்லையே அகில்?''

''போன மாசம்தான் நானே கத்துக்கிட்டேன். நான் ரெஸிப்பி தரேன்கா.''

விமலாவும் விஜியும் வளையவந்து பரிமாறி, கடைசியாக வறுத்த தேங்காய்ப்பூ தூவி பீடா கூட சுருட்டி நீட்டினார்கள்!

அகல்யாவிற்கு மூச்சடைத்தது!

''நீங்களும் சாப்பிடுங்க விம்மி. கழுவி கவிழ்க்க நானும் வரேன்'' என்றாள்.

''சாயங்காலமா ஒரு பொண்ணு வந்து கழுவி, துவைச்சுத் தந்திடுவாக்கா. நீ நல்லா ஒரு தூக்கம் போடு'' என்று தங்கைகள் கண்சிமிட்டி சிரித்தனர்.

அம்மாவைக் கட்டியபடி படுத்தாள்.

''உன் கொழுந்தன்மாருக்கு தினம் உன் வீட்டுக்கு வராம தீராதுன்னு எழுதியிருந்தியேடீ'' அம்மா சிரித்தார்கள்.

''ம். டிபனோ, டின்னரோ எங்க கூடத்தான். அத்தை - மாமாவுக்குக் காரியரில் வச்சுக் கொடுத்தனுப்புவேன்.''

''இனி மூணு வேளையும் அங்க நாயுடு சமையல்தான்.''

''சீக்கிரமா வந்திடுங்கண்ணின்னு நூறு தரம் சொல்லித்தான் அனுப்பி வைச்சாங்க'' சொல்கையிலேயே அவள் மனம் பொங்கி நெகிழ்ந்தது.

மாலை டிபனுக்கு சீஸ் பக்கோடா, சாஸுடன் பரிமாறப்பட்டது.

'அகல்யா வந்திருக்காப்போல?' என்று எதிர், பக்கத்து வீட்டுப் பெண்கள் எட்டிப்பார்க்க, வந்து சாவகாசமாய்ப் பேசினர்.

''சரி கனகம். உம் மாப்பிள்ளை வந்திருக்கற நேரம். தலைக்கு மேல வேலையிருக்கும். கிளம்பறோம்'' என்று அவர்கள் எழுகையில், அம்மா தடுத்தார்கள்.

''இதோ விம்மி உங்களுக்கெல்லாம் காப்பி கொண்டு வரா. இருங்க. எனக்கென்ன வேலை? விஜியும் விம்மியும் எனக்குக் கையும் கண்ணுமா இருந்து சகலமும் பார்த்துக்குதுங்களே.''





அகல்யாவினுள் ஏதோ 'சப்'பென்று அடங்கியது. அவள் அம்மாவை எண்ணி மருகியதற்கு மாறாய், இந்த நான்கு குழந்தைகளுள்ள வீட்டில், அவளில்லாமல் வீடு முன்னையும் விட அம்சமாய் - நேர்த்தியாய் இயங்கிக் கொண்டிருந்தது.

அப்பாகூட இளைய பெண்கள் நீட்டிய டிபன் தட்டுகளை, ''ம்... இன்னைக்கு என்ன புதுசா?'' என்று அலுப்பது போல ஆவலாய் வாங்கி ருசித்துச் சாப்பிட்டார்!

'டேய், உன் வேலையை நீதான் செய்யணும்' என்ற விஜியின் அதட்டலில் தம்பி அவன் மட்டை, அழுக்குத் துணிகள், பை, ஷூ அனைத்தையும் அதனதன் இடத்தில் இட்டான். காய்கறி, பால் அனைத்தையும் 'டாண்'ணென்று வீட்டில் இறக்கினான். சின்ன தங்கை, பாட்டு கேட்டவாறு குவிந்திருந்த துணிகளை இஸ்திரி செய்து அடுக்கினாள்.

''அத்தைக்குப் பிள்ளைகளை எப்படி வளர்க்கணும்ங்கறது தெரிஞ்சிருக்கு'' ரஞ்சன் சிலாகித்தான்.

குடும்பம் ஸ்தம்பிக்காது, மேலும் தடபுடல் படுவது கண்டு அகல்யாதான் ஸ்தம்பித்து நின்றாள்.

அன்றிரவு கணவனைக் கட்டிக் கொண்டு அவன் கழுத்துக்குள் முனங்கினாள் அவள்.

''நல்லவேளை உங்களுக்கு நான் ஒரே பொண்டாட்டி'' என்று!

('மங்கையர் மலர்' 1992 - தீபாவளி இதழ்)

★ ★ ★

# வட்டத்திற்கு வெளியே...

**வா**னொலியின் வீணை இசையை ரசித்தபடி லலிதா, மடியில் கிடந்த உதிரி கனகாம்பரத்தைத் தொடுத்துக் கொண்டிருந்தாள். குளித்த கையோடு தலைக்கு அம்மா சாம்பிராணி காட்டியதில் வீடு பூராவும் மணத்தது. தேங்காய் எண்ணெயில் சட்னி தாளிக்கப்படும் மணத்தில், நாவு சுரந்தது.

''ஆயா இன்னைக்கு மட்டம்தானா?'' கேட்டாள்.

''வருவா - லேட்டா''

''தெரிஞ்சிருந்தா நான் பெருக்கி சுத்தம் பண்ணிட்டுக் குளிச்சிருப்பேன்.''

அம்மா எட்டிப் பார்த்து,

''அது கிடக்குது. போன மாசம் நான் வாங்கின ஆரஞ்சு நிற சுங்குடிச் சேலை பெட்டியிலே இருக்கு. எடுத்து கட்டிக்கோ. கனகாம்பரத்துக்கு மேட்சாயிருக்கும்,'' என்றார்.

தாய்நாட்டின் பல இனிமைகளை மனதுள் சிலாகித்தபடி புடவையை உடுத்திக் கொண்டாள் லலிதா.

நேற்றிரவு அவள் உட்கார்ந்து தைத்த கரும்பச்சை ரவிக்கை மட்டும்தான் சரியான அளவு. மற்ற பழைய ரவிக்கை, ஐந்து கிலோ குறைந்த அவள் தோள்களில் தொளதொளத்து வழிந்தது.

விமான நிலையத்தில் அவளைக் கட்டிக் கொண்டு ரெண்டு நிமிடங்கள் சந்தோஷத்தில் அழுத அம்மா கேட்ட முதல் கேள்வி,

''சாப்பிடறியா இல்லையா?'' என்பதுதான்!

''எப்படித் தோணுது?'' சிரித்தபடி கேட்டாள் மகள்.





மெலிந்திருந்தாலும், நிறமும், பொலிவும் கூடித்தானிருந்தன.

''சின்னப் பொண்ணாட்டமிருக்கே லலிதா,'' என்றார் அப்பா சந்தோஷமாக.

''கேக் செய்து விக்கறேன்... ரவிக்கைத் தைச்சுக் கொடுக்கறேன்னு அநாவசியமா வருத்திக்கற. அது தான் இப்படி மெலிஞ்சுட்டே.''

''மனோ பெரியவனாயிட்டான். வீட்டில வேலை அதிகமில்லையேம்மா. நல்லாயிருக்காம்மா?''

புதுச்சேலையில் சின்ன பெண் போல கேட்ட மகளை நிமிர்ந்து பார்த்தாள் அம்மா.

''அமெரிக்காவுல நீ புடவையே கட்டறதில்லையா? கொசுவம் தஸ்புஸ்னு நிக்குது.''

''பருத்திப் புடவை, புதிசு வேறே.'' லலிதா மழுப்பினாள்!

''தலையில இன்னும் ஈரம் தெரியுதுடி. காய வச்சுப் பின்னு. சாப்பிட வா.''

தோட்ட வாசலைத் திறக்க யத்தனித்த யாரோ 'சட்'டென்று பின் வாங்குவது தெரிய, லலிதா குரல் கொடுத்தாள்.

''யாரது?''

முடியைக் கோதியபடி முன்னே போய் எட்டிப் பார்த்தவளின் கண்கள் யோசித்தன.

பம்பையாய்ச் சுருண்ட முடியும், நெற்றி வடுவும்...

''சந்திரன் தானே நீ? என்னை நினைவில்லை...''

பதிலுக்குச் சிரிக்காமல் உருவம் பம்மியபடி நின்றது.

'இவனுக்கு வயது இருபத்து மூன்று இருக்குமா? மழிக்காத முகமும், கசங்கிய உடையுமாய் இப்படி நிற்பானேன்?'

''உள்ளே வாயேன்.''

''அம்மா, கடைக்குப் போகணும்னு சொன்னாங்க.''

''அப்ப ஏன் ஓடற?'' சிரித்தாள்.

உள்ளே நழுவியவன், மூன்றாவது நிமிடம், பின் வழியாய் வெளியேறி விட்டான்.

சாப்பிட்டு முடித்து, பாத்திரங்களைக் கழுவியபடி கேட்டாள்.

''சந்திரனை நான் போன முறை வந்தப்பெல்லாம் பார்க்கவே இல்லையேம்மா.''

''அவன் பெரியப்பா அவனைப் படிக்க வைக்கறேன்னு மதுரைக்கு கூட்டிட்டு போயிட்டார். பி.காம்., படிச்சான்.''

''நல்லா வளர்ந்திட்டான். நம்ம மனோ இவனை விடவும் இரண்டு இஞ்ச் உசரமா இருப்பான்.''

''மாப்பிள்ளை நல்ல உயரமாச்சே. அடுத்த வருஷம் பிள்ளையைக் கூட்டிட்டு வா. உங்கப்பாவுக்கும், எனக்கும் சதா மனோக்குட்டி நினைப்புதான்.''

''சாப்பிடறதுக்கு முன்னால அப்பாவை எங்கம்மா துரத்தினீங்க?''

''ஹால் டியூப் லைட் மாத்தணும். தெரிஞ்ச ஒரு எலக்ட்ரிஷியன் பையன் உண்டு. அதான் போயிருக்காங்க.''

''சாப்பிட்ட பிறகு போலாம்ல?''

''பிந்தி போனா அவனைப் பிடிக்க முடியாது. ஏக வேலை அவனுக்கு. இப்போ மனோ பரீட்சையெல்லாம் முடிஞ்சிருக்குமில்லை?''

''ம். அடுத்த வாரம் வேலைக்குப் போகப் போறான்.''

''ஸ்கூல் படிப்புக்கு என்ன வேலை?''

''ஓட்டல்லம்மா. பரிமாறுற வேலை!''

''சர்வரா?'' - முதியவளின் முகம் நிறம் தப்பியது.

''சின்ன ரெஸ்ட்ராரெண்ட்தாம்மா.''

''ரெண்டு பேருமா சம்பாதிக்கறீங்களா?''

''ம்...''

''குழந்தை மேற்கொண்டு படிப்பானா?''

''பின்னே? மூணு மாசம் லீவு. சுயமா சம்பாதிக்கணும்னு பிரியப்படறான். அது அங்கே மாமூல்தான். வேண்டிய உடுப்பு, புத்தகம்னு வாங்கிக்குவான். காசு அருமை புரியும். கட்டுப்பாடு வரும். தன்னம்பிக்கை கூடும். சந்திரனுக்கு சின்ன வேலை கூட



வட்டார நூலகம்
அசோக் நகர், சென்னை-83



ஏதும் கிடைக்கலியா?''

''பி.காம்., படிச்சிட்டு டேபிள் துடைக்கவா? ஊர் சிரிச்சிடும்.''

''ஆக நீங்க அவனுக்கு நல்ல புத்தி சொல்லலை!''

தாய்நாடு இனிமைதான். ஆனால், இங்கு முள்ளாய் தைக்கும் வறட்டுக் கவுரவங்கள். போலி மான அவமானங்கள் அதிகம் எனத் துக்கத்துடன் நினைத்துக் கொண்டாள். பாத்திரங்களைக் கவிழ்த்தவள், காய்கறி நறுக்க ஆரம்பித்தாள்.

அம்மா ஏதும் பேசவில்லை.

''ஆள் வளர்ந்தாப் போதுமாம்மா? கூடவே திறமை, அனுபவம், தைரியம் எல்லாம் வளரணுமே! சும்மாயிருந்த இந்த இரண்டு வருஷத்துல சந்திரன் தன் சாப்பாடு, சட்டை சமாச்சாரத்துக்குப் பிறரை எதிர்பார்க்காம இருந்திருக்கலாமே?''

''அதெல்லாம் உங்க ஊருல. 'என் பையன் 'சர்வர்' உத்யோகத்துக்கு தயாராயிருக்கான்' னு சொல்லி வைக்காதே.''

சற்று முன் அம்மா முகத்திலிருந்த குதூகலமும், பொலிவும் சுத்தமாய்த் துடைக்கப்பட்டிருந்தன.

''அவன் வேலை கவுரவக் குறைவுன்னு நாங்க நினைக்கறது மனோவுக்குத் தெரிஞ்சா வருத்தப்படுவான்.''

''என் பேரனைப் பத்தி நாங்கூடத்தான் வருத்தப்படறேன்.''

''தப்பும்மா. தன்னம்பிக்கை கரைஞ்சு, கூனிக் குறுகித் திரியறது தப்பு. சமுதாய கேலிக்கு அஞ்சி ஏழைப் பெற்றோருக்குச் சுமையா நிக்கறது தப்பு. அலுங்காம, அழுக்குப்படாம, சம்பளம் வாங்கிடணும்னு பிடிவாதம் பிடிக்கறது தப்பு.''

அரவமில்லாது சந்திரன், பில்லும் சாமானுமாய் வந்து நிற்க, லலிதா 'கப்'பென்று வாய் மூடினாள். தன் பேச்சைக் கேட்டிருப்பானோ என்ற கேள்வியோடு அவன் முகத்தை ஆராய்ந்தவள் மனம் வலித்தது.

''உன் மனசைப் புண்படுத்தணும்னு பேசலை சந்திரன். நீ வந்ததைக் கவனிக்காம... ஐ யாம் சாரி.''

''சில புண்களைக் கீறித் திறந்தாத்தான் குணமாகும்க்கா.''

சங்கடத்தைச் சமாளிக்க லலிதா படபடவெனப் பேசினாள்.

''என் கல்யாணத்தப்போ நீ பொடியன். உங்கம்மா விசேஷ நாட்கள்ல ஒத்தாசையா இங்கே வரப்போ, நீயும் வருவே. உங்கம்மா கிட்டேதான் மாலாடு, அதிரசம் எல்லாம் பிரமாதமா செய்யக் கத்துக்கிட்டேன். அமெரிக்காவுல அதுக்கு ஏக டிமாண்ட். ஐம்பது, நூறுன்னு ஆர்டர் வந்தபடி இருக்கும். அங்க உதவிக்கு யாரையும் எதிர்பார்க்க முடியாது. எல்லாம் நாமதான். வாரத்துக்கு சமைச்சுப் பிரிஜ்ல வச்சுடுவேன். தோட்டத்தைப் பராமரிக்க அப்பப்போ பக்கத்து வீட்டுப் பையன் உதவுவான். டாக்டருக்குப் படிக்கறான். மணிக்குப் பத்து டாலர் கொடுத்திடணும்.''

''அங்கே வேலைவாய்ப்பு ஜாஸ்தி. அமெரிக்கா, நம்ப நாட்டை விட மூணு மடங்குப் பெரிசு. ஆனா, ஜனத்தொகை நம்மதுல மூணுல ஒரு பங்குதான்.'' படித்ததை ஒப்பித்தான் சந்திரன்.

''அங்கேயும் வேலை தேடுற அவதி உண்டுப்பா. ஆனா, இந்த வேலை வேண்டாம், கவுரவக் குறைச்சல்னு எந்த வேலையையும் ஒதுக்கற எண்ணம் கிடையாது.''

''புரியுதுக்கா. இனி, கிடைக்கற வேலையில் புகுந்துக்கறேன். என் சாப்பாட்டுக்கு ஆனாலும் பரவாயில்லதானே?''

''நீ ஏன் வேலை தேடணும்? வேலை ஒண்ணை உருவாக்கு.''

மேஜையைச் சுரண்டியபடி நின்றவன், மெல்ல நிமிர்ந்தான். மூச்சுக்கு முந்நூறு 'அக்கா' போட்டபடி அவள் பின்னாள் சுற்றிய சிறுவனின் ஜாடை, நன்கு தெரிந்தது.

''அம்மா, போனதடவை நான் கொடுத்த வாக்குவம் - கிளீனரை நீங்க உபயோகிக்கறது இல்லையா?''

''அதும் பின்னால பிடிச்சிட்டு என்னால ஓட முடியலை லலிதா!''

''பரண் மேலே போட்டு வச்சிருக்கீங்க?''

சந்திரனின் உதவியுடன் அடுத்த பத்தாவது நிமிடம் கீழிறங்கியது அந்த க்ளீனர். மின்சார உயிர் தர, பல நாட்களின் புழுதிப் பசியோடு 'உஸ்'சென்று தூசியைத் தேடி விழுங்கியது. செய்முறை விளக்கப் படத்தைக் காட்டி விளக்கினாள். ஆச்சரியத்தோடு பார்த்தவன், அதை இயக்க, அதனோடு இயங்கப்





பழகினான்.

''ஜன்னல் கிரில் தூசெல்லாம் துடைக்கறதே இல்லையாம்மா?''

''விடுங்கக்கா. தலைக்குளிச்சு ஒட்டடை அடிக்கலாமா நீங்க?''

அரை மணி நேரத்தில் வீடு பளிச் சென்றாகியது.

வேலை முடிந்து பெருமையுடன் சுற்றிலும் பார்த்தவன், ஈரத்துணி தேடி எடுத்து மின்விசிறிகளைத் துடைத்தான்.

''பரவாயில்லை சந்திரன் - விடு.''

''அது மட்டும் அழுக்கா தெரிஞ்சதுக்கா. அம்மாவுக்கு ஏறி துடைக்க முடியுமா...? அதான்.''

சுத்தமாகத் துடைத்தான்.

''மூடிச்சாச்சுக்கா. துணியை இப்படி ஓரமா வைக்கட்டுமா?''

''ம். நீ சாப்பிடேன். நான் பாத்ரூமை கழுவி விட்டுட்டு வரேன்.''

''என்னக்கா ஒரு மாதிரி வாடை?''

''பாத்ரூமெல்லாம் கறை. அது போக லோஷன் போட்டேன். அந்த வாசனைதான்.''

''பாத்ரூம் கூட நீங்கதான் கழுவணுமாக்கா?''

''ஒரு கஷ்டமுமில்லை. லோஷன் போட்டு லேசா தேய்ச்சு விட்டா கறை போயிரும்.''

அவள் செம்பு நீரை விசிறி பெருக்கித் தள்ள, தரை மின்னியது.

அவன் விடு கிளம்புகையில் இருபது ரூபாயை நீட்டினாள். கூடவே 'வாக்குவம் க்ளீனரை'யும் கொடுக்க-அவன்,

''ஏதும் ரிப்பேராக்கா?'' - கேட்டான்.

''உன் புது தொழிலுக்கு என் மூலதனம். நம்ப காலனியில பெரிய, பழைய வீடுங்க நிறைய இருக்கு! பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் வேலைக்குப் போறாங்க. அவங்களுக்கு வீட்டைச் சுத்தப்படுத்த நேரம் இருக்காது. நீ ஒரு மணி நேரத்துல, தரை விரிப்பு, ஜன்னல் திரை எல்லாத்தையும் சுத்தம் பண்ணிடலாம்.''

சந்திரன் அசையாது நின்றான்.

''அத்தனைத் தகுதியில்லாத வேலைன்னு நீ நினைச்சா... விட்டிடு.''

''இல்... லக்கா... வந்து, இதும் விலை ஆயிரக்கணக்கில இருக்குமே. நா கொஞ்சம் கொஞ்சமா அம்மாகிட்ட கடனைக் கட்டிடலாமா...?'' கேட்கும் போதே அவன் நெஞ்சம், விழிகளும் பொங்கின.

இருவர் முகங்களிலும் புன்னகை விரிந்தது.

''ஆரம்பமா இது...'' அவள் தந்த இருபது ரூபாயை லலிதாவின் தாயிடம் நீட்டினான்.

''முத முதலா சம்பாதிச்சகாசு. உங்கம்மா கிட்டே கொடு போ'' அம்மா அதட்டினார்.

''பாத்ரூமுக்கு ஏதோ லோஷன் போட்டீங்களே. அது பேரு கூட எழுதித் தாங்கக்கா.''

''பெரிய வீட்டுக்கு 25 ரூபா. சின்ன வீடுகளுக்கு 15 ரூபாய் சார்ஜ் பண்ணாப் போதாது?''

''பழந்துணி கூடவே எடுத்திட்டுப் போயிடுறேன்.''

''போகப் போக 'ரேட்'டைக் கூட்டிக்கோ''

''மின்சார சார்ஜ் அவங்களதுதானே? இது போதும்க்கா.''

உற்சாகமாய் பேசினான்.

''என்டா சந்திரன், பியூஸ் போட, வாஷர் மாத்த கத்துக்கோ. மாமா அதுக்கு எத்தனைத் தடவை அலையுறாங்க. வர்ரவனுக்கு இருபதுக்குக் குறையாம கொடுத்தாகறது. அதை உனக்குக் கொடுக்கலாமே.''

கண்களில் ஒளியும், தோள்களில் நிமிர்வுமாய் சந்திரன் வெளியேறினான்.

''லலிதா, ஓட்டல்ல நம்ப மனோக்குட்டி பரிமாறுற மாதிரி ஒரு போட்டோ எடுத்து அனுப்பி வை. நாலு பேர் பார்த்து திருந்தட்டும்,'' என்ற தாயை சிரிப்பும், வியப்புமாய் பார்த்து நின்றாள் லலிதா!

(தினமலர் - வாரமலர், மே.1994)

★★★



# பல்லக்குப் பயணம்

ஜமுனாவிற்குள் ஆத்திரமும் அழுகையும் கலந்து பொங்கின. மெல்லிய மூக்கு சிவந்து விடைக்க, செய்வதறியாது அறைக்குள் நின்றாள் - நடந்தாள்.

நாத்தியின் குரல், முணுமுணுவென்று மந்திரம் போடுவது கேட்டது.

பிறந்த வீட்டில் மூன்று ஆண் பிள்ளைகளுக்குப் பின் பிறந்த கடைக்குட்டி அவள். செல்வத்துடன் செல்வ வாழ்வு.

கடந்த இரு மாதங்களில் - அதாவது ராகவனைக் கைபிடித்தபின் ஜமுனாவின் வாழ்க்கை முறை புரட்டிப் போட்ட நிலுசில் மாறியிருந்தது.

''மாசச் சம்பளக்காரனுக்கு அப்பா கொடுக்கறாரேன்னு யோசிக்காதேம்மா. நல்ல பையன். படிப்பு, உயர்ந்த ஒழுக்கம், அழகு அத்தனையிலும் மாப்பிள்ளை வைரம். திறமையிருப்பதால் மேலும் உயருவார். உங்களுக்கு வேண்டிய சௌகர்யம் செஞ்சு தர்றேன் - சரிதானே?''

வரதட்சணை லிஸ்ட் நீட்டாத வருங்காலப் புருஷனின் கண்ணியத்தை மதித்த அவள், ''அவர் சம்பளத்துக்குள்ளே திருப்தியா இருக்கலாம்பா'' என்று மனதாரச் சொல்லி, ராகவனைக் கைப்பிடித்திருந்தாள்.

அப்பா தேர்வு, சோடை போகவில்லை.

நிலவின் இரவுகளில் தேன் வடிந்து, நிலா ஒளிந்த பகல்களும் அவன் அன்பில் குளிர்ந்திருந்தன.

''அண்ணா நகரில் உனக்கு ஃப்ளாட் வாங்கிட்டேம்மா ஜமுனா! உடனே வேண்டாம். ஆறு மாசம் மாமியார் வீட்டோட இருந்து அவங்க குடும்பப் பழக்க வழக்கமெல்லாம் பழகு. பிறகு அங்கே குடித்தனம். எல்லாம் மாப்பிள்ளைகிட்டே பேசிட்டேன்.''

''சரிப்பா.''

புகுந்த வீட்டிலும் அன்பு தாண்டவமாடியது. தாங்கினர் மாமன், மாமி. இவளது நறுவிசான வேலை, நயமான பேச்சில் மகிழ்ந்து, வந்து போவோரிடமெல்லாம் ''மருமகப் பொண்ணு தங்கம். விடு விடுன்னு பத்து வேலை பார்த்தாலும் முகச்சிரிப்பு மாறாது.''

''அதிர்ந்து பேசிக் கேட்க முடியாது.''

''சம்பந்தி, பெட்ரோல் பங்க் கணக்கை இவ பார்க்க இங்கேயே அனுப்பிடுவார். விவரமான பொண்ணு'' என்றதில் நெகிழ்ந்து போனாள்.

''புது ஃப்ளாட்டை வாடகைக்கு விட்டுடவா அத்தை? அல்லது நீங்களும் அங்கே வந்திடுங்களேன்.''

''பேரன், பேத்திகள முதல்ல எடுங்க. பார்த்துக்க வரோம். இப்ப இப்படியே இருப்போம்மா. எட்ட இருக்கற உறவு இறுகும்.''

அவள் கண்ணேதான் பட்டதோ?

கணவனோடு முறுக்கிக் கொண்டு பிறந்த வீடு வந்திருந்த நாத்தனாரின் 'படுத்தல்' இரு வாரங்களாய் ஜமுனாவின் சந்தோஷக் கோலத்தை அங்கங்கே அழித்துக் கொண்டிருந்தது.

மறுமாதம் தனிக்குடித்தனம் எனும் நிலையில் ஏன் பிரச்னை கிளப்ப வேண்டும் என்று இவள் தணிந்து தணிந்து விழுங்கினாலும், 'அண்ணி' என்று வார்த்தைக்கு வார்த்தை அழைத்து பிரியங்காட்ட முயன்றாலும், உள் மனம் சிலும்பியது... நிமிர்ந்து முறைத்தது.

நாத்தி கௌரியும் விடாது நச்சரித்தாள். பிடுங்கினாள், சீண்டினாள்.

''உன் பட்டுப் புடவையிலே நாலு கொடேன் ஜமுனா! ஜரிகையைப் பார்த்து என் மாமன் மாமியும் கண்ணு கூசிக் கிடப்பாங்க!''

''வீடும் வி.சி.ஆரும் இறைக்க காசிருந்தா, எனக்கும்





உள்ளூரிலேயே ஓர் இளிச்சவாய் மாப்பிள்ளை பாத்திருக்கலாம். இப்போ முந்நூறு மைல் ஓடி ஓடி அல்லாடறேன் - சீரழியறேன்.''

''பிள்ளைகூட இனிமேத்தான் பெத்துக்கப் போறேன். செய்யறதுக்கு அத்தை நீ வந்தாச்சே! மருமகனுக்கு ஐஞ்சு, பத்து பவுனு போடமாட்டியா? அல்லது ராகவனை மட்டும் அமுக்கிட்டு எங்களைப் போங்கடீன்னுருவியா?''

மூச்சை இழுத்து விட்டு, மன லகானை அடக்க முயன்றாள் ஜமுனா. ஆனால் மாமன், மாமி முன்பு போல மலர்ச்சியாய்த் தெரியாதது கலக்கந்தான்.

மகளைப் பற்றிய சஞ்சலமா? அல்லது அவளடித்த புளியம் இலையில் புதுப்பேய் ஒட்டிக் கொண்டதா?

''உனக்கு இரண்டு ஜோடி வெள்ளிக் குத்துவிளக்கு வந்திருக்கே, ஒரு ஜோடி நான் எடுத்துக்கறேன்.''

''இல்ல - அண்ணி வந்து... பெரிக அப்பா அம்மா கொடுத்தது. அன்னம் வச்ச சின்ன செட், திருச்சி பெரியம்மா ஆசையா என்னைக் கடைக்கு அழைச்சிட்டுப் போய் வாங்கித் தந்தது. வர்ற தீபாவளிக்கு உங்களுக்குப் புதுசா...''

''இருக்கறதைத் தர இஷ்டமில்லை - வாங்கித் தர்றியா? கொடுக்க தனி மனசு வேணும்.''

அதன்பிறகு வரும் உறவுகளிடம் அவளது பேச்சுகளில் நிஷ்டூரம் அதிகமாயிற்று.

''சமதையாப் பையனுங்க கிடைக்காமலா? அதை விட்டு எங்க வீட்டுப்படி ஏன் குனிஞ்சு ஏறணும்? ஏதோ - இவ நல்லபடி உண்டாகி பெத்துத் தந்தா சரி. என்னால வீடுங் காசுந்தான் முடியும்னுட்டு இவ வெறும் வயிறாப் போயிடுவாளோன்னு சில சமயம் 'பக்'குன்னுது.''

ஆத்திரம் இவளுள்ளும் 'பக்'கென்று முட்டியது. புருஷன் வரட்டும். அத்தனையையும் சொல்லி, கைக்குக் கிடைத்ததெல்லாம் அள்ளி வீசலாம். ம்ஹூம்... கண்மூடி ஒரு கணம் நின்றாள்.

திருமணத்திற்கு முன்தினம் இவளுக்குத் தலைவாரியபடி பெரியம்மா கூறியது மனத்தில் இன்னும் வெகு தெளிவாய்

இருந்தது.

அது நிதானச் சொட்டாகி, பொங்கும் மனத்தை அடக்கியது.

'பல்லக்குத் தூக்கவும் தெரியணும்; அதில ஏறவும் தெரியணும்டீ பெண்ணே'.

வைரக் கம்மலில் முத்து ஜிமிக்கிகள் ஆட, கேட்டாள்: "அதென்ன பெரியம்மா?"

"குடும்பம் ஒரு பல்லக்கு. அதைச் சுமக்கறது நாமதானே? முதல்லே மூச்சுப் பிடிச்சுத் தூக்கணும். அதுக்கே தனி வலு வேணும். பத்து நூறு வருஷம் முன்னே பல்லக்குத் தூக்கிகளைத் தனியா அமர்த்தி சோறு போடுவாங்களாம். பிறர் பாத்தா கண்ணு பட்டுப்போற மாதிரி சாப்பிடுவாங்களாம். அவங்க சோற்று மலை நடுவே குழி செய்து நெய்யும் குழம்பும் கீரையும் இனிப்பும்..."

"போதும் போதும்..." கல்யாணப் பெண் கிளுகிளுவெனச் சிரித்தாள்.

"வலு வேணுமே! இங்கே நமக்கு வலு மனசிலே இருக்கணும். 'கடவுளே! எனக்கந்த மனசு தரணும்; தைரியம் வேணும்'னு வேண்டிக்கிட்டு வாழ்க்கையைத் தொடங்கு. முதல்ல தூக்கியாச்சுன்னா, பிறகு அலுக்காம, சலிச்சுக்காம, தோள் நொந்தாலும் வழுவாம தாங்கணும்."

"ஏறிப் பயணப் படறதப் பற்றி சொல்லுங்க பெரியம்மா. அது சுலபமில்லையா?"

"அது சொகுசுதான். அவ்வப்போதான் வரும். அல்லது சுமந்து களைச்ச நேரத்திலே அந்த சுகம் அமையும். அப்போ தோரணையும் நாசூக்குமாய் ஏறி உட்காரு. அனுபவி. நினைப்பிலே வச்சுக்கோ ஜம்மு."

மருதாணி சிவப்பு விரல்களை ஊன்றி ரசித்தபடி கேட்டதையும் மனத்தில் போட்டு வைத்தது நல்லதாயிற்று.

இது சுமக்கும் காலம் - கவனமாய், முழு முயற்சியோடு தூக்க வேண்டிய நேரத்தில் அழுது கவனத்தைச் சிதற விட்டு விடுவானேன்?

அறை மூலையில் இருந்த வாஷ்பேஸினில் முகம் கழுவித்





துடைத்துக் கொண்டாள். மேலாகத் தலைவாரி பொட்டிட்டாள். உள்ளேயும் சற்று பிரகாசம்.

கதவைத் திறக்க கௌரியின் 'கத்திக் குத்துகள்' இவளைத் தெளிவாய் எட்டின.

ஊரிலிருந்து வந்திருந்த சின்ன அத்தையிடம் பேச்சு - "நம்ப தகுதிக்கு உட்பட்டுத்தான் பெண் எடுக்கணும் - அத்தை! புறங்கையை நக்கிக்கலாம்னு ஆசைப்பட்டோம்னா, தேனீ கொட்டுத்தான் மிஞ்சும்" நாவு கொட்டியது.

விருந்தாய் வந்த அத்தை, தடவலாய்ப் பேசினாள்.

"வசதியான வீட்டுப் பொண்ணுன்னா ஒரு கௌரவம். தவிர ஒரு நல்லது பொல்லதுக்குக் கை கொடுப்பாங்களே?"

"மூடின கைதான் அத்தை! திறக்க மனசில்லை. இதுங்களுக்கு வெள்ளியும் பட்டும் காட்டிப் பழக்குவானேன்ற திமிர்."

எத்தனை கொடுத்திருக்கிறாள். பட்டு, பாலியெஸ்டர் என்று தினுசுக்கு ஒருவிதமாய்ப் புடவை, ரவிக்கைத் துணிகள். பெட்டி, பாத்திரம், அலங்காரச் சாமான், செருப்பு என்று யோசித்து யோசித்து எத்தனை பரிசுகள்! இன்னும் எது உறுத்துகின்றது? என் புன்னகையா? புரிந்து கொண்டு வாழும் புது வாழ்வா? கசப்பைக் கக்கி விட்டு யோசித்தாள்.

அம்மா தந்துவிட்ட அதிரசமாவு குளிர்பெட்டியில் இருந்தது. எண்ணெய் காயவிட்டவள், மறு அடுப்பில் பால் காய்ச்சி காபி கலந்தாள். சிறு தட்டில் காராச்சேவு வைத்து, அதிரசங்களைத் தட்டிப்போட பத்து நிமிடங்களில் டிபன் தயார்.

ஆவி பறக்கும் தட்டுகளுடன் முன்னறைக்குள் நுழைந்தாள்.

"சித்தி! சாப்பிடுங்க. சூடா செய்தேன்."

சில விநாடிகள் தடுமாறிய முதியவள், பொன்னிற அதிரசத் தட்டை ஆர்வமாய் வாங்கிக் கொண்டாள்.

"தாம்மா - தொண்டை வறண்டாப் போல இருக்கேன்னு நினைச்சேன். வந்தப்ப குடிச்ச மோருதான்."

"அண்ணி எடுத்துக்கோங்க."

மாமன், மாமிக்கும் பரிமாறியவள், இரவு சமையலுக்கு அரிசி களைந்து, புளி கரைத்து, வடகம் பொரித்தபோது

சமையலறைக்குள் விருந்தாளி தலை நீண்டது.

''அதிரசம் வாயில வெல்லமாக் கரைஞ்சது. எனக்கும் உன் பக்குவம் சொல்லேம்மா ஜமுனா!''

''கூட இரண்டு சாப்பிடுங்க சித்தி! தனியாத்தான் வந்தீங்களா? எத்தனை பிள்ளைங்க உங்களுக்கு?''

........

''அடே, பேரன் பேத்தியெல்லாம் கண்டுட்டீங்களா?''

........

''மூத்த பேத்தி பேரு அம்சாவா? எங்கண்ணன் பொண்ணு பேரு கூட அதுதான்.''

........

''உங்ககூட வந்து உக்காந்து பேச ஆசைதான். அண்ணி ஏதோ மனசு நொந்து வந்திருக்காங்க. தனியா பேச விரும்புவாங்கன்னு தான் ஒதுங்கி நின்னேன்.''

........

''கைனகாலஜிஸ்ட் டாக்டர் இந்திரா எங்க குடும்ப நண்பர். அண்ணியை ஒருநாள் கூட்டிட்டுப் போகலாம். கைராசிக்கார டாக்டர். இந்த வருஷம் முடியறதுக்குள்ள அண்ணி உண்டாயிட மாட்டாங்களா? கடவுளும் நம்மைக் கைவிட மாட்டார்!''

......

''இந்த தீபாவளிக்கு சேந்துதான் கடைக்குப் போகணும் - அவங்களுக்கும் புடவை, வெள்ளி விளக்கெல்லாம் வாங்கணும்.''

......

''இருங்க. சாப்பிட்டுத்தான் போகணும் - உங்களுக்காகத்தான் சித்தி இத்தனை வடகம் பொரிக்கறேன். தக்காளி வடகம்.''

பேச்சில் நெருங்கி விட்டாள்.

வேலைகளை முடித்து குளிக்கப் பின்புறம் போனபோது சின்ன அத்தை பேச்சு கேட்டது.

''ஏன் கௌரி? புதுசா கல்யாணமானது அத்தனை வேலையும் இழுத்துப் போட்டு பார்க்குது. இராச்சமையலாவது நீ





பார்க்கலாமே? நம்ப ராகவன் வர்ற நேரம் அது அலுங்கிப் போய்...''

''நீங்களும் அவளைத் தலையிலே ஏத்திட்டீங்களா?'' காரமாய்க் கேட்டாள் நாத்தி.

''பிரியமான பொண்ணுடீ அவ. நீ கொஞ்சம் அனுசரணையா...'' மாமி இடையில் புகுந்தாள்.

''இவளுக்கு அனுசரணை, பொறுப்பு இருந்தா இப்படி மாப்பிள்ளைய விட்டுட்டு சல்லிக் காரணத்துக்கெல்லாம் ஓடி வருவாளா? இதை அதைத் தான்னு எங்களப் பிடுங்குவாளா? ஜமுனாப் பொண்ணு குணவதி - அதனால தழைஞ்சு பொறுத்துப் போறா. இவ ரொம்ப ஆடினா, ராகவன் நாளைக்கே தனிக்குடித்தனம் போயிடுவான். நானே அனுப்பி வைப்பேன்.''

மாமியாரின் அனுப்பில் இவள் உள்ளம் மலர்ந்தது. தான் மூச்சு பிடித்து பல்லக்குத் தூக்கியாகி விட்டது என்பதும் புரிந்தது.

அந்த நிம்மதியில் கௌரியின மீதுகூட சின்னதாய்ப் பரிவு.

ஆசைகளில் தடுமாறும் கௌரியைத் தாங்கி சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கை வர, அனுபவித்து குளிரக் குளித்தாள்.

ஊற்றித் தேய்க்க, உடல் தளர்ந்து கொடுத்தது. சற்று முன் சிலிர்த்து, சினந்த உள்ளமும் குளிர்ந்து அமைதியாய்க் குவிந்து நின்றது.

- அமுதசுரபி, மார்ச் 1996

★ ★ ★

# பண்டிகைப் பரிசு...

தனராஜ், ஏரிக்கரைப் புல்சரிவில் அமர்ந்திருந்தான்.

சுற்றியிருந்த இலைகளில் அசைவில்லை.

ஏரியும் குளிரில் விறைத்து சலனமற்று பளபளத்தது.

அவனுள்ளும் சலனமில்லை.

ஆனால், வெறுமை இருந்தது.

16 வருடங்களாய் வாழ்க்கை இந்த ஊரில் தான். கொடைக்கானலில்தான்.

டூரிஸ்ட்டுகள் 'ஐயோ', 'அடடா' என்று சிலாகிக்கும் குளுமை, அழகு, பசுமை அவனை எட்டுவதில்லை. உள்ளே வெற்று மனம் முடங்கிக் கிடந்தது.

ஒரு ஆண் சூழ்நிலைகளை உணர ஒரு குடும்பம் அவசியம்.

'சாயங்கால நேரத்து ஏரி வெள்ளியும் பச்சையுமா எப்படி 'மினுக்குது பாருங்களேன்.'

'ரெண்டு மாசமா சதா நொய்யுன்னு சாரலு. போட ஒரு காஞ்ச துணி கிடையாது. நல்ல ஊரு போ.'

'நாப்பது பேருக்கு ஒண்டியா சமைச்சு இறக்கு. நம்ம ஊரில வேர்க்காது.'

'பாலு டிப்போக்கு அஞ்சு நிமிஷ நடையின்னாலும் ஏத்த இறக்கத்தில நெஞ்சு உலந்திடுது.'

'கீழ்நாடு போலயா? மூணு மடங்கு துணிச்செலவு இங்கே. குல்லா, சாக்ஸ், கம்பளி, மப்ளருன்னு'





இப்படி சலித்தும் வியந்தும் பெண் அவனுக்குப் பலதும் உணர்த்தியிருப்பாள்.

நினைவு தெரிந்ததிலிருந்து அவனைச் சுற்றிலும் சண்டையும் இல்லாமையுமாய் நெரிந்த குடும்பங்கள் அவனுக்கு அச்சமூட்டின. ஆக தனக்கொரு துணையை அவன் பரபரப்பாய்த் தேடவில்லை.

'என்னலே, உலக்கைக்கு அஞ்சன பயலே! உனக்குன்னு ஒருத்தி, குஞ்சு குளுவானுக இல்லாத என்ன வாழ்க்கை போ. டூரிஸ்ட்டு வேனு ஓட்டுற பய, உன்னைய நம்பி வர்ரவளுக்கு மூணு வேளை கஞ்சி ஊத்திர மாட்டா? வெளவ்வா வீட்டுக்குப் போனா நீயுந் தொங்குதான் நானுந்தொங்குதான். நல்ல பொண்ணாப் பாத்துருவோம். என்ன...?' என்று பேசி அவன் வாழ்க்கையில் மங்கள சலனங்கள் உண்டாக்க பல்போன உறவுகள் யாருமில்லை.

பெற்றோரை இழந்து, தன் மாமனுடன் இம்மலையூருக்கு ஏறிய போது தனராஜுக்கு வயது பத்து.

'அஞ்சு பாஸ் மாமா. எழுதப் படிக்கத் தெரியும். போதும்' என்று விட்டான். படிப்பு அவ்வளவுதான்.

சில காலம் 'கைடு' வேலை பார்க்கிறேன் என்று ஊர் சுற்றியது அலுத்தபின், பட்டறையில் எடுபிடியாகி எண்ணெய்யிட்ட கரிச்சிலை போல உழன்டான். பின் கிளீனர், டிரைவிங் என்று ஒவ்வொரு படியாக ஏறிய போது மாமாதான் துணை. வீடு நுழைபவனிடம்,

'வெந்நி காயுதுப்பா. துணியக் கழட்டி ஊற வச்சிட்டுக் குளி. மொச்சக் குழம்புகூட ரெடிதான்' என்பார்.

மனைவியை இழந்து ஒண்டியாய் நின்றிருந்த அவருக்கு இவனிடம் பரிவான பற்று. புஜங்கள் திரண்டு மீசை முறுக்கிய பின் அவரைப் பேணுவது இவன் முறையாயிற்று.

'மாமா - கடுக்குதுன்னீங்களே - படுங்க. கால் அமுத்தி விடுறேன்.'

'கீரைக் குழம்பு வச்சு, கட்லா மீனு வறுத்திருக்கேன் - உக்காருங்க.'

'பாத்தீங்களா புது ஷால் வாங்கினேன் - பிடிச்சிருக்கா?'

மாமா இறப்பில் மனம் சடாரென வெறுமைப் பட்டுப் போனது. பாசங்காட்டி அரவணைக்க ஆளில்லாத வெறுமை வதக்கியது.

வீட்டின் பின்னால் உபரியாய்க் கிடந்த நிலத்தில் பழைய வேன் ஒன்றை வாங்கி ஓட்ட ஆரம்பித்தான். பட்டறையில் பழகிய அனுபவத்தில் வாகனத்தைக் கச்சிதமாய்ப் பேணிக் கொண்டான். உழைப்பு, நேர்மைக்குத் தொழில் லாபம் காட்டியது.

அவ்வப்போது 'இதுக்கு மேலே என்னா' என்ற நினைப்பு.

நினையாத நேரங்களில் சலிப்பு 'சுருக் சுருக்' கெனச் சுட்டது.

இடுப்பில் கைபோட்டு இழையும் ஜோடிகள் -

குல்லா, சாக்ஸ் போட்டு ஓடும் குழந்தைகளைப் பெருமிதமாய் பின்தொடரும் பெற்றோர் -

'அம்மா ஷாலை நல்லாப் போர்த்திக்கோங்க. இன்னும் கொஞ்சம் நடக்கலாமா? போதுமா?' என்று அக்கறையாய் விசாரிக்கும் தொந்தி போட்ட, தலை நரைத்த 'பிள்ளைகள்.'

ம்ம்... தனக்கென்று ஒரு குடும்பம் வேண்டும்தான்.

தனிமை போகும். ஆனால் இந்த வெறுமை...?

இது வேறு ஜாதி. தன்னுள் ஊறும் அன்பை பிறருக்கு வடியவிட வேண்டிய ஏக்கம். தன் ஆற்றலை நாலு நல்லது செய்யாமல் தேக்கி சுமக்கும் தவிப்பு...

'ஏன்? நல்லது செய்ய, ஒத்தாசை பண்ண விடாது உன்னைய யாரு தடுத்தா இப்போ?' என்று குத்தியது புத்தி.

சிரித்துக் கொண்டான். மாமா போன பிறகு இப்படி தனக்குத்தானே வாதம் பேசும் வழக்கம் வந்து விட்டது.

''ஓய்... தனராஜு''.

உடல் முறுக்கித் திரும்பினான்.

''உன்னத் தாம்ப்பா நினைச்சேன். வெளியே போட் ப் வாசல்ல உன் வேன் நின்னுது. சைட் சீயிங் பார்ட்டி கூட்டிட்டு வந்திருக்கியா?''

வெள்ளைத் தொப்பியை ஆட்டியபடி ஆரோக்கியசாமி கேட்டான். சீருடையின் பித்தளை பொத்தான்கள் மின்னின.





ஏரியோரம் ஜாலமாய் நிற்கும் நட்சத்திர ஓட்டலின் வேன் டிரைவர் அவன்.

''இல்லண்ணே. வெள்ளென ஒரு டூர் அடிச்சுட்டேன்.''

புல்லைத் தட்டி விட்டபடி எழுந்து கொண்டான்.

''நல்லதாப் பேச்சு. உன்னால ஒரு வேலையாவணுமே.''

''சொல்லுங்க''

''வியாழக் கிழமைதோறும் நம்ப ஹோட்டல்லேருந்து 'லில்லிமேரி ஹோமு'க்கு மதியச்சாப்பாடு போகும். நாந்தான் வேன்ல எத்திப் போவேன். இன்னிக்கு வேனு தகராறு செய்யுதுப்பா.''

''கோமாளி மடம்னு சொல்லுவாங்களே? நா போகணுமாண்ணே?''

''எழுவது, எம்பது வயசுக்கு மேற்பட்ட வயசானதுங்க இருக்கற ஹோமு. பசி பொறுக்காதுங்க. எடுத்திட்டுப் போயிரு. மேனேஜருட்டச் சொல்லி உனக்குக் காசு வாங்கி வைக்கிறேன். பாத்திரங்களைத் திரும்பக் கொணரையிலே வாங்கிக்கோ. மித்த பயலுவ துட்டு பிடுங்கிருவானுங்க.''

மறுபேச்சின்றி ஹோட்டலுக்குள் வேனைத் திருப்பி, அங்கிருந்த மூன்றடி டிபன் கேரியரை, ஹாட்கேஸை ஏற்றிக் கொண்டான்.

''எத்தனை பேரு அங்க?''

''20, 25 பேருக்குள்ள.''

கட்டிடத்தின் உச்சிகளை கோமாளியின் தொப்பிகளைப் போன்ற கூம்புகள் அலங்கரித்த மடத்தை அடைய, என்ஜின் சத்தம் கேட்டு ஒரு சிஸ்டர் எட்டிப் பார்த்தார்கள்.

பரிச்சயமான பாத்திரங்களைக் கண்டவுடன்,

''ஆரோக்கியசாமி வரலியா?'' புன்னகைத்தார்.

''வேனு ரிப்பேருங்க சிஸ்டர். நீங்க விடுங்க - இதையெல்லாம் நா தூக்கியாரேன்.''

''இப்படி மேஜை மேலே வைப்பா.''

சாப்பாட்டு மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்த இரு டஜன் முதிய

முகங்கள் அவனை ஆவலும் ஆர்வமுமாய் பார்த்தன.

''தம்பி புதுசா?''

''பேரு என்ன ராஜா?''

''ஆரோக்கியத்தோட தம்பியா?''

''வெள்ளை யூனிபார்ம் போடல - அப்ப ஹோட்டலு வேலையில்ல - அப்படித்தானா?''

ஓரமாய் அமர்ந்திருந்த இருவர், இவன் தோள் தடவிப் பேசினர். உலர்ந்த கைகளிலும் பாசம் வடிந்தது.

அத்தனைக் கை நடுக்கமில்லாத இரு பாட்டிகள். அனைவர் டம்ளர்களிலும் நீர் வார்த்தபின் அனைவரும் ஒரு கணம் அமைதியாகி ஜெபித்தனர்.

இவனும் கண்மூடிக் கொண்டான். 'குப்'பென்று மனதுள் குடை விரித்தாற்போல ஒரு உணர்வு. அவனுமாய்ச் சுற்றி வந்து பரிமாறினான்.

கறியும் சோறும் மணத்தன.

''நீயும் சாப்பிடணும்ப்பா - என்ன சிஸ்டர்?'' பல்லில்லாத தாத்தா அன்பாய் குழறினார்.

''ஆமாப்பா தனராஜ்.''

கூச்சப்பட்ட அவனை அவர்கள் விடுவதாயில்லை. அவனுக்குப் பரிமாறி விட்டுச் சுற்றி நின்று பேச்சு கொடுத்தனர்.

அவன் தனியாள் என்று புரிந்தபின் அவர்கள் பேச்சின் கனிவு மேலும் இறுகியதாக அவனுக்குத் தோன்றியது.

''குழம்பு ஊத்தவா ராசா?''

''மென்னு சாப்பிடுப்பா - என்ன அவசரம்?'' என்ற உபசரணையோடு பேச்சு வளர்ந்தது.

''மறுவாரம் கிறிஸ்மஸ் இல்ல தம்பி?''

'அப்படியா' என்ற ரீதியில் சற்று விழித்தவன் பின்,

''அ... ஆமா - உங்களுக்கு ஏதேனும் வாங்கிட்டு வரவா?''

''ஆண்டவரு கிருபை போதும்பா. நீ அப்பப்ப வந்து எங்ககூட பேசிட்டுப் போ.''





முழு முந்திரி வாயில் அரைபட்டது. ராஜா வீட்டுச் சாப்பாடு தான் இது. உணவு, உடையில் குறைவில்லை. கேட்டு விட்டானே தவிர, என்ன வாங்கித் தந்து இவர்களைச் சந்தோஷப்படுத்த...?

''நீ பண்டிகைக்குப் புதுசு வாங்கிட்டியா?''

''இன்னும் இல்ல பெரியம்மா.''

''மதுர, திண்டுக்கல்லு போகச்சே வாங்கி வந்துரணும். இங்கே துணிமணி வில ஜாஸ்தி.''

''இனி நாளில்லையே. இங்கேயே எடுத்திடு.''

''சரி'' - தலையாட்டினான்.

''எங்களுக்குப் போன மாசமே புதுசு தந்துட்டாங்க.''

''கட்டிட்டு இங்கயே வளைய வர வேண்டியது தான். வெளி வாசலுன்னு போக முடியாது.''

சட்டென்று உற்சாகமானான்.

''வர்ற ஞாயிறு, கோயில் கிறிஸ்மஸ் விழா, ஆராதனை, மரம் நட்டு, பரிசு, ஜெபம், பாட்டுன்னு நிறைய உண்டு. வர்ரீங்கன்னா வேன்ல கூட்டிப் போறேன்.''

சளபுளவென்று பேச்சும் சிரிப்பும் பரவியது.

''என்ன இஷ்டந்தானே?'' கேட்டபின் சிஸ்டரிடம் அது குறித்து விரிவாகப் பேசி பின் உத்தரவு வாங்கிக் கொண்டான்.

''நிசமாலுமா தம்பி?''

''எப்ப வருவ?''

''புதுசு கட்டிக்கலாமா சிஸ்டர்?''

குழந்தைகளாய் நச்சரித்த பெரியவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு காலி பாத்திரங்களுடன் ஹோட்டல் திரும்பினான்.

ஆரோக்கியசாமியின் டெம்போ 'டர்புர்' என்று சீறி அதிர்ந்தது.

ஸ்டீயரிங் பின்னேயிருந்தவன் தலைநீட்டி, ''என்னப்பா ரெண்டு அவர் ஆச்சு?'' கேட்டான்.

''பேசிட்டிருந்தேன்''

''பெருசுங்களுக்குச் சாப்பாட்டைவிட அதுதான் முக்கியம். வுடாதுங்க. அதுங்க கல்யாணம், புள்ளகுட்டி, சந்தோஷம்,

ஒப்பாரி எல்லாம் சொல்லுங்க. கேக்க ஆள் வேணும்.''

''பாத்திரம் எங்க வைக்க?''

''இப்படி வை. நூறு வாங்கி வச்சிருக்கேன்.'' மொட மொடப்பாய்ப் பணம் நீண்டது.

''வேண்டாம்னே.''

''ஏன்ல?'' எம்பி இறங்கி நின்றான்.

''எம்மனசுக்குந் திருப்தியாப் போட்டுமே''

''அடடே! அப்ப மானேஜராண்ட வா. பய துட்டு வாங்க மாட்டேனுட்டான்னா அவருக்கும் உன்னைய மனசுலாக்கின மாதிரியிருக்குமில்ல.''

''அதுக்கென்ன அவசரம்ணே?''

''அப்ப ரூவா எஞ்ஜோபிக்கா? வாப்பா...'' விடாது இழுத்துப் போனான். பளிங்கு, பித்தளை, தேக்கு, கண்ணாடி, கிறிஸ்டல் சரம் என்றிருந்த ஹோட்டலில் கூனிக் குறுகி நடந்த தனராஜ்,

'எ குட் யங்மேன். உன்னைச் சந்தித்ததில் சந்தோஷம்' என்ற சூட் அணிந்த மேனேஜரின் புன்னகையில் நிமிர்ந்தான்.

இரண்டு நாட்களும் ஒரு உற்சாக ஜுரம் அவனைப் பிடித்தாட்டியது. கடை கடையாய் ஏறி இறங்கி கண்ணாடி, சோப்பு, சிறுபெட்டி - சீப்பு செட், பேனா, டர்க்கி துண்டு, மப்ளர் என்று விதவிதமாய் வாங்கினான். வண்ணத் தாள்களில் பொதிந்து, ஒவ்வொன்றிலும் பெயரெழுதி, பாதிரியாரிடம் சேர்த்த பிறகு மனம் சற்று ஆசுவாசப்பட்டது.

ஞாயிறு மாலை ஐந்து மணி. அத்தனை வருடங்கள் தனியே போய் வந்த ஆலயத்திற்கு, 24 முதியோர்கள், சிஸ்டர்கள் சூழ ஆரவாரமாய்ப் போய் இறங்கியது புது அனுபவம்.

ஆலயத்தின் அகல கல்படிகளில் ஏற பலர் சிரமப்பட்டாலும், புன்னகையும் பேச்சும் குறையவில்லை.

''இந்த கோயிலுக்கு 25 வருஷத்துக்கு முன்ன வந்தது.''

''அவ இருக்கையில ஒரு வாரம் தவறாத வருவோம்.''

''நம்ப ஃப்ளாரா கல்யாணம் இங்கதான?''





''ஃப்ளாரா பேத்தி கண்டுட்டாப் போ.''

பழைய நினைவுகளைக் கிளறிவிட்டுக் கொண்டு அசை போட்டனர் அனைவரும்.

உள்ளே பெரிய பைன் மரம் கிளை பரப்பி நின்றது - மேலெங்கும் பொடி வண்ண விளக்குகள் கண்ணடித்து ஒளிர்ந்தன. உச்சியில் வெள்ளி நட்சத்திரம்.

''ஜோரான ஜோடனை. என்ன தொங்குது இடையிடையே?''

காட்ராக்ட் கண்களை இடுக்கிக் கேட்டனர்.

''பண்டிகைப் பரிசுப் போட்டி''

''ஆங்?''

நடுங்கும் விரல்களால் முக்காடிட்டு, சுற்றும் முற்றும் சற்றே வாய் பிளந்து பார்த்தனர்.

கோயில் முழுக்க 'பச்'சென்ற பைன் வாசனை.

''ஜெபம் பண்ணக் கடவோம்'' - ஆராதனை ஆரம்பித்தாயிற்று.

வெள்ளை அங்கிகள் பாதம் மறைக்க மிதந்து வந்த சிறுவர்கள் பாடினார்கள். இவன் விழிகள் தான் கூட்டி வந்தவர்கள் மீது மாறி மாறி நிலைத்தது.

அடிக்கடி அவர்கள் கண்களைத் துடைத்துக் கொண்டது... பஞ்சடைத்த பார்வையைத் தெளிவிக்கவா அல்லது ஆனந்தத்தில் கசிந்த நீரை வடிக்கவா என்பது புரியாமல் பார்த்திருந்தான்.

எங்கும் இசை சூழ வேற்றுலகில் சஞ்சரிக்கும் பிரமை. சுற்றிலுமிருந்த சிறுவர்கள் திடீரெனக் கிளுகிளுவென சிரித்தபடி எம்பி எம்பிப் பார்க்க அவனும் திரும்பினான்.

சிவப்பு அங்கிக்குள் தொப்பை உருள, பஞ்சு தாடியை நீவிக் கொண்டு வந்தார் 'கிறிஸ்துமஸ் தாத்தா'.

''ஹாப்பி கிறிஸ்மஸ் எவ்ரிபடி'' - ரோஜாநிற முகமூடிக்குப் பின்னிருந்து குரல் வந்தது.

'தத்தக்கா புத்தக்கா' அசைவுகளுடன் குரல் அதிர அவர் பாட, பாட்டிமார் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து சிரித்தனர்.

''இப்போது பரிசுகள்'' தாடி தாத்தா ஆரவாரத்தினிடையில் ஒவ்வொரு பரிசாய் மரத்திலிருந்து உருவி பேர் வாசிக்க,

பிள்ளைகள் பாய்ந்து முன்னே ஓடின. பலூன் கொத்து பிடித்திருந்த தாத்தாவின் 'க்ளவ்ஸ்' போர்த்திய கரங்களைக் குலுக்கி பரிசுகளைப் பெற்றுத் திரும்பின.

''இப்போது சில விசேஷ பரிசுகள் - சின்னாயி''

தாடி நீவி, சுற்றும் பார்த்தார் தாத்தா.

''வாங்கம்மா - சின்னாயி அம்மா.''

சிஸ்டர், முன்னேயிருந்த பாட்டியின் தோளைத் தொட்டு.

''நீங்கதாம்மா. போங்க'' என்றார்.

''என்ன... எனக்கா? யாருக்கும்மா இங்க என்னையத் தெரியும்?''

''தனராஜ் தம்பிக்குத் தெரியுமில்ல? அதான்''

''ஐயோ...''

புதுப்பெண் கூச்சத்துடன் எழுந்து, கால் பின்னி நடந்த பாட்டியை முகம் மலரப் பார்த்திருந்தான்.

''லூர்து ராசப்பா''

''ராஜ கணபதி''

''தங்க வள்ளி அம்மா''

''பிஸ்மினிஸா அகமது''

''எங்களுக்குமா?''

''அட எல்லாருக்குமா?'' என்ற உற்சாகம் பிய்த்துக் கொள்ள - பிறரும் தயாராய் எழுந்து நின்று கொண்டனர். மப்ளரை, சேலையை நீவி சரிசெய்தபடி பொக்கை வாய் மலர்ச்சியுடன் ''ராசா, நீயா சொன்ன எங்க பேரெல்லாம்?'' - பொய்க் கோபம். ''சின்ன புள்ளையாட்டம் எங்களுக்குப் ப்ரைசு'' - பூரிப்பு.

''முன்னே போய் தாத்தாகிட்ட வாங்கத்தான் லஜ்ஜையாயிருக்குப் போ'' - கூச்ச சிரிப்பு.

அத்தனை பேரும் வாங்கி வந்த பரிசுப் பொட்டலங்களைப் புரட்டி தடவிய நேரத்தில் விளக்குகள் அணைந்தன.

''ஆண்டவரே... நல்ல நேரத்தில் இப்படி...''

''ஷ். தாத்தா...! உங்க பொட்டலத்திலே மெழுகுவத்தி செருகி





வச்சிருக்கும் பாருங்க'' என்றான் தனராஜ்.

''ஆமா இருக்குது. வத்திப் பொட்டிக்கு எங்க போறது?'' துழாவிய விரல்கள் அரைச்சாண் மெழுகுவர்த்திகளை எடுத்துப் பிடித்துக் கொண்டன.

''இருங்க வெளிச்சம் வரும்.'' ஆலயத்தை இருள் போர்த்திவிட, ஆல்டரிலிருந்த மெழுகுவர்த்திகளின் ஒளி மொட்டுகள் மட்டும் மொட்டுச் சுடராய்... அம்மங்கிய ஒளியில் நிழலாய் சிலுவையும், லில்லி மலர் கொத்துக்களும், மணமும் சொப்பன காட்சியாய் மயக்கின. பாதிரி தன் மெழுகுவர்த்தியில் ஏற்றி சபையோருக்குத் தர, ஒருவர் கை ஒளி மற்றொருவர் கையின் திரிக்கு விளையாட்டுக் குழந்தையாய் தாவிற்று.

அத்தனைக் கைகளிலும் ஒளி முத்து மின்ன, ஏந்தியவரின் முகங்கள் மலர்ந்த சிப்பிகளாய்...

ஒடுங்கி, சுருங்கிய முதிய முகங்களிலும் பரவசம்.

மங்கிய விழிகளிலும் சுடரின் ஜொலிப்பு.

ஆனந்த பெருமூச்சுகளில் சுடர் படபடத்தது.

பாடகர் குரல்கள் பட்டாய் இழைய போதகர் பைபிளை வாசித்தார்.

''இப்போது கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள் - வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். தேவன் ஒளியாயிருக்கிறார் - அவரில் எள்ளளவேனும் இருளில்லை... நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவருக்கொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்.''

தனராஜ் அந்த ஐக்கியத்தை உணர்ந்தான். சக மனிதர்களோடு மட்டுமல்ல - தன்னைப் படைத்தவரோடும் புது ஐக்கியத்தை உணர்ந்தான். பியானோ இசை வலுக்க, மின் விளக்குகள் கண்கள் கூசும் விதமாய்ப் பொங்கி, பாய்ந்து பரவின. கண்களைச் சுருக்கி ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

''ஹாப்பி கிறிஸ்மஸ்'' - பரஸ்பரம் மென்மையாய், உண்மையாய் முணுமுணுக்க - இவன் மனம் நிரம்பிக் கொண்டது. ஆனால், பாரமற்ற சிறகாய் மிதந்தது.

- ராஜம், டிசம்பர் 1995

★ ★ ★

# தீபாவளி முறுக்கு

ரமா அமர்ந்து இடக்கையினால் முழங்காலைப் பற்றி, மறுகையால் கவனமாக முறுக்கு சுற்றிக் கொண்டிருந்தாள், முதலில் மாவைச் சுற்ற சற்று சிரமப்பட்ட விரல்கள் இப்போது சரளமாகி விட்டன.

''முதுகு வலிக்குதா ரமா?'' மாமியார் கேட்டார்கள்.

''இல்லேத்தை. போட்டு முடிச்சுரலாம்'' ரமா காரியத்திலேயே கண்ணாயிருந்தாள்.

ஆனால், அவள் மனம் வலித்தது. வரும் தீபாவளிக்காக அவள் வாரமாக மாடாக உழைத்திருந்தாள். வீட்டைக் கழுவி, ஒழுங்குபடுத்தி, பலகாரத்திற்கு வேண்டிய சாமான்கள் வாங்க பல கடைகள் ஏறி, இறங்கி மாமியாரின் மேற்பார்வையில் 4, 5 வகை இனிப்புகளை செய்திருந்தாள். இன்று கடைசியாய் கைமுறுக்கு.

எண்ணெய்யில் இட்டு எடுத்துக் கொண்டிருந்த மாமியார் ''யம்மா... காலெல்லாம் பிடிச்சுக்குது'' என்று எழுந்து போக வழியும் வியர்வையைத் துடைக்க நேரமில்லாது ரமா, ஒருகையால் முறுக்குச் சுற்றிக் கொண்டு, மறுகையால் எண்ணெய்ச் சட்டியையும் பார்த்துக் கொண்டாள்.

நாத்தனார் கௌரியின் தலைத் தீபாவளி அது. விசேஷமாய் பச்சரிசி கரைத்து வீடு முழுக்க கோலங்களை இழைத்து நிரப்பியிருந்தாள் ரமா. பரணிலிருந்த பெரிய விளக்குகளையும் தாம்பாளத்தையும் இறக்கி, கண்ணைப் பறிக்கிறாற்போல துலக்கி பூஜையறையில் வைத்தாயிற்று.

அவள் உடலும் மனமும் அலுத்து சலித்திருந்தன.



வீட்டா நூலகம்



தீபாவளி நேரத்தில் எல்லா வீடுகளிலும் உள்ளதுதானே என்று நினைப்பவர்களுக்கு ஒரு விஷயம்.

விடிந்தால் ரமாவிற்கும் தலைத் தீபாவளி என்பதுதான்!

போன மாதமே கௌரிக்கு 4000 ரூபாய்க்குப் பட்டும், வைர மூக்குத்தியும் தயார்.

தன் தாய் வீட்டிலிருந்து அத்தனை எதிர்பார்க்க முடியாதென்பது ரமாவிற்குத் தெரியும். அவளுக்கு வேண்டியதெல்லாம் ஒரு நான்கு நாட்கள் பெற்றோர் வீட்டில் பேசி, சிரித்து, நிம்மதியாய்க் கணவனோடு கழித்து வர வேண்டும் என்பது தான். அதுவும் தட்டிப் போக கண்கள் கசிந்தன.

கணவன் பெருமாள் நல்லவன் தானென்றாலும் தாய் பேச்சு தட்ட மாட்டான். 'இடங்கொடுத்து மனைவி தலைமீதேறி விட்டால்?' என்ற நினைப்பில் முறுக்கும் விரைப்பும் உண்டு!

ரமாவின் திருமணம் முடிந்த மாதம் கௌரியின் கல்யாணம். தனது சீரும், 7 பவுன் சங்கிலியும் நாத்தனாருக்குப் போடப்பட்ட போதுதான், தன்னை மாமியார் அவசரமாக மருமகளாக ஏற்றுக் கொண்ட காரணமும் அவளுக்குப் புரிந்தது.

''ஏன் ரங்கம், ரமாவுக்கும் தலைத் தீபாவளி. அவளுக்குப் பத்து நாளா உட்காரக் கூட நேரமில்லை.'' மாமனார் பரிந்து பேசுவது கேட்டது.

''ஏன்... வீட்டு வேலை, பட்சண வேலை இதெல்லாம் கத்துக்கறது நல்லது தானே?'' - மாமியாரின் 'பட்'டென்ற பதில்.

''நல்லது தான். ஆனா 2 நாள் முன் தாய் வீட்டுக்குப் போகணும்னு அந்த பொண்ணு நினைக்காதா?''

''நம்ப கௌரி கல்யாணமாகி போயிட்டா எனக்கு ஒத்தாசையாயிருக்கும்னுதானே நீங்க பையன் கல்யாணத்தை அவசரப்படுத்தினீங்க. இப்ப ஏன் உருகுறீங்க?''

''ரமாவோட காசுமாலை, வெள்ளி சாமான், பத்தாயிரம் ரொக்கம் இதெல்லாம் உம்மக கௌரிக்குப் போட்டு அனுப்ப நீதான் பறந்தே! இப்ப இவளை இப்படி முறுக்கிப் பிழியணுமா?''

''எல்லாம் சாயங்காலமா போனாப் போச்சு'' அலட்சியமாக பதில் வந்தது.

''பையனோட சீனியர் வக்கீல் கூட அவனைப் 'புதுமாப்பிளை,

2 நாள் முன்னாடியே கிளம்பு'னுட்டார். உனக்கு மனசு வராதே''

''இங்கேயிருந்து கோவில்பட்டி போய்ச் சேர 4 நாளா ஆகும்?''

கௌரியும் வந்து இறங்க, ரமாவிற்கு வேலை ஓயாது போனது. ஒரு வழியாக மாமனார் தயவில் அவன் கணவனோடு வீட்டை விட்டு கிளம்பிய போது இரவு மணி 10.

''மறுநாளே கிளம்பிடுங்கப்பா. எனக்கு முடியலை'' என்று மாமியார் வழியனுப்புகையில் ரமாவின் மனம் கனத்துப் போனது. பாசமிகு பெற்றோர், தம்பிகளைப் பார்க்கும் பரபரப்பும் கனவுகளும் மெல்லப் பற்றிக் கொள்ள பயணத்தில் தூங்கிப் போனாள்.

இரவு 2 மணிக்கு வீட்டின் முன் ஆட்டோ போய் நின்ற போது வீட்டில் வெளிச்சம் தெரிந்தது. தட்டாமலேயே கதவு திறந்து கொண்டது.

''அக்கா, அத்தான்... வந்தாச்சு.''

''வாம்மா... இத்தனை நேரமாகப் பயந்திட்டோம்.''

''வாங்க மாப்பிள்ளை! பெட்டியை நான் எடுத்துக்கறேன்''

''ராஜா, ஆட்டோவைப் பார்த்து அனுப்பு.''

வீடே பரபரப்பும் பாசமுமாக உபசரித்தது.

''முதல்ல படுங்க. ஐஞ்சுக்கெல்லாம் எழுந்துக்கணுமே.''

''ஏம்மா லேட்?'' அம்மா ஆதுரத்துடன் கிசுகிசுத்தார்கள்.

''வக்கீல் வேலைன்னா லேசாம்மா? சீனியருக்கு இவர் மேல தனி பிரியம். நம்பிக்கை. ஆக கடைசி நிமிஷம் வரை இவருக்கு முடியலை.''

முகம், கால் அலம்பி அறைக்குள் நுழையவிருந்த பெருமாள், அப்படியே நின்றான். மனைவியின் குணம் ஓரளவு தெரிந்ததுதானென்றாலும், இன்று அது புதிய பரிமாணத்தில் பளிச்சிட்டது! அவன் மனம் குழைந்து இளகியது.

''லேட்டானா என்னத்தை? 4 நாள் தங்கிட்டுப் போனா போச்சு. என்ன ராஜா... பட்டாசெல்லாம் தயாரா? ஜமாய்ச்சிடுவோம்.'' என்று சகஜமாய் மைத்துனன் தோளில் கணவனின் கை விழ, ரமாவின் முகம் மத்தாப்பாய் மலர்ந்தது!

(உயிர் நாடி, பிப்ரவரி 1992)

★ ★ ★



# சிதைவுகள்... சிற்பங்கள்...

''எலிஃபெண்டா குகைக்கு வந்ததின் ஞாபகார்த்தமா ஒரு ஜோடி கண்ணாடி யானை வாங்கிட்டுப் போகலாங்க'' - படிகளின் இருமருங்கிலும் பரவியிருந்த கடைகளைப் பார்த்தவள் நின்றேன்.

''ஏறி இறங்கி, முட்டி தேயுது. போலாம் வா நீலு.''

''ஏறும் போது இளைச்சது சரி. 14 நூற்றாண்டுகளுக்கு முன்னே குடைஞ்சு வடிச்ச அந்த அற்புத சிலைகளைப் பார்த்த பிறகு இறங்கறது ஒரு பொருட்டாவே தெரியலைப்பா. மிதக்கறாப் போல ஒரு பரவசம்.''

''நீ ஷாப்பிங்கில் காசை கரியாக்காத வந்தீன்னா நானும் மிதந்தே இறங்கிடுவேன். ஏற்கெனவே முதல் தடவையா பாம்பே வர்ரேன்னு சொல்லி ஒரு பெட்டி முழுக்க சாமான் வாங்கி நிரப்பிட்ட. இத்தனை லக்கேஜ்ஜோட ஊருக்குத் திரும்பறத நினைச்சா...''

சாளுக்கிய, குப்த காலத்திய கல்லிலே வடித்த கலை வண்ணங்களைக் கண்ட பிரமிப்பில் இருந்த நான், 'சரி அவருந்தான் மிதக்கட்டுமே' என்ற பெரும் போக்கில் நடக்க, இருபது நிமிடங்களில் உறுமிக் காத்திருந்த ஃபெர்ரியில் ஏறிக் கொண்டோம்.

''அங்க இங்க நிக்காம வந்ததாலதான் 'டக்'குன்னு ஏறிட்டோம்.''

''அரை மணிக்கொரு ட்ரிப் கிளம்புதுப்பா.''

''வெளியே வெயில் மண்டையைப் பொசுக்குதே.''

உண்மைதான். இங்கு கூரையிட்ட அகல படகினுள் கடலின் தாளத்திற்கேற்ப அசைந்தபடி அமர்ந்திருந்தது சுகமாயிருந்தது.

''இன்னும் மூனு சீட்தான் காலி. ஆள் வந்ததும் கிளம்பிடலாம்.'' போட்மேன் கொச்சை ஆங்கிலத்தில் சொன்னான்.

மலைப் படிகளில் மேலும் கீழுமாய் நடந்த களைப்பில், கலையையே திரட்டி நிமிர்த்தினாற் போல பிரம்மாண்டமாய் நின்ற சிற்பங்களின் நினைப்பில், தற்போதைய படகு தாலாட்டில், கண்கள் சொருக அவர் தோள் மீது சாய்ந்து கொண்டேன்.

''பார்த்ததிலே உங்களுக்கு எது ரொம்பப் பிடிச்சிருந்ததுப்பா?''

''ம்ம்? அந்தத் தூண்கள்.''

எனக்குள் சிரிப்பு மண்டியது.

''எனக்கு... அந்த அர்த்தநாரீஸ்வரச் சிற்பந்தான். இடது பாதியின் மார்பு விம்மலும், இடுப்பின் அபார வளைவும், கையின் ஒயிலும் நாள் முழுக்க ரசிக்கலாம்ப்பா. ஒரு கண்ணிலே 'நானில்லாம நீயில்லை'ங்கற கர்வம் - மற்றதில் 'நீயில்லாத நானில்லை'ங்கற களிப்பு. ஆனா, இடுப்புக்குக் கீழே ஏனோ முழுசும் அழிஞ்சு சிதிலமாயிடுச்சு. மொத்தமும் பார்த்திருந்தா...'' - இழுத்து மூச்சு விட்டேன்.

''இப்பவே அர்த்தநாரி முன்னாடி அரை மணி நேரம் நின்னே. இல்லேன்னா நாம் முந்தின ட்ரிப்பைக் கூட பிடிச்சிருக்கலாம்'' சட்டென்று விலகி முறைத்த என் கண்களுக்குள் அவர் விழிகள் சிரிப்புடன் கலந்தன. ''யோசனைதான். சமூகத்திலேயும் ஆணும் பெண்ணும் அப்படிச் சரிபாதியா நின்னா ரம்மியமா இருக்குமேன்னு நினைச்சேன். அந்நிலை சில பெண்களுக்குத்தான் அமையுது. மீதிப் பேர் ஆணுக்கு அஞ்சி, அடங்கி அவனை அண்டித்தானே வாழறாங்க? சமமான இணையா, கம்பீரமும் உல்லாசமுமாய் ஒன்றாகி நின்ற அந்த கோலத்தை மனசிலே பதிய வைச்சுகிட்டேன்.''

''அப்போ இனி எனக்கும் சம அந்தஸ்து கிடைக்கலாங்கற?''

கண் சிமிட்டிய அவரை முறைத்து முடிப்பதற்குள் கணக்காய் வந்த மூவர், படகினுள் வரிசையாய்ப் பதிந்திருந்த வண்ண ப்ளாஸ்டிக் இருக்கைகளில் அமர்ந்தனர்.





பத்து வயது சிறுமியோடு ஒரு தம்பதியர்.

நிகோட்டின் புகையை ஆழ இழுத்துக் கொண்டு அலைகளுக்குள் சிகரெட் துண்டினைச் சுண்டி விட்ட போட்மேன், கயிறுகளைத் தளர்த்தி விலக்க, மோட்டாரின் சீறலுடன் படகு நகர்ந்தது.

''ஆக கல்லையும் உம் பார்வை ஊடுருவிடுச்சு'' என்னவர் கூறியது கேட்காதது போல விலகும் கரையையே பார்த்திருந்தேன்.

'யு ரீட் பிட்வீன் லைன்ஸ் ஊடுருவல் பார்வை' என்பது அவர் அடிக்கடி கூறுவதுதான்.

அதாவது திருத்தமாய்த் தெரியும் எழுத்துக்களை விட்டுவிட்டு நான் அவற்றின் இடையே இல்லாத வேறொன்றை வாசித்து விடுகின்றேனாம்.

ஆண்களுக்கு இருட்டாய்ப் படும் பல இடங்களில், வடிவங்கள் புலப்படும் பூனைப்பார்வை பல பெண்களுக்கும் உள்ளதுதானே.

ஆனாலும் தொழில் முறை நட்புகள், மனித மனங்கள், யாருக்கு எதில் நோக்கம், இனி இதுதான் நேரும், 'இவன் போக்கு சரியில்லை - விசாரியுங்க' என்ற எனது பல கணிப்புகள் கச்சிதமாய் வர அவருக்கு வியப்பில் விழி விரியும்.

''நீ வேண்டாங்கறியா? சரி.''

''எந்த ப்ளாட்டை வாங்கிப் போடலாம் சொல்லு?''

''தம்பிக்கு நீ சொல்ற பொண்ணையே முடிச்சிரலாம்.'' என்று அடிக்கடி அங்கீகாரம் வந்தது.

குருட்டுப் பூனை இல்லை என்ற ஷொட்டு கிடைத்த பின் விட்டத்தில் பாய கேட்பானேன்.

அடிக்கடி இல்லாவிட்டாலும் அவ்வப்போது மனப்பூனை நகம் நீட்டும். வித்தியாசமான மீன் சிக்கும் போது உற்சாகமாய்ப் பிரித்துப் போட்டு பார்க்கும்.

கடைசியாய்ப் படகினுள் ஏறிய தம்பதிகள் மீது ஏனோ என் பார்வை ஓடி ஓடி நிலைத்தது.

''ஆயில் ரிக் பார்த்தியா நீலு?''

''இதென்ன கோட்டையாட்டம்? கடலுக்குள்ளே இதை எப்படிக் கட்டினாங்க?''

''தொலைவிலே ரெண்டு கப்பல் நிக்கறது தெரியுதா?'' என்று

இவர் கேட்டதற்கெல்லாம் தலையாட்டிய பின் பார்வை மறுபடி அவர்களிடமாய் ஓடிவிடும்.

சற்று முன் லயித்த சிலைகளிடமிருந்து விடுபட்டு மனம், மனிதர்களிடம் சுவாரஸ்யமானது.

வாய் ஓயாது பேசினான் அந்த ஆள். மெதுவாகத்தான் என்றாலும் தடையில்லாது பேச்சு உருண்டது.

வெளுப்பாய், நடுத்தர உயரத்திலிருந்த அவனுக்கு வயது... நாற்பதை ஒட்டியிருக்கும்.

நாகரீக, நறுவிசு உடைகள், பாவனைகள்.

முக்கியமாய் அவன் முகபாவனைதான் கொக்கியாகி என் கவனத்தை இழுத்து நிறுத்தியது. அவன் பேச்சை அதீத கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள் அவள். அவனது ஒவ்வொரு வார்த்தையையும் வேதம் போன்று ஏற்றுக் கொண்டிருந்ததின் அடையாளமாய் தலை நிமிடத்திற்கு நான்கு முறை ஆமோதிப்பாய் அசைந்தது.

ஒரு வார்த்தை இடைபுகாமல் கருத்தாய் அவள் கவனித்ததில்... ஏதோ இடறியது. என்னுள்ளே பூனை நிமிர்ந்தது.

'ஏன்? - புருஷனிடம் இத்தனை ஆர்வமும் ஆசையுமாய், இடைவெட்டாது காது கொடுக்க முடியாதோ?'

புருவஞ் சுருங்கி யோசனையில் ஆழ்ந்த என் முகத்தை கேள்வியுடன் ஏறிட்ட என்னவரைப் பார்த்து புன்னகைத்தேன் - 'ஒரு விஷயத்தை முழுசாச் சொல்ல விடாம இடையே நூறு கேள்வி வீசாதேயேன்' என்று பாவமாய்க் கோபப்படுபவர் அவர்!

அடுத்த முரண் அவள் தோற்றம் - முக ஒப்பனை, சேலையில் தரம், ரவிக்கை தைக்கப்பட்டிருந்த முறை, சிறு தோட்டில் தொங்கிய சற்றே வெளுத்த ஜிமிக்கி, தங்கம் கலக்காத கருகமணி, கைகளில் சப்தித்த சிவப்புக் கண்ணாடி வளையல்கள், வரண்ட பாதங்களில் சாண்டக் செருப்புகள் அத்தனையும் அவனது நலுங்காத உடை, டைட்டன் கைக்கெடிகாரம், விளிம்பு தெரியாது மின்னிய ரெஸிலென்ஸ் கண்ணாடி, பளபளத்த தோல் காலணிகள், விரலில் வெட்டிய ஒற்றைப் புஷ்பராகத்துடன் - சற்றும் ஒத்துப் போகாமல் முரண்டின.

தோள்கள் உரச, அவர்களது பேச்சும் நெருக்கமும் இறுக,





அவளது உள்ளடங்கிய சிறு கண்கள் ஏதோ பொக்கிஷம் கண்டாற்போல அவன் முகத்தில், உதட்டசைவில், காற்றிலாடும் முடிச்சுருளில் பதிந்து கிறங்கியது.

புன்னகையுடன் அவள் 'அச்சா' என்றபோது என் கண்கள் படபடத்தன - ஆக அவள் ஊமையில்லை!

அவ்வப்போது தன் கையிலிருந்த பாட்டிலைத் திறந்து அவனுக்குப் பருக மினரல் நீரைத் தந்தவள், துளி சிந்தினாலும் பதறி துடைத்து விட்டாள்.

அவளோ, பளபளவென்ற சிவப்பு சல்வாரில் அருகிலிருந்த சிறுமியோ எதும் பேசவில்லை; குடிக்கவில்லை.

இவள் அவன் வாயின் வார்த்தைகளையே பருகி போதை கொண்டாற் போலிருக்க, சின்னப் பெண் முகத்தில் பிக்னிக் வந்த சந்தோஷச் சுவடு துளியும் இல்லை. தொலைதூர வானத்தையே வெறித்துக் கொண்டிருந்த அந்த இளம் முகத்தைப் பார்த்த என்னுள்ளம் ஏனோ தவித்தது.

சிறுமி அச்சு அப்பெண்ணின் ஜாடை. இருவருக்கும் இடையே முப்பது வயதாகிலும் இருக்கக்கூடும் - ஆக தங்கையாயிருக்கும் சாத்தியமில்லை.

அரைமணி நேரப் பயணத்தில் அவள் பார்வை அவனை விட்டு கணநேரம் நழுவவில்லை. அவ்வப்போது அவன் கையைத் தடவினாள் - தொடையில் ஆதரவாய்த் தட்டினாள்.

சற்றே அவன் குரல் உயரும் நேரங்களில் அவன் கால் முட்டிகளை இதமாகப் பிடித்து விட்டாள்.

அத்தனையும் அரசனிடம் ஓர் அடிமை நடந்து கொள்ளும் தோரணையிலிருக்க, என்னுள்ளே பூனை வெகுவாய்க் குழம்பியது.

'என்ன மாதிரி உறவு இது?'

'அவன் கீழ் வேலை செய்பவளோ...? கள்ளத் தொடர்பானால்... கூடவே அவள் மகளையும் கூட்டிக் கொண்டா? சே... இருக்காது.'

'தூரத்து உறவு...?'

'அந்நியோன்யம் அதிகமாயிருக்கிறதே!'

'அவள் பணத்துக்கு வளையும் வகையாகவும் தெரியவில்லை. இருந்திருந்தால் அவனை மிஞ்சும் பகட்டில்

மின்னியிருப்பாளோ?'

'பின்னே...?'

'சின்ன வீடு...?'

'ஏன் இந்த நாற்றக் கருவாட்டு நினைவுகள் - ஏதோ ஒன்று. புருஷன் மனைவியா இருக்கக் கூடாதா என்ன?' என்ற பசப்பலுடன் கிறலிட்ட கேள்விகளை உதறினேன். படகு பாலாய்க் கிறி உமிழ்ந்த தண்ணீரைச் சற்று நேரம் பார்த்திருக்க, கரை விளிம்பில் நகரின் உயரக் கட்டடங்கள் நிமிர்த்தி வைத்த தீப்பெட்டிகளாய்த் தெரிந்தன. தலையைக் கோதி, புடவையை நீவி, கைப்பையைத் தோளில் எடுத்துப் போட்டுக் கொண்டேன்.

மோட்டார் சீற்றம் தணிந்து 'கேட் வே' சுவருக்கருகில் படகு நாய்க்குட்டி போல அண்டியது. இங்கிருந்து வீசப்பட்ட பருத்த கயிறு இழுத்து இறுக்கப்பட, அடங்கி பயணிகள் இறங்க வாகாய் நின்றது. ஆனாலும் அத்தனை நேரம் சமுத்திரத்தில் ஓடி வந்த களைப்புத் தீர மூச்சிரைப்பது போல சலனமற்று நிற்கக் கூடாமல் 'ஆடி ஆடி விம்மியது.'

இளைஞர்கள் முண்டியடித்துக் கொண்டு தாவி வெளியேற, இடிபடாதிருக்க காத்திருந்தவர்களில் எங்களுக்குப் பின்னேதான் அம்மூவரும்.

அவன் பேச்சு ஓயவில்லை.

சற்றே நெருங்கி நின்றிருந்தும் கூட அவர்கள் மொழி புரியாததில், விவரம் எதுவும் அறிய முடியாத நிலை.

படகு விளிம்புக்கு வந்து தாண்டி கற்படிகளில் கால் பதிக்கும் போது எனக்குள் ஏமாற்றம் மண்டியது. ஆசையாசையாய் மூன்று நாட்கள் படித்த பருத்த மர்ம நாவலின் முடிவு பக்கங்கள் நமத்துக் கிழிந்திருந்தாற்போல ஒரு ஆற்றாமை.

சிறுமி, குரங்குக் குட்டிபோல அநாயாசமாய்த் தாண்டி நிற்க, அடுத்தாற் போல அப்பெண் தாவும் நேரம், படகு சற்றே படிகளிலிருந்து அசைந்து விலக, தடுமாறி அலறிய அவள் கையைச் சட்டென்று எம்பி, பற்றி இழுத்தேன் நான்.

''பார்த்துங்க'' - என் கரிசனம் என் தமிழையும் தாண்டி அவளுக்குப் புரிந்தது.

''ஷேறாஷியாரிம்மா'' - கூவினாள் சிறுமி.

''தா... தாங்க்ஸ்...'' தயக்கத்துடன் முனகி நன்றியுடன் ஏறிட்ட





அவள் விழிகளை வெகு அருகில் கண்டதும் எனக்குள் ஆவல் துளிர்த்துக் கிசுகிசுத்தது... 'இதுதான் சமயம்... கேட்டு விடேன்!'

அடுத்து இறங்கிய அவனை ஜாடை காட்டி, ''யுவர் ஹஸ்பெண்ட்?'' இயல்பாய்க் கேட்டேன்.

அறைபட்டது போல அவள் கன்னம் அதிர்ந்தது.

அச்சிறு விழிகளின் ஒளி 'சட்'டென்று அணைந்து விட, முகத்தில் பரவிய வெறுமை அச்சுறுத்தியது. முகம் கவிழ்ந்தவள் மௌனமாகத் திரும்பி நடந்தாள்.

இதுபோதும். விடை தெரிந்து விட்டது. 'இது முறையான உறவில்லை என்ற என் கணிப்பு சரிதான்' என்ற இறுமாப்பில் மனப்பூனையின் வால் விறைத்து, முதுகு வளைத்து சோம்பல் முறித்தது.

என் முன்னே தளர்வாய்ப் படியேறியவளின் தலை குனிந்தேதான் கிடந்தது. கை முகத்திற்குச் சென்று விழி நீரைச் சுண்டித் தெறித்த அந்த கணம் - உள்ளேயிருந்த பூனை சுருண்டது.

சக ஜீவனுக்காய்ப் பச்சாதாபத்தில் நனைந்தது.

அவள் வேதனை உணர்ந்து நடுங்கியது.

பெண்மையின் உயர்வு, ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உன்னதம் இங்கு சிலருக்கு எட்டளவில்... கல் அளவில் தான்.

அழுந்த யோசித்தும் சற்று முன்பு பார்த்துப் பரவசித்த அர்த்தநாரியின் உருவம் மனதுக்குள் வர மறுத்தது. சிதைந்து மூளியான கீழ் பாதி மட்டுமே கற்பனைக்கு எட்டியது. ''கடல் காத்து இதமாயிருக்கே நீலு. ஏன் உன் உடம்பு நடுங்குது?'' என்னவரின் கைகள் ஏதோ புரிதலுடன் ஆதரவாய் என் தோள் பற்றி இறுக்க, எனக்கும் புரிந்தது.

அந்த ஈரம் கசியும் குகைகளைப் பார்க்க அத்தனை ஆயிரம் பேர் தினம் வந்து போவது சிதைவுகளுக்காய் அல்ல.

அதை மீறி நிற்கும் சிற்பங்களுக்காய்.

இருவரும் இணைந்து படியேறினோம்.

(ராஜம் - சித்திரை மலர், 1995)

★★★

# திருட்டு மாங்காய்

ரங்கன், பஸ்ஸிலிருந்து இறங்குவதைப் பார்த்ததுமே என்னுள் 'குப்'பென வெறுப்பு கிளம்பியது. 'இங்கே யார் இருக்கிறாரென்று மாதத்திற்கு இருமுறை இவன் இவ்வூர் மண் மிதிக்கிறான்?'

ஐந்து வருடங்களாக அவன் இவ்வூரில் ஜாட்டி அடித்துத் திரிந்தது சரி. அப்போது அவன் அப்பாவின் குடும்பம் இங்குதான். இப்போது இங்கு யாருமில்லை. திருமணமான இவனுடைய குடித்தனம் மதுரையில். முருங்கையை விடாத வேதாளமாய்... இன்னும் என்ன?

ரங்கன் வேதாளம் தான்-

திருட்டு வேதாளம்.

மூன்று வருடங்களாய் என் சிநேகிதி ரமணியின் மனதை அலைக்கழித்து ஆக்ரமித்திருக்கும் பிசாசு இவன்.

மறுநாள் ஞாயிறாயிருக்க, அம்மாவிற்குச் சமையலில் உதவி செய்துவிட்டு ரமணியின் வீட்டிற்குக் கிளம்பினேன். அம்மாவிடம் அங்கு போவதாகச் சொல்லவில்லை.

'பெரியவங்க பேச்சக் கேக்காத அழிஞ்சு போற அவளைப் போயி நீ ஏன் பாக்கோணும்? உனக்கு மாசியிலே கலியாண நாள் குறிச்சாச்சு. அவ காத்தும் படாத மாதிரி இரு' என்று வைவார்கள். அதனால்தான் அம்மாவிடம் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுச் சென்றேன்.

'எனக்கு இனி கல்யாணம்? எம்மனசு பூரா ரங்கந்தான் - வேறொருத்தன் தாலிக்குக் கழுத்து நீட்ட முடியுமா?' என்று 'டயலாக்' பேசிக் கிடந்த ரமணியை ஊரே பழித்தது.





என்னைப் பார்த்ததும் ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.

''நீயாவது என்னை ஞாபகம் வச்சு வந்தியே.''

''மாசத்துக்கு ரெண்டு, மூணு தடவை ரங்கனும் வாராருல்ல?''

''ம். நேத்திக்கும் வந்தாரு.'' தலைகுனிந்து சொன்னாள் - முகத்தில் வெட்கமா, வருத்தமா என்பது தெரியவில்லை.

''பார்த்தேன். உங்கிட்டப் பேசணும்.''

''இந்த விஷயமா ஒண்ணுமில்லையே?''

''வேறென்ன? ரங்கனுக்குக் கல்யாணம் முடிஞ்ச பின்னும் இங்கென்ன போக்குவரத்து?'' பதிலில்லை.

''இது காதலில்லை ரமணி, வேஷம். ரெண்டு பொண்ணுங்களை ஏமாத்தி சுகம்காணுற அல்பத்தனம்.''

''எங்க பிரியமும் பாடும் உனக்குப் புரியாது. ரெண்டு வார்த்தை பேசிக்க நாங்கப் படற கஷ்டம்...'' என்றாள். நான் சிரித்து விட்டேன்.

''எதுக்கித்த பாடு? இன்னொருத்தி புருஷனை 'என்னையவாரத் தவறாம வந்துபாரு'ன்னு பாடுபட்டுப் பல்லைக் காட்டி ஏன் கூப்பிடற? அது திருட்டுத்தனம்.''

''வேற வார்த்தை எது வேணா பேசு.''

''தரங்கெட்டுப் பேச வரலை. உன் வாழ்க்கை பாழாயிடக் கூடாதேங்கற ஆதங்கந்தாண்டி ரமணி.''

''என்னால அவரை... மறக்க முடியல.,''

''இதை அவரு கலியாணத்துக்கு முன்னே சொல்லியிருந்தா - சரி. எனக்கு அவருதான்னு போராடியிருந்தா - பாராட்டுவேன். இது பிறத்தியார் பொருளைத் தட்டிப் பிடுங்கற கள்ளத்தனம்.''

''பிறவால வந்த அவதான் கள்ளி.''

''வீட்டோட வளர்ந்த பொண்ணு அவ. உங்க விளை எப்படித் தெரியும்? அவளைப் பொண்ணு பார்க்கப் போயி இனிப்பும், உறப்புமா விழுங்கிச் சம்மதம் சொன்னவரு ரங்கதுரை.''

''அவங்கப்பாரு மிரட்டினாரு. தங்கச்சி கலியாணத்துக்கு அவ நீட்டின பரிசப் பணம் வச்சு...''

''அதுக்குப் பிச்சையெடுக்கலாம். ரெண்டு வருஷம் நீ காத்திருக்க மாட்ட? சம்பாரிச்சு தங்கை கல்யாணத்தை முடிச்சு உனக்கு மூணு முடிச்சுப் போடறது?''

''நீ காதலிச்சதில்லை.'' - நீண்டதாய் பெருமூச்சு விட்டாள் ரமணி!

''பரவாயில்ல - மாசி கழிஞ்சு எனக்கு வர்றவரை காதலிச்சுட்டாப் போச்சு. உன்னோடது ஏமாந்து, குழப்பம்...''

''அவரு புலம்பறாரே...?''

''காது கொடுக்காத. பணங்காசு தந்து குடித்தனம் பண்ண ஒருத்தி, வந்து ஏமாத்தி இழைச்சுக்க இன்னொருத்தியா? திருட்டு மாங்காயா தித்திக்கறேடி ரமணி நீ - அவ்வளவுதான். அந்தாளு பேர், குழந்தைங்க, ஆஸ்தி எல்லாம் அவளுக்குத்தான்.''

''மனசு?'' பாதி சந்தேகமாய்க் கேள்வி வந்தது.

''அது உங்கிட்ட இருந்திருந்தா, உன்னை கௌரமா வாழ வச்சிருப்பான். அவகிட்ட கொடுத்திருந்தா அவளை ஏமாத்தாம இருந்திருப்பான். தன் சந்தோஷத்தில் மட்டும் நிலைச்சுட்ட மனசு அவனுக்கு - அது யாருக்குமில்லை - புரியுதா?'' - நிதானமாய்ச் சொன்னேன்.

''அப்பாருக்கும் கவலை.''

''அவருக்கு சீக்கு வந்ததே உங் கவலையில் தான். இரண்டு வருஷமா வீட்டோட, வாசலைப் பார்த்துக் கிடந்ததை விடு. நாளைக்கு எங்க தையல் கிளாசுக்கு வாயேன்.''

''நீ டீச்சர் உத்தியோகமில்ல பாக்குற?''

''காலையில் மட்டும்தான். சாயங்காலம் தையல் டீச்சருக்கு ஒத்தாசையாயிருக்கேன். கட்டிங் இப்ப சுத்தமா வருது.''

''ம்.''

அடுத்தநாள் ரமணி ரவிக்கைத் துணி தைக்கக் கொடுப்பவள் போல வந்து சேர்ந்தாள். தினம் தையல் படிக்க வந்தாள்.

இரண்டு வாரங்கள் கழித்து வந்த ரங்கன், வந்த சுருக்கிலேயே முகம் கறுத்துத் திரும்புவதைப் பார்த்த எனக்குத் திருப்தியாய் இருந்தது. போனமுறை அவன் ஊருக்குள் நுழைகையில் என்னுள் சீறி எழும்பிய கோபம் வீணாகவில்லை. ரமணியின் வாழ்வும் வீணாகவில்லை என்ற நிம்மதியில் புன்னகைத்தேன்.

- 'முல்லைச்சரம்', டிசம்பர் 1994.

★ ★ ★



# இனி ஓடுவதில்லை

கனவிலும் ஓட்டம்தான். முகமற்ற மீசை. பருத்த ஆகிருதியான ஆட்கள் துரத்த, அவள் பதறி ஓடுவதாகத்தான் பெரும்பாலும் கனவு வந்தது. பாதை இருண்டு மூட, அவள் வியர்த்து, அலற வாய் திறக்கையில் விழிப்பு வந்துவிடுகிறது.

இப்போது ஓடுவது நிஜம். மூச்சிரைக்கிறதுதான். ஆனாலும் இன்னும் இரண்டே எட்டுவைத்து எம்பினால் நகரும் பஸ்ஸினுள் ஏறிவிடலாம். டிபன் பாத்திரமும் குடையுமாய் பருத்த கைப்பையை இறுக்கிக் கொண்டவள், எட்டிக் கம்பியைப் பற்ற, வியர்த்த உள்ளங்கை வழுக்கியது. சில கைகள் அவள் கைப்பற்றி இழுக்க, பஸ் படியில் இருபாதங்களும் ஏறிப் பதிந்தன.

ஆனாலும் இதயம் எகிறித் துடித்தது.

''பையனுங்கதான் இப்படீன்னா, பொண்ணுங்களும் புடவையோட ஓடற பஸ்ஸிலே தொத்தறதா? ஏம்மா... விழுந்திருந்தியானா, யாருக்கு பதில் சொல்றது? என் தலை உருளும். உள்ள போம்மா!'' - கண்டக்டர் கோபித்தார். அசுவாரஸ்யமாய் அவளைத் திரும்பிப் பார்த்த பல ஜோடிக் கண்களில் புது ஆர்வம் அப்பிக் கொள்ள, விலகாது வெறித்தன.

விஜயா குனிந்து கொண்டாள். அங்கிருந்தும் ஓடி ஒளிய மனம் துடித்தது.

மெருகிட்ட பொன் விளக்காய் மின்னுவது அவள் தப்பல்ல. வனப்போடு உயரம், பம்மென்று அடர்ந்த கூந்தல், செதுக்கிய முகமும் அகன்ற விழிகளும்... எட்டு மணிநேரம் உழைப்பும் உளைச்சலுமாய் அலுத்த பின்னும் அலுங்காத அழகு. அம்மா

தந்துபோன அழகு.

'ஏன் இத்தனை நேரம்? கடையைவிட்டு இறங்கினா காலை பஸ்ஸிலே வை.'

'பஸ் கிடைக்கணுமேப்பா'

'எவனாச்சும் கிடைச்சா பஸ்ஸு கிடைக்காது' - சீறும் அப்பாவிற்கு அஞ்சிதான் அவள் இப்படி பதைத்து ஏறியிருக்கிறாள்.

பஸ் ஸ்டாப்பில் நிற்கும்வரை - கட்டியவன் போல் 'என்ன விஜி?' என்றழைத்து இழையும் சுந்தரத்திடமிருந்து தப்பி ஓடவும்தான்.

இந்தத் துணிக்கடையில் வேலைக்கு சேர்ந்த முதல் வாரத்திலேயே இவள் பம்மிப் பதுங்க, பார்த்தவர்களின் கொடி உயர்ந்தது.

'விஜி... நூத்து முப்பதுக்கு ஒரு பில் போடு'

'ஏய் விஜி, நாலு டீக்கு சொல்லி விடேன்.'

'மீட்டர்ஸ்டிக்கை இப்படிப் பிடிச்சு அளக்கணும்' கை பிடித்துக் காட்டினார்.

'துணியை இப்பிடி மடிச்சு, கத்திரியை சர்ருன்னு ஓட்டு - பிசிறில்லாம வெட்டிரும்' - மூச்சு, தோளில் வெப்பமடிக்கும் நெருக்கத்தில் கற்றுத் தந்தனர்.

ஆறு ஆண்களிடையே அவள் பெண்மைக்கு மூச்சடைத்தது. ஒருவேளை ஆண் என்ன பெண் என்ன என்ற சமத்துவ இயல்பில்தான் பழகுகிறார்களோ?

'விஜி வந்தபிறகு கடையிலே கூட்டம் டபுள். நீ போனபிறகுதான் விளக்கு வைக்கிறோம்மா. ஆனாலும் இருளோடிடுது.'

'இப்போ முதலாளி கூட 'டீக்கா' உடுத்தி அடிக்கடி விசிட் வரார்ப்பா' - கண்ணடித்தார்கள்.

'மதுரைக்கார பொண்ணுங்களுக்கு விபரம் பத்தாது. 12 வயசுவரை 'ஃபிராக்' போட்டுட்டு பிறகு மிடி, பாவாடைன்னு இறங்கிடுதுங்க. 16 வயசுக்கு மேலேதான் உடுப்பு எடுப்பு - என்ன விஜி?'





வக்கிரம் வெளிப்பட அவள் மேலும் ஒதுங்கினாள். எல்லாக் கணக்குப் பொறுப்பிலிருந்த இரு பெரியவர்கள் 'கண்டுகொள்ளாது' விட, மற்ற நால்வரிடமும் புது உற்சாகம் பிய்த்துக் கொண்டது.

பத்திரிகை, பூ, புத்தகம், இனிப்பு என்று வாங்கி நீட்டினார்கள். அவள் மறுப்பு முறைப்பு எதுவும் எடுபடவில்லை. அதில் மூவருக்குத் திருமணமாகி, குழந்தைகளும் இருப்பது தெரிந்தபோது எரிச்சலும் கவலையுமாயிருந்தது.

சுந்தரத்திற்கு சர்வ சுதந்திரம்.

பின்புறமிருந்த பாத்ரூமிற்கு அவள் போக, தொடர்ந்து வாசலில் விசிலுடன் நிற்பான். உள்ளே விளக்குக்கூட போடாமல் இருட்டுக்குள் நின்று அவள் பல நாட்கள் மௌனமாய் அழுதிருக்கிறாள்.

சில சமயங்களில் தகரக் கதவைச் சுரண்ட, இவள் பதறிப்போய் வெளியே வந்தால்...

'நேரமாயிடுச்சேன்னு பார்த்தேன் விஜி - முகங் கழுவினியா?'

முதலாளியிடம் கோடி காட்டினாள்.

'நீதாம்மா முதல் பொண்ணு. இப்போ சேல்ஸ் கூடியிருக்கா, கூட ஒரு பொண்ணைப் போடலாமான்னு யோசிக்கேன்' என்றார்.

பதில் விடுதலையில்லாவிட்டாலும், குகையின் துளி வெளிச்சமாய் நம்பிக்கை தந்தது.

இன்னுமொரு பெண் துணையில் இத்தனை சிரமமிருக்காது. வந்த ருக்மணி கரேலென்று முயற்பற்களுடனிருக்க, அவளைச் சீந்துவாரில்லை!

பேரை உருட்டி 'ருக்கு' என்று பேச்சுக்குப் பத்துமுறை அழைப்பாரில்லை!

தீய்ந்த திரி புகைந்தது.

'பளிங்கு கணக்கா நிறமிருந்தா கஸ்டமருங்ககூட சிரிச்சு பேச மாட்டாம பாறை மாதிரி நிக்குறா - மித்த ஆம்பளைங்க 'விஜி விஜி'ன்னு தாங்கற கர்வம்' - பொறாமை ருக்குவை எட்டவே வைத்தது. அவள் நெருங்க முயன்ற சுந்தரம், அவளை அண்ட விடவில்லை.

இரவு படுக்கையில் இந்நினைவுகளைப் புரட்டிப் பார்க்க சோகையாய்ச் சிரிப்புவரும்.

''என்ன உல்லாசமா நீட்டி நிமுந்திட்ட? காலைக்குத் தண்ணி இல்லை. அடிக்க, குடிக்க ஒரு குடம் காய்ச்சி வை'' என்று அப்பா சிடுசிடுப்பார்.

போன வருடம் ஒருநாள் வீட்டில் பம்ப் அடிக்கும்போதுதான் கோபாலை முதன் முறையாகப் பார்த்தது.

வெள்ளிக்கீறலான மூன்றாம் பிறையைப் பார்த்தபடி நின்றவள் அரவம் கேட்டு அவசரமாய் ஒங்கியடித்தாள்.

''என்னங்க இந்த நேரத்தில்?''

''யாரு?'' திமிர்ந்து புருவஞ் சுருக்கினாள்.

''புரொபசர் சார் வீட்டுக்கு எம்ஃபில் பண்றது விஷயமா அடிக்கடி வர்றேன். சார் உதவியா இருக்கார்.''

அவள் பதிலளிக்காது இயங்க குடம் தளும்பித் தெறித்தது.

'வேலைக்குப் போனா இதான் சிரமம்...'

நிரம்பாத வாளியுடன் உள்ளே நடந்தாள் அவள்.

நான்காம் நாள் அவனது அலுவலகத்திற்கு வந்தான்.

''உங்ககூட பேசணுங்க.''

''யாரு?'' - விழிகள் உறையக் கேட்டாள்.

''நினைவில்லை? பம்ப்... நீங்க.... மூணாம் பிறை'' - தடுமாறினான்.

''இதெல்லாம் எனக்குப் பிடிக்கலை.''

அவள் மேலே தொடரவில்லை.

மறுநாளே அடுத்த போர்ஷன் புரொபசர் சார் வந்து சம்பந்தம் பேசினார். ''கோபால் எங்க காலேஜ் லெக்சரர். எம். ஃபில் முடிச்சு பர்மனெண்ட் ஆயிடுவான். நல்ல குடும்பம், நேரான பிள்ளை.''

''அப்ப ஏன் அவளைத் தூரத்தறான்?'' அப்பா நிஷ்டூரமாய் திமிண்டினார்.

''அப்படி ஒண்ணுமில்லையே சார். விஜயா விருப்பம் தெரிஞ்சு கல்யாணம்பேச ஆசைப்பட்டான். அவ்வளவுதான். விஜயாவைப் பத்தி மூணு மாசமா என்கிட்டே ஒரே சிலாகிப்பு. 'அந்தக் கால





பத்மினி போல ஒரு கம்பீரமான அழகு சார் அவங்க - அமைதியும் கறாருமா குணம்கூட அழகுதான்'னு சொல்லிக்கிட்டேயிருப்பான். - பைசா எதிர்பார்க்கலை. பூவா வெச்சுக்குவான்.''

அவளுக்குள் சந்தோஷக் காற்று - அஞ்சி ஒடும் அவள் சுபாவம் அவனுக்குக் கம்பீரமாகப் பட்டதாமா?

''அநாதைப் பயலா? கேட்க உறவில்லை?'' - வாய் கோணி கன்னத்தைச் சொறிந்து கேட்டார்.

''பெத்தவங்க கடையத்திலே இருக்காங்க. செயலான குடும்பம். ரெண்டு பக்கமும் தெரிஞ்சவன்ற முறையிலே என்னையக் கேட்டுக்கிட்டான்.''

''விசாரிச்சுக்கிட்டுச் சொல்லி விடறேன்.''

''சரி. விஜயாவையும் ஆறேழு வயசுக் குழந்தையிலிருந்து எனக்குத் தெரியும். கோபாலும் நல்லா தெரிஞ்ச பையன் - அதான் சொல்றேன்...''

''போருமய்யா. தொழிலை மாத்திக்காதீயும். நானையும் யோசிக்கணும்னா புரிஞ்சு ஒதுங்குமேன்.''

சார் முகம் கன்றித் திரும்பினார்.

அவள் உள்ளே பரவிய சந்தோஷக் காற்று அடங்கி வறண்டது.

மறுமுறை கோபாலன் வந்திருந்த வேளை பார்த்து, அவள் பின்புறமாய் சார் வீட்டில் நுழைந்து வலியப் பேசினாள்.

''சார் சொன்னார்'' - ரப்பர் வளையல்களை மேலும் கீழுமாக ஒட்டியபடி சொன்னாள்.

''என்கிட்டேயும் சொன்னார்'' - வருத்தமாய் தலையசைத்தான்.

''அப்பாவுக்குப் பயம். அம்மா இறந்து 15 வருஷமாச்சு. தம்பி 20 வயசிலேயே ஒரு கேரளப் பொண்ணைக் கட்டிக்கிட்டு அவ ஊர்ப்பக்கமா போயிட்டான். எஞ்சியது நான் மட்டும்தான் - சம்பாதிக்க, சமைக்க, துணையா...''

''கலியாணத்துக்குப் பிறகு நம்மகூடத்தானே இருக்கப் போறார்?''

''யோசிக்கத்தான் சொல்றீங்களா?''

''அவரு ஒண்டின்னு தெரியுமே.''

''உங்க அப்பா அம்மா...?''

''கடையத்திலே நிலமிருக்கு. அண்ணியைச் சொந்தத்திலேதான் எடுத்தோம். வீடு கொள்ளாம பேரன் - பேத்தி, குற்றாலச் சாரல், குளியல் - அவங்க ஊரை விட்டு அசைய மாட்டாங்க.''

''அப்பாகிட்டே பேசறேன் நான்.''

''முடிவு எப்போ... தெரியும்?'' - முகம் மலர்ந்தான்.

''தெப்பக்குளம் பக்கத்தில நாளைக்கு வந்திருங்க.''

மறுநாள் தளும்பிய குளத்தருகே கோபாலின் மலர்ச்சி வற்றிப் போனது.

''ஏங்க விஜயா? வரதட்சணை எதிர்பார்க்கலை. அவரை ஒதுக்கலை - பிறகென்ன? நான் வந்து பேசட்டுமா?''

''பயங்கரமா கத்தறாரு. அவன் வீட்டுல, சம்பாத்தியத்துல நானிருக்கறது கேவலம்ங்கறார். எனக்கு விஷம் வச்சிட்டு நீ போய் தாலி கட்டிக்கோன்றார்.''

இதே பேச்சை அவள் வேலை பார்த்த அலுவலகத்தில் வந்து அவர் மேஜை மேஜையாய் நின்று பேசி தன் கட்சிக்கு ஆள் சேர்க்க, அவள் ராஜினாமா செய்துவிட்டு மூன்று மாதங்கள் வீட்டிலிருந்தாள்.

குந்தித் தின்ன நிமிஷத்தில் குன்றிமணி கரைந்தது. பணத்தேவையைவிட தகப்பனிடமிருந்து தப்பும் வேகத்தில்தான் அவள் துணிக்கடை வேலையில் சேர்ந்தாள்.

சட்டியிலிருந்து அனலுள் குதித்த கதையாய் இங்கு மனதில் மேலும் பொசுங்கல். ஓடுதலும் அலுத்துப் போனது.

அடிக்கடி வந்து பேசும் கோபாலும் அவன் கண்ணியமும்தான் ஒரே குளிர் மருந்து.

''ஏம்மா... ஒத்த ரூவா டிக்கெட்டில மொத்த பஸ்ஸை வாங்கிட்டாப்பல சப்ஜாடா உக்காந்திருக்கியே. பிள்ளையத் தூக்கும்மா. அந்தப் பொண்ணு இன்னும் இளைச்சுட்டு நிக்குது பாரு. விரிச்சு அடைச்சிரணும் சீட்டை.''

கண்டக்டரின் கூச்சல் தனக்குப் பரிந்துதான் என்ற உணர்வில்





விழிகளை நிமிர்த்தினாள் விஜயா. உடல் இன்னும் இலையாய் நடுங்கியது. நெஞ்சு விம்மியது.

சுற்றிலும் கொத்திய கண்களில் குன்றி குறுகினாள்.

ஓட... கால் பரபரத்தது.

வாரிச் சுருட்டிய கொண்டையும், பிசுக்கேறிய தலையுமாயிருந்த பெண் படுஅமர்த்தலாயிருக்க மீண்டும் அதட்டல்.

''உன்னத்தான் - காது செவிடா? பிள்ளையத் தூக்கேன்?''

''ஒத்தரூவா டிக்கெட்டுதான். ஆனா பிள்ளைக்குமாச் சேத்து ரெண்டு எடுத்திருக்கோமில்லை. எதுக்குத் தூக்கணும்?''

''ஆமா... ரெண்டு ரூவாயில பஸ்ஸே உன்னுதாயிடுது.''

''என்னுதில்லைய்யா. மாசக்கூலி வாங்குற உன்னுதுமில்லை. மொட்ட அம்பலம் பண்ணாத. சொல்றத நயந்து சொல்லேன். உன் ரப்பு தோரணையிலே நா ஓடணுமாக்கும்?''

அமர்த்தலான குரல்தான்.

ஆனால் சுத்த அச்சமில்லா கிராமத்துத் தோரணையில் தன் பதற்றம் அடங்கினாற் போலிருந்தது விஜயாவிற்கு.

மேலும் கூட்டம் ஏற, முன்னே நகர்ந்தவளின் கை தொடப்பட்டது.

''உக்காரும்மா'' - கிராமத்துப் பெண் பிள்ளையை மடியிலேற்றிக் கொண்டாள்.

''ப...பரவாயில்லை.''

''உக்காரு நீ... பயந்துட்டியா? அவிட்டு அதிகாரத்துக்குப் பணிஞ்சுப் போகப்படாதுன்னு பேசினேன். வேலைக்குப் போயி வர்றியா?''

''ம்... நீங்க சொல்றதும் சரிதான்.''

''என்னையும் தூகுமா இருக்கோமில்ல - விரட்டுவானுங்க. முதுகு காட்டினா எக்களிப்பா குத்தி நெம்புவானுங்க. நின்னு பேசிடணும். ஓடுனா கல்லெடுக்க குனியறதுதான். ஆனா நாய் நின்று திரும்பினா கிலிதான?''

''சரிதான்''

''நீயுந்தான் எதுக்கு இப்படி - ஓடிவந்து ஏறுனெ? வழுக்கி விட்டிருந்தா இத்தனை அழகும் டயருக்கும் ரோட்டுக்குந்தானே?'' நொடிகள் கண்மூடித் திறந்தவள் சொன்னாள்.

''இல்லை - இனி ஓடலை.''

மறுநாள் காலை, கடையின் மாளிக்குயின் பொம்மைக்கு நைட்டி மாட்டிக் கொண்டிருந்த சுரேஷ் இவளிடம் கிசுகிசுத்தான்.

''ட்ரெஸ் வெளிச்சம் போறுது - பொம்மையைப் பார்க்கிறவனே வழிவான் - பொண்ணுக்குப் போட்டு நிறுத்தினா... என்ன விஜி?''

அவன் விழிகள் வஞ்சனையாய்ச் சுருங்கிச் சீண்டின.

''போட்டு விடுங்களேன். வீட்டிலே அக்கா, தங்கை இருக்காங்கல்ல? போட்டு எங்க வேணா நிக்க விடுங்க.''

கணீரென்று வந்த பதிலில் விதிர்த்துக் குனிந்தான்.

''சுந்தரம், பதினொரு மணி டீக்கு நீயே சொல்லிடு. தவிர உன் கஸ்டமர் பில்லை நீதான் இனி போடணும்.'' - சொன்னபின் எதையும் சமாளிக்கலாம் என்ற தெம்பேறியது. வந்த கோபாலுடன் என்றுமில்லாத உல்லாசத்துடன் பேசினாள்.

இரண்டாம் நாள் கைக்கொரு பெட்டியுடன் புறப்பட்டு நின்றவளைப் பார்த்த அப்பா தொய்ந்தார்.

''எ...எங்க... என்ன பெட்டியைத் தூ... தூக்கிட்ட?''

''வர்ற புதன்கிழமை எனக்குக் கல்யாணம்ப்பா. பிரியமா மதிப்பா எப்பவும் உங்களை வச்சுக்கக் கடமைப்பட்டவ நான். ஆனா, உங்களுக்கு அந்த நம்பிக்கை இல்லைங்கறப்போ... போறேம்ப்பா...''

அப்பா கத்த ஆரம்பிக்க, அவள் படியிறங்கினாள்.

''எங்க போறே நீ?'' - பின்னால் ஓடி வந்தார்.

''சார் வீட்டுக்கு. கோபால் குடும்பத்தார் வந்தாச்சு. நாளை காலை ஜவுளி எடுக்கப் போறோம். நீங்களும் வந்தா சேர்ந்தே போவோம்பா.''





வீதியில் இறங்கியபோது பெட்டிகளை கோபால் வாங்கிக் கொண்டான். பயந்தது போல மனசு பாரமாயில்லை. மூன்றாம்பிறை போல தகடாய், மெலிசான ஒளியாய் உணர்ந்தாள்.

அப்பா இனி முரண்ட மாட்டார் என்ற நம்பிக்கை.

அவருக்கும் நல்லதாய் வேட்டி, சட்டை எடுக்க வேண்டும். அவர் பயஜுரம் நீங்க கல்யாணத்தன்று குளிரக் குளிர அவர் காலில் விழுந்து வணங்க வேண்டும். கடைசி வரை அவர் மனம் வாடாது வைத்துக் கொள்ள வேண்டும்.

கோபாலுக்கும் குறையே தோன்றக் கூடாது. இதெல்லாம் தான் சந்தோஷமாய் இருக்கத்தான் சாத்தியம் என்று தோன்ற முக்கியமாய் ஒன்றை மனதுள் அழுந்த குறித்து வைத்தாள்.

இனி ஓடுவதில்லை...

மனம் வெகு நிம்மதியாயிருந்தது.

(மங்கையர் மலர்)

★★★

# இடம்

ஹேமாவிற்கு அது காதலா என்று தெரியவில்லை. சத்யனின் சிரிப்பு, சுறுசுறுப்பு, சீரான தோற்றம் எல்லாம் பிடித்திருந்தன. அவன் அருகிலிருக்க தனி உல்லாசம் உணர்ந்தாள்.

ஆனால் அவனுடன் காலம் முழுதும் இணைந்து நடக்குமளவு இந்தப் பிடித்தம் பலப்பட்டு நேசமாகி... 'ஆழ்ந்த காதல் முத்தாய் இறுகுமா' என்று - புத்திசாலிகள் காதலிப்பது சாத்தியமேயில்லை என்று வாதிடும் ரகம் அவள் - நின்று யோசித்தாள்.

இயல்பான பார்வை, பேச்சு மீறி அவ்வப்போது ஜாடையான சிரிப்பு - வார்த்தைகள் சில நேர்ந்தபோதும் அவள் தன் மனதை முழுவதுமாய் இழந்துவிடவில்லை.

சத்யன் அவள் வீட்டு ஒற்றை அறை மாடி போர்ஷனில் குடியிருந்தான். பெரியப்பாவின் சிபாரிசுடன் அவர் ஊரிலிருந்து வந்ததால் பிரம்மச்சாரியான அவனுக்கு மேல்வீட்டைத் திறந்துவிட வேண்டிய நிர்ப்பந்தம் அப்பாவுக்கு. ஆனால் மூன்றே மாதங்களில் ''அண்ணாச்சி சொன்னதுபோல குணமான பையந்தான். தவிர அவந் தர்ற முந்நூறு ரொம்ப ஒத்தாசை ஹேமா. பென்ஷன் பணம், சம்பளத்தில் மூணுல ஒரு பங்குதானே? ஒரு வருஷமா செலவை இழுத்து பிடிக்கச் சிரமப்பட்டேன்'' - என்றார். அப்பாவாயும் மனசும் திறந்து பேசுவது என்பது அன்றாட நடப்பல்ல.

''சொந்த வீடுதானப்பா நம்மது?''

''காலங்கடந்து உன்னையப் பெத்துக்கிட்டோமேம்மா. உன் அக்காமார் கல்யாணக் கடன் தீர்த்ததே பெரும்பாடு.''





''தீர்ந்துடுச்சில்ல? பெரும் புண்ணியம். வர்ற ஜூன்லேருந்து நான் ஒரு இன்ஜினியர்ப்பா. வேலையும் அமைஞ்சுட்டா பிறகு பிரச்னையில்லை.''

''புரியாத பேசுறியேம்மா. அம்மா இருந்திருந்தா இதுக்குள்ளே உனக்கு மாப்பிள்ளை பார்த்து, தன் பங்குக்கு ஏதோ பாத்திரம், பண்டம்ன்னு வச்சிருப்பா. அவ இருந்த தைரியத்திலே உங்கக்காமார் கல்யாணம் நடத்தினேன்.''

அம்மா நினைவில் அவர் குரல் ஒடுங்குவதை உணர்ந்த அவள் முகத்திலும் இறுக்கம் - அதை மாற்ற இடைவெட்டினாள்.

''சரி அதுக்கு இப்போ என்னப்பா?''

''சத்யன்கிட்ட கூட இருநூறு கேட்கலாமான்னு யோசனை''

''ஐந்நூறாவா?'' - விழிகள் விரிந்தன.

''லெக்சரருக்கு நல்ல சம்பளம். கைக்கே நாலாயிரத்துக்கு மேலே வரும்.''

''ஆனாலும், அவருக்கும் செலவெல்லாம் இருக்குமில்லையாப்பா?''

''யாருக்குச் செலவில்லை? அப்பப்ப காபி டிபன் தர்றோம். காத்து தண்ணின்னு குறையில்லாத இடமில்லையாம்மா?''

''அவர் அம்மாவுக்கு காட்ராக்டாம். ஆபரேஷன் இந்த வருஷம் செய்திடணும். கல்யாணத்துக்கு ஒரு தங்கையும் இருக்காப்பா!''

''அப்போ அவன் வேற வீட்டுக்கு மாறிக்கிடட்டும்''

''கிடைக்கிற முந்நூறும் நின்னுடுமே?''

அப்படி நடக்காதென்பதாய்த் தலையசைத்தார்.

''இத்தனை வசதியா வேற வீடேது இந்தப் பக்கம்? காலேஜுக்கு நடந்தே போயிடறான். அந்த வகையில் மிச்சப்படறத நமக்குக் கொடுக்கட்டுமே.''

''ஆனாலும் ஒரேயடியா இருநூறா கேட்கறது...?''

''அப்பத்தான் நூறாவது ஏறும்.''

அப்பா சாணக்கிய சிரிப்புடன் நகர, ஹேமாவிற்குக் குறுகுறுவென்றது. நான்காம் மாசம் வாடகையைக் கூட்டிக் கேட்பது அநியாயமென்று தோன்றியது - அது சத்தியனாய்

இல்லாதிருந்தாலும் கூட.

ஆனாலும் அது ஒன்றும் சத்யனால் சமாளிக்கக் கூடாத பிரச்னை அல்லவென்றும் தோன்றியது.

ஆனால் குமைச்சல் மறுநாள் கவலையானது.

''பய வேற வீடுபார்த்துக்கறேங்கறான்... போகட்டுமே'' - அப்பா சிடுசிடுத்தார்.

''ஒத்தாசைன்னு சொன்ன முந்நூறும் போச்சு'' - இவளும் பதிலுக்குச் சிடுசிடுத்தாள்.

''பாங்க் உத்தியோகஸ்தன் யாரோ தனிவீடு தேடிட்டிருக்கானாம் - தனி ஆள் தான்.''

''முதல்ல ஆள் எப்படின்னு விசாரிங்க'' - இவள் இழுத்துச் செருகியபடி வெளிநடப்புச் செய்தாள்.

முன்புபோல் சத்யனைக் கண்டதும் இயல்பாய் பேச்சு ஓடவில்லை.

'இன்னைக்கு செகண்ட் சாட்டர்டே. லீவாச்சேன்னு பிரியாணி செய்தேன்' சூடான பாத்திரத்தை நீட்ட முடியவில்லை. அதற்கேற்றாற்போல எஜுகேஷன் டூர்,, பரீட்சைகள், ப்ராக்டிகல்ஸ், பேச்சுப் போட்டி, பிரிவுபசார விழா என்று அவள் நேரத்தைப் பலதும் பிடுங்கிக் கொள்ள - ஒன்றரை மாதம் ஓடியே போனது.

ஊர் போய் வந்தவனிடம், ''ஊரிலே எல்லாரும் சௌக்யந்தானே'' என்று அசடு வழிய விசாரித்ததோடு நிறுத்திக் கொண்டாள்.

பரீட்சை நெருங்க, மூச்சு விடவும் யோசிக்க வேண்டியிருந்தது. மனம் அநாவசியமாய் அலைபாயவில்லை. பரீட்சை முடிவுகளில் தன் எதிர்காலம் முழுவதும் தொக்கி நிற்பதாக அவள் நினைத்தாள். வெறியாய் படித்தாள்.

அவ்வப்போது சத்யனின் சிரிப்பும், வாடகைப் பிரச்னையும் சிந்தனையை இழுத்தாலும், தட்டி அதட்டி அமர்த்தினாள். தந்தையிடம் அதுபற்றி கேட்பதையும் தவிர்த்தாள்.

தேர்வுகள் முடிந்தபோது முழுசாய் மூன்று மாதங்கள் முடிந்திருந்தன. அன்று மதியம் திருப்தியாய்த் தூங்கி எழுந்தவள்,





இத்தனைநாள் கவனிப்பாரற்றுக் கிடந்த வீட்டை ஒழுங்கு செய்து கொண்டிருந்தபோதுதான் ஜன்னல் வழியே சத்யனைப் பார்த்தாள். சிவப்பு, மஞ்சள், பச்சை என வண்ணமயமாய் இலைகளைப் பரப்பியிருந்த இரண்டு குரோட்டன்ஸ் செடிகளை மாடிப்படியின் இருபுறமும் நட்டுக் கொண்டிருந்தவனை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

'ஓ? நூறு ரூபாய் கூட்டித் தருவதாய்ச் சொல்லிவிட்டாரோ?' கேள்விக்குறியில் சந்தோஷமும் தொற்றிக் கொண்டு ஆடியது. அப்பா ஏன் தன்னிடம் ஒன்றும் சொல்லவில்லை? இல்லாவிட்டால் இவர் ஆசையாய் செடியை இங்கே நடுவானேன்?

படபடக்கும் நெஞ்சுடன் வாசலுக்கு வந்தாள்.

''ஹலோ... பரீட்சை நல்லா எழுதியிருப்பீங்க''

''ஆமா... பரவாயில்லை. அழகான குரோட்டன்ஸ்''

''ம். என் ஸ்டூடண்டோட அப்பா ஒருத்தர் நர்ஸரி நடத்தறார். கேட்டு வாங்கினேன்.''

''ஓ?''

''அவன் டைபாயிட்லே விழுந்து ஒரு மாசமா க்ளாஸுக்கு வரலை. பத்து நாளா தினம் அரைமணி நேரம் ட்யூஷன் எடுத்தேன்.''

''பரவாயில்லை. ரெண்டு செடிக்கு எக்ஸ்ட்ரா க்ளாஸுங்கறது நியாயமான ஃபீஸ்தான்'' - புன்னகைத்தாள்.

''நோ... நோ... அதுக்கு நூறு ரூபாய் தனியா வாங்கிட்[illegible]ன். இது கொசுறு'' - கண்சிமிட்டிச் சிரித்தான்.

''ஓ?'' இவள் குரலின் சுருதி சற்றே இறங்கி நின்றது.

''ஒரு மாணவனுக்கு உதவறது உங்க கடமைதானே?''

''கத்திரிக்கா போங்க. உங்கப்பாவைக்கூட இப்படித்தான் சமாளிச்சேன். வாடகை கூட்டிக் கேட்டார் - தெரியுமா உங்களுக்கு?''

தலையசைத்தாள் - அது மட்டுந்தான் முடிந்தது.

''அவர்கிட்ட வேற வீடு பார்த்துக்கறேன்னு சொன்னது ஒரு

பேச்சுக்குத்தான். இங்கே இருக்கற வசதியை அப்படி விட்டுற முடியுமா?'' - கண்கள் விஷமமாய் அவளை ஏறிட்டன. முன்புபோல அதை அவள் இன்று ரசிக்கவில்லை.

''உங்கசின்னத்தான் அவர் தம்பிக்கு காலேஜ் அட்மிஷன் கேட்டு எழுதியிருந்தார் போல...?'' இழுத்தான்.

''தெரியலை... பரீட்சை சமயத்தில் அப்பாவும் எதுவும் சொல்றதில்லை. நானும் காதிலே வாங்கிக்கறதில்லை.''

''வேற வழியில்லாம சார் எங்கிட்டதான் வந்தார். 'எனக்கு ஒரு சீட் கோட்டா உண்டு. அது உங்களுக்குத்தான் சார்'ன்னுட்டேன். மற்றபடி 'காமர்ஸ் சீட் வேணும்னா குறைஞ்சது அஞ்சாயிரத்திலே இழுத்து விட்டிரும்'ன்னு ஒரு பின்குறிப்பும் கோர்த்துவிட, அவர் அப்புறம் 'கூட்டித்தா'ன்ற பேச்சையே எடுக்கலை. கொசுறு வாடகையிலே ஒரு ஐம்பது ரூபாய் குறைப்பாரான்னுகூட கேட்கலாமான்னு யோசனை'' - அவன் பகபகவென்று சிரித்தான்.

'முடியாது சார்' என்று அவன் சண்டையிட்டிருந்தாலும் சந்தோஷம். 'ஒரு வருஷமான பிறகு ஏதோ கூட்டித் தர்றேன் சார்' என்று நியாயம் பேசியிருக்கலாம். அல்லது மிரட்டியது போல காலி செய்துவிட்டு விலகியிருக்கலாம். இது என்ன குறுக்குவழி தந்திரம்?

அதுவரை சந்தேகத்தில் நின்ற அவளது கேள்வி இதுதான். 'காதலென்பதா' என்று மயங்கிய அந்தச் சிறு சந்தேகம் - மதிப்புக் கயிறு அறுந்ததில் உருண்டு போனது.

''ஆக இனி எனக்கு இடம் பற்றிக் கவலையில்லை'' - மிக மென்மையான, இனிமையான ஒரு இடத்தை இழந்து விட்டதை அறியாமல் தொடர்ந்து சிரித்தான் அவன்.

(வாரமுரசு, தீபாவளி மலர் - 1994)

★★★

# ஏர்ப்பு

**வி**ழிப்பு தட்டி விழி திறக்க - வெள்ளை வெல்வெட் திரைச்சீலைகளின் கொத்து ரோஜாக்கள் தெரிந்தன.

உம்ம்... தேனிலவைக் கழிக்கக் கொடைக்கானல் வந்த இரண்டாம் நாள் இது.

கனத்த போர்வையின் கீழே கலைந்திருந்த நைட்டியை ஒழுங்குபடுத்தி, அங்கிருந்து இறங்கிய பின்புதான் பார்த்தாள்.

இணைகட்டில் காலி!

நிம்மதியுடன் சோம்பல் முறித்தாள்.

ஒருவேளை குளியலறையில் இருப்பானோ?

தயக்கத்துடன் கதவு தட்டிக் காத்திருந்து மெள்ள கைப்பிடியைத் திருகினாள்.

அங்கும் ஆளில்லாதிருக்க நிம்மதியானாள் ரம்யா.

பல் துலக்கி, குளித்ததும் நீல காட்டன் அங்கியைப் போர்த்தி வெளியில் வந்தாள். கவிழ்த்த தேநீர் கொட்டில் காத்திருந்தது. சூடான தேநீரைக் குடித்தபடி சின்னத்திரையை உயிரூட்டினாள். இனிய இரைச்சலும், நாகரிக பிம்பங்களும் அறையை நிறைத்தன.

பருகி முடித்து, தங்க கோடிட்ட மெல்லிய தேநீர் கோப்பையை மேசையில் வைத்தவள், அறை முழுதும் சுற்றி வந்தாள்.

பிரபுத்துவமான வாழ்க்கைதான் - அவன் பிரபுவைக் கைப்பிடித்ததால் கிட்டிய வாழ்வு.

கண்ணாடியுள் அவள் பிம்பம் சிக்கியது.

சுழன்றாள் - மெல்லிய இடையும், பொங்கிய இளமையும் நளினமாய் சுழன்ற காட்சியை ரசித்தாள்.

'இந்த வாழ்வு கிடைத்தது - இத்தனை அழகால் அல்லவா!' - கர்வ நினைப்புடன் தலைமுடியைச் சிக்கெடுத்து, முத்துக்கள் பதித்த கொண்டைப் பின்னினால் சேர்த்துக் கட்டிக் கொண்டாள்.

நடுத்தர வர்க்கக் குடும்பத்தில் அவளது அழகு போற்றப்பட்டது.

''இதென்ன பேருன்னு வச்சே தணிகாச்சலம்?''

''தங்க பொம்மை மாதிரி பெண் குழந்தை. பொருத்தமான பேரா வைக்கணும்ன்னு இவளைப் பார்த்ததும் பட்டிருருச்சும்மா.''

''ரம்யான்னா அழகா?''

''ஆமாங்கம்மா. நம்ப வீட்டில இப்படி தாழம்பு நிறம், செதுக்கி வைச்ச மூஞ்சி யாருக்கு?''

பாட்டிதான் முதன் முதலில் பேத்தியைக் கையிலேந்தியபோது தனக்கும் தன் மகனுக்குமாய் நடந்த பேச்சை அடிக்கடி இவளிடம் சொல்வதுண்டு.

சற்றே பழங்காலத்துப் பாணி குடும்பந்தான் என்றாலும், அவளுக்கு மாதந்தவறாமல் அப்பா ஏதாவது ஒரு அலங்காரப் பொருளோ, உடையோ வாங்கித் தருவார்.

''என்னப்பா... நான் கேட்டது தேன் கலர் சிபான். நீங்க கனமான துணியாவுல எடுத்துட்டீங்க.''

''போம்மா! இதுக்கே உன் பெரியப்பு, சித்தப்புமாரு என்னைக் கும்முறாங்க - 'இதென்ன அநாவசிய செல்லம்'ன்னு... கம்முன்னு கட்டிக்கோ.''

எப்படி சேலை, நகை பிறரது தேர்வில் அவளுக்கு வந்ததோ அப்படியே தான் - மணாளனும்!

பையனைப் பார்த்த அன்று முழுக்க அழுதாள்.

''ந்தா... உன் அதிர்ஷ்டந்தான்... இத்தனைப் பெரிய இடம் தேடி வந்தது... கிடைக்குமா?'' என அதட்டினார்கள்.

அவளா கேட்டாள்?

அவள் அழகில் கிறங்கி வந்த வரன்தானே? கர்வத்தில் மேலும்





கண்ணீர் பெருகியது!

''வேணாம் பாட்டி... சுத்த கருப்பாயிருக்காரு... கை காலெல்லாம் நீள நீளமாச் சிலந்தியாட்டம்...''

''வாய மூடு... பேச்சுன்னா பலிசா இருக்கணும்.''

ஆனால், இதையே அவள் தோழிகளிடம் சொன்னபோது சிரித்தார்கள்.

''த்சு... பாவம்பா ரம்யா. அழகே ஆபத்துதான்'' என்று பேச, இவள் முகம் மேலும் ஒரு முழம் நீண்டது.

''உன் ஆசை போல கடைக்கு வந்து சேலை நகை எடுத்துக்கிறயாப்பு...?''

அப்பா தலை நீவி கேட்டபோது அவர் தோள்மீது சாய்ந்து விம்மினாள். ''வரலை. மாப்பிள்ளையே என் விருப்பத்துக்கு இல்லைங்கறப்ப நகை, சேலையில் என்ன?''

''அவருக்கென்ன குறையின்னு புரியலை. நம்ப வீட்டு சரமண் நிறமில்லாத நீ கடல் மண்ணு கணக்கா இருந்ததில நாங்க கொஞ்சம் கொண்டாடினம். ஆனால், கருப்பு ஒரு குறையில்லைப்பு.''

''முன்னுக்குகூட வழுக்கை விழுறாப்பல இருக்கு. மீசையும் புருவமும் மட்டும் புசுபுசுன்னு உசரமா... உம்மணாம்மூஞ்சியா...''

''பெரியவங்க முன்னே தடாலடியாய்ப் பேசி, சிரிக்கலை தம்பி... ஆனால், பெரிய படிப்பு... என்ன குரலு? பவுசான பேச்சைக் கேட்டுட்டுத்தான் சொல்றேன்... அவுக பணத்தை மட்டும் கண்டு நாங்க தலையாட்டிடலைப்பு... அத மனசில விவரமாக்கிக்கோ. குடும்பம், குணம், ரெண்டுமே பழுதில்லாத நேர்த்தி - அதுக்கு மகுடமாகாகம் அமைஞ்சது உன் யோகம். இனி முணங்காத... கடவுளுக்குப் பொறுக்காது. தோளுதையெல்லாம் பட்டியலு போட்டு பெண்ணைப் பெத்தவங்ககிட்ட நீட்டி, பிடுங்கி, ஆட்டங்காட்டறவங்க நடுவில இப்படி பெருந்தன்மையான மனிதங்க தேடி வந்த பூரிப்புல நானிருக்கேன். உன் முன்பிறவி புண்ணிய பலந்தான் உன் அழகுன்னு நினைச்சேம்பு... இப்போ தெரியுது உன் புகுந்த வீடுதான் பெரிய

பலன். சாமிக்கு கோடி நன்றி சொல்லி தாலி வாங்கிக்க...''

கண்டோர் கண்ணெல்லாம் விரிய விமரிசையாய் நடந்தது திருமணம். புகுந்த வீட்டின் பரிவும், பிரியமான பேச்சும்கூட புரியாத அளவுக்குத் தன் கொம்புகளைக் கூர்தீட்டி வைத்திருந்தவளின் மனம் முரண்டியது -

'என் அழகை விலைபேசி வாங்கியாச்சில்ல? இனியுமென்ன வேஷம்?' என்று.

இரவு வந்ததும் கூடவே இவளுக்கு வந்தது தலைவலி! அவன் நெருங்கிய நேரம் கண்மூடி, நெற்றி நீவி, முகம் சுளித்தாள்.

முக்கிய உறவின் விருந்துகளில், கணக்காய் மில்லி மீட்டர் அளவே உதடுகளைப் புன்னகையால் மலர்த்தி, பாதி பதில்களைத் தலை அசைப்பிலேயே முடித்தாள்.

''என்ன ரம்யா... இப்படி பயப்படறே?'' புன்னகையுடன் விசாரித்தான்.

தலை திருப்பிக் கொண்டாள்.

''உன்னைப் பற்றி விசாரித்தபோது 'நல்ல பெண், நிறைய சிநேகிதிகள், கலகலப்பான சுபாவம்'ன்னு கேள்விப்பட்டோம்.''

'ஓகோ! இதுவேறா?' உள்ளுக்குள் பொறுமினாள். கண்ணுக்குக் குளிர்ச்சியென்று மட்டுமின்றி குணமும் சேர்ந்து அலசிதான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் - நெஞ்சு மேலும் பெருமையில் விம்மியது.

''அதிகமா பேச மாட்டியா?'' - தோளில் முத்தமிட்டுக் கேட்டான்.

உடல் முழுக்க மின்சாரம் பாய, தடுமாறி எழுந்தாள்.

''இத்தனைப் பேரை ஒருங்கே பார்த்ததில் பயந்து போயிருக்கலாம் நீ. திருமணக் கூட்டம்ன்னா அப்படித்தான். நாம தனியா கொடைக்கானல் போயிட்டு வரலாமா? தேனிலவு! ஜனவரி மாதம் குளிர் கொஞ்சம் அதிகந்தான். ஆனால், தம்பதிகளாய்ப் போனால் தொல்லையில்லை. அம்மாகிட்ட காஷ்மீரச் சால்வை ரெண்டு மூணு வாங்கிக்கலாம். சரியா...?''

உறவுக் கூட்டத்தில் விருந்து, விசாரிப்பு, சிரிப்பைத் தவிர்க்க





இது நல்ல வழியாய்ப்பட்டது.

ஆனால், அதே நேரம் அவனுடன் முழுக்கச் சேர்ந்தே இருக்க வேண்டுமென்பது மறந்து போக-

''உம்ம்...'' என்று சற்று பலக்கவே தலையாட்டினாள். அவனது முகம் தெளிந்து மலர்ந்தது.

ஆனால், இங்கு அவளது தலைவலியும், சூனியப் பார்வைகளும் ஓயவில்லை. இவற்றில் குழம்பிய பிரபு சற்று ஒதுங்கியே நின்றான்.

பகலிலே அவன் ஆர்வமாய் சீண்டாமல், இரவிலே ஆசையாய் கைநீட்டாமல் இரண்டு நாட்கள் கழிய, அவள் மனம் சற்று ஆசுவாசப்பட்டு, சுற்றிலும் இருந்த புதுமைகளைப் பார்த்தது.

இச்செல்வ வசதிகளை வாழ்நாள் எல்லாம் அனுபவிக்க முடியும் என்பதே நிறைவாய் இருந்தது. வயிற்றில் அதேநேரம் பசியும் கிள்ளியது.

இள மஞ்சள் ஷிபானை உடுத்திக் கொண்டு, மிதமான ஒப்பனையில் அறையைப் பூட்டிக் கொண்டு கீழிறங்கினாள்.

படிந்த தலைமுடி, சிலை போல நீல சூட் அணிந்திருந்த ஒருவன் படியேறி அவளைக் கடக்கையில் சற்றே தலை சாய்த்து -

''மார்னிங் மாம்'' என்றான்.

'அடேயேப்பா! இத்தனைப் பார்வையாயிருப்பவன் இங்கே ஊழியனா என்ன?' வியந்து போனாள்.

ராஜா போலிருக்கும் இவன் கேட்டால் 'ஆகா' என்று ஆனந்தமாய் பெரிய வீட்டார் தங்கள் பெண்ணைக் கொடுத்து விடுவார்களா?

சந்தேகந்தான் - பணம் அவசியம்.

'ஐ யம் எ ஸ்டூவர்ட்' என்பதை மீறிய மதிப்பு முக்கியம்.

ஒருவேளை பிரபு திரும்பி வந்தால் அறை பூட்டிக் கிடக்குமே என்ற நினைப்புடன் வரவேற்புப் பகுதியில் சாவியை நீட்டியவள், கண் இமைக்க மறந்தாள் - நேற்று இங்கு நின்றவள் அழகிதான் என்றாலும், இன்று நிற்பவள் பேரழகி.

காலை நேர உற்சாகமும் பொலிவும் சேர, 'காலை வணக்கம் -

தங்கள் அறையைச் சுத்தப்படுத்தி வைக்கவா?' என்ற இதமான ஆங்கிலக் கேள்வியுடன் சாவியை வாங்கிக் கொண்டாள்.

மெழுகா, பளிங்கா என்று வர்ணிக்கத் திணறும் வகையான விரல்கள் நீண்டு ரோசா நகங்களுடன் 'சில்'லென்று உரசின.

''உம்ம்'' அசடாய் தலை உருட்டினாள் ரம்யா.

அவளருகில் தான் நின்றால், தன்னழகு வெறும் நீர்க்குமிழோ என்ற மருகல்!

பணம், அழகு... எல்லாம் மாயை என்று பட்டது. வாழ்வில் இவற்றை மீறி ஏதோ ஒன்றுதான் நிறைவு தரும் என்ற எண்ணம் உள்ளே தலைநீட்ட முயற்சித்தது.

**உ**ணவகத்தில் ஒரு பான்கேக்கும், ஆரஞ்சு பழச்சாறுமாய் ஆர்டர் பண்ணிவிட்டு ஓரமாய் அமர்ந்து கொண்டாள்.

பிரமாண்டமான அந்த அறையிலிருந்த ஒருவரேனும் அவளை நிமிர்ந்து பார்க்கவில்லை. அவரவர் தன் தன் வேலையிலேயே கருத்தாய்...

தட்டு நிறைய டோஸ்ட், ஜாம், முட்டையென்று அடுத்த மேசையில் அமர்ந்திருந்த இளம் பெண்கள் ஒரு வார்த்தை பேசி மூன்றுமுறை சிரித்தனர்.

கல்லூரி நாட்களின் நினைவுவர ஏக்கமாய் அவர்களைப் பார்த்தாள், ரம்யா.

அவர்கள் பேச்சும் காதில் விழுந்தது.

''பில்லியர்ட்ஸ் விளையாடிய ஹீரோவைப் பார்த்தியா?''

''பின்னே? அதுக்குத்தானே ஆறு மணிக்கே காலையிலே கண் விழிச்சது!''

''என்ன ஸ்டைல்! குனிஞ்சு பந்தைக் குறி பார்த்தபடி எதேச்சையா நிமிர்ந்து என்ன ஒரு பார்வை... வாவ்... கவர்ச்சி பொங்கும் கண்கள்ப்பா.''

''கண் இமையெல்லாம் என்ன கருகருவென அடர்த்தியாய்... நாம் மஸ்காரா அப்பினால்கூட அத்துணைப் பிரமாதமாய் அமையாது.''





''ஆனாலும் என் ஓட்டு அவர் குரலுக்குத்தான். ஆண்மையும் நாகரிகமுமாய்... ச்சே தனியாத்தானே வர்றார்.''

''ஒண்டிதான். ஆனாலும் நாம போய்ப் பேசினாலும் ஒட்டுறதில்லை. அளவா ஒரு சிரிப்பு. அப்போ இவர் கன்னத்தில் கண்டுவிரல் பதிக்கிறாப்போல ஒரு குழி... வாவ்.''

''தலைமுடி இருபுறமும் உள்ளோடி... 'விட்டேய்ப் பீக்'குன்னுவாங்களே? நம்ப ரஜினிக்குக்கூட. உனக்கு ரஜினி தெரியும்ல? தமிழ் சினிமா சூப்பர் ஸ்டார்.''

கிசுகிசுப்பான ஆங்கிலத்தில் அந்த வடக்கத்தியக் குட்டிகளின் உரையாடல் நீண்டது.

''இப்பக்கூட பசியில்லை. அவரைப் பார்க்கத்தான் வந்தது...''

ஆர்வம் தாங்காது அவர்கள் விழிபதித்த இடம் நோக்கி இவள் பார்வை பறந்தது.

மறுகணம் மூச்சடைத்தது... அங்கு இருந்தது பிரபு... அவள் கணவன் பிரபுவேதான்.

ஏனோ நெஞ்சுக்குள் அழுகையும் சிரிப்பும் மாறி மாறி முட்டி நினைவுகள் 'பில்லியர்ட்ஸ்' பந்துகளாய் மனமேடையில் அங்குமிங்குமாய் முண்டி விலகின.

அப்பெண்களின் கூற்றின்படி கவர்ச்சி, பணம், குடும்பச்சிறப்பு, இவை அத்தனையையும் மீறி, அவளது கணவன் யார்?

பண்புள்ளவன் - பொறுப்பும் பொறுமையுமானவன். ஓரேநாள் பழகியதில் அவளின் மொத்தக் குடும்பத்தையும் கவர்ந்த பேச்சு, ஆர்ப்பாட்டமில்லாத அன்பு. பிற பெண்களிடம் அத்துமீறி இழையாத ஒழுக்கம். மனைவியின் மனம் கனியக் காத்திருக்கும் கண்ணியம் - தன்னைப் பார்க்கும்போதெல்லாம் அக்கறிய விழிகளில் பெருகும் நேசம்...

ஏற்பு தாங்காது எழுந்து கணவனை நோக்கி நடந்தாள் ரம்யா.

(ராணி, நவம்பர் 3, 1997)

★★★

# மந்திரக்கோல்

செல்வி, பேருந்தை விட்டிறங்கி தன் வீடு இருக்கும் சந்தினுள் நுழைந்ததுமே அவளைப் பரபரப்பும் பதட்டமும் பற்றிக் கொண்டன.

வீட்டின் சிறு இரும்பு 'கேட்'டைத் தள்ளினாள். - 'குப்'பென்ற காற்று விசிறலில் 'பாராசூட்'டாய் நைலக்ஸ் சேலை ஒன்று ஒயிலாய்ப் பறந்து வந்து அவளது தலையில் கவிழ்ந்தது.

'சனியன் - சேலையைக் காயப்போட்டா, கூடவே ஒரு க்ளிப் செருகணுங்கற அறிவே கிடையாது...'

மகளை முணங்கலாய்த் திட்டியபடி குரல் கொடுத்தாள்.

''ஏய் வனஜா...''

''அம்மா...''

12 வயது மகளின் தலை, தயக்கமாய் நீண்டது.

''கதவையும் தாழ் போடலியா கழுத... அத்தனை அஜாக்ரதை - எவனோ நுழைஞ்சு மென்னியத் திருகினான்னா தெரியும்...''

''கேட் சத்தம் கேட்கவுந்தாம்மா திறந்தேன்.''

''நகரு - வாசலை மறிச்சு நின்னு பேசாத!''

''பால் காச்சிட்டேன். காஃபி கலக்கவா?''

''பாக்கெட்டைத்தாறுமாறா வெட்டி பாதிப்பாலை மேடையில மெழுகியிருப்பே - கூறுகெட்டவ. முதல்ல காஞ்ச துணிகளை எடுத்துத் தொலை - அங்கே பறந்ததுபோக எத்தனை





மீதமிருக்கோ?''

மகள் தப்பினால் போதும் என்பதாய்த் தாவி படியேறினாள்.

காஃபி கலந்து பிளாஸ்க்கில் ஊற்றி, தனக்கு ஒரு கோப்பையுடன் அமர்ந்தவளின் முதுகு 'விண்'ணெனத் தெறித்தது.

பகல் முழுதும் சிறு சேலை கடையில் புடவைகளை விரித்தும் மடித்தும் வைத்து, கணக்கு சரிபார்த்து, வீடு திரும்பினால் ஓய்வுண்டா? இங்கும் வேலை. ஆயிரங்கை பூதமாய் அவளை இங்கும் அங்குமாய்க் கிள்ளிப் பிடுங்கும்.

பெரும்பாலான இரவுகள் படுக்கையில் துணைக்கிருப்பது தலைவலிதான்!

மகளை, இளைய மகனை அதட்டியபடி சமைத்து, கழுவி, படுக்கை உதறி அதில் விழுகையில் மறுநாள் விடியவே வேண்டாமென்று மனசு ஏங்கும்.

இரண்டு மாதம் முன்புவரை செல்வியும் வீட்டோடு இருந்து மளிகை, மார்க்கெட், வீட்டு வேலை, சமையல், பட்ஜெட் என்று இருந்தவள்தான். விலைவாசி ஏற்றம், வளரும் பிள்ளைகளின் தேவை என்று தேவைகளுக்கு ஈடுதர வேலைக்குப் போகும் நிர்ப்பந்தம் -

'தட்சணா பொடீக்' என்ற பெயரில் வடக்கத்தியப் பெண் தொடங்கியிருந்த நாகரீகத் துணிக்கடையில் வேலை, வரவேற்பு, பில் போடுவது, சுத்தம், பராமரிப்பு - அத்தனைக்கும் சேர்த்து சம்பளமாய் ரூபாய் ஆயிரத்து முந்நூறு.

முதல் மாதம் கூடவே இருந்து வேலை பழக்கித் தந்த முதலாளியம்மாளை கடந்த ஒருவாரமாய்க் காணவில்லை. பத்துக்கு பதினைந்து அடி அளவே உள்ள கடை என்பதால் செல்வி ஓரளவு நின்று சமாளித்தாள். மாலை ஐந்திற்குப் பொறுப்பெடுக்க வேறு ஒரு இளைஞன் வருவான். காலை ஒன்பதரைக்குக் கடைத் திறப்பது இவள்தான்.

சிரமங்கள் இருந்தாலும் மாதம் பிறக்கையில் மொடமொடப்பான நோட்டுக்கள் கையை நிறைக்க, தெம்பு ஊறியது. ரேஷன், வாடகை, பள்ளி செலவுகளுக்கு தடுமாறாமல்

எண்ணி நீட்ட முடிந்த நிம்மதி.

ஆனால், உடம்பு ஒத்துழைக்கவில்லை. அதன் அயர்ச்சியில் பிள்ளைகளிடம் ஆத்திரப்பட்டாள்... அதில் வீட்டின் நிம்மதி விரிசல்படுகிறதோ?

காஃபி கோப்பையை ஜன்னல் விளிம்பில் வைத்துவிட்டு கண்களை மூடினாள் - அசதி கண்களை இழுத்துச் செருகியது.

'இப்ப தலைசாய்ஞ்சா, காலைல தலை போயிடும்' - முணுமுணுப்புடன் இரவு சமையலுக்காய் எழுந்தாள்.

இடையிடையே கூச்சலிட்டாள். 'துணியை இன்னுமா மடிச்சு முடியலை? நாளைக்காவது அதை இஸ்திரி போடுடீ' என்று.

'டிரம்மில் தண்ணி நிரப்பியாச்சா?' - மிளகாயை அரிந்தபடி டிரம்முள் எட்டிப் பார்த்தவளுக்குள் எரிச்சல் பாய்ந்தது.

''சனி... சனியன்... பாதிகூட நிரப்பாம... எங்கே அவ?'' - கடித்த பற்களுக்கிடையே மகளைத் தேடினாள்.

''அவ்... அவ்வளவுதாம்மா வந்ததே...'' பயந்து குழறினாள் சிறுமி.

வீடு நுழைந்து சூழலைக் கண்ட கணவன் -

''ஏன் செல்வி, ஏன் சதா குட்டியைக் காயறே? சொல்றதை நயமாச் சொல்லேன்'' என்றான் சலிப்பாய்.

''என் கஷ்டம் எனக்கு - இதிலென்ன நயம்?''

''குழந்தைதானே? அன்பாச் சொன்னா அவளும் திகைக்காம யோசிச்சுச் செய்வா...''

சொன்னவன் தானும் பரபரப்பாய் உதவ - அன்றைய பாடு முடிந்தது.

மறுநாள் காலை எழும்போது தலைவலி மிச்சமிருந்தது.

''ஒழுங்கா செயலா எழுந்தாலே ஒரு நாள் ஓட்டறதுக்குள்ள பிஞ்சிடும் - இன்னிக்குச் செத்தேன்'' அரற்றலுடன் குளிர் நீரை வாரி முகத்தில் அடித்துக் கழுவினாள்.





''ஒருநாள் லீவு வேணா போடேன்.''

''அந்தம்மா ஊரிலே இல்லீங்க. நானும் சங்கர் பையனுமாத்தான் கடை நடத்தணும். அவன் கல்லூரியிலே படிக்கிறவன். சாயங்காலம் நாலு மணி நேரந்தான் அவன் பொறுப்பு. காலையில நான் போகலைன்னா கடை மூடித்தான் கிடக்கணும்.''

''பெரிய சேலைக்கடல்-200சேலைகளைவைச்சிக்கிட்டு தினம் ரெண்டு வாடிக்கையாளருக்குப் புரட்டிப் புரட்டிக் காட்டறது...''

''ஆமா... ஆனால், உங்களை மாதிரி ஆபீஸ் காகிதத்தைப் புரட்டி அதிலேயே சரிஞ்சுக் கிடக்க முடியாதே.''

பேச்சில் கொடூரம் கனத்தது.

''நான் ஏதாச்சும் செய்யட்டுமாம்மா?'' - கோழிக் குஞ்சாய்ப் பம்மிக் கேட்ட மகளை உறுத்து விழித்தாள்.

''ரெண்டுன்னா நாலாய்க் கிழிக்கிற கெட்டிக்காரி நீ. கண் முன்னாடி வராம ஒழி. போ'' மூச்சும் சீறியது.

''நாய், பூனைகூட சுத்தமாச் சாப்பிடுது. பன்னிப்பிறப்பு பெருக்கிப் பெருக்கி முதுகு உடையுது எனக்கு'' என்று சிதறி சாப்பிட்ட மகனை அறைந்து தள்ளினான்.

அனைவரையும் சாட்டையாய் சொடுக்கிவிட்டு அவதியாய் பேருந்தில் ஏறி, ஓடி கடையினுள் நுழைகையில் மணி பத்தரை. கடை வாசலில் குதிரை வாலும், இந்தியுமாய் சிறு பெண்கள் கூட்டம் - கதவு திறந்துதான் இருந்தது.

'சங்கர் பாவம்... கல்லூரிக்கே போகலையா?' யோசித்தபடி படியேறினாள்.

''குட்மார்னிங் செல்வி.'' -

மிருதுவான புன்னகையுடன் வரவேற்றது முதலாளி அம்மாதான்!

''குட்... குட்மார்னிங் மேடம். சாரி... லேட்டாயிடுச்சு...''

''பரவாயில்லை. அந்த கவிஸ் ஆர்கென்டி எடுத்து வாங்க''

பேச்சு, இனிமையும் இயல்புமாய் வந்தது. அதில் இவளது பதைப்பு சற்றே மங்கியது. வாடிக்கையாளர்களின் ரசனை அறிந்து துணி ரகங்களைப் பிரித்துப் போட்டாள்.

அவர்களும் வெறுமே உதட்டைப் பிதுக்காமல் சில சேலைகளையும் இரவு உடைகளையும் போணி செய்ய ''அடிக்கடி வாங்க மேடம். அடுத்த வாரம் வேறு சில புது மாடல் உடைகள் வருது'' என்று தெம்பாய்ப் புளுகினாள்.

அவர்கள் போகவும், ''செல்வி! நம்ப ஷோ-கேஸ் இன்னும் கவர்ச்சியாய் இருக்கலாம். ஒவ்வொரு வாரமும் ஏதாவது ஒரு புது மாறுதல் செய்யுங்களேன். பார்க்கவும் கவர்ச்சி, வியாபாரமும் கூடும் இல்லையா?''

இந்தி, ஆங்கிலக் கலவையில் பேசினாள்.

''சரி மேடம்'' செல்வி தலையாட்டினாள்.

'ஏது இன்னும் திட்டு வரவில்லை? சிரித்தபடியே நக்கலாய்க் கத்தி செருகுவாளோ?' உள்ளே நமநமத்தது.

''தவிர, நீங்கள் ஒன்பதரைக்கு வந்தாத்தான் கடையைச் சீர் செய்து நிம்மதியாய் வேலை தொடங்க முடியும். சங்கரும் படிக்கிற பையனில்லையா? வேறு வழியில்லை.''

குரலின் மென்மை குறையவேயில்லை.

விழிகளின் சிநேகம் விலகவேயில்லை.

''நிச்சயமாய் செய்றேன் மேடம். மன்னிக்கணும். இன்னைக்கு எங்கள் வீட்டிலே...''

''பரவாயில்லை. எனக்குப் புரிகிறது. என் மாமனாருக்கு மாரடைப்பு. நீங்கள் இருக்கிற தைரியத்திலே 'டக்'குன்னு கிளம்பிட்டேன். இப்போ அவருக்குப் பரவாயில்லை. காலையிலேதான் மும்பையில் இருந்து வந்தேன். அலுப்புதான். இப்போ வீடு போயிட்டு, மதியம் வரேன். சரியா?''

அவள் தோளைத் தட்டியபடி மேடம் படி இறங்கினாள்.

''கணக்கெல்லாம் தெளிவா, விரிவாய் எழுதியிருக்கீங்க செல்வி. குழப்பமே வராது'' - புன்னகையுடன் வந்தது பாராட்டு.



வட்டார நூலக



செல்விக்கு 'நயம்' புரிந்தது.

வந்தவள் கடுமையாய்க் கண்டித்திருந்தால் ' வாடி சுருண்டிருக்கும் இவள் முகம். நொந்து வெந்திருக்கும் மனம். நோவில் தானே உப்பைத் தூவி நாள் முழுக்க நீவி குமைந்திருக்கும். பதறி, வேலையைக் கூட உதறியிருக்கக்கூடும்.

இதமான பேச்சு, உற்சாகத்தை மீட்டுத் தரும் மந்திரக்கோலாய், மேலே உந்தி ஏற்றும் நெம்புகோலாய் உதவக்கூடும் என்பது விளங்கியது.

சுறுசுறுப்பாய்க் கடையை ஒழுங்குபடுத்தினாள். 'ஷோ-கேஸை' எப்படி மாற்றி அடுக்கலாம் என்ற யோசனையுடன் மஞ்சள் துணி கொண்டு கண்ணாடிகளைப் பளபள என்று துடைத்துத் தேய்த்தபோது மனதிலும் தெளிவு.

(ராணி, பிப்ரவரி 16, 1997)

★★★

# உள்ளுக்குள் உணர்ந்தவன்

'தண்டச்சோறு' என்று இதுவரை யாரும் சொன்னதில்லை. ஆனால், சொல்லி விடுவார்களோ என்ற பயம் உண்டு. சொல் வந்தால் தாங்காது பொசுங்கிப் போவான். அதனாலேயே தர்மு ஓடி ஓடி வீட்டில் உதவினான். பிடுங்கி ஒத்தாசை செய்தான்.

அன்று பழைய பேப்பர்களை தராசில் நிறுத்து, கட்டியெடுத்துக் கிளம்பும்போது அப்பா கேட்டார்,

''அயர்ன்பாக்ஸ் எங்கே காணோம்?''

''நேத்து தர்மு உங்க சட்டை மூணைத் தேய்ச்சு அடுக்கினானே?''

''க்ரே பாண்ட் போட்டுட்டேன். நீலச் சட்டையில பட்டனைக் காணோம். வெள்ளை ஷர்ட் கசங்கலாயிருக்கு.''

''நா தச்சு தரம்ப்பா'' தர்மு நூல் டப்பா தேடினான்.

''அயர்ன் எங்கே போச்சுடா?''

''பக்கத்து வீட்டு மாமி இரவல் கேட்டாங்க. ரம்யாவை இன்னைக்குப் பெண் பார்க்க வர்றாங்களாம். பட்டுச்சேலை தேய்க்கணும்ன்னு'' அம்மா ஊசியில் நூலைக் கோர்த்தபடி உதடு கசங்காமல் பதில் தந்தாள்.

''நாலைஞ்சு வரன்லே இதுவரை ஒன்றும் தகையலை அந்தப் பொண்ணுக்கு...ம்?''

''பெண்ணுகளுக்கு வரன், பையன்களுக்கு வேலை, ரெண்டும் கைஅதுங்களுக்குச் சிரமமான கட்டங்க.''

''ஆனா வழி இருக்கும். நேரம் வரும்போது திறக்கும். நம்ப





மனசு போல அமையும்.''

''தர்மூ...'' கீழ் ஃப்ளாட் அக்கா தலை நீண்டது.

''வாங்கக்கா.''

''சார் ஆபீஸ் கிளம்பிட்டிருக்கிங்க. ஸாரி... தர்மு கொஞ்சம் அயர்ன்பாக்ஸ் தர்றியா? பாலாஜிக்கு இன்னைக்கு ஸ்கூல்ல ஏதோ விழாவாம். இப்ப வந்து சொல்றான். நேருஜி போல ஷெர்வானி செட் கொடுத்து விடக் கேட்டிருக்காங்க. அது கதர் பட்டு... சுத்தமாக கசங்கிருக்கு.''

''மாமி வீட்டுக்குப் போயிருக்குக்கா. பத்து நிமிஷத்திலே பாலாஜி டிரஸ்ஸை அனுப்புங்க'' என்றான் தர்மு.

மாமி வீட்டுக்கு ஓடிப்போய் அயர்ன் பாக்ஸையும், கூடவே அவர்களுடைய பட்டுப்புடவையையும் கேட்டு வாங்கி வந்தான்.

மேசையில் கெட்டியாக விரிப்பு பரப்பி, ப்ளக்கைச் செருகினான்.

''முதல்ல உங்க ஷர்ட்டுப்பா.''

துணியில் வழவழவென்று ஓடி சுருக்கங்களை விழுங்கியது பெட்டி.

''ரெடிப்பா.''

''இப்படி எல்லார் வேலையையும் இழுத்துப் போட்டுக்கணுமாடா?'' - வெதுவெதுத்த சட்டைக்குள் நுழைந்தபடி அப்பா முனகினார்.

''இருக்கட்டும்ப்பா. சும்மாத்தானே இருக்கேன்.'' - சொல்கையில் ஏனோ தொண்டை அடைத்தது.

'சில்க்' பகுதிக்கு ரெகுலேட்டரைத் திருகி, தெளித்து பட்டுச்சேலையைக் கவனமாகத் தேய்த்து மடித்தான்.

பழைய செய்தித்தாள் சுற்றி அலுங்காமல் மாமியிடம் தந்தான்.

''தாங்க்ஸ் தம்பி. இப்பவே வராங்க போல... காஃபிக்குக்கூட பால் இல்லை.''

மாமி எதேச்சையாகச் சொல்ல, இவன் ஓடிப்போய் அம்மாவிடமிருந்தும், மேல்வீட்டு அக்காவிடமிருந்தும் பால் பாக்கெட் வாங்கிக் கொடுத்தான்.

''பாலாஜி தேங்கா, பழம், இலை வாங்கப் போயிருக்கான். பூ சொல்லிவிட மறந்துட்டேன். இன்னும் அவனைக் காணலை.''

சைக்கிளில் இளம்பி ஐந்தாம் நிமிடம் வாழையிலையில் சுற்றிய மல்லிகைப்பூ பந்தோடு திரும்பினான் தர்மு.

''ரொம்ப தாங்க்ஸ்ப்பா - பெரிய ஒத்தாசை இது!''

பழைய பேப்பர் கட்டோடு பஜார் போய், வீட்டிற்கான மளிகையுடன் திரும்பினான். 'ஹிண்டு'வில் 'வேலைக்கு ஆட்கள் தேவை' பகுதியை உறுத்து, குறித்து, அலுத்துத் தூங்கிப்போனான்.

'சளபுள'வென்ற பேச்சில் உறக்கம் கலைந்தது. சற்று நேரம் உற்சாகக் குரல்களைக் கேட்டபடி கிடந்தான். சுகமாக இருந்தது. அடிக்கடி பொங்கிய சிரிப்பு, ஆவலைத் தூண்ட முகம் கழுவிக் கொண்டு முன்னறைக்கு வந்தான்.

''வாப்பா தம்பி... இதைப்பிடி''

இவனைப் பார்த்ததும் சின்னப் பெண் போல 'வெடுக்'கென்று அந்த மாமி ஒரு தாம்பாளத்தை எடுத்து நீட்டினாள்.

''என்ன மாமி... எதுக்கு?'' கேள்வியோடு ஏந்திக் கொண்டான்.

தட்டு, இனிப்பு, வெற்றிலைப் பாக்கு என்று அம்சமாய் நிறைந்திருந்தது.

''தம்பி கை ராசி ரம்யாவுக்கு நிச்சயம் பண்ணியாச்சுப்பா. நல்ல இடம். 'உங்களாலானது செய்ங்க. போதும்'ன்னுட்டா.''

''சந்தோஷம் மாமி''

''கௌரவம் பார்க்காத புடவைத் தேய்ச்சு, பால், பூன்னு வாங்க ஓடி...'' திருமணம் நிச்சயமாகிவிட்ட நிம்மதியிலோ என்னவோ மாமியின் விழியோரங்கள் நனைந்து விட்டன.

அம்மா முகமெங்கும் விரிந்த ஒரு பெருமைப் புன்னகையுடன், ''அதுக்குத்தானே இருக்கோம். ஒருத்தருக்கொருத்தர் இதிலே என்ன?'' என்றாள். மாலை ஆறுமணிக்கு அக்கா பாத்திரத்தோடு வந்தாள்.

''என்னன்னு சொல்லு?''

''வாசனை கொல்லுதே... வெங்காய பக்கோடா... என்னக்கா





விசேஷம்?''

''நன்றி நவிலல். நொடியில டிரஸ்ஸைத் தேய்ச்சுத் தந்துட்டியே... ராஜிக்கு ப்ரைஸ்கூட கிடைச்சிருக்கு.''

எல்லா அம்மாமாரையும் போல மகா பூரிப்புடனிருந்தாள் அவள்! தாயின் முந்தானைக்குள்ளிருந்த பொடியனை இழுத்துத் தட்டிக் கொடுத்தான் தர்மு.

''வெரிகுட் பாலா.''

''பென்ஸில் பாக்ஸ்'' - தயக்கத்துடன் சின்னக் கை நீண்டது.

''அடே... ஜோரான ப்ரைஸ்.''

அக்கா, குரல் தழைத்துப் பேசினாள்.

''அநியாயத்துக்கு வெட்கப்படுவான். இப்போ ப்ரைஸ் கிடைச்சதிலே கொஞ்ச தைரியம் வந்திருக்கு. பக்கோடா எப்படியிருக்கு?''

''எப்பவும் போல ஏ-ஒன்க்கா.''

மற்றொன்றை வாயிலிட மொறுமொறுவென்று மணமாய்க் கரைந்தது. யோசிக்கும் முன் அதே வாய் பேசி விட்டது.

''இனி அயர்னிங் வேலையெல்லாம் என்கிட்டேயே தந்திடுங்கக்கா. எனக்கு டிபன் செலவு மிச்சம்.''

சிரித்தபிறகுதான் எண்ணம் மாலைச் சுடரானது!

''நிஜமாத்தான் சொல்றேன்க்கா.''

''ஒேழ இஸ்திரிக்காரன்கிட்ட ஓடி கணக்குப் பார்க்கறது அல்லாட்டம்தான். அவனும் தினசரி வர்றதில்லை. ஆனா, உனக்கு வேலை கிடைச்சிருமே தர்மு?''

''கிடைக்கட்டும். அதுவரைக்கும் இது. பக்கோடாவிற்குப் பதில் பைசாவாகத் தந்திடுங்க''

''சரி. சரி.''

மேலும் கீழுமாயிருந்த மற்ற ஏழு வீடுகளிலும் போய் இதையே சொல்லி வந்தான். ஆனால், நினைத்தது போல துணி மூட்டைகள் வந்து குவியவில்லை. தெருமுனை தள்ளுவண்டி இஸ்திரிக்காரனிடம்தான் ஓடினார்கள். தாங்காமல் போய் கேட்டுவிட்டான்.

''ஏங்க்கா?''

''நிஜமாவே சொன்னியா தர்மு? உன் அப்பாம்மா என்ன சொல்லுவாங்க? எங்களுக்குமே எப்படியோ இருந்தது...''

''வேலை சுத்தமாயிருக்குங்க்கா.''

''ராசியும் பிரமாதமாயிருக்கே'' - சிரிப்புடன் துணிகளை அள்ளித் தந்தாள்.

மறுபடி வீடு வீடாய்ப் போய் நின்றான்.

''தினம் ராத்திரி வந்து துணிகளை எடுத்துப் போறேன் சார், காலையிலே நீங்க கேட்கற நேரத்துக்குச் சரியா டெலிவரி பண்ணிடறேன்.'' என்று நயந்தான்.

'நா மாது வந்திருக்கேன்' என்ற நாகேஷ் பாணியில் வாசல்களில் இரவு இவன் சத்தம் தவறாது கேட்டது.

தினம் வேலை வந்தது. வாக்கு காத்ததில் வேலை கூடியது. தோளும் பிடரியும் நோகத் தேய்த்தான்.

ஆனால், செய்யச் செய்ய வேலை நேர்த்தியானது. காசு வாங்கும்போது நொந்த தோள்கள் நிமிர்ந்தன.

முன்பு போலவே ஒடி ஒத்தாசையாய் நின்றான். ஆனால், 'வெட்டிப்பயல்' என்று வைவார்களோ என்ற பதட்டத்துடன் அல்ல. பரிவுடன்... தன்னம்பிக்கையுடன்!

அன்று புடவை லாவகமாய் புரட்டி, மடித்து பெட்டி அழுத்திக் கொண்டிருந்தான். தேய்த்து அடுக்கிய பாண்ட் மடிப்புகள் சீரான கத்தி வெட்டாய் நின்றன.

காபி குடித்தபடி அப்பா தன்னையே பார்ப்பதை உணர முடிந்தது. ஒரு கை நீர் அள்ளித் தெளித்தபடி நிமிர்ந்து புன்னகைத்தான்.

''என்னடா... வேலை எப்படியிருக்கு?''

''காசு வருதுப்பா. சோம்பலோட, நேரமும் போகுது... வேறென்ன?''

''காசுக்கு என்னடா பெரிய செலவு உனக்கு?''. - அம்மா சீண்டினாள்.





''அப்ளிகேஷன் அனுப்ப, சினிமாக்கு, சுண்டல் வாங்க... எதுக்கும் இந்த இருபது நாளாய் உங்ககிட்ட காசு கேட்டு வரலியே... என்னப்பா?''

''வந்தாலும் தப்பில்லைடா.''

வார்த்தைகளின் பரிவில் இவனுள் பொங்கியது.

''நல்ல மனசிலே பேசறீங்கப்பா. நானும் பொறுப்புணர்ந்து நடந்துக்கணும்ல்ல?''

''நடந்துக்கறடா... இதையே டெவலப் செய்து 'ட்ரை க்ளினர்ஸ்' இப்படி ஏதும் ஆரம்பிக்க 'லோன்' போடுவோமா?''

தோள் கொடுக்கும் தோழனாய் தகப்பன்! கட்டை விரலை உயர்த்தினான். முதுகில் தட்டிக் கொடுத்துச் சிரித்தார்.

''இந்த ஒரு மாசமாத்தான் உன் முகம் தெளிவாய் இருக்குது. வழியா இல்லை? ஜமாய்ச்சிடுவோம்.''

உலகையே ஆள வந்தவன் போல உணர்ந்தான் தர்மு. இனி வாசல்கள் தானாய்த் திறக்கும்.

★★★

# என்றைக்குத்தான் புரியுமோ!

பவித்ரா அலுப்புப் போகக் குளித்துவிட்டு வந்தாள். அழுந்தத் துடைத்த கன்னங்கள் பளபளத்தன.

''இப்போ எதுக்குக் குளியல்? விருந்தாளிங்க வர்றதுக்குள்ளே தலை காயுமா?'' முடியோடு கன்னத்தையும் தடவினான் சுதர்சன்.

''உம்ம்... போதுமே.''

முடிகளை நீவிப் பிரித்துக் கோதினான். பன்னீர் போல முகத்தில் சிதறிய நீர்த்துளிகள் சிலிர்ப்பூட்டின. வாசனை சிகைத்தூளின் மணம் கிறக்கியது. அப்படியே மனைவியைத் தன் மீது சாய்த்துக் கொண்டான்.

''வர்றவங்கதான் புதுத் தம்பதிங்க... நாமில்லை'' - ஒய்யாரமாய்ச் சிரித்தாள்.

''தாம்பத்தியத்தில் போகப்போகத்தான் சுவை கூடுது பவி. 'மோகம் முப்பது நாள், ஆசை அறுபதுநாள்' என்று யாரோ... சொன்னது...'' - புருவஞ் சுருக்கி யோசித்தான்.

''நல்லவேளை.... மறந்திடுச்சு'' - கூந்தலைத் தட்டி உதறினாள்.

''ஆங்... நினைவு வந்திடுச்சு கேளு. மோகம் மூப்பதினால்; ஆசை அலுப்பதினால்... என்ன புரியுதா?''

''மோகம் மூப்பு அடைவதாலும் ஆசை அலுப்பதாயிலும் நீங்கும். சரியா?''

''உம்ம்... கெட்டிக்காரி நீ! அந்த உணர்வுகள் தேய்ந்தாலும் அன்பு... அது மட்டும் நாள் செல்லச்செல்லத்தான் வளர்ந்து...''





''அப்படியொன்றும் நாம வெள்ளிவிழா கொண்டாடிவிடலை ஐயா! இரண்டே ஆண்டுதான் ஆச்சு!''

''உன் அழகும் கூடியிருக்கு தெரியுமா?''

முறுவலுடன் மின்காற்றில் சற்றே உலர்ந்த கூந்தலைப் பூப்பின்னல் இட்டு அடக்கினாள்.

''இன்னும் லலியைக் காணுமேப்பா?'' - கவலைப்பட்டாள்.

நேற்றிலிருந்து இன்றைய விருந்துக்காகத் தேங்காய்ப்பால் பிழிந்து, வெங்காயம் அரிந்து, பூண்டு உரித்து சிரமப்பட்டவளாயிற்றே!

சென்றவாரம் பழைய பள்ளித்தோழி லலிதாவை நாலைந்து ஆண்டு கழித்து சந்தித்ததில் மகிழ்ந்த பவித்ரா,

''ஏங்க... சமீபத்தில்தான் அவங்க திருமணம்கூட முடிஞ்சதாம். விருந்துக்கு அழைக்கலாமா?'' என்று நாளும் குறித்து கணவனை அழைக்கச் செய்திருந்தாள்.

''மணி ஒன்றைத் தாண்டியாச்சு. நல்ல பசி. உன் கைமணத்தில் அப்போது இருந்து எச்சில் வேறு ஊறித் தவிக்கிறேன். குளுகுளுன்னு...'' தாபமாய் நெருங்கினான்.

''எலுமிச்சைச் சாறு பிழிந்து ஐஸ் போட்டு வைச்சிருக்கேன். ஊற்றித் தரேன்.'' - நாசூக்காய் விலகி உள்ளே போனவள் கண்ணாடிக் குவளைகளுடன் சடபுடக்க, சுதர்சன் குரல் தந்தான்.

''அவங்க வந்தாச்சு பவி. கூட ரெண்டு குவளை ஊத்தி எடுத்து வா...''

அவள் பரபரத்த பூரிப்புடன் எட்டிப் பார்த்தாள்.

''வாங்க... வா... லலி... நேரமாச்சா... பயந்துட்டேன்.''

''என்ன பயம்? உன் அழைப்பை மறப்பேனா...? காலையிலே கடைக்குப் போய் வந்தேன். வந்தபிறகு கணக்குப் பார்த்தால் நூறு ரூபாய்போல குறையுது... அந்தக் குடைச்சல்... அதான்.''

''உட்கார் முதல்ல. ஜூஸ் எடுத்துக்கோ.''

''உம்ம்... வெயிலுக்கு இதமாயிருக்கு. இன்னைக்கு மட்டும் உன் அழைப்பு இல்லேன்னா இதே யோசனையில் கிறுக்காகியிருப்பேன்.''

''பள்ளி நாளிலேயே லலிக்கு 'அம்மாமி' பட்டம் உண்டு. 'கவன்மாய்ச் செய். பார்த்துப் போ'ன்னு எங்களுக்கு நூறு எச்சரிக்கைத் தருவாள். நீ எப்படித் தவறவிட்டே, லலி?''

''அதான் மன உளைச்சல். நான் மட்டுமாவது காலையிலேயே உன் வீட்டிற்கு வந்திடணும்ன்னு திட்டம் போட்டிருந்தோம். பேசியபடி உனக்கு சமையலில் உதவியிருப்பேன். இவரு மதியம் வந்து சேர்ந்திருப்பார்.''

''பதினொரு மணியில் இருந்து 'ஐயோ பணம் குறையுதே'ங்கற புலம்பல்தாங்க'' என்றான் அவள் கணவன் பாவமாய்.

ஆண்களுக்குள் அதிக பரிச்சயம் இல்லாததாலே அனைவரும் ஒன்றாகவே அமர்ந்திருந்தனர். ஆனாலும் பெண்கள் சற்றே குரலைத் தழைத்து ஓயாது பேசினர்.

''கொண்டு வந்த காகிதப் பை அத்தனையிலும் பார்த்தியா லலி?''

''கவிழ்த்து, சாமான்களைப் பிரிச்சே அடுக்கிட்டேன். கடையிலே கவனக்குறைவாய் இருந்தேனா - இல்லை வரும் வழியிலான்னு தெரியலை.''

''பேருந்தில் அதிக நெரிசல்ன்னா...'' மீண்டும் பாவமாய் இடை புகுந்தான் அவள் கணவன்.

''சரி விடு லலி''

''அதிகத் தொகை இல்லைதான். ஆனா, இப்படி தவறவிட்டுட்டேனே என்கிற அரிப்பு.''

''தெரியுமே. வகுப்பில் உன்னைவிட வேறு யாருக்காவது நாலு மதிப்பெண் அதிகம் வந்திட்டாலே 'உனக்கு எதிலே போச்சு'ன்னு குடைஞ்சு ஆராய்வியே!''

பழைய நினைவுகளில் லலிதாவின் முகத்தில் சற்றுத் தெளிவு.

எல்லாருக்கும் அரைகுறை உறக்கம்.

விழித்து எட்டிப் பார்த்த போது பெண்கள் முகம் கழுவி, தலைவாரி, பின்னலிட்டு மொட்டாய் மல்லிகை சூடி இருந்தனர்.

மகிழ்வுடன் பேசிய பூரிப்பு கன்னங்களில் மிச்சமிருந்தது.





''இந்தாங்க காபி.''

சில நிமிடத்தில் லலிதாவின் கணவனும் வர, இலன் விருந்தோம்பலில் உலுக்க, சிரித்துப் பேசி மகிழ்வித்தான்.

சிற்றுண்டியுடன் அவர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள்.

விருந்தினர்களை அனுப்பிய கையோடு அவன் சிரிப்பு அணைந்து விட்டது.

''ஏங்க... இன்னுமா தலவலி மிச்சமிருக்குது?'' - நெற்றியை நீவிவிட்டபடி கேட்டாள் பவித்ரா.

''இப்பத்தான் ரொம்பத் தலை வலிக்குது.''

''என் மீது ஏதாவது கோபமா?''

''விடு. அதெல்லாம் ஒரு பொருட்டா? தொலைந்த ஐந்நூறைப் போலப் போகட்டும் விடு.''

நிமிர்ந்து அவனை ஆழமாக நோக்கினாள்.

''உங்களுக்குப் புரிந்துருக்கும்ன்னு நினைச்சேன். அதற்கு இன்னும் சில மாதமாகும் போல.''

அவன் இறுகிய அமைதியோடு நின்றான்.

லலிதா இழப்புத் தாங்காதவள். தொலைப்பு எல்லாருக்கும் அவ்வப்போது நேரிடுவதுதான்... இயல்பானதுதான்னு அவளுக்கு உணர்த்த முயன்றேன். அவளது பதட்டம், நான் தடவியதை... அந்தப் பொய்!''

நிதானித்துப் பூரித்தபோது அசட்டுப் புன்னகையுடன் அவன் அவளை ஏறிட..

அவள் பார்வையில்

எரிச்சல்!

★★★

# பட்டு மனசு

'அஞ்சு பெற்றால் அரசனும் ஆண்டி' என்பது அப்பாவிற்குப் பொருந்தாது.

ஐந்து பெண்களைப் பெற்றவர்தான். ஆனால் அன்பில் அரசர்! கண்களில் அருளும், உதட்டில் புன்னகையும் வற்றிப் பார்த்ததில்லை.

'ராஜாத்தி, தங்கம், எம்முத்து, கிளி, பூவு' என்று தான் வாயார அழைப்பார்.

வெள்ளிக்கிழமைகளில் வீடு திரும்பும் போது கையில் பூக்கட்டு மணக்கும்.

'அழகும், அறிவும், குணமுமா எம்பொண்ணுங்க அஞ்சும் ரத்தினங்க' என்று அம்மாவிடம் தோள் விம்மும் அப்பா - அரசன்தான்.

''என்ன சின்னக்கிளி தயார்தானே? கிளம்புவோமா?'' என்னைத்தான் கேட்கிறார்-

குனிந்து, கண்களை இடுக்கிக் கண்ணாடியில் நெற்றிப் பொட்டைச் சீரான வட்டமாக்கிய அம்மா முகம் சுளித்தாள்-

''இவ எதுக்குங்க? அதை இதைப் பார்த்து வேணும்பா.''

''கல்யாணப் பொண்ணு அவ. அவ ஆசைப்படறதைத்தான் எடுத்துக் கொடேன். இத்தனை நாளாய் பட்ஜெட் போட்டு, பண்டிகைக்கும் கூட நீதானே ராஜம் அதுங்களுக்குத் துணி எடுத்தே?''

''சரி, அப்ப சாவியை எடுங்க. வீட்டைப் பூட்டணும்.''

முதன்முதலாய் எனக்கென்று பட்டு வரப்போகும் மயக்கத்தில் நான்!





என் கனவுகளில் மாப்பிள்ளை வந்த அளவு, டிசைனாய் புடவைகளும் வந்திருந்தனவே!

ஜவுளிக் கடையின் ஏ.ஸி.கண்ணாடி அறையில் குட்டை முக்காலிகளில் அமர்ந்தோம். எதிரே நயமான ஜமுக்காளம் விரித்து, அதில் 'டப் டப்'பென லாவகமாய் பளபளப்பான புடவைக் கட்டுகள் வீசப்பட, மனம் படபடத்தது.

கண்கள் படபடக்க மறந்து விரிந்தன.

''எல்லாம் நாங்க சொன்ன பட்ஜெட்டுக்குள்ளாரதானா?''

''ஐநூறு கூட குறைய இருக்கும்மா.''

அம்மா ஏதேதோ விவரங்கள் சொல்ல மேலும் மடித்த ஜரிகைப் பட்டுகள் குவிந்தன.

''ஏதும் ரொம்ப எடுப்பாத் தெரியலியே?'' அம்மா சொன்ன போது சந்தோஷமாய் இருந்தது. இதுவரை விழுந்தவை கண்ணைக் கவர்ந்தாலும் மனதைக் கிள்ளவில்லை.

''வைர ஊசி எடுக்கட்டுமா? கூட இரண்டாயிரம் ஆகும்?''

''அது எதுக்கு?'' - அம்மா அவசர அலட்சியத்தில் தலையசைத்தாள்.

கடைப்பையன், தன் முகம் மறைக்குமளவு மற்றொரு சேலை அடுக்கை ஏந்தி வர, அமர்ந்திருந்த பெரியவர் அதிலிருந்து ஒவ்வொன்றாய் இயந்திரமாய் எடுத்துப் போட்டார். ஒன்றை மறைக்காது - அடுத்தது விசிறி அடுக்காய் விழ...

அதோ... அது..

விழுந்த மறுகணம் புடவை என் கையிலிருந்தது.

''ஆங்... அது முறுக்குப் பட்டும்மா. அபூர்வமான நிறம்.''

சிப்பந்தி சிலாகித்தார்.

தாமரைப் பூவின் இரு இளம் நிறங்களில் முறுக்கி நெய்யப்பட்ட வண்ணம் மயக்கியது. இருபுற அரக்குக் கரையில் வரிசையாய், ஒயிலாய் ஜரிகை அன்னங்கள்.

ஆர்வமாய் பிரித்தேன். கனத்த பட்டு நெகிழ்ந்து பிரிந்தது - உடலெங்கும் மிளகளவு பொன் புள்ளிகளின் ஜொலிப்பு.

'பிரமாதம்' என்று உள் மனசு கூவ,

''இது... நல்லாயிருக்காப்பா?'' கிசுகிசுத்தேன்.

சிறு அலுங்கலிலும் குழையும் இதை நேர்த்தியாய் கொசுவி

கட்டினால்...

ராணியாய், ரம்பையாய் உணருவேனோ?

இதுவரை அக்காமார் திருமணங்களிலும் கூட எனக்கென்று பாலியஸ்டர்பட்டுதான் - கண்ணாடி வேலைப்பாடுள்ள ரவிக்கை, ஜரிகைப் பொட்டு, கண்ணாடி வளையல்கள் என்ற அளவில்தான் அலங்காரம் சாத்தியம்.

அப்பாவின் சில ஆயிர சம்பாத்தியத்தில் இதற்கு மேல் ஏலாது. ஆசைப்படுவதே தப்பு. பாட்டி விட்டுப் போன இருபது பவுனும் சிறு தோட்டமும் முதல் மூன்று கல்யாணங்களின் போது கைகொடுக்க, நான்காவது கடனிலும் அம்மாவின் சாமர்த்திலுமாய் முடிந்தது - இப்போது நிலைமை மோசந்தான்.

''விலையென்ன?'' - அம்மா காரியக்கண்ணாய் சேலை விளிம்பை விலக்கிப் பார்த்து,

''பட்ஜெட்டை மீறுதே... அதுவும் ஆயிரத்து முற்றுறுன்னா'' முணங்கலுடன் என் கையிலிருந்த 'என் பரவசத்தை' ஏடுத்து கீழே வைத்தாள்.

''விரிச்சுப் பாருங்கம்மா''-

பெரியவர் ஜாடை காட்ட, இருவர் அதை உதறி விரித்தனர். விளக்கொளியில் சேலை தங்கத் தாமரையாய் விரிந்தது.

மனம் நிறையப் பார்த்தவள், என் வாய் திறந்திருப்பதை உணர்ந்து, சுதாரித்து மூடிக் கொண்டேன்!

''இந்தச்சிவப்பு சேலை எப்படீ? துணியும் நயந்தான்'' - அம்மா வேறு ஒன்றின் விலைச்சீட்டைப் பரிசீலனை செய்த பின் தூக்கி நீவினாள்.

சதா வேலை செய்ததில் தேய்ந்த நகங்களும் தடித்த விரல்களும் பட்டின் மீது விகாரமாய் தெரிந்தன -

அம்மாவும் பாவந்தான்.

''என்னப்பு உனக்கு எதுடா பிடிச்சிருக்கு?''

அப்பா தோள் தொட்டுக் கேட்டார்.

ஐந்தாவது மகளின் வாழ்வமைக்க ஆண்டியாய் அலைமோதும் அப்பா...

மனதை உலுக்கினேன்... இறுகக் கட்டினேன்...





''அம்மா சொல்றதுதாம்ப்பா..''

''பொண்ணு ஆசைப்பட்ட சேலை அம்சங்க. ஜாக்கெட் துணி கூட அதிலேயே வரும் - பிரிடா பாலு''

பொன் நூலில் வாங்கி வடிவம் இழைத்த அரக்கு ரவிக்கை.

கண்களை இறுக மூடினேன்.

''என்னடா ராணி - எது?''

''சிவப்பு சேலையே... நல்லாத்தாம்மாயிருக்குது''

''சரி''

அப்பா எழுந்தார்.

''ராஜம், மாடியில பெரிய பொண்ணுங்களுக்கு ரவிக்கை பிட்டும் மாப்பிள்ளைகளுக்கு சட்டைத் துணியும் எடுத்திரு. நா இப்படி இருக்கேன்.''

மீதித் துணி வகைகளை (உள்ளதிலேயே மலிவானதாய்)த் தேர்ந்தெடுத்து, வெட்டச் செய்து, பில் போடும் வரை உடல் முழுக்க மரத்த உணர்வு.

தொண்டையை அடைத்த இறுக்கம்.

கிளம்பி வந்த போதிருந்த உற்சாகத்தில் சொட்டும் மீதமில்லை.

விட்டிலேயே இருந்திருக்கலாம் - வீட்டைப் பூட்டும் வேலையும் இந்த அவஸ்தையும் மிச்சம்.

முன்புறம் கவுண்ட்டரில் சாய்ந்தபடி அப்பா காத்திருந்தார்.

அவரைப் போலவே தளர்ந்து தொய்ந்த சட்டை.

ஆனால் முகத்தில் மங்காத பிரகாசம்.

''எத்தனை உருப்படி, நம்மதுதானான்னு எண்ணி சரிபார்த்திடும்மா ராஜம்.''

''ஆகட்டுங்க.''

புடவையின் அட்டைப் பெட்டி மூடி விலக... நான் மூச்சையிழுத்துப் பிடித்தேன்.

தாமரைப் பூவிதழும், பொடி பொற்காசுகளுமாய் எ... என்... புடவை. தொண்டையடைப்பு கணத்தில் இளகி மறைந்தது.

ஆனால் பேச்சு வரவில்லை.

அப்பாவை நிமிர்ந்து பார்க்க, அவர் விழிகள் மிருதுவாய் வினவின-

'சந்தோஷந்தானடா?'

அவரை ஒட்டி நின்றேன்.

பணத்தை மீண்டுமாய் எண்ணி நீட்டிய அப்பாவின் கைகள் ஏதோ வித்தியாசமாய் பட்டது. பரவசத்திலிருந்து மனதை மீட்டு உற்று நோக்க... அவர் விரலில் மோதிரமில்லை!

நீல எனாமலில் 'A'போட்ட, சற்று தேய்ந்த மோதிரம்.

அப்பாவிடம் கேட்டதுண்டு,

'எம்ப்பா, இதைக் கழட்டவே மாட்டீங்களா?'

'அவுத்தா நெளிஞ்சிரும்மா. அத்தனை சன்னமா போட்டுக்காரு எங்க மாமா.' - அம்மாவைப் பார்த்தபடி செல்லமாய் சிரிப்பார். வருடக்கணக்கில் மோதிரம் பதிந்த இடம், சற்றே அழுந்தி வெண்மையாய் வெறிச்சிட்டதைப் பார்க்க, மறுபடி நெஞ்சடைத்தது. மூக்கு நமநமத்தது.

மஞ்சள் பைகளுடன் வெளியேற, கிசுகிசுத்தேன்-

''எம்ப்பா?''

''இப்படி மோதிரத்தை வித்தா புடவை எடுப்பாங்க? இது அநியாயச் செல்லம்'' - அம்மா சிடுசிடுத்தாள்.

''வாங்கித்தர்ற முதல், ஒரே பட்டு. அதுவும் முகூர்த்தப் புடவை அவ நோக்கம் போல அமையட்டும்மா ராஜம். அப்பப்ப அலங்காரம் பண்ணி ரசிக்கற வசதி இல்லாட்டியும் நம்ப ராஜாத்தியை அவ கல்யாணத்தன்னிக்குத் தங்க ரதமாப் பார்ப்போம்.''

மனதுக்குள் புடவைப் பரவசம் கூட அடங்கி அப்பா மட்டுமே... மட்டுமே நிறைந்திருந்தார்.

அவர் மனதே உன்னதமான பட்டு.

அதைப் போலொரு பட்டு குணம் எனக்கும் அமைந்தால்... அதைவிட வேறு சிறப்பான சீர் எடுத்துப் போக முடியுமா நான்?

சாலையைக் கடக்கும் சாக்கில் அவர் கையைப் பற்றிக் கொண்டேன். மூளி விரலாயிருந்தாலும் கூட எங்கப்பா அரசன்தான்.

(அவள் விகடன்)

★★★



# கிறிஸ்துமஸ் தாத்தாவான தாத்தா

**வி**யர்வையில் நனைந்த சட்டையும், ஹாக்கி மட்டையுமாய் வீடு நுழைந்தான் ராஜா. ஆறடி உயரத்தில் வாட்டசாட்டமாய் இருந்த அவன் தோற்றமும், பெயருக்கேற்ற கம்பீரத்துடனிருந்தது.

''பாட்டீம்மா...''

அமர்ந்து காலணிகளை அவிழ்த்தபடி குரல் கொடுத்தான். வீட்டில் எத்தனை பேர் இருந்தாலும் அவனுக்கு பாட்டிதான் வேணும்.

''ராஜா, வந்தாச்சாப்பா...''

பாட்டியும் ஏதோ சூடான பானத்துடன் சிறு பெண் போல 'குடுகுடு'வென ஓடி வந்தாள்-

''கை கழுவினியாப்பா?''

''ம்ப்ச்...'' - தலை குலுக்கினான்.

''ஷூவை ஓரமாய் போடறது. யாராவது தடுக்கி விழுந்தா?''

அவன் ஏதும் கேளாதவனாய் டம்ளரைக் காலி பண்ண, காலணிகளை ஓரமாய் நகர்த்திய பாட்டி,

''போய் குளியேன்'' என்றாள் அடுத்து.

''என்ன இருக்கு சாப்பிட?''

''நீ முதல்ல குளி- வியர்வை நாறுது.''

கிழவியின் முகச்சுளிப்பில் பேரன் சிரித்தான். குளித்து வந்தவனை விடாது நைத்தாள் பாட்டி.

''இதென்ன லுங்கி? பூவும் காயுமா... வேற கட்டு.''

''அகோர பசி பாட்டிம்மா.''

''முதல்ல மாற்று. புடவை போலிருக்கிறதை எடுத்து ஒளிச்சு வச்சிருந்தேனே?''

''நான் தாத்தா மாதிரியே இருக்கிறேன்றதால என்னை ஒரேயடியாய் அதிகாரம் பண்றீங்க...''

''போடா... அவுங்களை நா அதிகாரம் பண்றதாவது... எதிர்த்து ஒரு பார்வை பார்த்ததில்லை - எப்பேர்ப்பட்ட மனுஷனய்யா... ஆறடி உயரமும் ரெண்டடி அகலத்துக்கு நெஞ்சுமாய்... ஆனா மனசு பூதான். என்னைய உள்ளங்கையில வச்சுத் தாங்குவாங்க...''

பேச்சு சுவாரஸ்யத்தில் லுங்கிப் பிரச்சனையை மறந்து இட்லிகளைப் பரிமாறி விட்டாள்!

''குரல்கூட உன்னுது அவுங்க மாதிரிதான் - ஆனா அவுங்க பேச்சு ரொம்ப இதம் - உன் நக்கல், குத்தல், அலட்டல் ஏதும் கிடையாது.''

''உங்களை உள்ளங்கைல எப்படித் தாங்கினாங்க... என்னால முக்கி முனகி ரெண்டு கையாலயுந்தான் முயற்சியே பண்ண முடியும்னு யோசிக்கறதுக்குள்ளே, நான் நக்கலாப் பேசறேன்னு குத்தறீங்க...!''

''யாரு முகமும் கோணாத பேசுவாங்கப்பா... குழந்தைங்க ரொம்பப் பிரியம். பண்டிகைதோறும் யாரு கிறிஸ்துமஸ் தாத்தா வேஷம் போடக் கூப்பிட்டாலும் கிளம்பிடுவாங்க. அதுக்குன்னு சொந்த செலவுல துணி தெச்சுகிட்டாங்க... உடம்பும் உயரமும் அப்படி. அலுக்காம மீசை தாடியெல்லாம் ஒட்டி, எப்படி பேசி பாடுவாங்கன்ற...?''

குரல்கம்ம பாட்டி பேசியதை சாம்பாரில் தோய்த்த இட்லிகளை விழுங்கியபடி காதில் வாங்கிக் கொண்டான் பேரன்.

''தாத்தா ட்ரஸ்ஸை எடுத்துத் தரேன் - பாக்கறியா?''

சற்று நேரத்தில் பாட்டியின் அறைக்குப் போனான் - கட்டிலில் அச்சிவப்பு உடையைப் பரப்பி, நீவிக் கொண்டிருந்தாள் பாட்டி...

''இதென்ன சின்னதா... வழுவழுன்னு?''

''ஒட்டு மூக்குடா!''





அத்தனை நேரம் ஏதோ எழுத்து வேலையில் மூழ்கியிருந்த அம்மா திடீரென நிமிர்ந்தாள்.

''ஏன் அத்த, ராஜாக்கு மாமா ட்ரஸ் கச்சிதமா இருக்குமே? ஊர் முழுக்க ஆள் தேடின எனக்கிது தோணலை பாருங்களேன்... ஸி.பி.சென்டர் பிள்ளைங்களை ரெண்டு நாளல போய்ப் பார்க்கணுமே... ட்ரஸைப் போட்டுக் காட்டேன் ராஜா...''

இவனுக்குப் 'பகீர்' என்றது.

இப்படி திடீரெனத் தோன்றும் ஐடியாக்களை அமல்படுத்துவதில் அம்மா கில்லாடி!

''விளையாடதீங்களா... அதெல்லாம் முடியாது. எனக்கு ஒண்ணுந் தெரியாது.'' முடிந்தவரை ஆக்ரோஷமாய் மறுத்தான்.

''என்னடா தெரியணும் - இந்த அங்கிக்குள்ள புகுந்து, தாடி மீசைக்குள்ள முகத்தையும் புதைச்சுகிட்டுதான வரணும்?''

''என் ஃப்ரண்ட்ஸ்ல எவனாவது பார்த்துட்டா வினைதான்...''

''தியேட்டர், ஹோட்டல், பஸ் ஸ்டாப் தவிர மத்த இடத்துக்கு அவனுங்க ஏன் வர்ரானுங்க?''

''தங்கச்சிங்களுக்குத் தெரிஞ்சா 'டமாரம்' அடிக்குங்க - சண்டை வந்தா 'தாடிக் கிழவா...'ன்னு கூப்பிடுங்க.''

''அவங்ககிட்டேயும் சொல்லலைடா... ஐ ப்ராமிஸ்.''

''அதெப்படி தெரியாம போகும்?''

''அந்த சென்ட்டரிலே போய்தான் எங்க ஸ்கூல் குட்டிகளும் ட்ரஸ் பண்ணிக்குங்க... நீயும் அங்கே போய் உடுத்திக்கோ.''

''அடுத்த வாரம் கிறிஸ்துமஸ் - வீட்டுக்கு ஸ்டார் மாட்டி, மத்த அலங்காரமெல்லாம்...''

''செய் - அந்தக் குழந்தைகளுக்கு ஸ்வீட்டும், பரிசும் தர ஒரு மணி நேரம் போதும்.''

இவனை அலட்சியப்படுத்தி விட்டு,

''அத்தை! தொப்பைக்கு ரெண்டு தலையணை வச்சு கட்டிக்கலாமா?'' அம்மா பேச இவன் எரிச்சலாகி கத்தினான் -

''ஏன் நீங்களே அங்கியை மாட்டிட்டு போக வேண்டியதுதான? அப்பத் தலையணை கூட தேவையில்லை...''

அம்மா பயங்கரமாய் முறைக்க, அடுத்தது ஹாக்கி மட்டையின் சாத்துதான் என்பது புரிந்து வெளியே நழுவினான்.

ஆனால், இரண்டாம் நாள் நழுவ வழியில்லாமல் அக்குழந்தைகளின் விடுதிக்குப் போய்ச் சேர்ந்தான்.

'தாத்தா தவறாம போன 'ஹோம்'டா இது' என்று பாட்டி இவனைத் தடவித் தழுவி வழியனுப்பியிருந்தார்கள்.

பள்ளிச் சிறுமியர் நடன நிகழ்ச்சிக்காகப் பளபளவென்று தயாராகி நின்றனர்.

''உமா, ராஜாக்கு பேன் கேக்'' - என்று அம்மா குரல் தர, அவள் அவனது இடுப்பளவே உள்ள ஒரு பெண். 'உக்காருங்க தம்பி' என்று சிரித்தாள்.

வழுவழுப்பான ஒரு பசையைப் பிதுக்கியெடுத்து இவன் முகமெங்கும் பொட்டிட்டு, பின் தேய்க்க, முகம் எரிந்தது.

உதடுகளை, கன்னத்தைச் சிவப்பாக்கியவள் கண்களைச் சுற்றி கருப்பாய் கோடிழுத்தாள். கன்னங்களில் பசை தடவி, வெண் தாடியை ஒட்டிய பின் கத்தரிக்கோலை எடுத்தவள்,

''மீசையைக் கொஞ்சம் ட்ரிம் பண்ணிடறேன் தம்பி'' என்று குனிந்ததும் அலறினான்.

''ஐயய்யோ... நானே பண்ணிக்கிறேன்.''

மீசை, புருவங்களும் வெண்மையான பின் விஸ்தாரமான மூக்கும் பொருத்தப்பட்டது. உடலின் முன்னும், பின்னுமாய் தலையணைகளை வைத்துக் கட்டியபின் அங்கிக்குள் புகுந்து, ஷூ மாட்டி, தொப்பியும் வைத்தாள்.

''அட... பிரமாதம்ப்பா...''

அந்த நடுத்தர வயது ஆசிரியைகளின் பாராட்டு அவனுக்கு இம்மியளவு சந்தோஷமும் தரவில்லை.

தன் உயரம், நடை, கூர்மூக்கைப் பார்த்து இளம் பெண்கள்,

''க்ரேட் - லுக்கிங் கை'' எனும் போது சந்தோஷப்படலாம் - இதற்கெப்படி?

''நாங்க போறோம் - ரெண்டு டான்ஸும் முடிஞ்ச பிறகு நீ வா என்ன?''





அம்மா பரிவாரங்களுடன் கிளம்ப, கண்ணாடிக்குத் திரும்பினான். பரிச்சயமே அற்ற முகமொன்று அவனை பதிலுக்கு உறுத்தது!

வெண்மையில் புதைந்த ரோஜா நிற முகம்,

சிவப்பு உதடுகள்... மை எழுதிய கண்கள்...

''சே... கோமாளிதான்...''

விலையுயர்ந்த எண்ணையும், ஷாம்புவுமாய் பராமரித்த அவன் பளபளப்பான கருத்த தலைமுடி கூட தொப்பிக்குள் பதுங்கியிருந்தது.

சிரித்தால் எப்படியிருக்கிறோம்...?

பற்கள் ஆரோக்கியமாய் மின்னின.

''நல்லவேளை இதையும் தட்டியெடுக்காம விட்டாங்க''

சிறையில் இறுக்கப்பட்டது போலிருக்க, அத்தனையும் பிய்த்தெறிந்து ஓட வெறி கிளம்பியது.

பாட்டுக்கள் அலறி ஓய, கதவைத் திறந்து நடந்தான் -

அசைவதே சிரமமாய் தெரிந்தது.

சோம்பல் பாராமல் தினம் காலையில் பதினைந்து நிமிடப் பயிற்சியும், மாலையில் விளையாட்டுமாய் கச்சிதப்படுத்தியிருந்த உடம்பு கனத்த எரிச்சலில், மறு கதவையும் உதைத்துத் திறந்தவன், பிரமித்தான்.

பிரம்மாண்டமாய் நின்றது கிறிஸ்துமஸ் மரம்.

அறையெங்கும் வண்ண பலூன்கள் மிதந்தன.

தயக்கமாய் இவன் நுழைய மெல்லிய கைதட்டலுடன், இளஞ்சிரிப்பு கிளம்பியது. ஹாலில் கூடியிருந்த குழந்தைகளைத் திரும்பிப் பார்த்தவன் உறைந்தான்!

சில நொடிகள் கழித்தே மனதால் கூட அரற்ற முடிந்தது.

மெலிந்த உடல்களில் பொருந்தாதவையாய் விசித்திர கோணங்களில் தலை சரித்திருந்தன அக்குழந்தைகள்...

நெற்றி புடைத்து, கண்கள் பாதிவரை மூடி, எச்சில் வழிய அவனைப் பார்த்திருந்த பிள்ளைகள்...

அம்மா ஏன் தன்னிடம் இதுபற்றி சொல்லவில்லை?

எல்லா சிறுவர்களும் சுத்தமாய் உடுத்தி, சிறுமிகள் தலையில் செவந்திப்பூ வைத்திருந்தனர்.

சில குருத்துக்கள் அவனை ஆர்வமாய் பார்த்து தலையைச் சரித்து சரித்து சிரிக்க... மெள்ள,

''ஹாப்பி கிறிஸ்துமஸ் சில்ரன்'' என்றான்.

தன் கைகளைத் தூக்கி ஆட்ட, குழந்தைகள் விநோதமாய் சத்தமிட்டன.

அம்மா ஒரு கொத்து பலூனோடு ஒரு மூட்டையும் தர, வாங்கியவன் குழந்தைக் கூட்டத்தை நெருங்கினான்.

அங்கிருந்த ஆசிரியை,

''கிறிஸ்துமஸ் தாத்தா'' என்று ஸ்பஷ்டமாய் உச்சரித்து உதவ மனவளர்ச்சி குன்றிய மழலைகள். ''தாத்தா... தாத்தா...'' என்று கூவின.

தாடியை நீவியபடி இவன் மேலும் நெருங்க, உற்சாகத்தில் விறைத்து ஒருவர் கையை ஒருவர் இறுகப் பற்றி நின்றனர் - சில பிள்ளைகள் மிரண்டு, அழவும் அறியாதது போல உதடுகளை மட்டும் கோணின.

வேறு சில, கண்களைத் தொலைவில் குத்திட்டு, தங்களது உலகில் தனித்திருந்தன.

''இவங்கள அணுகறது சிரமம் தம்பி - இதை 'ஆட்டிஸம்'னுவாங்க. மன வளர்ச்சி நார்மலான பிள்ளைங்க... ஆனா, நினைச்சதை உடனே செயல்படுத்த முடியாத உடல் அமைப்பு... இந்தக் குறை... சிறையில தங்களுக்குள்ள அமிழ்ந்து வேற உலகத்துல சஞ்சாரம் பண்ணுங்க...''

அவர்களது ஆசிரியை விளக்கினாள்.

ஒரு கிறிஸ்துமஸ் பாட்டைப் பாடியபடி மெல்ல அசைந்தான்.

புருவத்தைத் தூக்கி மீசையை ஆட்டினான்.

குதித்து தொப்பையைக் குலுக்க சிரிப்பு பலத்தது.

சிரிக்கையில் குழந்தைகளின் முகம் மேலும் விகாரப்பட, இவன் மனம் பிசைந்தது.

தன் இளமையை, அழகை ஒரு மணி நேரம் இழக்கக் கூட தான்





தவித்த தவிப்பு உறுத்தியது... கூசியது.

அழகும், ஆரோக்கியமுமாய் அவன் இதுகாறும் பார்த்து வளர்ந்த வாழ்க்கை வேறு...

இது மறுபக்கம்...

பலர் அறிந்திராத இருண்ட பக்கம்...

அறிந்தால் அச்சமூட்டும் மறுபாதி.

ஆனால் அத்தளிர் முகங்களில் வேதனையோ, குறையோ இல்லை.

சிறிது மிரட்சி, புது மகிழ்ச்சி... அனைத்துக்கும் மேலே கள்ளமற்ற மனம் தெரிந்தது.

உலகின் நாகரீகம், பசப்புகள் பரிச்சயப்படாத வெள்ளை மனசுகள்.

இவர்களை மகிழ்விக்க வேண்டுமென்ற உந்துதல் பொங்கியது.

கிறிஸ்துமஸின் நற்செய்தியை... இவ்வுலகுக்கு மீட்பு வந்தது என்ற ஆனந்தத்தை இவர்களுடன் பகிர வேண்டுமே...

தான் சொல்ல நினைத்த சில 'ஜோக்'குகள் இவர்களை எட்டாது என்பது புரிய, எளிய சைகைகளை எழுப்பினான்.

பிள்ளைகள் மலர்ந்தன - இதுவரை பார்த்திராத உருவத்தைப் பற்றிய மிரட்சி நீங்கி, அவனை நெருங்கி வந்து தொட்டன.

சக்தியேயற்ற கைகள் - அவன் பாட்டியின் ஸ்பரிசம் போல...

ஆனால் அது முதுமை.

இளமையில் இப்பலவீனம் கொடுமை. மனம் விம்ம, அருகே ஒரு சிறுவனை வாரித் தூக்கினான்.

சிறுவன் நெளிந்து சிரித்தான் - இவன் தந்த இனிப்பைப் பறித்துக் கொண்டு இறங்கினான்.

இன்னும் பல கரங்கள் அவனை நோக்கி நீண்டன - அவற்றில் மூட்டையிலிருந்த பரிசுகளை இவன் தர, பரபரப்பு கூடியது. மெல்லிய வர்ண காகிதங்களைப் பிரித்துத் துழாவின.

இவனது நீட்டிய கைகளுக்குள் ஆவலாய் நெருங்கி சிறைப்பட்டு தூங்கிய போது தோளில் சிறகாய் சாய்ந்து

அசோக் நகர், சென்னை-83

கொண்டன.

இவனைக் கண்டுகொள்ளாத குழந்தைகளையும் அணுகி வருடினான். மிருதுவாய் பேசி முத்தமிட்டான்.

"அரை மணி நேரமாயாச்சு ராஜா..." மெல்ல நினைவூட்டப்பட்டது.

"நீங்க போங்கம்மா... நா வந்துடறேன்."

அவள் தன் மாமனாரின் ஆவியேதான் தன் மகனுள் புகுந்து விட்டதோ என்ற தினுசில் வினோதமா... வசமாயும் தலையாட்டினாள் -

"சரிப்பா..."

அவன் அச்சிறு கூட்டத்தின் நடுவே கிடந்து ஆடிப்பாடி, கிளம்பிய சிரிப்பில் கரைந்தான் - மேலும் இனிப்புகளை விநியோகித்து கிளம்பும் போது தொண்டை அடைத்து, மூக்கு நமநமத்தது.

"தாத்தா அடிக்கடி வருவேன் குட்டிகளா... ஒவ்வொரு மாசமும் கிறிஸ்துமஸ் தாத்தா உங்களைப் பார்க்க வருவாரு..."

வாக்குறுதி தந்தான்.

கையசைப்புடன் வெளியேறியவன், ஒட்டு மூக்கை அவசரமாய் பிய்த்தெடுத்து விட்டு மூக்கைச் சிந்தினான்.

கைக்குட்டையிலேயே முடிந்தவரை முகச்சாயத்தைத் துடைத்தெடுத்து, உடை மாற்றி வெளியேறியவன் உள்ளம் மிக மாறியிருந்தது.

அவனது தாத்தா ஏன் அத்தனை மென்மையானவராய் இருந்தார் என்பது புரிந்தது.

- தேவி.

167699

5943366.